872
16.10.2007

வெளியீடு 9-7-2007 Issued 9-7-2007

சென்னை-600 0…

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, ஏப்ரல் 9, 2007—தொகுதி 26—எண் 1**

**Monday the 9th April, 2007—Volume 26—No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
…tive Assembly Secretariat, Chennai-600 009

[Price Rs. 3.00

53-

D
V2, 31'P07
P07. 26.1.
227565

சென்னை-600 0

9-4-2007

# உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| | Governor and Council of Ministers | ix-xiii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| 1. | **வினாக்கள்—விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-24 |
| 2. | **சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| | செண்டூர் கிராமத்தில் வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற வாகனம் வெடித்து பலர் இறந்தது | 25-45 |
| | *திரு. ஓ. பன்னீர்செல்வம் | 25-28 |
| | *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 28-31 |
| | திரு. ஜி.கே. மணி | 31-33 |
| | செல்வி கே. பாலபாரதி | 34-36 |
| | திரு. வை. சிவபுண்ணியம் | 36-38 |
| | *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 38-45 |
| 3. | **கவன ஈர்ப்பு—** | |
| | திருவட்டாறு தொகுதி, மலைவாழ் மக்களின் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்குதல் | 45-50 |

| | பக்கங்கள் |
|---|---|
| 4. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | 50-167 |
| *கோரிக்கை எண் 43 — பள்ளிக் கல்வித் துறை* | |
| மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு | 50,80-81, 86,90, 143-161, 163-166 |
| திரு. தா. மலரவன் | 81-92 |
| திரு. சபா. இராஜேந்திரன் | 92-99 |
| திரு. து. செல்வராஜ் | 99-106 |
| திரு. அ. தமிழரசு | 106-113 |
| *திரு. ப. டில்லி பாபு | 113-121 |
| திரு. தி. இராமசாமி | 121-125 |
| *திரு. து. ரவிக்குமார் | 125-129 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 130-136 |
| திரு. ரெ. நெடுஞ்செழியன் | 136-143 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 168 |



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

V21,31607 v 057.26.1

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227565
சென்னை-600 008

**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்—அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**13. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR — THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

**18. Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

**19. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

**20. Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

**21. Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

**22. Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

**23. Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

**24. Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



**25. Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

**26. Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

**27. Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

**28. Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**29. Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

**30. Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

**31. Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வி.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இ. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல்., | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளா |
| திரு. மு. பைரவன், எம்.காம். | .. குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி–I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடனை |

| | | |
|---|---|---|
| 21. | இராமசாமி, திரு. தி. | - ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 22. | இராமசுவாமி, திரு. கே.பி. | - ராசிபுரம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - சாத்தூர் |
| 24. | இராமச்சந்திரன், திரு. டி. | - தளி |
| 25. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | - பள்ளிப்பட்டு |
| 26. | இராம்பிரபு, திரு. இரா. | - பரமக்குடி (செ.வ.) |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | - தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. ஆ. | - வீரபாண்டி |
| 29. | இராஜேந்திரன், திரு. இரா. | - பனமரத்துப்பட்டி |
| 30. | இராஜேந்திரன், திரு. க. | - ஜெயங்கொண்டம் |
| 31. | இராஜேந்திரன், திரு. சபா. | - நெல்லிக்குப்பம் |
| 32. | இராஜ்குமார், திரு. ம. | - பெரம்பலூர் (செ.வ.) |
| 33. | இளமதி சுப்பிரமணியன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 34. | இளவரசன், திரு. வீர. | - திருமங்கலம் |
| 35. | இளவழகன், திரு. கே.எல். | - ஆற்காடு |
| 36. | உதயசூரியன், திரு. தா. | - சின்னசேலம் |
| 37. | உதயம் சண்முகம், திரு. | - அறந்தாங்கி |
| 38. | உபயதுல்லா, திரு. சி.நா.மீ. | - தஞ்சாவூர் |
| 39. | உலகநாதன், திரு. கே. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 40. | எதிரொலி மணியன், திரு. கோ. | - பெரணமல்லூர் |
| 41. | ஐயப்பன், திரு. கோ. | - கடலூர் |
| 42. | கணபதி, திரு. ந. | - வானூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 43. | கணேசன், திரு. ஆர்.டி | .. தேனி |
| 44. | கண்ணப்பன், திரு. மு. | .. தொண்டாமுத்தூர் |
| 45. | கண்ணன், திரு. பெ. | .. தாரமங்கலம் |
| 46. | கண்ணன், திரு. வே. | .. செஞ்சி |
| 47. | கமலாம்பாள், திருமதி பெ. | .. காஞ்சிபுரம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | .. தென்காசி |
| 51. | கலியவரதன், திரு. வீ.ஏ.டி. | .. முகையூர் |
| 52. | கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. | .. அரவக்குறிச்சி |
| 53. | கலைராஜன், திரு. வி.பி. | .. தியாகராய நகர் |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 55. | காமராஜ், திரு. பெ. | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 56. | காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. | .. மதுராந்தகம் |
| 57. | காவேரி, திரு. வை. | .. எடப்பாடி |
| 58. | கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். | .. கலசப்பாக்கம் |
| 59. | கீதா ஜீவன், திருமதி பி. | .. தூத்துக்குடி |
| 60. | குணசேகரன், திரு. சு. | .. சிவகங்கை |
| 61. | குணசேகரன், திரு. ம. | .. மானாமதுரை (செ.வ.) |
| 62. | குத்தாலம் க. அன்பழகன், திரு. | .. குத்தாலம் |
| 63. | குமரகுரு, திரு. இரா. | .. திருநாவலூர் |

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

| | |
|---|---|
| 109. சேகரன், திரு. கூ.ந. | .. திருவெறும்பூர் |
| 110. சேகர், திரு. எஸ்.வி. | .. மயிலாப்பூர் |
| 111. சேகர்பாபு, திரு. பி.கே. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. | .. மதுரை மத்தி |
| 113. சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. லால்குடி |
| 114. சௌந்திரபாண்டியன், திரு. அ. | .. குன்னூர் (செ.வ.) |
| 115. ஞானசேகரன், திரு. சி. | .. வேலூர் |
| 116. ஞானதாஸ், திரு. ஆர். | .. சிவகாசி |
| 117. டில்லி பாபு, திரு. ப. | .. அரூர் (செ.வ.) |
| 118. தங்கமணி, திரு. பி. | .. திருச்செங்கோடு |
| 119. தங்கம் தென்னரசு, திரு. | .. அருப்புக்கோட்டை |
| 120. தங்கவேலன், திரு. சுப. | .. கடலாடி |
| 121. தண்டபாணி, திரு. மா. | .. வேடசந்தூர் |
| 122. தமிழரசி, திருமதி ஆ. | .. சமயநல்லூர் (செ.வ.) |
| 123. தமிழரசு, திரு. அ. | .. ஓமலூர் |
| 124. தமிழ்செல்வன், திரு. சி. | .. ஏற்காடு (ஆவா.) |
| 125. தம்பிதுரை, முனைவர் மு. | .. பர்கூர் |
| 126. தர்மலிங்கம், திரு. எல்.பி. | .. சத்தியமங்கலம் |
| 127. தாமோதரன், திரு. செ. | .. கிணத்துக்கடவு |
| 128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. | .. பத்மநாபபுரம். |
| 129. திருநாவுக்கரசு, திரு. கே. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 130. துரைக்கண்ணு, திரு. இரா. | .. பாபநாசம் |



| | |
|---|---|
| 131. துரை சந்திரசேகரன், திரு. | .. திருவையாறு |
| 132. துரைசாமி, திரு. வீ.பெ. | .. சங்கரி (செ.வ.) |
| 133. துரைமுருகன், திரு. | .. காட்பாடி |
| 134. துரைராஜ், திரு. சி. | .. சேடப்பட்டி |
| 135. தேன்மொழி, திருமதி எஸ். | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 136. நன்மாறன், திரு. என். | .. மதுரை கிழக்கு |
| 137. நெடுஞ்செழியன், டாக்டர் க. | .. கபிலர்மலை |
| 138. நெடுஞ்செழியன், திரு. ரெ. | .. புதுக்கோட்டை |
| 139. நேரு, திரு. கே.என். | .. திருச்சிராப்பள்ளி–2 |
| 140. பதர் சயீத், திருமதி | .. திருவல்லிக்கேணி |
| 141. பத்மாவதி, திருமதி பி. | .. நன்னிலம் (செ.வ.) |
| 142. பரஞ்ஜோதி, திரு. மு. | .. ஸ்ரீரங்கம் |
| 143. பரிதி இளம்வழுதி, திரு. | .. எழும்பூர் (செ.வ.) |
| 144. பலராமன், திரு. பி. | .. பொன்னேரி (செ.வ.) |
| 145. பழனிசாமி, திரு. ஆர்.எம். | .. மொடக்குறிச்சி |
| 146. பன்னீர்செல்வம், திரு. எம். | .. சீர்காழி (செ.வ.) |
| 147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. குறிஞ்சிப்பாடி |
| 148. பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. பெரியகுளம் |
| 149. பாண்டுரங்கன், திரு. கு. | .. அணைக்கட்டு |
| 150. பாபு, திரு. வி.எஸ். | .. புரசைவாக்கம் |
| 151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. | .. திருவிடைமருதூர் |
| 152. பாலபாரதி, செல்வி கே. | .. திண்டுக்கல் |
| 153. பிச்சாண்டி, திரு. கு. | .. திருவண்ணாமலை |

200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்–2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
221. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்
235. (வெற்றிடம்) .. மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 26, விய — திருவள்ளுவர் ஆண்டு 2038
## 2007 ஏப்ரல் 9, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

எண்ணும் எழுத்தும் எனப்படும் அறிவுக் கண்களைப் பெற்றவர்களே, உயிர் வாழ்வோர் எனக் கருதப்படுவார்கள்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள. வினா எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**21—**

### துணை மின் நிலையம்

***7947—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை தண்டையார்பேட்டை, இளையா முதலித் தெரு அருகில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை தண்டையார்பேட்டை, இளையா முதலித் தெரு அருகில் ஆர்.கே. நகரில் புதிய 110/33 கி.வோ. சக்தி கொண்ட துணை மின் நிலையம் அமைக்க மின் வாரியத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்புதலானது, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட ஒப்புதல் ஆகும். இதற்குண்டான நிதியும் ரூ.23 கோடியே 16 இலட்சம் அப்போதே அனுமதிக்கப்பட்டு இருக்கின்றது. இந்த 110/33 கி.வோ. மின் நிலையத்தை அமைப்பதற்குண்டான இடத்தைத் தேர்வு செய்கின்றபோது, அந்த இடத்திற்கு வழிகாட்டி மதிப்பு அடிப்படையில் 74,000 சதுர அடிகளுக்கு, சுமார் 7 கோடி ரூபாயை வருவாய்த் துறை கேட்டதால், ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில், பெரும் பகுதி இடத்திற்கே செலவழிக்க வேண்டிய நிலை இருப்பதால், மீண்டும் இடத்தை 24,000 சதுர அடிக்குக் குறைத்து, ரூ.2.50 கோடி அளவிலே அந்த இடத்திற்குண்டான பணத்தைச் செலுத்துவதற்கு, மின் வாரியம் தயாராக இருந்த நேரத்தில், அதற்கு வருவாய்த் துறை அங்கீகாரம் பெறவேண்டிய நிலை இருக்கின்றபோது ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், அந்தத் துணை மின் நிலையப் பணிகள் காலதாமதம் ஆனது. ஆகவே, உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், அந்த இடத்திற்குண்டான இட மாற்று ஆணை பெறப்பட்டுவிட்டதா, அந்த இடத்தில் துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி எப்போது தொடங்கப்பட உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையத்திற்கு மாண்புமிகு அம்மா ஆட்சியிலே ஒப்புதல் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அவர் அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்த காரணத்தாலே, இந்தத் திட்டத்தை வலியுறுத்தியிருக்கக்கூடும். ஆனால், அதற்கான திட்டத்தை மின் வாரியம் 2006-2007 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலேதான் அதை இணைத்தது. அதற்காக ரூ.20 கோடியே 38 இலட்சம் செலவில் திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது. அதற்காகத் தேவைப்படுகிற நிலம், மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற நேரத்தில் 74,000 சதுர அடி என்று சொன்னார்கள். ஆனால், 36,960 சதுர அடி நிலத்தை, நில உரிமையாளரிடமிருந்து வாங்குவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நில உரிமை



2007 ஏப்ரல் 9]

மாற்றத்திற்கும் அரசு ஒப்புதல் வழங்கி இருக்கிறது. 29-3-2007 நாளிட்ட அரசாணை எண் 167-ல் அந்த ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. Enter-upon Permission Certificate வாங்குவதற்காக இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நுழைவு அனுமதி பெற்றவுடன், இந்த மாத இறுதியிலேயோ அல்லது மே மாத முதல் வாரத்திலேயோ பணிகள் தொடங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான மின்சாரம், தடையில்லா மின்சாரம் என்ற நோக்கத்திற்காக 2002-2007 ஐந்தாண்டு காலத் திட்டப் பணியாக, சுமார் 735 கோடி ரூபாய் செலவில் 68 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும் தாழ்வான பகுதிகளிலும், மேல்நிலைப் பகுதிகளிலும் இருக்கிற கம்பி வடங்களை மாற்றி, புதை வடக் கம்பிகளாக மாற்றுவதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டத்தின் பயனாக—புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே 39 துணை மின் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருந்தன. மீதம் இருக்கின்ற—அந்த 29 துணை மின் நிலையங்களுடைய பணியின் நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதோடு, இந்தத் துணை மின் நிலையத்திற்கான அனுமதி—இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்க விரும்பவில்லை. அந்தப் பகுதி, ஏழையெளிய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதி. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே 320 குடியிருப்புகளும், தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 920 குடியிருப்புகளும் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழா செய்து அங்கே மக்கள் குடியேறுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஏற்கெனவே, இருக்கின்ற மக்கள் தொகைக்கேற்ப அங்கே மின்சார வசதி இல்லாத நிலையில், கூடுதலாக 1500 குடும்பங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையால் அங்கே குடியேறுகின்ற சூழ்நிலை இருப்பதால்...

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** முறையான கேள்வி, மக்களுக்குப் பயன்படுகிற கேள்வி. குற்றச்சாட்டு சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். விளக்க உரை தேவையில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** குற்றச்சாட்டுச் சொல்லவில்லை. கேள்விதான். இதற்குக்கூடவா அனுமதி இல்லை? கேள்வியைத்தான் கேட்கிறேன். அனுமதி கொடுங்கள் எனக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். வரலாறு வேண்டாம்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** அந்த மக்கள் குடியேறுவதற்கு மின்சாரம் வேண்டுமென்பதால் உடனடியாக துணை மின் நிலையத்தை அமைக்கும் அதேநேரத்தில், இந்தத் துணை மின் நிலையத்திற்கான வாரிய ஒப்புதல் அனுமதி ஆணை என்னிடம் இருக்கின்றது. 28-6-2003 அன்று அதற்குண்டான வாரிய ஒப்புதல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி காலத்தில் வழங்கப்பட்டது என்பதைப் பதிவு செய்து கொண்டு, உடனடியாக அந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு உண்டான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தங்களின் வாயிலாக அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அம்மா ஆட்சிலே அப்படி ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தால் அப்பொழுதே அந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் தேதி, அரசு ஆணை இவ்வளவையும் இந்த அவையிலே சொல்லியிருக்கின்றேன். நம்முடைய அரசாங்கத்தினுடைய ஆணை எண் 167, தேதி 29-3-2007; அதாவது, கடந்த மாதம் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அப்படி இருக்கும்போது எப்படி 2003-லேயே அரசு ஆணை பிறப்பித்திருப்பார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும்கூட, 29-3-2007 ஆம் தேதியிட்ட அரசு ஆணை எண் 167-ன்படி அதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு, 20 கோடியே 38 இலட்சம் ரூபாயில் அந்தத் துணை மின் நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏதோ துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், மற்றவற்றிற்கும் அந்த ஆட்சிக் காலத்தில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அம்மா ஆட்சியில்



அல்ல. எங்களுடைய ஐயா ஆட்சியிலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) Rural Electrification Corporation 16,000 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து, வரும் 5 ஆண்டு காலத்திலே 325 துணை மின் நிலையங்களைத் தமிழகத்திலே அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகளிலே இப்பொழுது மின் வாரியம் ஈடுபட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே மின்சாரத் துறையிலே surplus State-ஆக, தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்கின்ற மின் துறையை நிர்வகித்து வருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிக்கின்றேன். அதேநேரத்திலே, தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற மின்சாரத்தை நிர்வகிக்கும் பணியை generation, transmission, operation and maintenance என்று 4 வகையாகப் பிரித்துக் கையாள வேண்டுமென்று மத்திய அரசு un-bundling செய்ய ஒரு சட்டத்தின்மூலமாக வலியுறுத்தி வருகின்றது. தனியார் துறையிலே உற்பத்தியை ஊக்குவிக்கின்ற நம்முடைய அரசு இதன் அடிப்படையிலும், அந்த 4 துறைகளைத் தனித்தனியாகப் பிரித்துக் கையாளுவதற்கு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கத்தினுடைய 2003 ஆம் ஆண்டு சட்டப்படி, un-bundling-ஐ ஒவ்வொரு மாநிலமும் அமல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கம் ஆணை பிறப்பித்தது. மற்ற மாநிலங்களிலே மின்சாரக் கட்டணம் வசூலிப்பதிலே பெரிய இடையூறுகள் இருக்கின்றன. ஆந்திராவிலே 70 சதவிகிதம் பயனீட்டாளர்கள்தான் ஒழுங்காக மின் கட்டணத்தைச் செலுத்துகிறார்கள். ஆனால், இந்தியாவிலேயே 99 சதவிகிதம் மின் பயனாளிகள் மின்சாரக் கட்டணத்தை ஒழுங்காக செலுத்தக்கூடிய மாநிலம் தமிழ்நாடு மட்டும்தான். ஆகவே, தமிழ்நாட்டில் un-bundling என்ற கேள்விக்கே இடம் இல்லை. அதை நாங்கள் செய்வதாகவும் இல்லை. மத்திய அரசு வலியுறுத்திய நேரத்திலேகூட பக்கத்து

மாநிலத்தில் கேரள அரசு என்றைக்கு அதை அமல்படுத்துகிறதோ அன்றைக்கு நாங்கள் அதை அமல்படுத்துகிறோம் என்று மத்திய அமைச்சர் நடத்திய கூட்டத்திலே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இங்கே தொழிலாளர் பிரச்சினைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

## குடிநீர்

***689—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் திருத்துறைப்பூண்டி அருகிலுள்ள வேலூர், நெடும்பலம் சிற்றூராட்சிகளை இணைத்துக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேலூர் ஊராட்சியிலுள்ள வேலூர் மற்றும் 3 குடியிருப்புகள் மேல ஆதி திராவிடர் தெரு, கண்ணாத்தாங்குடி, கண்டலச்சேரி, நெடும்பலம் ஊராட்சியில் உள்ள நெடும்பலம் மேற்கு, கிழக்கு, தெற்கு குடியிருப்புகள் மற்றும் கோயில் தோப்பு ஆகிய பகுதிகளுக்கு வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் நீரை ஆதாரமாகக் கொண்டு குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ரூபாய் 9 இலட்சத்து 97 ஆயிரம் மற்றும் ரூபாய் 26 இலட்சத்து 87 ஆயிரம் மதிப்பீட்டில் திட்டமானது முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டு, தறபோது மேற்கண்ட குடியிருப்புகள் அனைத்தும் முழுமையான குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாக உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன்.



முற்பகல் 9-40

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் குடிநீருக்காக ஆழ்குழாய் போடுகிறபோது, அநேகமாக நூற்றுக்கு 85 உப்பு நீராகத்தான் இருக்கும். இதை உணர்ந்த மரியாதைக்குரிய நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தக் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இன்றைக்கு எங்கள் பகுதியில் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீரை அருந்தி வருகிறோம். இருந்தாலும், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு அருகில் இருக்கும் வெல்லூர் ஊராட்சி, அதேபோல, நெடும்பலம் ஊராட்சி என்ற இரண்டு ஊராட்சிகள் விடுபட்டிருந்தன. நமது தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவற்றுக்கு குடிநீர் வழங்குவதற்கான உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியின் சார்பிலும், வெல்லூர், நெடும்பலம் ஊராட்சி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். நம்முடைய உறுப்பினர் அவர்களும் நன்றியைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு மிக்க நன்றி. அதேவேளையில், தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சி தொடங்கியிருக்கிறது, பல்வேறு கிராமங்களில் இருக்கிற ஆழ்துளைக் கிணறுகள் இப்போது வறண்டுவிட்ட நிலையில், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தினுடைய பல்வேறு மாவட்டங்களில், பல கிராமங்களில் இந்த நிலை இருக்கின்ற காரணத்தால், வறட்சிக் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, குடிநீர்த் திட்டத்திற்கு அரசு சிறப்பு நடவடிக்கை ஏதாவது எடுக்குமா? எந்த வகையில் எடுக்கவிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி ஏற்படக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, அதற்குரிய

ஆய்வுப் பணிகளிலே அரசு முழுமையாக இப்போது ஈடுபட்டிருக்கிறது. எனவே, சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளில் ஏதேனும் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், அது அரசினுடைய கவனத்திற்கு வரும் என்று சொன்னால், நிச்சயமாக உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

## கசிவுநீர்க் குட்டைகள்

***17789—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், காவேரிபுரம், கருங்கல்லூர், லக்கம்பட்டி ஊராட்சிகளில் கசிவுநீர்க் குட்டைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஊராட்சி, காவேரிபுரம் கிராமத்தில் 2006–2007 ஆம் நிதியாண்டில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் ரூ. 4.15 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும், மழைநீர் சேகரிப்பு மற்றும் மழைநீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ. 1.90 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும், கருங்கல்லூர் கிராமத்தில் ரூ.2.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ஒரு கசிவுநீர்க் குட்டையும் கட்டப்பட்டு 31–3–2007–ல் பணிகள் முடிவுற்றுள்ளன.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதிக்கு உட்பட்ட காவேரிபுரம் ஊராட்சி, கருங்கல்லூர் ஊராட்சி, லக்கம்பட்டி ஊராட்சி போன்ற பல்வேறு ஊராட்சிகள் பாசன



வசதி இல்லாத, கிணற்று நீர்ப் பாசனத்தையே நம்பி இருக்கிற பகுதிகள். அதிலும் அங்கே அடிக்கடி கிணறுகளில் நீர் வற்றி வறண்டுவிட்டு, விவசாயத்திற்கு பாதிப்பாக இருக்கிற காரணத்தால், இப்போது அமைச்சர் அவர்கள் அறிவித்த இரண்டு தடுப்பணைகள் கட்டப்பட்டிருந்தாலும், இன்னும் அந்த ஊராட்சிகளிலே பல தடுப்பணைகள் கட்டுவதற்கு நீர்த் தேக்கம் செய்து, கிணற்றுக்கு நீர் ஊற்று பெறுவதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, வாய்ப்புகள் இருக்கிற பகுதிகளில், நீர் ஓடைகள் இருக்கிற பகுதிகளில் இன்னும் கூடுதலாக கசிவுநீர்க் குட்டைகளைக் கட்டுவதற்கு, தடுப்பணை கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997–98–லும் பல கசிவுநீர்க் குட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. நடப்பு ஆண்டிலும்கூட 2007–2008–வது ஆண்டில் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காவேரிபுரத்தில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு பெரிய தடுப்பணையும், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் இரண்டு சிறிய தடுப்பணைகளும் கட்டப்படவுள்ளன.

மேலும், கருங்கல்லூர் கிராமத்திலே ரூபாய் ஒரு இலட்சம் செலவில் ஒரு பெரிய தடுப்பணையும், ரூபாய் ஒரு இலட்சம் செலவில் 2 சிறிய தடுப்பணைகளும், லக்கம்பட்டியில் 6 இலட்சம் ரூபாய் செலவில் இரண்டு கசிவுநீர்க் குட்டைகளும், மொத்தம் ரூபாய் 10 இலட்சம் செலவில் கட்டப்பட பரிசீலனையில் இருந்து வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

## குடியிருப்புகள்

***380—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 ஏப்ரல் 9

திருப்பூரில் குடியிருப்பு பற்றாக்குறைக்கேற்ப குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூரில் ஏறத்தாழ 620 வீடுகளும், 8,339 வீட்டுமனைகளும் போடப்பட்டு அனைத்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டு முடிந்துவிட்டது. மேலும், அங்கேயுள்ள தேவையை உணர்ந்து, மன்னறை என்ற பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நில உடைமையாளர்களோடு கலந்துபேசி, சுமுகமாக இடங்களைப் பெற்றுத் தருவார் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, உடனடியாகப் பணிகள் நிறைவேற்றப்படும்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதி—நான் அடிக்கடி இங்கே சொல்வது வழக்கம், அனைவருக்கும் தெரியும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்—ஏராளமான மக்கள் திருப்பூரிலே வேலை காரணமாக இன்றைக்குக் குடியேறி வருகிற காரணத்தினால், குடியிருப்பதற்கு வீடுகள் கிடைக்காமல் மிகப்பெரிய சிரமங்களுக்கு ஆளாகின்றார்கள். ஓடைகளின் ஓரங்களிலே குடிசைகள்போட்டு இன்றைக்குத் தங்குகிற அளவிற்கு நிலைமை மிக மோசமாக இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, திருப்பூரினுடைய தனித் தன்மையைக் கவனத்திலேகொண்டு, அங்கே மற்ற நகரங்களைவிட நிலத்தினுடைய மதிப்பும் கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் அந்தத் தேவையைக் கணக்கிலேகொண்டு, கொஞ்சம் நகரத்திற்கு வெளிப் பகுதியிலாவது, நிலங்களைக் கையகப்படுத்தி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டதைப்போல, இடங்களைத் தேர்வு செய்வதில் பிரச்சினை இல்லாமல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுமுகமாக நில உடைமையாளர்களைச் சந்தித்து துறைக்கு இடத்தினைப் பெற்றுக் கொடுப்பார்கள் என்றால்—எந்தத் திட்டத்தையும் உடனடியாக விரைந்து செயல்படுத்த வேண்டுமென்றுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் — கூட்டத் தொடர் முடிந்தவுடன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அழைத்தால், நானும் அங்கே சென்று உடனடியாக இடம் தேர்வு செய்கின்ற பணியில் ஈடுபடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2007 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் வாங்குவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், நான் ஏற்கெனவே சொன்னது மாதிரி, மற்ற நகரங்களைவிட, நிலத்தினுடைய மதிப்பு சற்றுக் கூடுதலாக அங்கே இருக்கிறது. ஆகவே, அதை அரசு கவனத்தில்கொண்டு, எந்த விலைக்கு வந்தாலும் வாங்கலாம் என்கிற ஆலோசனையைச் சொல்கிறேன், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் அதற்கான முயற்சிகளை எடுக்க நான் தயார். ஆகவே, திருப்பூரினுடைய நில மதிப்பு அதிகரித்திருக்கிற சூழ்நிலைகளுக்கேற்ப, அரசு அந்த விலை மதிப்பை அதிகரிக்க வேண்டும். மற்ற நகரங்களைப்போல, மாநிலம் முழுவதும் ஒரேமாதிரியான விலை நிர்ணயம் என்றிருந்தால், அங்கே இடம் வாங்க முடியாது. ஆகவே, அந்தத் தனித் தன்மையைக் கணக்கிலேகொண்டு, கூடுதல் விலையை நிர்ணயம் செய்தால், நிச்சயமாக வாங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. திருப்பூரினுடைய அந்த அவசிய குடியிருப்புத் தேவையைக் கணக்கிலேகொண்டு, வாய்ப்பிருந்தால், அடுக்குமாடி வீடுகள் கட்டினால்கூட நிலத்தினுடைய அளவு குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதனால், கூடுதலாக சாதாரண மக்கள் குடியிருக்க வாய்ப்பு வரும். அதையும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் எடுப்பு அல்லது நிலம் கையகப்படுத்துகின்றபோது, அந்த ஊரினுடைய guideline value அல்லது சந்தை விலை இரண்டையும் கணக்கிலே எடுத்துக்கொண்டுதான் அந்த நிலங்கள் ஆர்ஜிதப்படுத்தப்படுகின்றன. எனவே, நில உடைமையாளர்களை அழைத்துப் பேசி சுமுகமாகத் தீர்வு கண்டால் உடனடியாகத் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் மக்கட்தொகைப் பெருக்கம் அதிகரித்திருக்கின்ற காரணத்தினால், சென்னைக்கு அருகிலே இருக்கின்ற தொகுதிகளாக இருக்கின்ற ஸ்ரீபெரும்புதூர், திருப்போரூர் போன்ற பகுதிகளிலே

[2007 ஏப்ரல் 9

வீட்டுவசதி வாரியத்தினுடைய பணிகளை மேற்கொள்ள, நிலம் எடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–50

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எல்லோருக்கும் தெரிந்த ஓர் உண்மை; பக்கத்திலே துணை நகரங்களை உருவாக்க வேண்டும், சென்னையிலே உள்ள நெருக்கடியைப் போக்க வேண்டுமென்று சென்னையைச் சார்ந்து இருக்கக்கூடிய, சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளில் இடங்கள் தேர்வு செய்யப்படுவதும், அதற்கு எதிர்ப்புகள் வருவதும், நடைமுறையில் உள்ளது. இருப்பினும், ஆங்காங்கு மக்களைச் சந்தித்து நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்களுடைய துணையோடு, இடங்களைத் தேர்வு செய்து சாதாரண ஏழையெளிய, நடுத்தர மக்களினுடைய வீட்டுமனைத் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய பணியில் இந்தத் துறை முழுமையாக ஈடுபட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

## துணை சுகாதார நிலையம்

***2513—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சியில் மிகவும் பிற்பட்ட, ஆதி திராவிட மக்கள் வசிக்கும் நத்தமேட்டில் துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 ஏப்ரல் 9]

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சியில் மிகவும் பிற்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள் வசிக்கும் நத்தமேட்டில் துணை சுகாதார நிலையம் அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. பூனாச்சி ஊராட்சிப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு போதிய பேருந்து வசதியில்லை. ஆகவே, கிராமப்புறத்திலே இருக்கின்ற அந்த மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையம் அமைத்துத்தர நமது அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகள் தற்போது இல்லையென்றுதான் சொன்னேன். நம்முடைய மாநிலத்திற்கு புதியதாக 900 துணை சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று நாங்கள் மத்திய அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்திருக்கிறோம். அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவர்கள் எவ்வளவு ஒதுக்குகிறார்கள் என்பதைப் பார்த்து நிச்சயமாக அந்தப் பகுதிக்கு வேண்டிய நன்மைகளை இந்த அரசாங்கம் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதிக்குட்பட்ட ஜம்பை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 6 படுக்கையறை கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டு, அந்தக் கட்டடம் திறப்புவிழா செய்யப்பட்டு இருக்கிறது. அந்தக் கட்டடத்திலே போதிய மின் சாதனங்கள் பொருத்தப்படாமல் இருப்பதனால், அந்த ஆரம்ப சுகாதார நிலையம்

[2007 ஏப்ரல் 9

charge எடுக்கப்படாமல், இரண்டு மூன்று மாதங்களாக இருக்கிறது. ஆகவே, மக்கள் பெரிதும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்த மின்சார சாதனங்களைப் பொருத்தி, அந்த சுகாதார நிலையம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மேலும், என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலே சுற்றுச்சுவர் இல்லை. அதேபோன்று துணை சுகாதார நிலையத்திலும் சுற்றுச்சுவர் இல்லை. அதையெல்லாம் நமது அமைச்சர் அவர்கள் கட்டித்தர நடவடிக்கை எடுப்பாரா என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்த மையத்திலே வாரம் ஒரு முறை கூட்டம் நடத்தக் கட்டடம் இல்லை. ஆகவே, அதையும் கட்டித்தருவதற்கு நமது அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்தத் துணை சுகாதார நிலையமாக இருந்தாலும் சரி, அல்லது P.H.C.-ஆக இருந்தாலும் சரி, குறைபாடுகளை உடனடியாக நீக்கச்சொல்லி இன்றைக்கே நான் அதிகாரிகளுக்கு வேண்டிய உத்தரவுகளை வழங்குகிறேன். இந்தக் Compound wall பிரச்சினை பொதுவாக எங்கள் துறையிலும் இருக்கிறது; பள்ளிகளுக்கும் இருக்கிறது. இந்த Compound wall-க்காக தனியாக நிதி ஒதுக்கீடு அரசாங்கத்திலிருந்து பெறுகிற நேரத்தில் நிச்சயமாக இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை சுகாதார நிலையங்கள் இயங்குகின்ற பகுதிகளில் அந்த மக்களுடைய தேவைகளுக்கேற்ப மருத்துவ வசதி செய்து தருவதற்கும், அதேபோல் இந்தத் துணை சுகாதார நிலையங்கள் மற்றும் சுகாதார நிலையங்களில் பாம்பு, தேள் போன்ற விஷத்தன்மை அதிகம் வாய்ந்த உயிரினங்களால் விஷக் கடிகள் ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றபோது, இதுபோன்ற உயிரைக் காப்பாற்றுகின்ற மாற்று மருந்துகளை கட்டாயமாகத் தமிழகத்தில் உள்ள அனைத்து சுகாதார நிலையங்களிலும் விரிவுபடுத்தி, அந்த மருந்தை



2007 ஏப்ரல் 9]

பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அதுபோல், அரசு பொது மருத்துவமனை, வட்டார மருத்துவமனைகளிலும் பாம்புக் கடிக்கும், தேள் கடிக்கும் எந்த நேரத்திலும் மருந்து வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–55

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Primary Health Centre-லே எந்தப் பகுதியிலே, பாம்புக் கடி அதிகமாக வருகிறது என்பதைப் பார்த்து, அங்கே அந்த மருந்துகளை நாங்கள் சப்ளை செய்திருக்கிறோம். தேள் கடிக்கும் செய்திருக்கிறோம். துணை சுகாதார நிலையங்களிலே அவற்றை வைக்கக்கூடிய அந்த வசதி இல்லை. Fridge போன்ற வசதிகள் எல்லாம் வேண்டியிருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு முழுவதும் ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதியிலே இந்த பாம்புக் கடி, தேள் கடி அதிகம் நிகழ்கிறதோ அங்கெல்லாம் மருந்துகள் சப்ளையை தற்போது சரியாக வைத்திருக்கிறோம். அதுபோல, நம்முடைய எல்லா பொது மருத்துவமனைகளிலுமே வைத்திருக்கிறோம். ஸ்டோர்களில் பாம்புக் கடிக்கும், தேள் கடிக்கும் மருந்து இன்றைக்கு சரியான முறையில் வைத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதை நாங்கள் கேட்டு, மேலும் கவனத்திலே எடுத்துக்கொண்டு, இந்த அரசாங்கம் தகுந்த நடிவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, உறுப்பினரின் அந்தக் கேள்வியை ஒட்டி வரக்கூடிய கேள்வி. என்னுடைய உடுமலைப்பேட்டை தொகுதியிலே 12 துணை சுகாதார நிலையங்களுக்கு enter upon permission அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு வருகிற நிதி ஆண்டில் கட்டடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப்போல அல்லாமல், தமிழ்நாடு முழுவதும் புதிய

[2007 ஏப்ரல் 9

கட்டடங்கள், இடிந்துபோய் இருக்கிற பழைய கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் வேண்டும் என்று பல கோரிக்கைகள் இருக்கின்றன. இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கும் நிதியின் அடிப்படையில் அவை குறித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

### குடமுழுக்கு

***8710—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, காமக்கூர் கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் கோபுரத்தைச் சீரமைத்துக் குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி தொகுதி, காமக்கூர் கிராமத்திலுள்ள ஈஸ்வரன் கோயில் கோபுரத்தைச் சீரமைக்க ரூ.12.85 இலட்சத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பணி வேலைகள் முடிவுற்றவுடன் குடமுழுக்கு நடத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரசித்திப் பெற்ற கோயில் 13 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோயில் என்று கூறுகிறார்கள். உலகிலேயே நடராஜர் சிலை இரண்டு கால்களோடு சதுர்தாண்டவம் ஆடுகின்ற சிலை இங்கேதான் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தக் கோயிலில் நீண்டகாலமாகப் பழுதடைந்துள்ள பெரிய தேர் ஓடாத நிலையில் இருக்கிறது. அந்தத் தேரையும் புதுப்பித்துத்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் திருப்பணி முடிவுற்றவுடன் குடமுழுக்கு நடத்துவது முடிவுற்று, அதன்பிறகு தேருக்கான கேள்வியை அவர்கள் தனியாகக் கேட்பார்களேயானால், அதற்குப் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

### வன ஆராய்ச்சி மையம்

***11604—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச் சரகத்தில் வன ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை வனச் சரகத்தில் தேன்கனிக்கோட்டை, மரகட்டா மற்றும் கோபசத்திரம் ஆகிய மூன்று இடங்களில் வன ஆராய்ச்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில் கோபசத்திரம், ஓசூர் சட்டமன்றத் தொகுதியிலும், மரகட்டா, தேன்கனிக்கோட்டை வன ஆராய்ச்சி மையங்கள் தளி சட்டமன்றத் தொகுதியிலும் இயங்கி வருகின்றன. இப்படி இரண்டு வன ஆராய்ச்சி மையங்கள் அந்தத் தொகுதியில் இருக்கின்ற காரணத்தினால், மேலும் ஒரு வன ஆராய்ச்சி மையம் உருவாக்குகின்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தேன்கனிக்கோட்டை வனச் சரகம் அடர்ந்த

வனங்களைக் கொண்ட பகுதியாகும். அந்த வனப் பகுதியிலே அனைத்து வகையான தாவர வகைகளும், மர வகைகளும் உள்ளன. பல வகையான தாவரங்களும் மரங்களும் அழிந்து வருகின்ற இந்தச் சூழலிலே, வனங்களை மேம்படுத்தவும், மழை பெறவும் மரங்கள் வளர்ப்பது பற்றிய அவசியத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தவும், தேன்கனிக்கோட்டை வனச் சரகத்திலே வன ஆராய்ச்சி மையம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை வனச் சரகம், தேன்கனிக்கோட்டையில் ஏற்கெனவே வன ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. அந்த வன ஆராய்ச்சி மையத்திலே புங்கன், காட்டாமணக்குப் போன்ற அதிக அளவு எண்ணெய் தரக்கூடிய வித்துகளையெல்லாம் ஆராய்ச்சி செய்து, விவசாயிகளுக்குத் தரப்பட்டு வருகிறது. அதைப்போலவே, அவர் குறிப்பிட்டதுபோல நாவல் மரமாக இருந்தாலும் அல்லது மற்ற மரங்களையெல்லாம்கூட ஆராய்ச்சி செய்து, எதிலே அதிக காய்ப்பு தருகின்றதோ அந்த விதைளைப் பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. மேலும், அந்தப் பகுதியிலே கால்நடைகள் அதிகமாக உள்ள காரணத்தினால், அந்தக் கால்நடைகளின் தேவைக்கு எந்தத் தாவர வகைகளைப் பயிரிட்டால் அதிகமாக இலாபம் பெறலாம் என்பதும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10-00*

தென் மேற்குப் பருவக் காற்றிலும், வட கிழக்குப் பருவக் காற்றுக் காலங்களிலும் அங்கே அதிகமான மழை பெய்கின்ற காரணத்தால் அந்தப் பகுதிகளிலே மற்ற மரங்கள், பிரம்புச் செடிகள், மூங்கில் செடிகள் போன்றவை பயிரிடுவதற்கும், அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. உறுப்பினர்களுடைய தொகுதி மிக உயர்ந்த மலைகள் அடங்கிய பகுதி என்கின்ற காரணத்தால் அந்த இடங்களிலே உயர்ந்த வகை ஈட்டி மரங்களைக்கூடப் பயிரிடுவதற்கு அப்பகுதி விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சந்தன மரங்களை வளர்ப்பதற்குத் தேவையான உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமுனாமரத்தூர் சந்தன மரத்திற்குப் பெயர் பெற்ற ஒரு மலைப் பகுதி. ஆனால், இன்றைக்கு அங்கே மரங்கள் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆக, வன ஆராய்ச்சி மையத்தின்மூலம் அங்கே சந்தன மரக் கன்றுகளை மீண்டும் நட்டு, அந்த மலையிலே சந்தன மரங்களை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன ஆராய்ச்சி மையங்களில் அதிக எண்ணெய் தரக்கூடிய சந்தன மரங்களை, ஒட்டுக் கன்றுகளை உருவாக்கி, அவை அந்தப் பகுதியிலே இருக்கின்ற தனியார்களுக்கு தரப்பட்டு அதேபோல வனப் பகுதிகளிலும் நடப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

### கால்நடை மருத்துவமனை

***7585—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, காளிப்பேட்டையில் கால்நடை மருத்துவமனை துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் தொகுதி, பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த காளிப்பேட்டையில் புதியதாகக்

[2007 ஏப்ரல் 9

கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளிப்பேட்டை பகுதி முழுக்க முழுக்க மலைவாழ் மக்களை உள்ளடக்கிய பகுதியாகும். சேலம் மாவட்டத்தின் எல்லையை ஒட்டி இருக்கின்ற காரணத்தால், அங்கேயிருந்து கால்நடை மருத்துவமனைக்கு வரவேண்டுமானால் 15, 16 கிலோ மீட்டர் தூரம் வரவேண்டி இருக்கிறது. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கால்நடைகளை வளர்ப்பதற்காக, அரசு பல்வேறு சலுகைகளைச் செய்து வருகிற இந்த நேரத்தில், மலைவாழ் மக்களுடைய நலன் கருதி, சிறப்பு நேர்வாகக் கருதி, அந்தப் பகுதியில் ஒரு கால்நடை மருந்தகத்தை உருவாக்கித் தர, அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர் தொகுதி, காளிப்பேட்டை கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம்தான் தற்சமயம் செயல்பட்டு வருகிறது. கிளை நிலையத்தை நேரடியாக மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலாது. கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத்தான் தரம் உயர்த்த இயலும். பின்புதான் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த முடியும். இருந்தபோதிலும், மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வரும் அப்பகுதியில், அவர்களுடைய முக்கியத் தொழிலாக கால்நடை வளர்ப்பு இருந்து வருகிற ஒரு காரணத்தைக் கருத்தில்கொண்டும், காளிப்பேட்டை கிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்திற்கும் மேல் அதிகமாக இருப்பதைக் கவனத்தில் கொண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்கள், தமிழ்நாட்டிலே மிக அதிகமாக கால்நடைகள் இருக்கிற பகுதியாகும். முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி இருக்கிற அந்தப் பகுதி மக்கள், கால்நடையை மாத்திரம்தான் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆசியக் கண்டத்திலே மிகச் சிறப்புவாய்ந்த மத்தகிரி கால்நடைப் பண்ணை, வெள்ளைக்காரன் காலத்தில் இருந்து திப்பு சுல்தான் காலம் வரையில், குதிரைகளை வளர்த்து நாடு பூராவும் இராணுவத்திற்கு அனுப்புகிற புகழ்பெற்ற இடமாக இருந்து வந்த இடம். அந்த இடம் ஆடு, மாடுகளை வளர்ப்பதற்கும், தரம் உயர்ந்த காலநடைகளை உருவாக்குவதற்குரிய வாய்ப்பு உள்ள இடமாக இருக்கிற காரணத்தால, தமிழ்நாட்டில் முதல் முதலாக கால்நடை பல்கலைக்கழகத்தை உருவாக்கிய நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய ஆட்சியில், அந்த மாவட்டத்து மக்களுடைய நலன் கருதி சிறப்பு வாய்ந்த, புகழ்பெற்ற அந்த மத்தகிரி கால்நடைப் பண்ணையில் ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரியை நடப்பு ஆண்டிலேயே உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதல்வர் அவர்களிடம் கலந்து பேசி நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 11 ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவக் கல்லூரிகள் அமைக்க நம்முடைய அரசு உரிய திட்டம் தீட்டி வருகிறது. மாண்புமிகு மொரப்பூர் தொகுதி உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை இந்த அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் பாளையன்கோட்டை, சோழதரம் ஆகிய இடங்களில் உள்ள கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்படாத நிலையில் உள்ளன. கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே இதுபற்றிக் கேள்வி நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொன்னபோது, துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக சரி செய்யப்படும் என்று உறுதி அளித்தார்கள். ஆனால் தொடர்ந்து இன்னும் அதே நிலைதான் உள்ளது. விரைவில் அந்தக் கிளை நிலையங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுக் காலமாக இத்துறை நலிவுற்ற நிலையில் இருந்தது. எந்த ஒரு கிளை நிலையத்திலும், மருந்தகத்திலும், மருத்துவமனையிலும் பொறுப்பாக ஒரு மருத்துவரோ, கால்நடை ஆய்வாளர்களோ இல்லாத ஒரு நிலைமை இருந்தது. இந்த அரசு விரைவாக, வேகமாக அதைச் சீராக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. நம்முடைய சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கைக்கு இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது உரிய விளக்கங்கள் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**30—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***8815—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகரில் புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.





**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நலத் திட்டங்கள் மக்களைச் சென்றடைகிற வகையில், நிருவாகம் மிகச் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, அக்கொள்கையின் அடிப்படையிலே, பெரிய மாவட்டங்களாக இருக்கின்ற மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. அதன் அடிப்படையிலே தருமபுரி மாவட்டத்தை, தருமபுரி, கிருஷ்ணகிரி என்று இரண்டாகப் பிரித்து ஏறக்குறைய 4 ஆண்டுக் காலமாகிறது. ஆனால், 4 ஆண்டுக் காலமான பிறகும், தருமபுரி பால் கூட்டுறவு மையம், பால் கூட்டுறவு குளிரூட்டு மையம், Powder Plant ஆகிய அனைத்தும், கிருஷ்ணகிரியிலே செயல்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்தினுடைய சிறு மற்றும் குறு விவசாயிகளினுடைய நலன் கருதி, இந்தப் புதிய மாவட்டக் கூட்டுறவு பால் மையம் தருமபுரியிலே ஆரம்பிக்கப்பட வேண்டும்; அதற்கான குளிரூட்டு மையமும் தருமபுரியிலே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டு, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே, மேலும் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை; தேவையும் இல்லாமல் இருக்கிறது. அதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, வேறொரு இடத்தில் அமைத்துக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்குமா என்று கேட்டார்கள். அரசினுடைய கொள்கை முடிவில் இதுபோன்ற முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை என்பதையும் அதுபோன்ற அவசியம் அந்த மாவட்டங்களைப் பொறுத்தவரையில் ஏற்படவில்லை என்பதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலே கொள்முதல்

[2007 ஏப்ரல் 9

செய்யப்படுகின்ற மொத்த பாலின் அளவு 1,15,000 லிட்டர். இந்த மொத்த அளவில் தருமபுரி மாவட்டத்தில் மட்டும் ஏறக்குறைய 70,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஏறக்குறைய 70,000 லிட்டர் பாலை, ஏறக்குறைய 150 கிலோ மீட்டர் தொலைவிற்குமேல் எடுத்துச் சென்று, கிருஷ்ணகிரியிலே பதப்படுத்தி, எடுத்துச் செல்வதன்மூலமாக இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு தொடர்ந்து நட்டம் ஏற்படுகிறது என்று அந்த நிருவாகம் சொல்லிவருகிறது. அதன் அடிப்படையிலே, ஏறக்குறைய 3 ஆண்டுக் காலமாக, சேலம், வேலூர் மாவட்டங்களைவிட, அந்த மாவட்டத்திற்கு கொள்முதல் விலையில் 50 பைசா குறைவாகவே தொடர்ந்து கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த நட்டத்தைப் போக்க தருமபுரியிலேயே இந்தக் குளிரூட்டு நிலையத்தை அமைத்து, நேரடியாகச் சென்னைக்குக் கொண்டு வந்து விற்பனை செய்தால் இந்த நட்டம் தவிர்க்கப்படும். விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்கின்ற காரணத்திற்காக மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து, இந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, கிருஷ்ணகிரியில் பால் குளிரூட்டு மையம் புதிதாகத் தொடங்கப்பட வேண்டுமென்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், தருமபுரி நகரத்தில் 50,000 லிட்டர் கொள்ளளவு உள்ள குளிரூட்டு நிலையத்தோடு மட்டுமல்லாமல், அதிகமாக பால்வரத்து இருக்கிற காரணத்தால், தருமபுரி மாவட்டத்தில், வெப்பம்பட்டி, கல்லிப்பட்டி, புதுப்பட்டி, பைரநத்தம், எரியூர், எல்லூர், ஊத்தங்கரை, ஊத்தங்கரை-2, கல்லாவி உள்ளிட்ட 11 இடங்களைத் தேர்வு செய்து, சுமார் 2,000–லிருந்து 5,000 லிட்டர் வரை கொள்ளளவு உள்ள Bulk Milk Cooler நிறுவுவதற்கான ஏற்பாடு நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





முற்பகல் 10–10

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### செண்டூர் கிராமத்தில் வெடிமருந்துகளை ஏற்றிச் சென்ற வாகனம் வெடித்து பலர் இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. திண்டிவனம் அருகே... (குறுக்கீடுகள்) எல்லோரும் கொடுத்திருக்கின்றதைத்தான் சொல்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். திண்டிவனம் அருகே செண்டூரில் வெடிமருந்துகள் ஏற்றி வந்த வாகனம் வெடித்துப் பலர் இறந்தது குறித்து, அ.தி.மு.க. சார்பாக, திருவாளர்கள் ஓ. பன்னீர்செல்வம், கே.ஏ. செங்கோட்டையன், டி. ஜெயக்குமார், அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, கோ. அரி, செ.ம. வேலுசாமி, சு.ப. வேலுமணி, சி. சண்முகவேலு மற்றும் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக திரு. டி. சுதர்சனம், திருமதி டி. யசோதா, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. சு. சிவராஜ், திரு. கோவை தங்கம், பா.ம.க. சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், திரு. கி. ஆறுமுகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, திரு. சி. கோவிந்தசாமி, செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. வே. மாரிமுத்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் பிரதான எதிர்க்கட்சி... (குறுக்கீடுகள்) Order அப்படித்தானே வர வேண்டும்? (குறுக்கீடுகள்) பேசுங்கள். (குறுக்கீடுகள்) Order அப்படித்தான் வரும். பிரதான எதிர்க்கட்சிதான் முதலில் பேச வேண்டும். திரு. ஓ. பன்னீர்செல்வம் பேசுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில், விழுப்புரத்திலிருந்து திண்டிவனம் செல்கின்ற திருச்சி–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இருக்கின்றது செண்டூர் கிராமம். கடந்த ஏழாம் தேதி அந்த செண்டூர் கிராமத்தில், அந்த வழியாக வந்த ஜீப்பில் சக்திவாய்ந்த RDX வெடிமருந்துகளை தேச விரோத சக்திகளுக்காகக் கடத்திச் செல்கின்ற அந்த வேளையில், ஜீப் அந்தக் கிராமத்தைக் கடக்கின்ற நேரத்தில், அந்த ஜீப்பிலிருந்த வெடிகுண்டுகளிலிருந்து கரும்புகை வந்ததையடுத்து, ஜீப்தான் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கிறது என்று நினைத்த அந்த கிராமத்து அப்பாவி

மக்கள், அந்த ஜீப்பில் ஏற்பட்ட தீயை அணைக்கின்ற நல்ல நோக்கத்தோடு, கிராமத்திலே இருக்கின்றவர்கள் அந்தத் தீயை அணைக்க முற்பட்டபோது, ஜீப்பிலிருந்த வெடிமருந்து பயங்கர சத்தத்துடன் வெடித்து, 17 பேர், அப்பாவி மக்கள் பலியாகியிருக்கின்றார்கள், ஐம்பதுக்கும் மேற்பட்ட மக்கள்—ஆண், பெண், குழந்தைகள்—படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் சுற்றளவிற்கு அந்தப் பகுதியில் இருக்கின்ற 50 வீடுகள் பலத்த சேதமுற்றிருக்கின்றன. சம்பவம் நடந்த இடத்தில் 10 அடி ஆழத்திற்குப் பள்ளம் ஏற்பட்டிருக்கிறது. வெடி மருந்தை ஏற்றி வந்த ஜீப், உருக்குலைந்து சின்னாபின்னமாக்கப்பட்டு, ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் தூக்கியெறியப்பட்டிருக்கிறது. சுற்றியிருந்த தென்னை மரங்கள், புளிய மரங்கள் அனைத்தும் கருகிப் போயிருக்கின்றன. அந்த அளவிற்கு அந்த வெடிமருந்து சக்திவாய்ந்ததாக இருந்திருக்கின்றது.

*முற்பகல் 10–15*

கடந்த ஓராண்டுக் காலமாக தொடர் நிகழ்வாக இம்மாதிரியான நிகழ்வுகள் தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. தமிழகம் இந்தியாவின் ஆயுதக் கிடங்காக மாற்றப்பட்டிருக்கின்றதோ என்ற அச்சம் தமிழக மக்களிடையே ஏற்பட்டு, இன்றைக்கு நாட்டு மக்களுக்கு அபாயகரமான ஒரு சூழ்நிலை எழுந்திருக்கிறது. ஆனால், சம்பவம் நடந்த அரை மணி நேரத்திற்குள்ளாக, காவல் துறை அதிகாரிகள் பேட்டி கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையில், அங்கு ஏற்றப்பட்டு வந்திருக்கின்ற வெடிமருந்து, எந்தமாதிரியான வெடிமருந்து என்று ஆய்வு செய்து பரிசோதனைக்கு உட்படுத்தாமல், அதனுடைய ஆய்வறிக்கை அரசுக்கு வந்து சேராமல், இவர்களாகவே அது ஜெலட்டின் குச்சி வகையைச் சார்ந்த வெடி மருந்து என்று பேட்டி கொடுத்திருக்கின்றார்கள். ஜெலட்டின் குச்சியாக இருந்தால், கரும்புகை வராது என்பதை நாம் அனைவரும் நன்றாகவே அறிந்திருக்கின்றோம். ஏனென்று சொன்னால், நாம் அனைவரும், விவசாயத்திற்காகக் கிணறுகள் தோண்டுகின்றபோது, ஜெலட்டின் குச்சியைப் பயன்படுத்தியிருக்கின்றோம்; அப்படிப் பயன்படுத்தும்போது, கரும்புகை வராது. ஆனால், அங்கு கரும்புகை வந்து, அதற்குப் பின்புதான், பயங்கர சத்தத்துடன் வெடித்திருக்கின்றது. அந்த நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு, சென்று கொண்டிருந்த வாகனங்களில் உட்கார்ந்திருந்தவர்கள், அதிர்வு





ஏற்பட்டு, அதன்மூலமாகக்கூட மரணம் அடைகின்ற ஒரு சூழ்நிலை அன்றைக்கு இருந்திருக்கின்றது. இதிலிருந்து, வெடித்த அந்த வெடிபொருள், பயங்கரமான, அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய, மனித உயிர்களைப் பலி வாங்கக்கூடிய அளவிற்குச் சக்திவாய்ந்த வெடிகுண்டாகத்தான் இருக்குமென்று நாம் கருதுவதற்கு ஆதாரங்கள் நிறைய இருக்கின்றன.

இன்றைக்குக் காவல் துறையில் இருக்கின்றவர்கள், ஆய்வு செய்யாமல், பரிசோதனை செய்யாமல், ஒரு முடிவுக்கு வந்து, இவ்வாறு அது ஜெலட்டின் குச்சி என்று சொல்லுகின்ற அளவிற்கு, அவர்கள் பேட்டி கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது மக்களைத் திசை திருப்புவதாகும். நடந்த சம்பவத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்ளாமல், அந்தச் சம்பவத்தினுடைய பயங்கரத்தை உணராமல், பேட்டி அளிக்கப்பட்டுள்ளது. அந்த வெடி பொருள் ஆயுதக் கிடங்கிலேயிருந்து வந்ததே, அந்த ஆயுதக் கிடங்கிற்கு லைசென்ஸ் பெற்றிருக்கின்றார்களா? அந்த ஆயுதக் கிடங்கிலிருந்து, வெளியே கொண்டுவருவதற்கு, டெலிவரி சலான் அந்த ஆயுதக் கிடங்கில் பெறப்பட்டிருக்கின்றதா? ஆயுதக் கிடங்கிலிருந்து இந்த வெடி பொருள் எங்கு எடுத்துச் செல்லப்பட்டது என்ற விவரம் இருக்கின்றதா? இதெல்லாம், இன்னும் தெரியாத புதிராக உள்ளது. அங்கு அந்த ஆயுதக் கிடங்கை வைத்திருப்பவர், ஏற்கெனவே கள்ளச் சாராயம் காய்ச்சிக் கொண்டிருக்கின்ற ஓர் ஆசாமி என்று சொல்லப்படுகின்றது.

இன்றைக்குத் தமிழகத்திலே இம்மாதிரியான நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. கடந்த ஓராண்டுக் காலமாக தேச விரோத சக்திகளுக்குத் தமிழகத்திலிருந்துதான் சக்திவாய்ந்த வெடி மருந்துகள், அவர்களுக்கு வேண்டிய அளவிற்குப் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றது என்ற மக்களுடைய அச்சத்தை, நிரூபிக்கின்ற வகையில் இப்போது இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது. இப்போது பொறுப்பேற்றிருக்கின்ற தமிழக அரசு, இதற்குச் சரியான தீர்வினை, சரியான பதிலைத் தர வேண்டும். கடந்த ஓராண்டுக் காலமாக நாட்டு மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற அச்சத்தை, பீதியை, பயத்தைப் போக்குவதற்கு—தமிழகம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைதிப் பூங்கா மாநிலமாக இருந்ததே, (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றையெல்லாம் மாற்றி, இன்றைக்கு மக்கள் அச்சத்துடனும், பீதியுடனும் வாழ்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது—மக்களைக் காப்பதற்கு இந்த அரசு என்ன

நடவடிக்கை எடுக்கப் போகின்றது, எடுத்திருக்கின்றது என்பதனை இந்த அவையின்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமை அன்று நடந்த ஒரு கோர விபத்தின் காரணமாக, ஏழையெளிய, அப்பாவி மக்கள் 16 பேர் பலியாகி இருக்கிறார்கள். (குறுக்கீடு) 16 பேர் பலியாகி இருக்கிறார்கள்; 157 வீடுகள் சேதமுற்றுள்ளன; 53 பேர் காயமுற்றிருக்கிறார்கள்; 4 வாகனங்கள் முழுமையாகச் சேதமடைந்திருக்கின்றன. இதைப்போல, பொது மக்களுடைய, பல இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களும், கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

*முற்பகல் 10–20*

பொதுவாக, வெடிகுண்டு விபத்துகள் நடப்பதென்பது தமிழகத்திலே புதிதல்ல. வெடிகுண்டு மருந்துகளைத் தயாரிக்கின்ற இடத்திலிருந்தும், அவற்றைச் சேமித்து வைக்கிற இடத்திலிருந்தும், அவற்றைப் பயன்படுத்துகிற இடத்திற்குக் கொண்டு போகக்கூடிய வழியிலே விபத்துகள் நடந்ததாகப் பல்வேறு சம்பவங்களை இந்த மன்றத்திலே நாம் நினைவுகூரமுடியும். ஆனால், தற்போது நாடு முழுவதும் பயங்கரவாதம் தலைவிரித்தாடுகையில் இதைப்போன்ற வெடிமருந்துகள் வெடிக்கின்றபோது, பொதுமக்கள் மத்தியிலும் ஒரு பீதி இயற்கையாகவே கிளம்பிவிடுகிறது. இப்படிப்பட்ட வெடிமருந்துகள், விபத்தில் வெடித்தால்கூட சாதாரண மக்களுக்கும், பொதுவாழ்க்கையிலே இருக்கின்றவர்களுக்கும், இதற்குப் பின்னணியிலே பயங்கரவாதம் இருக்குமோ என்கிற ஒரு சந்தேகமும் இயற்கையாகவே வந்துவிடுகிறது. ஆனால், இந்த விபத்தைப் பொறுத்தவரை, அந்த வாகனம் எங்கேயிருந்து புறப்பட்டது, எப்படிப் புறப்பட்டது என்பதைப் பற்றிய சரியான சாட்சியங்கள் இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது. இதிலே அரசு கவனதிற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு கோணத்தை காங்கிரஸ் கட்சி வலியுறுத்த ஆசைப்படுகிறது.

பொதுவாக, இதைப்போன்ற விபத்துகள் சாலையோரங்களிலே, பாதுகாப்பற்ற இடங்களிலே நடக்கின்றபோது அந்த விபத்துகளில் அப்பாவி மக்கள்தான் பலியாகிறார்கள். அதிலும், குடிசையிலே வாழ்கின்றவர்கள், சாலையோரம் வாழ்கின்றவர்கள், நல்ல கான்கிரீட்



வீடுகளிலே வாழ முடியாதவர்கள்தான் இதைப்போன்ற விபத்துகளுக்கு முதல் இலக்காக மாறுகிறார்கள்.

கும்பகோணத்திலே ஒரு பள்ளிக் கூடத்திலே, அப்பாவிக் குழந்தைகள் உயிரோடு எரிந்தபோது, அதைப்பற்றி நாம் மிக அதிகமாகப் பேசினோம். திருவரங்கத்திலே ஒரு திருமண மண்டபத்திலே திருமணம் முடிந்து, திருமண வீட்டிலே நூற்றுக்கணக்கானோர் பலியானபோதும், நாம் மிகவும் கவலைப்பட்டோம். (குறுக்கீடு) திருமண மண்டபங்கள் அரசினுடைய, அதிகாரிகளுடைய ஒப்புதல் பெற்று முழுமையாக வடிவமைக்கப்பட்டு, கட்டப்படவேண்டும்; பள்ளிக் கூடங்களுக்கு அனுமதி கொடுக்கின்றபோது அதைப்போன்றே பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றி அந்த அனுமதி கொடுக்கப்பட வேண்டுமென்றெல்லாம் அதைப்பற்றி நாம் பேசினோம். ஏன், கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேகூட வாழப்பாடி Sub-Registrar office-க்கு எதிராகவே வெடிகுண்டு வெடித்து 8 பேர் பலியானார்கள். சுங்குவார்சத்திரத்திலே எரிபொருள் நிரப்பிய ஒரு பெரிய லாரி மோதி பக்கத்திலிருந்த எல்லோரும் எரிந்துபோனார்கள். ஆகவே, இதைப்போன்ற விபத்துகள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அந்த விபத்துகளைத் தடுப்பதற்கு அரசு என்ன செய்யப்போகிறது என்பதைத்தான் நாங்கள் அறிய விரும்புகிறோம்.

இதிலே நான் ஓர் ஆலோசனையை அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து அதைப் பரிசீலிக்கவேண்டும். இந்த வெடி மருந்து என்பதைப்பற்றி சமீப காலமாகவே யாரேனும் பேசினாலே பயம் வரக்கூடிய சூழ்நிலை வருகின்றபோது, இவ்வளவு சக்திவாய்ந்த வெடிமருந்துகளின் விநியோகம் இனிமேலும் தனியார் கையில் இருக்க வேண்டுமா என்பதை அரசு யோசிக்க வேண்டும். அரசு மதுபானக் கடைகளைக்கூட ஏற்று நடத்துகிறது; மணல் குவாரிகளைக்கூட ஏற்று நடத்துகிறது. அப்படி நடத்துகின்றபோது தேவைப்படுகின்ற இடத்திலே இந்த வெடி மருந்து விநியோகமும். இந்த முக்கியமான காலகட்டத்தில் பயங்கரவாதம் மலிந்திருக்கும் நேரத்தில், அரசின், பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி இந்த வெடிமருந்து விநியோகத்தை தனியாரிடமிருந்து உடனே அரசு எடுத்து, அரசே தன்னுடைய நேரடிப் மேற்பார்வையிலே முறையான பயனீட்டாளர்களுக்கு விநியோகிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது ஒன்றும் பெரிய விஷயமல்ல. ஒரு மாவட்டத்திற்கு, ஒரு தாலுகாவிற்கு அரசு அங்கீகாரம் பெற்ற முறையான வாகனம்—இப்பொழுது அங்கே என்ன

நடந்திருக்கிறது? அந்த முறையான வாகனம் இல்லாமல்தான் இவ்வளவு பெரிய சேதம் நடந்திருக்கிறது. அந்த E-vehicle—அந்த வெடி மருந்துகளைக் கொண்டுபோக முறையான வாகனத்தைப் பயன்படுத்தியிருப்பார்களென்று சொன்னால், அந்த விபத்து நடந்திருக்காது. எனவே, அரசு இந்த விபத்திலிருந்து ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் வருங்காலத்தில், வெடிமருந்துகள் விநியோகம் தனியாருடைய கையிலே இருப்பதை அனுமதிக்கக்கூடாது. அப்படி அனுமதிப்பது இந்த நாட்டின் பாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் நல்லதல்ல. செண்டூரிலே பறிகொடுத்த மக்களுடைய, பலியான மக்களுடைய வாழ்க்கையிலிருந்தாவது இதை நாம் படித்துக்கொள்வோம்.

*முற்பகல் 10–25*

இரண்டாவதாக, அதிகாரிகளுடைய மெத்தனத்தை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இங்கே நம்முடைய அரசாங்கம்கூட உடன்டியாக மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் அவர்களுடைய விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது. அந்த மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்தான் அந்த மாவட்டத்திலே வெடி மருந்தினுடைய பயன்பாட்டைக் கண்காணிக்க வேண்டும். அவருடைய தலைமையிலே விசாரணை என்று சொன்னால் அந்தப் பொறுப்பான அதிகாரிகள்மீது யார் நடவடிக்கை எடுப்பது? எனவே, அது சம்பந்தமான விசாரணையை அரசுச் செயலாளர் அந்தஸ்திலே ஒரு பெரிய அதிகாரியை வைத்து நடத்தி, இந்தத் தவறுக்கு யார் காரணம் என்பதை நாம் கண்டுபிடித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரிழந்தவர் குடும்பத்திற்கு அரசு ஒரு இலட்ச ரூபாய் வழங்கியிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட நேரடியாக சம்பவ இடத்திற்குச் சென்று காயப்பட்டவர்களையும், இறந்துபோனவர்களின் குடும்பங்களையும் பார்த்து அவர்களுக்கு நஷ்ட ஈடு தருவதாகவும், குடும்பத்தாருக்கு அரசாங்க வேலை தருவோம் என்றும் வாக்களித்திருக்கிறார். அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை சற்று கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு ஒரேயொரு வழி, வெடி மருந்து விநியோகத்தை அரசு தன்னுடைய நேரடி மேற்பார்வையில், அரசே செய்ய வேண்டுமென்பதுதான், இந்த நேரத்திலே அரசாங்கம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது என்று





சொல்லி அதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தை அடுத்த செண்டூர் அருகிலே தேசிய நெடுஞ்சாலையில் வெடி மருந்து எடுத்துச் சென்ற ஈப்பு திடீரென வெடித்து 16 பேர் உயிரிழந்த மிகத் துயரமான செய்தி; பல பேர் உடல் உறுப்புகளை இழந்து தவிக்கின்ற நிலை; ஏறக்குறைய 50–க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்திருக்கிற இந்தச் சம்பவம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழ்நாட்டு மக்களையும் உலுக்கியிருக்கிற மிகப் பெரிய சோகச் சம்பவம் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வெடி மருந்து சாதாரண ஒரு ஈப்பிலே எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. எடுத்துச் சென்றவர் உரிமம் பெற்றவர் என்று சொல்லப்படுகிறது. இருந்தாலும்கூட வெடி மருந்து எடுத்துச் செல்லும்போது பாதுகாப்பான வண்டிகளிலே எடுத்துச் செல்ல வேண்டுமென்ற விதி இருக்கிறது. அந்த விதிமுறையை மீறி எடுத்துச் சென்றது மிகப் பெரிய குற்றம். அதேவேளையில், யாரோ செய்த தவறுக்காக அக்கம்பக்கத்திலே இருந்தவர்கள் 16 பேர் உயிர் இழந்தது, வீடுகள் எல்லாம் சேதம் அடைந்தது, பல பாதிப்புகள் ஏற்பட்டது என்பது மிகப் பெரிய துயரச் சம்பவம். இதைச் சாதாரணமாக நாம் விட்டுவிட முடியாது.

சமீபத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே, மீனவர்கள் பாதிப்பு என்ற நிலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனக்கே உள்ள கருணை உள்ளத்தோடு, அதைச் சாதாரண ஒரு நிகழ்வாக எடுத்துக்கொள்ளாமல் அது சிறப்பு நேர்வாகக் கருதப்பட வேண்டுமென்ற ஓர் அறிவிப்பைச் செய்து நிவாரண உதவிகள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளையெல்லாம் வாரி வழங்கியதை நாம் மனதார வரவேற்றுக்கொண்டிருக்கிறோம். அதைப்போலவே, இந்த விபத்துச் சம்பவத்தையும் ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, அங்கே உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு அரசு வழங்கியிருக்கிற ஒரு இலட்சம் ரூபாய் போதாது, ஐந்து இலட்சம் ரூபாயாக வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே, இறந்தவர்கள் குடும்பத்தில் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வழங்கப்படும் என்று அந்த மாவட்டத்தினுடைய அமைச்சரான, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கூறி சத்துணவுத் திட்டத்திலே வேலை அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். வேலை அளிப்பதாகச் சொன்ன செய்தி உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கிறது. இருந்தாலும்கூட, அந்தக் குடும்பத்தில் படித்தவர்கள் இருந்தால், கல்வித் தகுதியின் அடிப்படையிலே வேலைவாய்ப்பினை வழங்க வேண்டுமென்று நான் இங்கே வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலும் அதைத் தொடர்ந்தும் தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட கோரச் சம்பவங்கள், விபத்துகள் திடீரென்று நடந்து வருகின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் பண்ருட்டி பகுதியிலே விஷச் சாராயத்தினால் 54 பேர்களுக்குமேல் இறந்தார்கள்; அது மிகப் பெரிய சோகச் செய்தி; அதைப்போல கும்பகோணம் மகாமகத்திலே இறந்த செய்தியை நாம் பார்த்தோம்; கும்பகோணம் பள்ளியிலே மாணவர்கள், பிஞ்சு உடல்கள் கருகி இறந்ததை நாம் பார்த்தோம்; (குறுக்கீடுகள்) நடந்தவற்றை நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன், வேறு ஒன்றும் சொல்லவில்லை. திருவரங்கத்திலே திருமணக் கூடத்திலே இறந்த சம்பவம் இதுபோன்ற விபத்து என்பது, கோரச் சாவு என்பது தமிழகத்திலே தொடர்ந்து வந்திருக்கிற நிகழ்வு என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

இப்படி திடீரென்று ஏற்பட்ட விபத்துக்கு அரசியல் சாயம் பூசுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், தமிழகத்திலே பயங்கரவாதம் தலைதூக்கிவிடும் என்று, வழக்கமாகக் கட்டுக்கதையை இட்டுக்கட்டிச் சொல்லக்கூடிய நிலையை நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகச் சொல்லக்கூடியதே தவிர, இதை நாட்டுமக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதை வைத்துக்கொண்டு ஆட்சியைக் கலைக்க வேண்டும்; பயங்கரவாதம் தலைதூக்கிவிட்டது; காவல் துறை செயலிழந்து கிடக்கிறது என்ற குற்றச்சாட்டுகள், உள்ளபடியே கண்டிக்கத்தக்கவை. யாரிடத்திலேயிருந்து, எங்கிருந்து வந்தாலும்கூட, (மேசையைத் தட்டும்





ஒலி) அது மிகப்பெரிய கண்டனத்திற்குரியது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல இந்த விபத்தைப் பொறுத்தவரையிலே, மாவட்ட வருவாய்த் துறை அலுவலர் தலைமையிலே விசாரிப்பதாக அறிவிப்பு வந்திருக்கிறது. அதைவிட, ஓர் ஓய்வு பெற்ற நீதிபதி, அல்லது மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரைக்கொண்டு, அவர் தலைமையிலே விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கிறேன். விசாரணைக் குழு என்று சொன்னால், நான்கூட தொடர்ந்து பார்த்திருக்கிறேன்; நூற்றுக்கு மேற்பட்ட விசாரணைக் குழுக்களை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த விசாரணைக் குழுக்கள் அரசுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்த பிறகு, அதன்மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா, பரிகாரங்கள் தேடப்படுகின்றனவா என்று சொன்னால், அது கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. உதாரணத்திற்கு, கும்பகோணம் பள்ளியிலே பள்ளிக் குழந்தைகள் இறந்தார்கள். மிகப்பெரிய சோகச் செய்தி. எல்லோரையும் அது உலுக்கியது. அங்கு ஓரே கட்டடத்தில் மூன்று பள்ளிகள்; தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று, தனித்தனியாக வகுப்புகள் நடத்தப்பட்டன. இதற்குத் தடை வேண்டும், இதை மாற்ற வேண்டுமென்று, பல்வேறு நிபந்தனைகளை விதிக்க வேண்டும் என்று அந்தக் குழு அரசுக்குப் பரிந்துரைகள் செய்தது. அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா, குழு கொடுத்த பரிந்துரை முழுமையாக நிறைவேற்றப்பட்டதா என்று சொன்னால், அது கேள்விக்குறியாகவே இருக்கிறது. நான் அதை ஓர் உதாரணத்திற்குச் சொல்கிறேன். அப்படிப்பட்ட குழு விசாரணையாக இது இருந்துவிடக்கூடாது. குழுவினுடைய அறிக்கையை முழுமையாக நிறைவேற்றக்கூடிய வகையிலே இருக்க வேண்டும் என்ற அந்த வேண்டுகோளை நான் முன்வைக்கிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்த சோகச் சம்பவம் என்பது, நாட்டுமக்களுக்கு மிகுந்த வேதனையையும், அதிர்ச்சியையும் கொடுத்துக் கொண்டிருக்கிற சம்பவம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதை சிறப்பு நேர்வாகக் கருதி, இதற்குக் கூடுதல் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்; வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். அதேநேரத்திலே, அங்கே வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. அந்த வீடுகளுக்குப் பதிலாகப் புதிய வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வரவேண்டும். இதைச் சிறப்பு நேர்வாகக் கருதி, காயமடைந்தவர்களுக்கு எல்லா வகையிலும், உதவி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைத்து அமர்கிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செண்டூரில் நடைபெற்றிருக்கக்கூடிய இந்த வெடிவிபத்துச் சம்பவம், தமிழகத்து மக்களை ஆழ்ந்த வேதனையையும், அதிர்ச்சியையும் அடைய வைத்திருக்கிறது. குறிப்பாக, 16 பேர் மரணம் என்பது, மிகுந்த வேதனை அளிப்பதாக இருக்கிறது. அந்த 16 பேரில், இரண்டு பேர் தாழ்த்தப்பட்ட மக்களும், நான்கு பேர் பெண்களுமாக உள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், கிட்டத்தட்ட 164 வீடுகள் கடுமையாகச் சேதடைந்திருக்கின்றன. இந்தச் சம்பவம் நடந்த இடத்தில், அந்த வாகனம் நின்ற இடத்தில் ஓர் ஆழமான பள்ளம் ஏற்பட்டிருக்கிறது. அருகில் இருந்த தென்னை மரத்தினுடைய தலைப் பகுதி முற்றிலுமாகச் சேதப்பட்டிருக்கிறது. புளிய மரத்தில் புளியம்பழம் பறித்துக்கொண்டிருந்த ஒருவருடைய உடல், வெடித்து சிதறடிக்கப்பட்டிருக்கிறது. அருகில் இருந்த ஐந்து வயதுச் சிறுவன் இப்பொழுது திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறான். ஐந்து வ்யதுச் சிறுவன்; ஆகவே, இவ்வளவு கடுமையான சேதாரத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்த வெடி மருந்து வாகன விபத்துச் சம்பவம் குறித்து, ஒரு தீர்க்கமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வேண்டுகோள். ஏனென்று சொன்னால், இப்பொழுது டி.ஆர்.ஓ. அவர்களுடைய தலைமையில் விசாரணையை அரசு அறிவித்திருக்கிறது. டி.ஆர்.ஓ., மாவட்ட ஆட்சித் தலைவர்தான் இந்த நிகழ்விற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஏனென்றால், இதுபோன்ற வெடிமருந்துகளை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு எந்தக் கண்காணிப்பும் இல்லை. எந்த வாகனம் எடுத்து வருகிறது; எப்படி அதைப் பயன்படுத்துகிறார்கள் என்பது குறித்து எந்தச் சோதனையையும் செய்வதில்லை.

*முற்பகல் 10–35*

இதில் அதிகாரிகளைக் கொண்ட விசாரணை என்பது உதவியாக இருக்காது. எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்கு, ஓய்வு பெற்ற நீதிபதி அல்லது இப்பொழுது பதவியில் இருக்கக்கூடிய, பொறுப்பிலே இருக்கக்கூடிய மாநில அரசு முதன்மைச் செயலாளர்மூலமாக அந்த விசாரணை என்பது தீர்க்கமாக நடத்தப்படவேண்டும். அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய தவறுகளைக் களைவதற்குரிய நிர்வாக நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ள



வேண்டும் என்பதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, ஒரு இலட்சம் ரூபாய் என்பது நிவாரண நிதியாக வழங்கப்பட்டிருக்கிறது. அது நிச்சயமாகப் போதுமானதாக இல்லை. இந்த 16 பேர் மரணமடைந்ததில், இரண்டு பேர் இன்னமும் அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே, அதுவும் கண்டுபிடிக்கப்படவேண்டும். இவர்களது குடும்பத்தினருக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வழங்குவதோடு, காயம் அடைந்தவர்களுக்கு இப்பொழுது 15,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது அதைக் கூடுதலாக வழங்கவேண்டும் என்பதை எங்களுடைய கட்சியினுடைய வேண்டுகோளாக முன்வைத்துக் கொள்கின்றோம்.

அதேபோன்று, ஏற்கெனவே நமது உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் குறிப்பிட்டதைப்போன்று, எதிர்காலத்தில் இதுபோன்ற வெடிமருந்துகளை உற்பத்தி செய்வதை, விநியோகம் செய்வதை, அரசு ஏற்றுக்கொள்வது பொருத்தமாக இருக்கும். ஏனென்றால், எதிர்காலத்தில் இதுபோன்ற எந்தச் சம்பவமும் பல்வேறு யூகங்களுக்கு இடமளிக்கும், பல சந்தேகங்களுக்கு இடமளிக்கும்; இதைப் பத்திரிகைகள், மீடியா அவரவர் நோக்கத்திற்கு அவரவர்கள் பயன்படுத்திக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கும். இறந்த குடும்பங்கள் எல்லாமே மிக மிக வறுமையில் இருக்கக்கூடிய குடும்பங்கள். அனேகமாக, அந்த செண்டூரில், எல்லா வீடுகளுமே குடிசை வீடுகள். எங்களுடைய இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினுடைய ஒன்றியக் குழு உறுப்பினர் முருகன் என்ற வாலிபர், மூன்று குழந்தைகளோடு மரணமடைந்திருக்கிறார். அந்தப் பகுதியில் பூ உற்பத்தி செய்வதுதான் அவர்களுக்கு வாழ்க்கையாக இருந்துகொண்டிருந்தது. அந்த ஊரிலேதான் அதிகமான பாதிப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 300–க்கும் மேற்பட்ட குழந்தைகள் படிக்கும் பள்ளி உள்ளது. அன்றைக்கு நல்லவேளையாக பள்ளி நடைபெறவில்லை என்பதனால், அந்த மாணவர்கள் தப்பித்தார்கள். சமையல் உதவியாளர்கள் உட்பட பலர் இந்த விபத்திலே படுகாயம் அடைந்திருக்கிறார்கள். நாங்கள், எங்களுடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு, அங்கிருக்கக்கூடிய மக்களை, இளைஞர்களைச் சந்தித்து விசாரணை செய்தோம். இதுபோன்ற வாகனம் அடிக்கடி வருமா, திடீரென்று வந்ததா என்று கேட்டபொழுது, அங்கு இருக்கக்கூடிய அரசு குவாரிக்கு சாலை அமைப்பதற்கான கல் தட்டுப்பாடாக இருப்பதால், இங்கு வெடிமருந்துகளை எடுத்துச்

செல்வது வழக்கம்தான் என்பதனை அங்கிருக்கக்கூடிய பொதுமக்கள்மூலமாகவும் நாங்கள் தெரிந்துகொண்டோம். ஆகவே, இது இன்னமும் தீர்க்கமாக விசாரிக்கப்படவேண்டும் என்பதில் நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. அந்த வகையிலே இதை ஒரு எச்சரிக்கைச் சம்பவமாக அரசு எடுத்துக்கொண்டு பாதிக்கப்பட்ட அந்த 164 வீடுகளின் பழுதை நீக்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்துகொடுக்கவேண்டும். இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போன்று, அரசு வேலைவாய்ப்பு உதவியும் செய்துதர வேண்டும் என்பதை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வேண்டுகோளாக வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் அருகே, செண்டூர் கிராமத்தில் ஏற்பட்ட இந்த வெடி விபத்தில் மரணமுற்ற 16 பேர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலான அஞ்சலியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கிராமத்திலே ஏற்பட்ட வெடி விபத்து மிகப் பெரிய பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுக்கமுடியாது. கிட்டத்தட்ட 20 பேருக்குமேலே படுகாயம் அடைந்திருக்கிறார்கள். முப்பதுக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்து சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். 160 வீடுகள் சேதமுற்றிருக்கின்றன; வாகனங்கள் சேதமடைந்திருக்கின்றன. நல்லவேளையாக அன்று பள்ளி விடுமுறை என்ற காரணத்தினாலே பள்ளிக் குழந்தைகள் தப்பித்திருக்கிறார்கள். இப்படி மிகப் பெரிய உயிர்ச் சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்தியிருக்கின்ற இந்த வெடி விபத்து தடுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதற்குப் பலவாறாகக் கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இந்த வெடிமருந்துப் பொருள்களை ஏற்றிச் செல்கிறபோது, அதற்குரிய விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுதான் இந்த விபத்தின்மூலமாக தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

*முற்பகல் 10–40*

குறிப்பாக, இதற்குரிய வெடிமருந்துக் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிகளினுடைய நடவடிக்கை என்பது எந்த வகையிலும் பொருத்தமாகவும் இல்லை, போதுமானதாகவும் இல்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இந்தப் பொருட்களை ஏற்றிச்செல்வதற்கும், அதைப் பயன்படுத்துவதற்கும் உரிய முயற்சிகள் எடுக்கிறபோது, அதற்குரிய விதிமுறைகள் என்று கண்டிப்பாக இருக்கின்றன. அதை நடைமுறைப்படுத்தச் செய்வதற்குரிய முயற்சியை இந்த வெடிமருந்துத் துறையினுடைய அதிகாரிகள் செய்திருக்க வேண்டும். ஆனால், ஏனோதானோ என்ற போக்கிலே இப்படிப் பல இடங்களிலே இந்த வெடிமருந்துப் பொருட்கள் ஏற்றிச் செல்லப்படுகிற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பது இதன்மூலமாகத் தெரிகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ளவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.





குறிப்பாக இந்த வெடிமருந்துப் பொருட்களை ஏற்றிச் செல்கிறபோது, இனிவரும் காலங்களிலே ஏற்றிவருகிறபோது, அதற்குரிய அனுமதியை இந்த வெடிமருந்துக் கட்டுப்பாட்டுத் துறை வழங்கினாலும், அதை ஏற்றிவந்து, அந்த இடங்களுக்குச் சேர்க்கிற வரையிலும் உள்ள ஓர் அனுமதியை காவல் துறையின் மூலமாகவும் அளிக்க வேண்டுமென்பதைப்பற்றி இந்த அரசு சிந்திக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

குறிப்பாக, இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகிறபோது காவல் துறை இதிலே கண்காணிப்போடு இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பொருட்களை ஏற்றி வருகிறபோது இதைப்பற்றி ஆய்வு செய்வதும், கண்காணிப்பதும், அதன்மீது உரிய நடவடிக்கை எடுப்பதும் காவல் துறையினுடைய பொறுப்பாக இருக்க வேண்டும். அதைச் செய்வதற்குரிய அந்த முயற்சிகளை எடுக்க காவல் துறை தவறிவிட்டது என்ற கருத்து வலுவாக வருகிறது. இதைச் சரி செய்து, எதிர்காலத்திலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராமல் பாதுகாப்பதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக இந்த விதிமுறையிலே சொல்லப்படுகிறது. சில வெடிமருந்துப் பொருட்களை எடுத்துச்செல்கிறபோது ஒன்றோடொன்று உராய்வு ஏற்பட்டு, வெடிப்பதற்குரிய வாய்ப்பு இருக்கிறது என்று. அப்படி இருக்கிற பொருட்களை ஏற்றிச் செல்வதற்குரிய அந்தக் கட்டுப்பாடுகளை கொஞ்சம் வலுவானதாக ஆக்க வேண்டுமென்பதுதான் இந்த அனுபவத்தின் மூலமாக நமக்கு கிடைத்திருக்கின்ற செய்தி. அதைச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும்.

நல்லவேளையாக இதில் இப்பொழுது வெளியில் பேசுவது, பத்திரிகைமூலமாக வரும் செய்தி என்னவென்றால், இந்த வெடிவிபத்து

என்ற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிற செய்திகள் என்பது, வேறு விதமாக வராமல் இருக்கிறது என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி. இதில் என்ன சம்பவங்கள் நடைபெற்றதோ, அதிலே இருக்கிற உண்மை நிலவரங்களைச் சொல்வதற்குரிய முயற்சியாக பல செய்தித்தாள்களிலே வந்திருக்கிறது. ஆனால், வேறுவிதமாக இதை அரசியலாக்குவதற்குரிய முயற்சி வந்துவிடக்கூடாது. தமிழ்நாட்டிலே இருக்கிற துரதிருஷ்டம் என்னவென்றால், இதுபோன்று ஏதாவது சம்பவங்கள் நடக்கும்போது— இப்படி ஒரு காரியம் நடக்கலாமா, இதை அனுமதிக்கலாமா என்றால், கூடாது. அதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை—ஆனால், அதையே அரசியலாக்கி வேறுவிதமாகத் திசை திருப்புவதற்குரிய ஒரு முயற்சி எடுப்பது என்பது இருக்கிறதே, அது துரதிருஷ்டவசமானது. எத்தனைமுறை ஆட்சியைக் கலைப்பது? அப்படியானால் ஒவ்வொரு ஆட்சியையும் ஆயிரம் முறை கலைக்க வேண்டும். ஆகவே, பொருத்தமான முறையிலே செய்திகளைச் சொல்லாமல், தமிழகத்திலே இப்படி ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவது என்பது சரியல்ல என்பது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. ஆனால், இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்குரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கத் தேவையான காரியங்களையும் தமிழக அரசு எச்சரிக்கையோடு இருந்து செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் நிதி வழங்கலாம். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குரிய நிதியை அதிகப்படுத்தி வழங்குவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் சட்டமன்றத்





தலைவர் மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் செல்வி பாலபாரதி அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சிவபுண்ணியம் அவர்களும் தங்கள் கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

நடைபெற்றது எதிர்பாராத ஒரு சோக நிகழ்ச்சி. அந்தச் சோக நிகழ்ச்சி பல படிப்பினைகளை நமக்குத் தரக்கூடிய நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அவ்வழியிலே இந்த அரசு மேலும் முனைப்பாகச் செயல்படும் என்ற உறுதியை இங்கே உரை நிகழ்த்திய கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் அனைவருக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழ் நிலத்திலே வாழ்கின்ற மக்களுக்கும் நான் உறுதி கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10–45

நம்முடைய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் உரையாற்றும்போது, இத்தகைய சோகங்கள் நடைபெறாமல் இருக்க, அரசின் பொறுப்பில் இதுபோன்ற உரிமங்கள் வழங்குகின்ற நிலை இருக்க வேண்டும்; அதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று கேட்டார்கள். அரசின் பொறுப்பிலே இந்த உரிமம் வழங்குவது மாத்திரமல்ல, அரசின் பொறுப்பிலே இருக்கின்ற காட்பாடி வெடிமருந்துக் கிடங்கிலேகூட கடந்த கால ஆட்சியில் விபத்து ஏற்பட்டு 24 பேர் இறந்திருக்கிறார்கள். ஆகவே, அரசின் பொறுப்பிலே இருந்தாலும், தனியார் பொறுப்பிலே இருந்து அவை விநியோகிக்கப்பட்டாலும், பொறுப்புள்ளவர்கள், கவலை உள்ளவர்கள், அக்கறை உள்ளவர்கள், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கண்டு வருந்தக்கூடிய மனம் படைத்தவர்களுக்குதான் இதிலே அக்கறை இருக்க முடியும். ஆகவே, அரசின் பொறுப்பிலே இந்த உரிமங்கள் வழங்குகின்ற நிலையை ஏற்படுத்துங்கள் எனறு திரு. பீட்டர் அவர்கள் சொன்னதற்கு மாறாக, இதயம் உள்ளவர்கள் யாரோ, நாணயம் உள்ளவர்கள் யாரோ, குறுக்கு வழியிலே; திருட்டு வழியிலே சம்பாதிக்க வேண்டும் இந்தப் பொருளைக் கொண்டு என்று எண்ணாதவர்கள் யாரோ, அப்படிப்பட்டவர்களை ஆய்வு செய்து, அவர்களுக்கு இந்த உரிமங்கள் வழங்குகின்ற உரிமையைத் தர வேண்டும் என்று சொன்னால், அதுதான் பொருத்தமாக இருக்கும். இருந்தாலும்கூட, திரு. பீட்டர் அவர்களும், மற்றவர்களும் சொன்ன அந்தக் கருத்துகளைப் பற்றி நான்

[கலைஞர் மு. கருணாநிதி] [2007 ஏப்ரல் 9

யோசித்தபோது, இது மாவட்ட அதிகாரிகள் அளவிலோ அல்லது மாநில அதிகாரிகள் அளவிலோ நேரடியாக வழங்குகின்ற உரிமம் அல்ல. இந்த உரிமங்களை வழங்குகின்ற அதிகாரம் பெற்றதாக மத்திய அரசுதான் இருக்கிறது. மத்திய அரசுதான் இதுகுறித்த உரிமங்களை வழங்க வேண்டும். ஆகவே, மத்திய அரசோடு தொடர்புகொண்டு இந்த உரிமங்கள் வழங்குவதை மாநில அரசு நேரடியாகச் செய்ய முடியுமா என்பதை நிச்சயமாக யோசித்து நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சிக்கு நம்முடைய கவனத்தைச் சற்று செலுத்தினால், 7–4–2007 அன்று காலை 11–30 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், மயிலம் காவல் நிலைய சரகத்தில், விழுப்புரம்–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஜீப் M.M. 540, எண் TCQ 3033 என்ற வாகனத்தில் வெடிமருந்துப் பொருட்கள் ஏற்றிக்கொண்டு பாதிராப்புலியூரிலிருந்து சென்டூர் வரும்போது, பாதிராப்புலியூர் கூட்டு ரோட்டில் அந்த வாகனத்திலிருந்து திடீரெனப் புகை கிளம்புவதைப் பார்த்த பொதுமக்கள், வாகனத்தின் ஓட்டுநரிடம் அதைத் தெரிவித்தார்கள். ஜீப் உடனடியாக நிறுத்தப்பட்டது. சாலையில் ஓரத்தில் இருந்த மண்ணை பொதுமக்கள் உதவியுடன் அள்ளி வீசியபோது, வாகனம் பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் அங்கே நின்றுகொண்டிருந்த பொதுமக்களில் 14 பேர் சம்பவ இடத்திலும், 2 பேர் மருத்துவமனையிலும் இறந்துள்ளார்கள். மொத்தம் 16 பேர் அல்லது நண்பர் மணி அவர்கள் சொன்ன கணக்குப்படி 17 பேர் இறந்திருக்கின்றார்கள். அவர்களில் 11 பேர் ஆண்கள், 5 பேர் பெண்கள், ஒருவரது அடையாளம் தெரியவில்லை. இறந்தவர்களில் ஜீப்பை ஓட்டிய பாபு என்பவரும், உதவியாளர்கள் பலராமன், குமார் என்ற செந்தில்குமார் ஆகியோரும் அடங்குவர். இவர்கள் அனைவரும், சென்டூர், சிறுவத்தூர், தென் ஆலப்பாக்கம், பாலப்பட்டு கிராமங்களைச் சேர்ந்தவர்கள். 22 பேர் மொத்தம் காயமடைந்தனர். அவர்களில் 17 பேர் ஆண்கள், 5 பேர் பெண்கள். விழுப்புரம் அரசு மருத்துவமனையில் வெளி நோயாளியாக ஒருவரும், திண்டிவனம் அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளாக 9 பேரும், புதுவை ஜிப்மர் மருத்துவமனையிலே உள் நோயாளிகளாக 9 பேரும், மேல் சிகிச்சைக்காக சென்னை சென்றவர்கள் 3 பேரும் காயம் அடைந்தவர்களாகும்.

*முற்பகல் 10–50*

இந்த விபத்தின் காரணமாக கான்கிரீட் வீடுகள் 5, ஓட்டு வீடுகள் 8, கூரை வீடுகள் 17 பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன. கான்கிரீட் வீடுகள், ஓட்டு வீடுகள், கூரை வீடுகள் குறைவான அளவுக்கும்,



2007 ஏப்ரல் 9] [கலைஞர் மு. கருணாநிதி]

மிகக் குறைவான அளவுக்கும் சேதாரமாகியுள்ளன. இவைகளில் அறவே சேதமாகி உள்ள வீடுகளும் உண்டு. இவையன்னியில், கான்கிரீட் கடை ஒன்றும், அரசுக்குச் சொந்தமான நான்கு கட்டடங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தச் சேதாரங்கள் 28 இலட்சம் ரூபாய் என விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் முதல் மதிப்பீடு செய்து அனுப்பியுள்ளார். இதனை மேலும் ஆய்ந்து, மொத்தத் தொகை எவ்வளவு என்பதைத் தெரிந்துகொண்டு, அந்த வீடுகளைக் கட்டித் தருவதற்கான முயற்சியும் எடுத்து, நிவாரணத் தொகையும், நிதியும் நிச்சயமாக இந்த அரசால் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறந்தவர்களின் குடும்பங்களைப் பற்றிய விவரத்தைப் பார்த்தால் பரிதாபகரமாக இருக்கின்றது.

1. ஏழுமலை; இவரே குடும்பத் தலைவர், வயது 40, விவசாயக் கூலி. மனைவி இருக்கிறார்; 16 வயதில் ஒரு மகனும், 18 வயதில் ஒரு மகளும், 15 வயதில் ஒரு மகளும் உள்ளார்கள். இந்தப் பரிதாபகரமான குடும்பத்தின்மீது நிச்சயமாக இந்த அரசு பரிவு காட்டி இன்றைக்கு மிச்சம் இருக்கின்ற அந்தக் குடும்பத் தலைவருடைய மனைவி இருந்தால், அவருக்கு வேலை, மகன், மகள் இருவருக்கும் அரசுப் பணிகளும் நிச்சயமாகத் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இன்னொரு குடும்பத்தில், குடும்பத் தலைவருடைய பெயர் முத்து; வயது 55, மனைவி இருக்கிறார்; இரண்டு மகன்களும், ஒரு மகளும் இருக்கிறார்கள். இவரது தொழில் விவசாயம். இந்த மகன்களுக்கும், மகளுக்கும் நிச்சயமாக அரசுப் பணி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சுந்தரம்; குடும்பத் தலைவர், வயது 50, மனைவி விஜயலட்சுமி, உயிருடன் இருக்கிறார்; ஒரு பையன், ஒரு பெண்; தொழில் விவசாயம்தான். அந்தக் குடும்பத்திற்கும், இந்த அரசு உதவிகளைச் செய்யும். மிச்சம் இருககின்ற பையனுக்கும், பெண்ணுக்கும் அரசு வேலைவாய்ப்பு வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. முருகன்; குடும்பத் தலைவர், வயது 40, மனைவி ஜெயலட்சுமி இருக்கிறார்; 12 வயதில் ஒரு மகனும், 10 வயதில் ஒரு மகளும், 8 வயதில் ஒரு மகளும் இருக்கிறார்கள்; இவரது தொழில் விவசாயக் கூலி. இவர்களது குடும்பத்தையும் அரசு தத்தெடுத்துக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. ஆனந்தாயி; வயது 35, கணவன் உயிரோடு இருக்கிறார். 11 வயதில் ஒரு மகனும், 13 வயதில் ஒரு மகளும், 8 வயதில் ஒரு மகளும் இருக்கிறார்கள். இவர்களும் விவசாயக் கூலிகள்தான். இந்தக் குடும்பத்தையும் அரவணைத்து அவர்களுக்கு ஆறுதல் வழங்கக்கூடிய அந்தப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளும்.

இப்படி இறந்தவர்களின் எல்லாக் குடும்பங்களுக்கும், ஏறத்தாழ 16 அல்லது 17 குடும்பங்களிலும், குழந்தைகள், இளம் வயதுப் பிள்ளைகள், மகன், மகள் என்ற அளவிலே இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் மாவட்டத்திலே இருக்கின்ற ஆட்சித் தலைவரும், மற்றும் மாவட்டத்திலே இருக்கின்ற மற்ற கட்சிகளின் நண்பர்களும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின்மூலம் பரிந்துரைகள் பெறப்பட்டு, அவைகளையேற்று மாவட்ட நிர்வாகத்தின்மூலமாக, இந்த அரசின் சார்பாக அந்தக் குடும்பங்களையெல்லாம் காப்பாற்றுகின்ற முழுப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வழக்கு விவரம் என்னவென்றால், புதுச்சேரி நகர மணலிப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த கோபால் என்பவரின் மகன், 48 வயதான சேகர் என்பவர், கடந்த பல ஆண்டுக் காலமாக வெடிமருந்து உரிமம் பெற்று, மயிலம் காவல் நிலையச் சரகம் பாதிராப்புலியூர் கிராமத்தில் வெடிமருந்துக் கிடங்கு வைத்துள்ளார். இந்தக் கிடங்கிற்கு சேலம் நகரில் உள்ள Sivasakthi Explosives நிறுவனம் வெடிமருந்துப் பொருட்களை அளிக்கிறது. சேகர், திண்டிவனத்தைச் சுற்றியுள்ள கல் குவாரிகளுக்கு வெடிமருந்துப் பொருட்களை வழங்கி வருகிறார். சேகருக்குச் சொந்தமான Jeep எண் M.M. 540 TCQ 3033 வெடிமருந்துகளை ஏற்றிச் செல்வதற்காகவே அதன் அமைப்பு பிரத்தியேகமாக மாற்றியமைக்கப்பட்ட வாகனமாகும்.

முற்பகல் 10–55

7–4–2007 அன்று காலை 10–30 மணிக்கு godown–இலிருந்து மேற்கண்ட ஜீப்பில் ஓட்டுநர் பாபு மற்றும் உதவியாளர்கள் பலராமன் மற்றும் குமார் என்ற செந்தில்குமார் ஆகியோர், தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் பணிக்காக, வெடிமருந்துகளான slurry 200 கிலோ, safety fuse 325 மீட்டர், மற்றும் 150 electric detonator ஆகியவற்றைத் தேசிய நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் SPL Infrastructure Private Limited என்ற துணை ஒப்பந்ததாரரிடம், விளங்கம்பாடி கிராமத்திலே அவற்றை ஒப்படைக்க





வந்தபோதுதான், மேற்படி வாகனம் வெடித்துச் சிதறியிருக்கிறது. இங்கே சொல்லப்பட்டதுபோலவோ அல்லது வெளியிலே சொல்லப்படுவதைப்போலவோ இது RDX என்பதற்கான எந்த ஆதாரமும் கிடையாது.

இந்த நிலையில் இந்த மருந்து எப்படி வெடித்தது என்றால், இந்த வெடிமருந்துகளைத் தனித்தனியாக எடுத்துச் சென்றிருந்தால், இந்த ஆபத்தே வந்திருக்காது. அவர்கள் வெடிமருந்துகளைத் தனியாகவும், detonator fuse மற்றும் electric detonator—களைத் தனியாகவும் இரண்டு வாகனங்களிலே எடுத்துச் சென்றிருந்தால் இந்த ஆபத்து வந்திருக்காது. இந்தப் பொருட்கள் ஒன்றோடொன்று உராய்கின்ற அளவுக்கு எடுத்துச் சென்ற காரணத்தால் — பச்சை மூங்கில்களே ஒன்றாக உராய்ந்து, மூங்கில் காடுகளில் தீப்பற்றுவதைப்போல, அபாயகரமான இந்தப் பொருட்கள் ஒன்றோடொன்று உராய்ந்ததன் காரணமாக தீப்பற்றி, இந்தப் பெரும் ஆபத்து, இந்தச் சோகம் விளைந்திருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த சோக நிகழ்ச்சிக்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்கவேண்டும் என்றெல்லாம்கூட பேசப்படுகிறது. ஆனால், நம்முடைய திரு. பன்னீர்செல்வம் அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இங்கே பேசும்போது அரசு இனிமேல் எப்படி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; எத்தகைய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்; எப்படி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று எச்சரித்து, எங்களுக்குச் சில அறிவுரைகளைச் சொன்னாரே தவிர, அவர் இந்த அரசு கலைக்கப்படவேண்டுமென்று சொல்லவில்லை. காரணம், கலைக்கிற இடத்திலே நான் இல்லாத காரணத்தால், இவரிடத்தில் சொல்லியும் ஒன்றும் புண்ணியமில்லை என்று அவர் சொல்லாமல் விட்டிருப்பார் என்று கருதுகின்றேன்.

இதுபோன்ற சம்பவங்கள் கடந்தகாலத்தில் நிறைய நடந்திருக்கின்றன. கடந்த காலத்தில் தி.மு.க. ஆட்சி இருந்தபோதும் நடந்திருக்கிறது; அ.தி.மு.க. ஆட்சி இருந்தபோதும் நடந்திருக்கிறது; என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆண்டபோதும் நடந்திருக்கிறது. கடந்த 12–3–1995 அன்று திருப்பெரும்புதூர் காவல் நிலைய சரகத்தில், சேந்தமங்கலம் அருகே, சென்னையை நோக்கி இரசாயனப் பொருட்களை ஏற்றி வந்துகொண்டிருந்த டாங்கர் லாரி ஒன்று, அரசு விரைவுப் பேருந்துமீது மோதி, இரசாயனப் பொருளை ஏற்றி வந்த லாரி வெடித்துச் சிதறி தீப்பிடித்தது. தீ வேகமாகப் பரவி, அதன் காரணமாக அதிலே பயணம் செய்த 54 பேர் சம்பவ இடத்திலேயே கருகி இறந்தார்கள்.

37 பேர் காயமடைந்தார்கள். 1995 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் தேதியன்று, சேலம் மாவட்டம், ராசிபுரம் அருகே டெம்போ வேன் ஒன்றும், தனியார் பேருந்து ஒன்றும் மோதிக்கொண்ட விபத்தில் 20 பேர் இறந்தார்கள். இந்தச் சம்பவங்கள் குறித்து முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா எந்த பதிலும் அப்போது கூறவில்லை. 11-7-1995 அன்று அம்மையார் ஜெயலலிதா ஆட்சியிலே, சேலம் மாவட்டம், வாழப்பாடி, துணை சார்பதிவாளர் அலுவலகம் முன்பு, வெடிபொருள் வெடித்ததில், சம்பவ இடத்திலேயே 8 பேர் இறந்தார்கள். 16 பேர் காயமடைந்தார்கள். 24-2-1996 அன்று கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட காட்டூர் காவல் நிலைய எல்லைக்குள் அமைந்த சரவணம்பட்டி என்ற இடத்தில் மாருதி கார் ஒன்றில் குண்டு வெடித்து ஒருவர் மரணமடைந்தார். 16-9-2002 அன்று அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டம், ஆத்தூரில் ஒரு வீட்டில் வைக்கப்பட்டிருந்த வெடிகள் வெடித்ததில் 17 பேர் இறந்தார்கள். 31 பேர் காயமடைந்தார்கள்.

இங்கே நம்முடைய திரு. பீட்டர் அவர்கள் சொன்னார்கள், குடந்தையிலே எத்தனை பேர் குழந்தைகள் மாண்டார்கள் என்று. திருவரங்கத்தில் ஒரு திருமண மண்டபத்தில் எவ்வளவு அல்லோலகல்லோலம் நடைபெற்றது என்பதையெல்லாம் இங்கே பேசிய நம்முடைய கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் எடுத்துரைத்தார்கள். அதெல்லாம் இயற்கை. ஏனென்றால், இவற்றையெல்லாம் பெரிதுபடுத்தக்கூடாதென்று நான் அல்ல—கடந்த காலத்தில் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்களே இதே அவையில் சொல்லியிருக்கிறார்கள்.

*(முற்பகல் 11-00)*

"இத்தகைய ஒரு பொதுப் பிரச்சினை ஏற்படும்போது அனைத்துக் கட்சிகளும் தங்கள் மனமாச்சரியங்களை மறந்து, பொது அமைதி நிலவுவதற்கும், பொது மக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாப்பதற்கும் ஒத்துழைப்பு நல்கு வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதைவிடுத்து, இருக்கின்ற பிரச்சினைகளை அதிகப்படுத்துகின்றவண்ணம், சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளும், விடுக்கின்ற அறைகூவல்களும் மிகவும் தவறான முன்னோடிகளாக அமைந்துவிடும்." என்று அவர்களே இங்கே கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்தைப் பின்பற்ற வேண்டும்—முன்னாள் முதலமைச்சருடைய கருத்தை, இந்நாள் முதலமைச்சராகிய நான் பின்பற்றி இதை உங்களுக்கு நான்



அர்ப்பணிக்கிறேன் என்று கூறி இந்தக் குடும்பங்களுக்காகச் செய்யப்படுகின்ற உதவிகள் அல்லாமல்—விசாரணை வருவாய்த் துறை அதிகாரி அளவிலே போதாது என்றார்கள். நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால், எங்களைப் பார்த்து கேட்கின்ற உரிமை உங்களுக்கு இருக்கின்றது. குடந்தையில் மகாமகச் சம்பவம் நடந்த போது டி.ஆர்.ஓ. விசாரணைதான் வைத்தார்கள். அதை நாங்கள், தி.மு.க.வினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது டி.ஆர்.ஓ. விசாரணை போதாது என்று நீங்கள் கூறுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அப்படி ஏற்றுக்கொண்டு ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையில் இந்த விசாரணையை நடத்துவதற்கும், நல்ல முடிவுகளைக் காண்பதற்கும் அரசு நிச்சயமாக அறிவிப்புச் செய்யும் என்று தெரிவித்து, நீங்கள் அன்போடு குறிப்பிட்ட எல்லாவிதமான சிபாரிசுகளையும் இந்த அரசு பரிசீலித்து ஏற்றுக்கொள்கிறது என்று குறிப்பிட்டு இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. கவன ஈர்ப்பு

### திருவட்டாறு தொகுதி, மலைவாழ் மக்களின் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திருமதி ரா. லீமா றோஸ் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி ரா. லீமா றோஸ்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் உள்ள மலைவாழ் மக்களின் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வசதி வழங்க வனத் துறை தடையாக இருப்பது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

[திரு. என். செல்வராஜ்] [2007 ஏப்ரல் 9

## அறிக்கை

இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் கடித எண் 11/9/98 (வனப் பாதுகாப்பு) நாள் 4-5-2001-ன்படி தேசியப் பூங்கா மற்றும் சரணாலயங்களைச் சார்ந்த வன நிலத்தை வனங்களற்ற பிற பணிகளுக்குப் பயன்படுத்த தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட மத்திய அதிகாரக் குழுவின் பரிந்துரையுடன் உச்ச நீதிமன்றத்தின் முன்னனுமதி மற்றும் மத்திய அரசின் அனுமதி ஆகியவை பெறப்பட வேண்டும்.

2. காப்புக் காடுகள் அல்லது வன நிலங்களை, வனமற்ற பிற பணிகளுக்குப் பயன்படுத்த 1980 ஆம் ஆண்டின் வனப் பாதுகாப்புச் சட்ட நடைமுறைகளின்படி மத்திய அரசின் முன்னனுமதி பெற்ற பின்னரே மேற்கொள்ள இயலும். மேலும், இவ்வாறு வன நிலங்களை ஒதுக்கீடு செய்யும் நேர்வுகளில் இரு மடங்கு வனமற்ற நிலம் ஈட்டு நிலமாகவும், தோட்டம் வளர்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிக்குச் செலவாகும் தொகை மற்றும் வன நிலத்திற்கான நிகர மதிப்புத் தொகையினையும் பயனீட்டாளர் செலுத்த வேண்டும்.

3. கன்னியாகுமரி மாவட்டத்தின் வீரப்புலி காப்புக் காட்டினுள் பேச்சிப்பாறை கிரேசிங் பிளாக் 1-ல் காணிக் குடியிருப்புகள் உள்ளன. கன்னியாகுமரி வனக் கோட்டத்தைச் சார்ந்த காப்புக் காடுகள் முழுவதும் வன உயிரின சரணாலயமாக அமைக்க உத்தேசித்து 16-7-2002-ல் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, கன்னியாகுமரி கோட்டம் முழுவதும் வனங்களற்ற பணிகளை மேற்கொள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி தேசியப் பூங்கா மற்றும் சரணாலயங்களைச் சார்ந்த வன நிலத்தை வனங்களற்ற பிற பணிகளுக்குப் பயன்படுத்த, தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் ஏற்படுத்தப்பட்ட மத்திய அதிகாரக் குழுவின் பரிந்துரையுடன் உச்ச நீதிமன்றத்தின் முன்னனுமதி மற்றும் மத்திய அரசின் அனுமதி ஆகியவை பெறப்பட வேண்டும். இந்த அனுமதியைப் பெற மின்சார வாரியம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து உரிய கருத்துரு பெறப்பட வேண்டும். எனவே, மேற்காணும் சூழ்நிலையில், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு தொகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கு மின்சாரம் வழங்க வனத் துறை தடையாக உள்ளது என்பது உண்மையல்ல.

4. மேலும், கன்னியாகுமரி வனக் கோட்டத்தை சார்ந்த காப்புக் காடுகளில் உள்ள காணிக் குடியிருப்புப் பகுதிகளுக்கு அடிப்படை



2007 ஏப்ரல் 9] [திரு. என். செல்வராஜ்]

வசதிகள் செய்து கொடுப்பதில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைக் கருத்தில் கொண்டு வீரப்புலி காப்பு வனம் மற்றும் பேச்சிப்பாறை கிரேசிங் பிளாக் 1-ல் உள்ள காணிக் குடியிருப்புப் பகுதிகளை உத்தேசிக்கப்பட்ட சரணாலயப் பகுதியிலிருந்து நீக்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இதன்மீது ஒரு முடிவு விரைவில் எடுக்கப்படும். இவ்வாறு செய்வதனால் மத்திய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தை அணுகாமல், நிலத் தேவைக்கு மைய அரசின் முன்னனுமதி மட்டும் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆன பின்பும், இன்னும் மின்சாரம் கிடைக்காத மலைவாழ் குடியிருப்புகள் இருப்பது தர்மசங்கடமாகவே உள்ளது. கொடித்துரைமலையில் 40 குடும்பங்கள், மாங்காமலையில் 26 குடும்பங்கள், முடவன்பொற்றையில் 50 குடும்பங்கள், தச்சமலை, களப்பாரமலை, ஆலம்பாறை மலை, வலியமலை, புறாவிளைமலை, தேக்குமோடு, செருகடத்துக் காணி, தோலடி, புலிமுட்டுச்சாலை, மேலை மண்ணடி, வெள்ளெருக்குமலை, வட்டப்பாறைமலை, புரட்சிமலை, பெருங்குருவிமலை, அடகாடு, வள்ளமுத்தன்கரை, வேலிப்பிலா, கோளிங்கிமடம் போன்ற பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் குடும்பங்கள் மின்சாரமே என்னவென்று தெரியாமல் காட்டுவாசிகளாகவே வாழ்ந்து வருகின்றார்கள். அந்த மக்களுக்கு மின்சாரம் இன்றுவரை கிடைக்கப்பெறவில்லை. நான் கொடித்துரை மலைக்குச் சென்றபோது, இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு பெண்ணை மகப்பேறுக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல நேர்ந்தபோது இரவு மின்சார வெளிச்சம் இல்லாமையாலும், சாலை வசதி இல்லாமையாலும், பாடை கட்டித் தோளில் சுமந்தபடி தத்தித் தத்திக் கொண்டுசெல்கின்ற நேரத்தில் வழியிலேயே பிரசவம் நடந்து, தாயும் சேயும் மயிரிழையில் உயிர் தப்பித்த செய்தி அறிந்து அதிர்ச்சி அடைந்தேன்.

அதேபோன்று, வேப்பமூட்டுவிளையில் 23 குடும்பங்களுக்கு மின்சாரம் கிடைக்கப்பெறாமல் ஒரு சிலர் கோர்ட்டில் வழக்காடி மின்சார இணைப்பு பெற்றனர். ஆனால், கோர்ட்டிற்குச் செல்ல முடியாத நான்கு குடும்பங்கள் மின் இணைப்புப் பெற வனத் துறை இன்றும் தடையாகவே இருந்து வருகிறது. மேலும், கோதையாறு மார்க்கெட் பகுதியில் 10 வருடங்களாகக்

[திருமதி ரா. லீமா றோஸ்] [2007 ஏப்ரல் 9

குடியிருக்கின்ற பல்வேறு குடும்பங்களுக்கு மின்சாரம் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. ஆனால், ஐந்து குடும்பங்களுக்கு மின்சாரம் கிடைக்க வனத் துறை தடையாக இருந்து வருகிறது. மணலோடை தொழிலாளர் குடியிருப்புப் பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்க அரசு ரப்பர் கழக நிர்வாகம் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

இதைப்போன்று, குமரி மாவட்டத்திலே திருவட்டாறு, விளவங்கோடு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதி உட்பட 18 செட்டில்மெண்ட் காணிக் குடியிருப்புப் பகுதிகளில், ஒருசில பகுதிகளைத் தவிர்த்து மற்ற பகுதிகளிலும், தமிழ்நாட்டிலே பல்வேறு மலைவாழ் மக்கள் இருக்கக்கூடிய பகுதிகளிலும் மின்சாரம் கிடைக்கப்பெறவில்லை. நீலகிரி மலைப் பகுதியில் சிறப்புக் கவனம் செலுத்தி மின்சாரம் செல்லாத பகுதிகளுக்கு 30 தினங்களுக்குள் மின்சாரம் கிடைக்க ஆவன செய்ததை வரவேற்கிறோம். அதேபோன்று, நான் மேலே குறிப்பிட்ட இந்த மலைப் பகுதிகளுக்கு மின்சாரம் கிடைக்கவும், அடிப்படை வசதிகளை நிறைவு செய்யவும், அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கன்னியாகுமரி வனக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்துப் பகுதிகளும் வனச் சரணாலயமாக 16–7–2002 அன்று அறிவிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இந்திய அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை கடிதம் நாள் 4–5–2001-ன்படி தேசியப் பூங்கா மற்றும் சரணாலயப் பகுதிகளிலே வனமற்ற மற்ற பணிகளுக்கு வன நிலங்களைப் பயன்படுத்த வேண்டுமேயானால் தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மத்திய அதிகாரக் குழு பரிந்துரையுடன் உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையும், மத்திய அரசினுடைய அனுமதியும் பெற்றுதான் அந்த நிலங்களை மற்ற பணிகளுக்கு மாற்ற முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதிகள் முழுவதும் வனச் சரணாலயப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் மத்திய அரசினுடைய அந்த ஆணைப்படி, அந்த வழிகாட்டு



2007 ஏப்ரல் 9] [திரு. என். செல்வராஜ்]

நெறிமுறைகளின்படி, நாம் உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையையும், மத்திய அரசினுடைய அனுமதியையும் பெற வேண்டும். அதற்கு மின்சாரத் துறை, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெற வேண்டும். இந்தப் பகுதிகளுக்கு அதுபோன்ற மின்சார வசதி அமைப்பதற்கு இதுவரை எந்தக் கருத்துருவும் பெறப்படவில்லை. எனவே, திருவட்டாறு தொகுதியில் மின்சாரம் வழங்குவதற்கு வனத் துறை தடையாக இருக்கிறது என்பது சரியான கூற்றல்ல. அதற்கான கருத்துரு அனுப்பப்படுமேயானால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், இதுபோன்ற அடிப்படை வசதிகளை அமைத்துக் கொடுப்பதிலே இருக்கின்ற சிக்கல்களுக்குத் தீர்வு காண மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுடைய அறிவுரைப்படி, வீரப்புலி காப்புக் காடுகள் மற்றும் பேச்சிப்பாறை கிரேசிங் பகுதியில் உள்ள பிளாக் 1-ல் இருக்கின்ற காணிக் குடியிருப்புப் பகுதிகளை வனச் சரணாலயப் பகுதிகளிலிருந்து நீக்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. விரைவிலே நல்ல முடிவெடுக்கப்படும். அதன் பின்னாலே மத்திய அரசினுடைய முன்னனுமதி பெற்றாலே போதும் என்ற நிலை உருவானால், எளிதிலே அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனச் சரணாலய எல்லைப் பகுதியைத் தளர்த்தவும், வனச் சரணாலயம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரம் கிடைப்பதற்கும் ஏற்கெனவே இதே மாமன்றத்தில் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே சட்டமன்றக் கூட்டத்தில் நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அதன்மூலமாக வேப்பமூட்டுவிளை என்ற பகுதிக்கு மின்சாரம் கிடைப்பதற்காக மின்சார வாரியத்தின்மூலமாக கருத்துரு ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதுபோன்ற பல பகுதிகளுக்கு கருத்துருக்கள் கொடுக்கப்பட்ட பின்னாலும் வனத் துறை இன்றைக்குத் தடையாக இருக்கிறது எனபது உண்மைதான் என்பதை மீண்டும் நான் கவனப்படுத்தி, இந்த வனச் சரணாலயம் இல்லாத பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கன்னியாகுமரி வனக் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து வன நிலங்களும் வனச் சரணாலயமாக அறிவிக்கை செய்யப்பட்டிருக்கின்றன. அதிலே எந்த இடமும் விடப்படவில்லை. எனவேதான், நான் முதலிலேயே குறிப்பிட்டேன். மாண்புமிகு தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுடைய அறிவுரைப்படி, சில பகுதிகளை, காணிக் குடியிருப்புப் பகுதிகளை அதிலிருந்து விலக்கி அறிவிக்கை செய்யப்படுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிட்டேன். விரைவிலே நல்ல முடிவு எடுக்கப்படும். அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2007-2008 விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 43—பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். No Nothing உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மானியக் கோரிக்கை எண் 43 (குறுக்கீடுகள்) நான் கூப்பிடாமல் எழுந்து நிற்கக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.5,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 167, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 270, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1129, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1328, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 201, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2019, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2540, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1871, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9745, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1030, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2908, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3824, திரு. மு.க. பெரியசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3944, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4902, திரு. கோ. எதிரொலி மணியன்.



**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4120, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2055, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கருமாண்டி செல்லிபாளையம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1931, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் உள்ள ஆசிரியர் இல்லாத பள்ளிகளின் காலிப் பணியிடங்களுக்குப் போதிய ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2296, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்துக் கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4002, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியில் கடுவன்குடி, மாப்பிள்ளைகுப்பம், ஆணைகுப்பம், பனங்குடி ஆகிய பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகளை மேம்படுத்தி புதிதாகக் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1221, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் இயங்கும் ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1276, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதி, சருகுவலையப்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1345, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அளவில் அனைத்துப் பள்ளிகளிலும் ஒரேவிதமான தமிழ்வழிக் கல்வியை அரசு கொண்டுவர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1707, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதியில் உள்ள கும்மிடிப்பூண்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பிட வசதி ஏற்படுத்தித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1914, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வருமானம் ஈட்டக்கூடிய தாய் அல்லது தந்தை இறந்துவிட்டால், பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு அரசு கல்வி உதவி ரூ.50,000/– வழங்கக்கூடிய ஒரு திட்டத்தை கடந்த ஆட்சியில் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தி இருந்தார்கள். அந்தத் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2117, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, திருப்புவனம் அரசு பெண்கள் மேல்நிலைப்



பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1662, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், வேலூர் நகராட்சி, கஸ்பாவில் உள்ள நகரவை (அரசு) உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1797, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1739, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் உள்ள அனைத்து அரசு உயர்நிலைப் பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1765, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதியில் பல அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவ, மாணவிகள் நீண்ட தூரம் சென்று படிக்க வேண்டியுள்ளதால் அந்தந்த ஊருக்கு மிக அருகில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை கொண்ட பள்ளிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1635, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பன்னாங்கொம்பு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1591, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படுகின்ற இலவசச் சீருடைகளைக் கூடுதலாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1564, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியிலிருந்து மாணவிகள், மாநகரப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குத் தொலைதூரம் செல்வதால் பேரூர் தொகுதியில் கூடுதலாக அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3393, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, "முகையூர் தொகுதியில் உள்ள தொடக்கப் பள்ளி,

நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் மின்சார இணைப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1498, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதியில் உள்ள அகரம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குரிய ரூ.2 இலட்சம் கட்டணம் செலுத்தப்பட்டு, மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படாமல் உள்ளது. உடன் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1432, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள நூலகங்களில் நூலகர்கள் நியமனம் செய்வது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1719, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரக்கோணம் வட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட சிறுகரம்பூர் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம குறித்து" விவாதிக்க, நான கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3895, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4071, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் அடங்கிய பல பள்ளிகளில் வகுப்பறைகள் இல்லை. எனவே, கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம எண் 4157, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி ஊராட்சி ஒன்றியம், உதிரமாடன் குடியிருப்பு கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4196, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள புஜங்கானூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள கணிதம் மற்றும் தாவரவியல் ஆசிரியர்கள் பணி நியமனம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4319, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைவருக்கும் கட்டாயக் கல்வி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4651, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதி, சூலூர் வட்டம், வாக்ராயம்பாளையம், கண்ணம்பாளையம், பிடம்பள்ளி ஆகிய ஊர்களில் உள்ள அரசு



உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் போதுமான தளவாடங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3579, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிகளில் ஆசிரியர்களை நீண்ட காலம் தொடர்ந்து பணியாற்ற அனுமதிப்பதன் காரணமாக அவர்களுடைய சொந்த ஊரில் சொந்த வேலைகளில் ஈடுபாடு காட்டி பள்ளி மாணவர்களின் நலனில் அக்கறை காட்டாதுள்ளது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3658, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3398, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகுடஞ்சாவடி ஒன்றியம், அ. தாழையூர் மாங்குட்டப்பட்டியில் தொடக்கக் கல்விக் கூடம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 3478, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், இருக்கையில் இல்லை.*

*வெட்டுத் தீர்மானம் எண் 3297, திரு. வே. செந்தில் பாலாஜி.*

**திரு. வே. செந்தில் பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1111, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.*

*வெட்டுத் தீர்மானம் எண் 5518, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.*

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்தில் உள்ள பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 4539, திருமதி பெ. கமலாம்பாள.*

**திருமதி பெ. கமலாம்பாள்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கல்விச் சீரமைப்பு மாநாடு நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க. நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*



*"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3192*, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் ஆரணி பேரூராட்சி, மீஞ்சூர் பேரூராட்சி மற்றும் பொன்னேரி பேரூராட்சியில் உள்ள பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*6,894,60,28,000/-*, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*161,90,84,000/-* மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,50,000/-*ல் ரூ.*100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3321*, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியிலுள்ள நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி பாடத் திட்டம், விவசாயப் பயிற்சி பாடத் திட்டம் ஆகியவற்றைப் போதிக்க ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்குப் பணி நியமன ஆணை பிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய *43* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*6,894,60,28,000/-*, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*161,90,84,000/-* மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*5,50,000/-*ல் ரூ.*100/-* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4571*, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் உள்ள கல்விக் கட்டணங்களைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3244, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, பையூர் ஊராட்சி, பையூர் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4753, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியம், பேரங்கியூர் அரசு உயர்நிலைப் பள்ளியை அரசினர் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4797, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, சேத்தியாத்தோப்பு பகுதி, சந்தைத் தோப்பு பகுதியில் உள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4856, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஒன்றியம், ஐந்தாங்கட்டளை ஊராட்சி, சொக்கநாதன்பட்டி ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4427, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் பல பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் இல்லாமல் மாணவ, மாணவிகள் சிரமப்படுவதால், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4981, திரு. து. செல்வராஜ்.

**திரு. து. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவைகுண்டம் தொகுதி, ஏரலில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பெயரினைச் சூட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2728, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரியலூர் ஒன்றியம், ரெட்டிபாளையம், மணக்குடி காட்டுபிரிங்கியம், திருமானூர் ஒன்றியம், தூத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தவும், கிழக்குளத்தூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4990, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, பள்ளிப்பாளையத்தில்



இயங்கி வரும் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக ஆசிரியர்கள் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4624, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், ஆலத்தூர் ஒன்றியம், நக்கசேலம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4438, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, எட்டையபுரம், இராஜா பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மிதிவண்டிகள் நிறுத்துவதற்கு நிழற்குடை, சீரான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, குழந்தைகளின் வகுப்பறைகளுக்குப் பெஞ்சு வசதி வழங்கிக் காலியாக உள்ள பாடப் பிரிவுகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4509, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, கருநாக்கமுத்தன்பட்டியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3344, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சிறுபான்மையினர் பள்ளிகளில் மலையாள மொழிப் பணி காலியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3364, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேடசந்தூர் தொகுதி, அய்யலூர் நகரிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 824, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்ட அரசு ரப்பர் கழகப் பள்ளிகள் நான்கையும் கல்வித் துறையின்கீழ் செயல்பட வைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3149, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆங்கிலவழி பயிலும் மாணவர்கள் தமிழின் சிறப்பை அறிய தமிழ்மொழி குறித்த பாடம், பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 851, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு ஒன்றியம், தைலாபுரம் அரசு

உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 992, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பள்ளிகளில் தமிழகம் முழுவதும் பள்ளிக் கட்டடம், சுற்றுச்சுவர், கழிப்பறை, விளையாட்டு மைதானம், விளையாட்டுப் பொருட்கள், மேசை, நாற்காலி, மின் விளக்கு, மின் விசிறி, நூலகம் ஆகிய தேவைகளை நிறைவு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1099, திரு. ஆர். ஞானதாஸ். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1111, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதியில் கேளூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 8 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் அரங்கமேடை அமைத்துத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2323, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகரில் உள்ள அண்ணா நகர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2423, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை தொகுதியில் உள்ள பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2452, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தொகுதியில் உள்ள ஒரத்தநாடு கீழையூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2465, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கற்பட்டு தொகுதியில் பொன்விளைந்தகளத்தூர் ஊராட்சி கொள்ளமேடு, குழிப்பாந்தண்டலம் ஊராட்சி, ஆண்டிகுப்பம் ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2635, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதியிலுள்ள காளியண்ணன்புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 448, திரு. ஞா. ஜான் ஜோசப்.



**திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இருமொழி மாவட்டங்களுக்கு சிறுபான்மை மொழிக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து சட்ட விதிமுறைகளின்படி உரிய எண்ணிக்கையில் ஆசிரியர்களை நியமிக்கவும், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் மலையாள மொழி ஆசிரியர்களைப் போதிய எண்ணிக்கையில் நியமனம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 568, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரம்பக் கல்வியின் தரம் குறித்த அனைத்திந்திய அளவிலான சர்வேயில் தமிழகத்தின் நிலைபற்றி கண்டறியப்பட்டுள்ள விவரங்கள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 598, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக அடுக்குமாடிக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 711, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் அரசினர் விளையாட்டுப் பள்ளி தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 742, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பள்ளிகளில் பகல் நேரக் காவலர், இரவு நேரக் காவலர்களின் பணியிடங்களை முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2891, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மலைக்குடிப்பட்டி, மண்ணவேலாம்பட்டி, செவல்பட்டி, இராசாளிப்பட்டி, சூரியூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர், விராலிமலை பெண்கள்





மேல்நிலைப் பள்ளிக்குக் கழிப்பறை மற்றும் சுற்றுச்சுவர் மற்றும் ஆலூர், குளத்தூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகளை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2691, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேச்சேரி ஒன்றியம், புக்கம்பட்டி ஊராட்சி, புக்கம்பட்டியில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2792, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் உள்ள குறுக்குச் சாலை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3056, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கொம்மனந்தல் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 888, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் எழுப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,50,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக, ஏற்கெனவே



கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துகளை தெரிவித்த பின்னர், நான், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கத்தினை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன். எல்லோரும் 10 நிமிடங்கள்தான் பேசவேண்டும். அதற்கு மேல் போகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பள்ளிக் கல்வி மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற பெரு வாய்ப்பை எனக்குக் கொடுத்த, ஏழைகளின் இதய தெய்வமாய், நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய், கழகத் தொண்டர்களை கண்ணை இமை காப்பதுபோல் கட்டிக் காத்து வரக்கூடிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், நாங்கள் தினந்தோறும் உச்சரிக்கும் சுப்ரபாதம், வருங்காலத் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல எனக்குப் பேரவையிலே பேசுவதற்கு நேரத்தை ஒதுக்கிக் கொடுத்த நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்,
கல்வி கல்லாத பேர்களே இல்லாமல் செய்வோம்,
கருத்தாகப் பல தொழில் பயிலுவோம்,
இங்கே கஞ்சிக்கில்லை என்னும் சொல்லினைப் போக்குவோம்"

என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திரைப்படத்தில் 40 ஆண்டு காலத்திற்கு முன்னாலே பாடினார். அதைத்தான் இன்றைக்கு, மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் போட்டி போட்டிக்கொண்டு நிறைவேற்றிக்கொண்டு இருக்கின்றன.

---

@ 169 முதல் 210 வரையிலான பக்கங்களில் இணைப்பு–I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இந்த ஆரம்பக் கல்விக்கு வித்திட்டவர் பெருந்தலைவர் காமராஜர் என்று சொன்னால், அது மிகையாகாது. பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட ஒருமுறை குறிப்பிடும்போது, படிக்காத காமராஜரே, 12,000 பள்ளிகளைக் கொண்டு வந்தார் என்று சொன்னால், படித்த நாங்கள் அதைவிட அதிகமாகத்தான் கொண்டுவருவோம் என்று சொன்னார்கள்.

"ஆபத்துக் குதவாப் பிள்ளை, அரும்பசிக் குதவா அன்னம்,
தாபத்தைத் தீராத் தண்ணீர், தரித்திர மறியாப் பெண்டிர்,
கோபத்தை யடக்கா வேந்தன், குருமொழி கொள்ளாச் சீடன்,
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனிலை யேழுந் தானே"

என்று செய்யுள் ஒன்று உண்டு. ஆகவே, குருமொழி என்பது, இந்த ஆரம்பக் கல்வியினுடைய ஆசிரியரைத்தான் குறிக்கும். ஆரம்பக் கல்வி ஆசிரியரை எல்லோரும் குருவாக ஏற்றுக்கொண்டுதான், நாம் ஆரம்பக் கல்வியைக் கற்கிறோம். நம்முடைய குடியரசுத் தலைவர், டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள், அவர் ஆரம்பக் கல்வியை படிக்கின்ற சின்னஞ்சிறு வயதில், படிப்பதற்கு வசதி இல்லாததால், வீடுகளுக்கும், கடைகளுக்கும் Newspaper–ஐப் போட்டு, அதன்மூலம் கல்வி கற்றதாக அவருடைய வாழ்க்கை வரலாற்றில், 'அக்கினிச் சிறகுகள்' என்ற புத்தகத்திலே எழுதியுள்ளார்.

முற்பகல் 11–20

இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் இந்த ஆரம்பக் கல்வி என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது; ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாத வாய்ப்பாக இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காகத்தான். அன்றைக்கு மட்டும் நம்முடைய ஜனாதிபதி அவர்கள் 'இந்த அதிகாலை நேரத்தில் கடும் குளிரில், எதற்காக நான் எழுந்து வீடுகளுக்கும், கடைகளுக்கும் பேப்பரைப் போட வேண்டும்' என்று நினைத்திருந்தால் இன்றைக்கு இந்திய நாடு ஒரு மிகச் சிறந்த அணு விஞ்ஞானியைப் பெற்றிருக்க முடியாது. இன்றைக்கு நம்முடைய நாட்டுக்கு ஒரு மிகச் சிறந்த ஜனாதிபதி கிடைத்திருக்க மாட்டார்கள். அப்படி அந்த ஆரம்பக் கல்விதான் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாததாக இருக்கிறது என்பதைத்தான் நான் மீண்டும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான் இந்தப் புகுமுக வகுப்பு என்று கல்லூரியிலே இருந்த P.U.C. வகுப்பை ஒழித்துவிட்டு பிளஸ்-1, பிளஸ்-2 திட்டத்தைக்



கொண்டுவந்தார்கள். அதன்மூலம் கல்வித் தரம் உயர்ந்திருக்கிறது. பின்னர், சத்துணவுத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலேதான் இந்தச் சத்துணவுத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

***"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"***

என்று வான்புகழ் வள்ளுவன் சொன்னதை ஏற்று (குறுக்கீடு) உட்காருங்கள், பேசும்போதே குறுக்கிட்டுக் கொண்டு, எதற்கு, உட்காருங்கள். நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் சொல்லட்டும்.

***திரு. டி. சுதர்சனம்:** பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில்தான் மதிய உணவு கொண்டுவரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் பின்னாலே விரிவுபடுத்தப்பட்டதே தவிர, அவர் கொண்டு வரவில்லை என்பதை உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மதிய உணவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை. சத்துணவுத் திட்டத்தைத்தான் நான் குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் அது கொண்டுவரப்பட்டது. அன்றைக்கு ஆரம்பக் கல்வியைக் கற்கக்கூடிய மாணவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**•திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் கொண்டு வந்த மதிய உணவுத் திட்டம்தான் மூலக் கரு. அதற்குப்பிறகுதான் அது விரிவடைந்து சத்துணவுத் திட்டமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே மதிய உணவில் முட்டை வைத்து அதை உண்மையான சத்துணவாக ஆக்கியவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். அந்தச் சத்துணவுத் திட்டம் கொண்டு வருவதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அன்றைக்கு ஆரம்பக் கல்வியிலே படித்த மாணவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது. அப்பொழுது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், சம்பந்தப்பட்ட கல்வித் துறை அதிகாரிகளை அழைத்து 'ஏன் குறைவாக இருக்கிறது?' என்று கேட்டார்கள். அவர்களும் 'ஆமாம்' குறைவாகத்தான் இருக்கிறது' என்று சொன்னார்கள். ஏனென்று கேட்டால், 'அந்தக் குழந்தைகள் கல்விச் சாலைக்கு வருவதற்கு ஏதுவாக அவர்களுக்கு உணவு கொடுப்பதற்கு அவர்களுடைய தாய், தந்தையர் இல்லை. அந்த தாய், தந்தையர் வயல்வெளியிலேபோய் வேலைக்குச் சென்று விடுகிறார்கள். காலையிலே சென்றால் மாலையிலேதான் வருகின்றார்கள். ஆகவே, சரியான உணவு இல்லாததால் அந்தக் குழந்தைகள் 2 ஆம் வகுப்பிலே, 3 ஆம் வகுப்பிலே நின்று விடுகிறார்கள்' என்று சொன்னார்கள். அதன்பிறகுதான், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதுவும் அந்தச் சத்தணவு எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கண்டறிவதற்காக சத்துணவுத் திட்டத்திற்காக ஓர் உயர் மட்டக் குழுவினை அமைத்து, அந்த உயர் மட்டக் குழுவிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களை உறுப்பினராகப் போட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். சத்துணவு என்று சொன்னால் வளரக்கூடிய அந்தக் குழந்தைகளுக்கு என்னென்ன சத்துக்கள் தேவை; புரதச் சத்து எவ்வளவு தேவை: மாவுத் சத்து எவ்வளவு தேவை; தழைச் சத்து எவ்வளவு தேவை; நார்ச் சத்து எவ்வளவு தேவை



என்பதையெல்லாம் கண்டறிந்து, அதற்காகத்தான் 100 கிராம் அரிசி, 50 கிராம் பருப்பு, 50 கிராம் கீரை, 25 கிராம் எண்ணெய் என்று அந்த வளரக்கூடிய குழந்தைகளுக்குத் தேவையான சத்துணவை அன்றைக்கு கொடுத்தார்கள். அதன்பிறகுதான் அந்த ஆரம்பக் கல்வி பயிலக்கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்தது என்பதை யாரும் மறுத்து விடவும் முடியாது. மறந்துவிடவும் முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் அப்படி ஒரு கல்விப் புரட்சியைக் கொண்டு வந்தார்கள். அதுமட்டுமல்ல, இலட்சக்கணக்கான மாணவர்கள் இப்போது கல்லூரியிலே படிக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கும் காரணம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இட்ட வித்துதான். ஏனென்று சொன்னால், அவர்தான் அப்போது சுயநிதிக் கல்லூரிகளைக் கொண்டு வந்தார்கள். அரசுக்கு ஒரு பைசாகூட செலவு இல்லாமல் இலட்சக்கணக்கான குழந்தைகள் கல்லூரியிலே படிக்கக்கூடிய ஒரு பெரிய வாய்ப்பை ஏற்படுத்தியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.

முற்பகல் 11–25

அதேபோல, சந்திரபாபு நாயுடு அவர்கள் ஆந்திர மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது, எங்களுடைய கோயம்புத்தூருக்கு வந்தார்கள். கோவையிலே இருக்கக்கூடிய சேம்பரிலே அவர்கள் பேசினார்கள். பேசும்போது அவர் சொன்னார், 'கோயம்புத்தூரிலே நான் கேட்டேன், இங்கே எவ்வளவு கல்லூரிகள் என்று கேட்டேன், 43 Engineering கல்லூரிகள் இருப்பதாகக் கூறுகிறார்கள், அதனால்தான் இந்தக் கோயம்புத்தூர் வளர்ந்திருக்கிறது, கோயம்புத்தூர் வளர்ச்சி அடைந்திருக்கிறது எல்லாத் தொழில்களிலும்' என்று அவர் பாராட்டினார். அதோடுமட்டுமல்லாமல், 'எங்களுடைய மாநிலத்தில்கூட இந்த 43 கல்லூரிகள் இல்லை, நானும் என்னுடைய மாநிலத்திற்குச் சென்று அதை விரிவுபடுத்தப் போகிறேன்' என்று சொன்னார். அந்த அளவுக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்தக் கல்வித் திட்டம் உயர்ந்தது; அடுத்த மாநில முதல்வர்கள் பாராட்டக்கூடிய அளவுக்கு இருந்தது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதன் பிறகு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எம்.ஜி.ஆர். அவர்கள் விட்டுச்சென்ற இலட்சியத்தையும், கொள்கைகளையும்

மக்களிடையே எடுத்துச்சொல்லக்கூடிய அளவுக்கு தன்னுடைய ஆட்சியை நடத்தினார்கள். அவர்கள்தான் இந்த இலவசப் பாடப் புத்தகத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். இன்றைக்கு இலவசப் பாடப் புத்தகம் என்று நாம் எளிமையாகச் சொல்கிறோம். நானே பார்த்திருக்கின்றேன். வசதி இல்லாத குடும்பங்களில், பள்ளி திறந்தாலே அவர்களுக்குப் பெரிய சுமையாக இருக்கும். புத்தகம் வாங்க வேண்டும் என்று படிக்கின்ற பையன் தந்தையிடத்திலே கேட்டால், தந்தை சொல்வார் அடுத்த வாரம் வாங்கிக்கொள்ளலாம் என்று. அடுத்த வாரம் கேட்டால், இப்போது இரண்டு புத்தகங்களை வாங்கிக்கொள்; மீண்டும் அடுத்த வாரம் வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்வார். ஆகவே, அந்த அளவுக்கு ஒவ்வொரு வீட்டிலும் வறுமை இருந்தது. அதையெல்லாம் கண்டறிந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மனித நேயத்தோடு, அப்படிப்பட்ட நிலைமையே மக்களுக்கு ஏற்படக்கூடாது, வரக்கூடாது என்று அவர்கள்தான் இந்த இலவசப் பாடப் புத்தகத் திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரையிலே படிக்கக்கூடிய குழந்தைகளுக்காகக் கொண்டு வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கக்கூடிய திட்டம் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சருடைய காலத்திலே கொண்டுவரப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஒன்றாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை வழங்கப்படக்கூடிய திட்டம் அவர்களுடைய கடந்த கால ஆட்சியிலே கொண்டுவரப்பட்டதாக அவர்கள் தெரிவித்தார்கள். உள்ளபடியே சொல்ல வேண்டுமென்று சொன்னால், இந்தத் திட்டம் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை சத்துணவிலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய அந்த மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கக்கூடிய திட்டம் 1997–98–லே நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போதுதான் கொண்டுவரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றாம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் பாட நூல்கள் வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொன்னதுபோல அப்போது கொடுத்தார்கள். ஆங்கிலப் புத்தகமும், தமிழ்ப் புத்தகமும் மட்டும் கொடுக்கப்பட்டது. நான் சொல்வது, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துப் புத்தகங்களும் ஒரே நேரத்தில், ஒரே இடத்திலே வழங்கப்பட்டன என்பதை மீண்டும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இலவச சைக்கிள் திட்டம். இந்த சைக்கிள் திட்டம் என்பது—இன்றைக்கு நாம் எல்லோரும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். நீங்களும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள், நாங்களும் பாடுபட்டோம். இப்போது நுழைவுத் தேர்வை நாம் ரத்து செய்திருக்கிறோமே, அது எதற்காக என்று சொன்னால், ஏழை மக்கள், ஏழை மாணவ, மாணவிகள், கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய மாணவர்கள் முன்னுக்கு வரவேண்டும் என்பதற்காக—அப்படி கிராமப்புறத்திலே உள்ள ஏழை மாணவ, மாணவிகள் படிக்க வேண்டும், உயர் கல்வியைத் தொடர வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சைக்கிள் வழங்கக்கூடிய திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், சில கிராமங்களில் கல்லூரிகளுடைய வகுப்பு நேரத்திற்கேற்ப பஸ் வசதி கிடையாது. இதையெல்லாம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த காரணத்தினால்தான், அவர்கள் மனித நேயத்தோடு, படிக்கக்கூடிய அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கக்கூடிய திட்டத்தைக் கொண்டுவந்து சிறப்பாக நடத்தினார்கள். கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய மாணவ, மாணவிகள் உயர் கல்வியை அதிகமாகத் தொடரக்கூடிய நிலையில் எங்கள் ஆட்சியில் திட்டங்களை நாங்கள் கொண்டு வந்தோம் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பரீட்சையிலே தவறினால் அந்த மாணவனோ, மாணவியோ ஓராண்டு காலம் காத்திருக்க வேண்டும். ஓராண்டு காலம் காத்திருந்து அடுத்த ஆண்டுதான் பரீட்சை எழுதி அவர்கள் பாஸ் செய்ய முடியும். அப்போது ஓராண்டு காலம் அவர்களுடைய கல்வி வாழ்க்கை வீணடிக்கப்படுகிறது. இதையெல்லாம் யாரும் சிந்திக்கவில்லை. புரட்சித் தலைவி அம்மாவினுடைய சிந்தனையிலே அது வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், அப்படித் தவறிவிட்டால், அதை அந்த மாதத்திலேயே எழுதி, அப்போதே பாஸ் செய்து, அந்த ஆண்டே கல்வியைத்

தொடரலாம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். மாணவர்கள் சமுதாயத்திலே விளக்கேற்றி வைத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–30*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 5 ஆண்டுகளில் 1,274 தொடக்கப் பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டன. 2,790 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 394 நடுநிலைப் பள்ளிகள் மேலும் தரம் உயர்த்தப்பட்டன. இதனால் அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் வசிப்பிடத்திலிருந்து ஒரு கிலோ மீட்டருக்குள் தொடக்கப் பள்ளியும், 3 கிலோ மீட்டருக்குள் நடுநிலைப் பள்ளியும் அமைக்கப்பட்டு துவக்கக் கல்வியில் தமிழகம் தன்னிறைவு அடைந்தது.

தமிழகத்தில் முதல் முறையாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான், நபார்டு வங்கி உதவியுடன் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் ரூபாய் 709.91 கோடி செலவில் 6 கட்டங்களாக பணிகள் துவங்கப்பட்டு, 4 கட்டப் பணிகள் முடிக்கப்பட்டன.

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் முதல் முறையாக ஒற்றைச் சாளர முறையில் மாணவர்கள் சேர்க்கை புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பயிற்சியை பாதியில் விட்டதால் பாதிக்கப்பட்ட 20,000 மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டி, அம்மா அவர்கள், அவர்களுள் தகுதி பெற்ற மாணவர்கள் 15,670 மற்றும் 3,570 என மொத்தம் 19,240 மாணவர்களுக்கு மீண்டும் பயிற்சி அளிக்க உத்தரவிட்டு செயல்படுத்தினார்கள்.

10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுக்ளில் தோல்வியுற்ற மாணவர்கள் மீண்டும் தேர்வெழுதுவதன் மூலம், ஓராண்டு வீணாவதைத் தவிர்க்க அவர்கள் உடன் மறு தேர்வெழுத வகை செய்து, புதுமையைப் புகுத்தி, சாதனை செய்தது எங்களுடைய அம்மா அவர்கள்தான்.

அனைத்து வகை ஆசிரியர் நியமனங்களுக்கும் அதிகபட்ச வயது வரம்பை நீக்கி, ஆசிரியர் பயிற்சி பெற்று வேலை கிடைக்காமல் அவதிப்பட்ட அனைவருக்கும் பணி கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தி அம்மா



அவர்கள் சாதனை புரிந்தார்கள். மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் கல்வித் தரம் உயர்த்திட வேண்டி, அதற்கென தனி இயக்குநரகத்தைத் தோற்றுவித்தது (மணியடிக்கப்பெற்றது) அ.தி.மு.க. ஆட்சியிலேதான்.

மக்களிடையே நூல்களைப் படிக்கும் ஆவலை வளர்க்கும் விதமாக, சென்னை கன்னிமாரா நூலகத்தில் நிரந்தரப் புத்தகக் கண்காட்சி ஏற்படுத்தியதுடன், கிராமங்களில் 867 கிராமப்புற நூலகங்கள் துவக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள் அல்லாமல், அனைத்து வகைப் பாடத் திட்டத்தில் படிக்கும் மாணவர்களுக்கும் தமிழைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன், எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்புவரை அறிவியல் தமிழ் என்ற பாடம் அறிமுகம் செய்யப்பட்டது.

மாணவர்களின் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்துடன், 2003–2004 ஆம் ஆண்டு முதல் 600 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழிப் பயிற்சி ஆய்வுக் கூடங்கள் நிறுவ ஆணையிடப்பட்டது. 2004–05 ஆம் ஆண்டு முதல் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், 15 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. (குறுக்கீடுகள்) அவர் சுப்ரபாதம் பாடுவது என்று முதலிலேயே ஆரம்பித்தார். நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. தா. மலரவன்:** அம்மாவின் அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் பலனாக, தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் இடைநிற்றல் விகிதம் 2001–2002 ஆம் ஆண்டில் 16 விழுக்காடு என்ற நிலையிலிருந்து 2004–2005 ஆம் ஆண்டில் 6 விழுக்காடாகவும், நடுநிலைப் பள்ளி இடைநிற்றல் விகிதம் 2004–2005 ஆம் ஆண்டில் 9 விழுக்காடாகவும் குறைந்துள்ளது.

தமிழ்நாடு பாடநூல் கழக உபரி நிதியிலிருந்து, ரூ.71.03 கோடி செலவில் 695 அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 235 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் அறிவியல் ஆய்வகம் கட்டுவதற்கு ஆணையிடப்பட்டது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியரின் வருவாய் ஈட்டும் தந்தை அல்லது தாய் இறந்துவிட்டாலோ, நிரந்தர முடக்கம் அடைந்தாலோ,

அந்த மாணவ, மாணவியருக்கு ரூ.50,000 நிதி வழங்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை அவர்களின் பராமரிப்புச் செலவிற்குப் பயன்படுத்த ஆணையிடப்பட்டது. இந்த ஆட்சியில் 2006–07 ஆம் ஆண்டில் 2.25 கோடி ரூபாய் நிதியும், 2007–08–ல் 2.25 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இது எந்த நிலையில் உள்ளது என்பதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்றைக்கு இதற்காக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அந்த ஒரு கோடி ரூபாய் நிதியை Power Finance Corporation–லே முதலீடு செய்து அதன்மூலம் கிடைக்கக்கூடிய நிதி அந்த மாணவர்களுடைய நலனுக்கு வழங்கப்பட்டது. ஆனால், நீங்கள் இன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறீர்கள், 2.25 கோடி ரூபாய் கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டும் கொடுக்கப்பட்டதாவும் இருக்கிறது. ஆனால், அந்த Power Finance Corporation–லே பார்த்தால், அது அதிலே குறிப்பிடப்படவில்லை. அந்த மானியக் கோரிக்கையிலே அது இல்லை. அப்படியென்றால், இந்த நிதி எந்தத் தலைப்பிலே இருக்கிறது? எப்படிச் செலவு செய்தீர்கள்? இல்லை, செலவே செய்யவில்லையா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழே 100 மாணவர்களுக்கு அந்த நிதி வழங்கப்பட்டு இருக்கிறது. கூடுதலாக இந்தத் திட்டத்தின்கீழே நிதி வேண்டுமென்று பள்ளிக் கல்வித் துறையினுடைய இயக்குனர் அவர்கள் அரசுக்குக் கருத்துரு அனுப்பியிருக்கிறார்கள். அதையேற்று, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், 1.75 கோடி ரூபாய் அதற்கு கூடுதலாக நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே, முறையாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. தா. மலரவன்:** இதோ முடித்துவிடுகிறேன். முடித்துவிடுகிறேன். முக்கியமான கோரிக்கை ஒன்று, மாணவர்களுடைய கோரிக்கை. அதைச் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். நிதி ஒதுக்கீடு இல்லையென்று நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் ஒதுக்கிய நிதியை Power Finance Corporation -லே போட்டு அதன்மூலம் கிடைக்கும் வட்டியைச் செலவு செய்தோம். நீங்கள் இந்த நிதியை எந்தத் தலைப்பின்கீழ் வைத்து இருக்கிறீர்கள் என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நடைபெற்ற 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புத் தேர்வுகளில் ஏகப்பட்ட குளறுபடிகள் நடைபெற்றுள்ளன. இலட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எப்போதும் உள்ள நடைமுறையை மாற்றி, பாடத் திட்டத்தில் உள்ள வினாக்களைக் கேட்காமல் அல்லது நம்முடைய தமிழ்நாடு பாட நூல் கழக அச்சகத்திலே அச்சடித்துக் கொடுக்கிற புத்தகத்திலே இருக்கின்ற அந்த வினாக்களையும் கேட்காமல் புதிதாக வினாக்களைக் கேட்டு, மாணவர்களைக் குழப்பி, அந்த மாணவர்கள் இன்றைக்கு அல்லல்படக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் இலட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பத்தாம் வகுப்பு அறிவியல் தேர்விலும், 12 ஆம் வகுப்பு இயற்பியல் தேர்விலும்தான் இந்தக் குளறுபடிகள் நடந்துள்ளன. இப்போது, நுழைவுத் தேர்வை இரத்து செய்து இருக்கிறோம், ஏழை மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டும் என்பதற்காக. அந்தத் திட்டமே பாழாகக்கூடிய அளவிற்கு இந்த வினாக்கள் இருக்கின்றன. ஆகவே, அப்படி ஏற்படாமல் இருக்க அந்த மாணவர்களுக்கு நீங்கள் உரிய மதிப்பெண்கள் கொடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், ஒரு மார்க், அரை மார்க்கிலேதான் ஒரு மாணவன் போட்டியில் வெற்றிபெறுவான். அந்த நிலைமையை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். அந்த மாணவர்களுக்கு நீங்கள் என்ன பாதுகாப்பு அளிக்கிறீர்கள் என்பதை இந்த மன்றத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பி.எட். படித்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், ஒரே வரியில் சொல்லுங்கள். முடியுங்கள். ஒரே சொல்லில் முடிக்க வேண்டும்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் தொழிலாளர் சிறப்பு பி.எட். தேர்வின்மூலம் ஏற்கெனவே 596 பேர் பரீட்சை எழுதி அதில் 410 பேர் தேர்வு பெற்றார்கள்,

மீதமுள்ள 164 பேர்களையும் நீங்கள் சிறப்புத் தேர்வு மூலம் தேர்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பொள்ளாச்சியில் நகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.3.65 கோடி திட்ட மதிப்பீட்டிலே கட்டடம் கட்டுவதற்கு ஏற்கெனவே திட்டமிடப்பட்டது. ஏற்கெனவே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 95 இலட்சம் நிதி ஒதுக்கியும், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் தொகுதி நிதியில் அப்பள்ளிக்கு ரூ.40 இலட்சம் ஒதுக்கியும் இன்றைக்குக் கட்டடம் கட்டாமல் இருக்கிறது. அந்தப் ப்ள்ளி ஒரு மிகச் சிறந்த பள்ளி, வரலாற்றுச் சிறப்புள்ள பள்ளி. இந்தியாவிலே நிதியமைச்சராக இருந்த திரு. ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்களும், திரு. சி. சுப்ரமணியம் அவர்களும் அந்தப் பள்ளியிலேதான் படித்தார்கள். அப்படிப்பட்ட பள்ளியில் தற்போது உடனடியாகக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி என்று நிதியை ஒதுக்குகின்றீர்கள். அந்த நிதியிலே என்னுடைய தொகுதிக்கு வேண்டியவரை நான் நிதி உதவி செய்ய முடியவில்லை. ஏனென்று சொன்னால், அங்கே அதற்கு அனுமதி கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். அங்கே என்னுடைய தொகுதியில் முத்தண்ணன் வாய்க்கால் என்ற ஒரு வாய்க்கால் இருக்கிறது. அந்த வாய்க்காலில் மழைக் காலங்களில் தண்ணீர் வந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன். (குறுக்கீடுகள்)

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையிலே (குறுக்கீடுகள்) கலந்துகொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த, முதல்வர் பதவியை ஐந்தாம் முறையாக அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க.–வைச் சேர்ந்த இருவருக்கு பேச வாய்ப்பளிக்கவேண்டுமென்றும், முதலிலே பேசக்கூடிய உறுப்பினருக்கு 15 நிமிடம் கொடுத்தால் போதும்; அடுத்து வரும் உறுப்பினருக்கு 10 நிமிடங்கள் கொடுங்கள் என்று அவர்களுடைய கொறடாதான்



உங்களுடைய அறையிலே என்னிடத்திலே தெரிவித்தார். ஆனால், 21 நிமிடத்திற்குமேல் மாண்புமிகு உறுப்பினர் பேசியதற்குப் பிறகும் அ.தி.மு.க.–வைச் சேர்ந்தவர்கள் இப்படி மற்றவர்கள் பேசுவதற்கு இடையூறாக இருப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன். நீங்கள் இருந்துதான் time எல்லாம் fix பண்ணினோம்.

*முற்பகல் 11–40*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சிக்கு 40 நிமிடம் என்று சொன்னீர்கள். 25 நிமிடம் இவர் பேசட்டும், அடுத்த உறுப்பினர்கள் 15 நிமிடம் பேசட்டும் என்று முதலிலே நாங்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லோரும் முடிவு செய்து, உங்களிடத்திலே சொன்னோம். அதுதான் நடைமுறையாக இருக்கிறதே தவிர, அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையை வைத்துச் சொல்கிறாரே தவிர, மொத்தத்தில் 40 நிமிடங்கள் பேசுவதற்கு எதிர்க் கட்சிகளுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நாங்கள் வலியுறுத்தி இருக்கிறோம். நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜேந்திரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பள்ளிக் கல்வித் துறை மீதான மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த, முதல்வர் பதவியை ஐந்தாம் முறையாக அலங்கரித்து, (குறுக்கீடுகள்) மக்கள் பணியாய் இந்த மாமன்றத்தில் 50 ஆண்டுகள் பணியாற்றி, மேதகு குடியரசுத் தலைவரால். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சத்தம் போடுகிறவர்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எழுந்து நின்று சொல்லுங்கள். அதுதான் சரியாக இருக்கும்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** இந்த மன்றத்தில் பாராட்டப்படவுள்ள, இப்பேரவையின் பொன் விழாத் தலைவர், மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) தன் கொள்கைத் தலைவனுக்கு காலமெல்லாம் துணை நிற்கும் எங்கள் பொதுச் செயலாளர், மாண்புமிகு நிதியமைச்சர் இனமான பேராசிரியர்

அவர்களையும் வணங்கி, நாளைய தமிழகத்தின் வைகறை, தமிழ்த் தாயின் இளம் புதல்வர் எங்கள் தளபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம் தெரிவித்து, இம்மானியக் கோரிக்கை மீதான எனது பேச்சினைத் தொடங்குகின்றேன்.

இந்த நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, கல்வி அறிவு எவ்வளவு இன்றியமையாதது என்பதை நன்கு உணர்ந்த தலைவர் கலைஞர் அவர்கள், கல்வித் துறையை பள்ளிக் கல்வித் துறை என்றும், உயர் கல்வித் துறை என்றும் 1997-லே இரண்டாகப் பிரித்து, அதன் செயல்பாடுகளை விரிவாக்கியவர். அப்போது துறைகளை விரிவாக்கியவர், இப்போது அதற்கு இரண்டு அமைச்சர்கள் எனத் தந்து, அத்துறைகளை இன்னும் மெருகூட்டச் செய்திருக்கின்றார்கள்.

கல்விக்காக செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும், வருங்கால சமூகத்திற்குச் செய்யப்படும் மூலதனம் என்பதைச் சரியாகப் புரிந்து வைத்துள்ள தலைவர் அவர்கள், கல்வித் துறைக்கு ஊன்றுகோலாய் விளங்குகிறார்கள் என்றால், அது மிகையல்ல. எனவேதான், கல்வித் துறைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் பல சலுகைகளை அறிவித்துள்ளார்கள்.

கடந்த ஆண்டில், பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கிய நிதி ரூ.5,438 கோடி. இந்த ஆண்டில் ஒதுக்கியதோ, ரூ.7,057 கோடி. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டின் நிதி ஒதுக்கீட்டைவிட இது 30 சதவிகிதம் அதிகம் என்பதனைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். "கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்பதனை உணர்ந்து, உலகம் வியக்கும் உன்னதத் தலைவரை இந்த நேரத்திலே போற்றி வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாணவர்களுக்கு இலவசப் பாட நூல் வழங்கும் திட்டத்திற்கு, இந்த நிதியாண்டில் 54 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு; அவர்களுக்குச் சீருடை வழங்குவதற்கு 58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு; பிளஸ்-1 மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்திற்கு 102 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. இங்கே இந்தத் திட்டத்தைப்பற்றி பேசிய மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் அவர்கள், அவர்கள் காலத்திலே இந்தத் திட்டம் கொண்டு வந்ததாகச்



சொன்னார்கள். ஆனால், அந்தத் திட்டம் தலைவர் கலைஞர் அவர்களிடம் கேட்கின்றபோது, நல்ல திட்டங்களை யார் கொண்டு வந்தாலும் அதனை நாங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவோம் என்று சொல்லி, இலவச பஸ் பாஸ் திட்டத்தையும் இதனோடு சேர்த்துக் கொடுத்து, இலவச சைக்கிளையும் கொடுத்த உன்னதத் தலைவர் கலைஞர் அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ், மாநில அரசின் ஒதுக்கீடாக 375 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, மாணவர்களுக்கு இலவச மற்றும் சலுகை விலையில் பேருந்து பயணச் சீட்டு வழங்குவதற்கும் அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக 300 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம்.

அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தின்மூலம், தொடக்கப் பள்ளி நிலைகளில் இடைநிற்றல் விகிதம் என்பது 2005-2006-ல் 3.81 சதவிகிதத்திலிருந்து 1.9 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. சத்துணவில் வாரம் இரண்டு முட்டை என்ற தலைவரின் சீரிய திட்டம்கூட இந்த இடைநிற்றல் விகிதச் சரிவிற்குப் பெரிய காரணம் என்றால், அது உண்மை. இரண்டு முட்டைகள் என்பது இப்போது மூன்று முட்டைகள் ஆனதால், விரைவில் இந்த இடைநிற்றல் விகிதம்கூட முட்டையாகிவிடும் என்று சொல்லிக்கொள்வதில் நான் பெருமையடைகின்றேன்.

அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், இளங்கலை பட்டப் படிப்புப் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்விக் கட்டணம் இப்போது இரத்து செய்யப்பட்டுள்ளது. அன்று உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிவரை இலவசக் கல்வியைத் தந்தது தலைவர் கலைஞர் அவர்கள். இன்று உயர் கல்விவரை இலவசக் கல்வியைத் தந்ததும் அதே தலைவர் கலைஞர்தான். தமிழ் வழிக் கல்விக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலககு அளிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-45

கல்வித் தேர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்கள் என இந்த அரசால் கண்டெடுக்கப்பட்ட தருமபுரி, விழுப்புரம், ஈரோடு, பெரம்பலூர், சேலம், வேலூர், திருவண்ணாமலை மற்றும் கடலூர் மாவட்ட

மாணவர்கள் பயன்பெறத்தக்க அளவிலே சிறப்புப் பயிற்சி அளிக்க ரூ.123 இலட்சம் செலவில் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படி, கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களை முன்னுக்குக் கொண்டுவரும் நம் முதல்வர் அவர்கள், பள்ளிகளின் தரத்தை உயர்த்தும்போதும், நிதி ஒதுக்கீடுகளின்போதும் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்குச் சற்று முன்னுரிமை தரவேண்டும் என்று இந்த நேரத்திலே நம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகின்றேன்.

Neighbourhood School System என்று சொல்லக்கூடிய அண்மைப் பள்ளித் திட்டமானது உலக நாடுகளில் உள்ள கல்வியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு உன்னதமான திட்டம். இந்தத் திட்டத்தின்படி ஒரு பள்ளியில், அதைச் சுற்றிலும் உள்ள பகுதிவாழ் மாணவர்களே பயிலவேண்டும். பிற பகுதிவாழ் மாணவர்களை அதில் சேர்க்கக்கூடாது. இதனால் படிப்புக்குப் பிள்ளைகள் தொலைதூரம் போக வேண்டிய நிலை இல்லை. தவிர இந்தப் பகுதியில் அது தரம் உயர்ந்த பள்ளியாக இருந்தால், தாங்களே அனைத்து மாணவர்களும் அங்கு வந்து படிக்க வாய்ப்பு உண்டு. இந்த அண்மைப் பள்ளித் திட்டம் என்பது சமச்சீர் கல்வி முறையில் மட்டுமே சாத்தியப்படும். சமச்சீர் கல்வி என்பது நம் தெருவில் உள்ள நகராட்சிப் பள்ளிக்கும், ஏற்காடு, கொடைக்கானலில் உள்ள உறைவிடப் பள்ளிகளுக்கும் குறிப்பிட்ட ஒரு வகுப்பிற்கு ஒரே பாடத் திட்டம் என்பதுதான். பாடத் திட்டம் சமச்சீரானால் மண் குடிசை மாணவனும், மாளிகை மாணவனும் அந்தப் பாடத் திட்டத்தால் ஒரே நிலை மாணவர்கள் ஆக்கப்படுவார்கள். மாணவர்கள் ஆங்கிலப் பேச்சுத் திறனை மேம்படுத்த ரூ.130 இலட்சம் செலவில் ஆங்கில மொழிப் பயிற்சிக் கூடங்கள் அமைக்கும் திட்டம் கிராமப்புற மாணவர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும், அவர்களுடைய தாழ்வு மனப்பான்மையைப் போக்குவதற்கும் ஓர் அற்புதமான திட்டம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அரசுப் பள்ளிகளில் அனைத்துப் பணியிடங்களுக்கும் கடந்த ஆட்சியில் இருந்த அனைத்து முரண்பாடுகளும் இப்போது முழுவதும் தீர்க்கப்பட்டுள்ளன. அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளிலே கடந்த ஆட்சியில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்ற அந்த ஆசிரியர்களுக்குக் கழக ஆட்சி வந்த கையோடு, 1–6–2006 முதல் கால முறை ஊதியம் வழங்கப்பட்டு



வருகிறது. இதன்மூலம் 46,605 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளார்கள். இதற்காகக் கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ.345 கோடி. கடந்த கால ஆட்சியில், அதன் 5 ஆண்டுகளில் 394 நடுநிலைப் பள்ளிகளும், 406 உயர்நிலைப் பள்ளிகளும் தரம் உயர்த்தப்பட்டன. ஆனால், இப்போது ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு வருடம் முடியாத நிலையில் 120 நடுநிலைப் பள்ளிகளும், 120 உயர்நிலைப் பள்ளிகளும் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. 2007–2008–ல் 100 நடுநலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் 80 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஆக்க அரசு முடிவு செய்துள்ளது. பள்ளிகளைத் தரம் உயர்த்துகின்ற இந்த எண்ணிக்கை போதாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. அதிக எண்ணிக்கையான பள்ளிகளைத் தரம் உயர்த்தும்போது கிராமப்புற மாணவர்கள் நகரத்தை நாட வேண்டியதில்லை. அதனால் பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகளைக் கண்காணிப்பதும் எளிதாகிறது.

மாணவர்கள் பயணம் செய்வதற்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு தருகின்ற மானியத் தொகை ரூ.300 கோடியும் கணிசமாகக் குறையும். இப்படிப் பள்ளிகள் தரம் உயர்த்தப்படுகின்ற நேரத்தில் அப்பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்கள் மற்றும் கட்டமைப்பு வசதிகளைக் காலதாமதமின்றி உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். அப்போதுதான் அந்த அறிவிப்புகளுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

எனது நெல்லிக்குப்பம் தொகுதியில் தரம் உயர்த்தப்பட வேண்டிய பல நடுநிலைப் பள்ளிகளையும், உயர்நிலைப் பள்ளிகளையும் தரம் உயர்த்தித் தரவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும், பாராட்டுகிற வகையில் சிறப்பாகச் செயல்படுகின்ற நமது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல புதிய கல்வி முறைகளை காலத்திற்கேற்ப புகுத்தி கலைஞர் அவர்களின் மணிமகுடத்திற்கு புகழ் சேர்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மனத்திட்பம், நினைவாற்றல், புத்தி கூர்மை ஆகியனவற்றை மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் மேம்படுத்த அவர்களுக்கு யோகா பயிற்சி அளிக்க நமது அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர அனைத்துத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒன்று முதல் 4 வரையிலான வகுப்புகளில் செயல்வழி முறைக் கல்வி கற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

10 ஆம் வகுப்புத் தேர்விலும், 12 ஆம் வகுப்புத் தேர்விலும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே 1996-ல் கழக ஆட்சியில் ஆரம்பித்த இந்தச் சாதனை, இன்று வரை தொய்வில்லாமல் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது.

முற்பகல் 11-50

பல பள்ளிகள் இன்னும் அடிப்படை வசதிகளே இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலையில், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் தொகுதியில் உள்ள பள்ளிகளில் நடைபெறும் விழாக்களுக்கும் ஆய்வுக்கும் செல்லும்பொழுது இக்குறைகளைக் காண்கின்றோம். அவற்றில் ஓரளவாவது சரிசெய்கின்றவண்ணம், பள்ளிகளுக்குத் தேவையான பெஞ்சு, டெஸ்குகள், ஆய்வக உபகரணங்கள் மற்றும் கணினிகள் ஆகியவற்றை வாங்கிக்கொடுக்கவும், அதேபோல பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுக்கவும் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்துகொள்ள உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

ஒரு வகுப்பு, ஓர் ஆசிரியர் என்பது தற்போது இல்லையென்றாலும்கூட, ஒவ்வோர் ஆரம்பப் பள்ளியிலும் குறைந்தது மூன்று ஆசிரியர்களாவது இருக்க வேண்டுமென்ற சூழ்நிலையை ஏற்படுத்தி, அதற்கேற்ப பணியிடங்களை நிரப்பி, மாணவர்களை செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். பள்ளிக்கு ஓர் உடற்கல்வி ஆசிரியர் அவசியம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் ஆசிரியர் இல்லம் அமைக்க வேண்டுமென்று தலைவர் கலைஞர் 1972-ல் அறிவித்ததற்கிணங்க, கடலூரில் ஓர் ஆசிரியர் இல்லம் அமைத்திட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ஆவன செய்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

ஏழை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக உள்ள அறிவியல் நூல்கள், நவீன நூல்கள் கிடைக்கும்வண்ணம், சென்னையில், சர்வதேச தரத்தில், 100 கோடி மதிப்பீட்டில், ஒரு நவீன நூலகம் அமைக்க தலைவர் அரசு முடிவு செய்துள்ளது. இது ஏழையெளிய, கீழ்த்தட்டு மக்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.



எனது தொகுதி தொடர்பான கோரிக்கைகள் சிலவற்றை இங்கே கூற விரும்புகின்றேன். எனது தொகுதிக்குட்பட்ட மலட்டாறு பிரச்சினை என்பது தொகுதி மக்களின் ஜீவாதாரப் பிரச்சினையாகும். இந்தப் பகுதியில் உள்ள 60 கிராம மக்களும், ஒரு இலட்சம் விவசாய நிலங்களும் பயன்பெறும்வண்ணம் மலட்டாற்றில் நீர் கொண்டுவருவதற்கானத் திட்டத்தினைப் பொதுப் பணித் துறையும், வனத் துறையும் சேர்ந்து நிறைவேற்றிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மற்ற தொகுதிப் பிரச்சினைகளைப்பற்றி, சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடமும், முதலமைச்சரிடமும் கோரிக்கை மனு அளித்திருக்கின்றேன். அவற்றைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** நன்றி சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேட்டுவிட்டீர்கள் இல்லையா? நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. சபா. இராஜேந்திரன்:** ஆசிரியர் பணியே அறப் பணி; அதற்கு உன்னை அர்ப்பணி என்ற சித்தாந்தத்திற்குத் தங்களை உட்படுத்திக்கொண்டுள்ள ஆசிரியர் சமுதாயத்திற்கு தலைவர் கலைஞர் அவர்கள் சரியான அறங்காவலராக விளங்குகிறார்; விளங்குவார் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி)

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்ற அய்யன் வள்ளுவன் குறளை நினைவுபடுத்தி, குறளோவியம் கண்டவர் தலைமையில் அய்யன் குறள்களும் சிறக்கும், ஆசிரியர் குரல்களும் சிறக்கும், மாணவர் குரல்களும் சிறக்கும், இதில் சந்தேகம் இல்லை என்று சொல்லி, பள்ளிக் கல்வித் துறை குறித்த மானியக் கோரிக்கைமீதான எனது பேச்சினை நிறைவு செய்து, இந்த வாய்ப்பினை அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. செல்வராஜ் அவர்கள்.

**திரு. து. செல்வராஜ்:** இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அவையின் நாயகராய் வீற்றிருக்கும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

அவர்களே. மிகச் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை இந்த மன்றத்திற்கு உச்சிமுகர்ந்து அனுப்பி வைத்த, தியாகப் பேரொளி, இந்தியத் திருநாட்டை வழிநடத்தும் உன்னதத் தாய், பதவி மேல் பற்று வைக்காத பண்பின் திலகம், சோகத்தையே வாழ்வில் சந்தித்த சுடரொளி, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் மகத்தான தலைவி, தாயுள்ளம் கொண்ட உண்மைத் தாய், சோதனைகளை வென்று சாதனை படைத்துவரும் தங்கத் தலைவி, ஒப்புயர்வற்ற நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத் தந்தையாகவும், வழிகாட்டியாகவும் நேசிக்கும் இந்தியாவின் ஒரே தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இளம் தலைவர், மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்கோடி ஆதித்தன் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சுதர்சனம் அவர்களுக்கும் 'இவனால் இது ஆகும்' என்று என் மேல் நம்பிக்கை வைத்து, இந்தப் பேரவைக்கு அனுப்பிவைத்த, திருவைகுண்டம் தொகுதி மக்களுக்கும் இந்தப் பொன்னான தருணத்தில் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கெடுக்கும் நான், எனது சிற்றூரில் கல்வி பெறுவதற்குக் காரணமாய் இருந்த, கர்மவீரர், கருப்பு வைரம், கல்விக் கண் திறந்த ஒளிப் பிழம்பு, குலக் கல்வித் திட்டத்தை வேரோடு சாய்த்த விஞ்ஞானி, படிக்காத மேதை, பாமரர்களின் தேனூற்று, தனது காலத்தில் கல்வி இருளை அகற்றுவதற்காக 40,000 கல்விக் கூடங்களை நிறுவி ஒளிவீசச் செய்த கோமகன், அணைக்கட்டுகள் கண்ட அருந்தவப் புதல்வன், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த திசை நோக்கி எனது கண்கள் பணிக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–55*

கர்மவீரர் காமராஜர் கல்வி வளர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கத்தை நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், முத்தமிழறிஞர், இலைகளையெல்லாம் சுருண்டு விழச் செய்யும் சூரியச் சுடர், பொய்யான பிரச்சாரங்களை புறமுதுகிட்டு ஓடச் செய்யும் புற நானூற்று வேந்தன், உலகத் தமிழர்களின் தானைத் தலைவர், குறளோவியம் தந்த குவ்வைச் செல்வர், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்களும் தற்போது ஏறபடுத்தியுள்ளார்கள்.

V 211, 31/07 D
PO 7.9.4



பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கும், தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் பெரிய வேறுபாடுகள் ஏதுமில்லை. தனிப்பட்ட முறையில் அவர்கள் இருவரும் நட்பில் திளைத்தவர்கள். அதனால்தான் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் பேரியக்கத்தை, குறிப்பாகத் தென் பகுதி தமிழர்களை, உளம் நெகிழச் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவர்கள் கல்வி மட்டும் கற்றால் போதாது; அவர்கள் நலமுடனும் வளமுடனும் வாழ வேண்டுமென்ற நோக்கில், வாரத்திற்கு மூன்று முட்டைகளை உணவில் சேர்க்கச் செய்ததும், அரசுக் கல்லூரி வரை மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை ஒழித்து மாணவர்களின் கல்வித் தாகத்திற்கு நீர் ஊற்றிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழைகளின், சாதாரண மக்களின் பட்ஜெட் இதுவென்று அனைவராலும் பாராட்டப்பெறும் இந்த நிதிநிலை அறிக்கையை மிக அற்புதமாகத் தயாரித்த மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நிதியமைச்சர் இனமான பேராசிரியர் அவர்களையும், எல்லாவற்றுக்கும் மேலாக, நன்கு சிந்தித்து செயலாற்றக்கூடிய தகுதிவாய்ந்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லோருக்கும் கல்வி வழங்க வேண்டுமென்ற உறுதியான அடிப்படையில் இலவச பாட நூல்கள், சீருடைகள், மிதிவண்டி போன்ற திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியாதாரங்கள் இந்த அரசு ஏழைகளையும், பின்தங்கிய மக்களையும் நினைத்துப் பார்க்கிற, அவர்கள் கல்வியில் முன்னேற வேண்டுமென்ற முனைப்புடன் செயல்படுகிற அரசு என்பதைக் காட்டுகிறது.

பள்ளி மாணவர்களையும், கல்லூரி மாணவர்களையும் சுமந்து செல்லும் பேருந்துகளுக்கு இருக்கைக்கு காலாண்டுக்கு முறையே ரூ.50 என்றும், ரூ.100 என்றும் குறைத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் கல்வியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்

227565
சென்னை-600 009

பள்ளிகளாகவும், நிலை உயர்த்தும் அறிவிப்பு காலத்தே எடுத்த நல்ல முடிவு. (மேசையைத் தட்டும் ஒலி) இனிமேல் தமிழகத்திலுள்ள அனைத்து தொடக்கப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளாகவும், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளையுமே மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தினால் நன்மையாக அமையும். பெருந்தலைவர் காமராஜர் ஆண்டுக்கு 14,000 கல்விக் கூடங்கள் ஆரம்பித்துக் கல்விப் புரட்சி செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் கல்விப் புரட்சி செய்துள்ளார்கள். புதிய ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவித்தும், நிரப்பப்படாத 24,642 ஆசிரியர் பணியிடங்களை நிரப்பியும், ஒன்று முதல் நான்கு வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் செயல்வழி முறையில் பாடங்களைப் புரிந்து படிக்கவும் ஏற்படுத்தியிருக்கின்ற முறை வரவேற்கத்தக்கதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சியில் ஆசிரியர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாக, சோகம் கலந்ததாக இருந்தது. அடக்குமுறைச் சட்டங்களால் அவர்கள் வாயடைத்துப் போயிருந்தனர். கலைஞர் ஆட்சி ஏற்பட்டவுடன்தான் அவர்கள் புதிய சுவாசத்தைக் கண்டார்கள். அடக்குமுறைச் சட்டங்கள் அகற்றப்பட்டன; தொகுப்பூதிய முறை கால ஊதிய முறையாக மலர்ந்தது. பறிக்கப்பட்ட அனைத்து உரிமைகளும் ஆசிரியர் பெருமக்களுக்கு மீண்டும் பரிசாக வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு ஆசிரியர்கள் நலனில், மாணவச் செல்வங்களின் நலனில், அக்கறையுள்ள அரசு என்பதை நாடறியும். எனவே, பள்ளிகளில் ஆசிரியர்–மாணவர்கள் விகிதத்தை மீண்டும் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லரசு பரிசீலனை செய்து, கடந்த ஆட்சியில் ஆசிரியர் பெருமக்களைப் பழிவாங்கும் நோக்கத்தில் நிர்ணயிக்கப்பட்ட 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தை, குறைந்தபட்சம் 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாசாரமாக மாற்றினால் (மேசையைத் தட்டும் ஒலி) மாணவர்கள் பெருமளவில் பயனடைவார்கள். அப்போதுதான் மாணவர்களை ஆசிரியர்கள் தனிக் க்வனத்துடனும் கனிவுடனும் கண்காணிக்க இயலும். வெளிநாடுகளில் இது 10 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்திலேயே உள்ளது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வளரும் மாணவர்களுக்கு சத்துணவோடு வாரத்திற்கு மூன்று முட்டைகளை அறிமுகப்படுத்திய முத்தமிழறிஞர், மேலும் அவர்களுக்கு



வாரத்தில் இரண்டு வாழைப் பழங்களையும் அறிமுகப்படுத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல அறிவு வளர்ச்சியோடு மாணவர்கள் கொழுகொழுவென்று வளர்ந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் மற்றும் வாழைப் பழ உற்பத்தியாளர்களுக்கும் பயனுள்ளவர்களாக அமைவார்கள்.

நண்பகல் 12–00

கணினிப் பயிற்சிக்காக இந்த அரசு 118 கோடி ரூபாய் செலவிட முன்வந்துள்ளது. எதிர்காலச் சந்ததியினரை உலகச் சவால்களுக்குத் தயார் செய்யும் அற்புதமான முயற்சியாகும். மேலும், பள்ளிகளில் உடல் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படாததால், அநேக மாணவர்கள் நோஞ்சான்களாக, இடையிலேயே கூன் விழுந்து, வாடிய முகத்துடன் தள்ளாடி அலைகின்றனர். எனவே, விளையாட்டை எல்லாக் கல்விக் கூடங்களிலும் கட்டாயப் பாடமாக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், தமிழக விளையாட்டு வீரர்களை உலக அரங்கு அதிசயத்துடன் உற்றுப்பார்க்கும் நிலை எதிர்காலத்தில் உருவாகும்.

அதேபோன்று, அரசுப் பள்ளிக் கட்டடங்கள் பல பாழடைந்து கிடக்கின்றன. அநேகப் பள்ளிகள் பராமரிக்கப்படாமல் இடிந்து விழும் நிலையில் உள்ளன. எனவே, அரசுப் பள்ளிகளைப் பராமரித்துச் சீரமைத்து, சுற்றுச்சுவர் கட்டி, பளளியின் உள்ளே சிறிய பூந்தோட்டங்கள் அமைத்து, மாணவர்கள் மகிழ்ச்சியுடன் கல்வி கற்கும் சூழலை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக இந்த அரசு நடுநிலைப் பள்ளிவரையிலும் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.332 கோடியும், மேல்நிலைப் பள்ளிவரையிலும் புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வகங்கள் கட்டுவதற்கு, இந்த நிதியாண்டில் ரூ.150 கோடியும் ஒதுக்கீடு செய்துள்ளது வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும்.

Matriculation. C.B.S.E. என்று கல்வியில் பல நிலைப்பாடுகளாய் இருக்கும் குழப்பத்தை நீக்க, அரசு சமச்சீர் முறையை வெகுவிரைவில் நடைமுறைப்படுத்த ஆவன செய்யவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, இடைநிலை ஆசிரியர் பணியிடத்தில் பணியாற்றும் பி.எட். ஆசிரியர்களை உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் பட்டதாரி ஆசிரியர் பணிக்கு மாற்றம் செய்ய வேண்டுகிறேன்.

இதேபோன்று, தமிழகத்தில் ஆதி திராவிடர் நலத் துறைப் பள்ளிகளில் மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டுவரும், மனித உரிமைக் கல்வி, தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் அறிமுகப்படுத்தப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பாடப் புத்தகத்திலும் அக்கல்வி இணைக்கப்படுமானால், மாணவச் செல்வங்கள் திறந்த மனதுடனும், சுதந்திர உணர்வுடனும் கல்வி பயில வடிகாலாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேவைகள் நிறைந்த எனது திருவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி விவசாயிகள் நிறைந்த பூமியாகும். நீராதாரத்தை மட்டுமே அவர்கள் நம்பியுள்ளார்கள். மழைக் காலங்களில் பெருமளவு தண்ணீர் கடலில் சென்று கலந்து வீணாகிறது. தாமிரபரணியின் விலை மதிக்கமுடியாத தண்ணீர் முத்துக்கள் வீணாவதைக் கண்டு, விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். எனவே, பெருங்குளம் மற்றும் சுற்றியுள்ள 10 குளங்களை உடனடியாகத் தூர்வாருவதற்கும், திருவைகுண்டம் அணையை ஆழப்படுத்தி, கரையைச் செப்பனிடுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளவேண்டும். நீர்க் கால்வாய்களிலும், ஏரிகளிலும் மற்றும் குளங்களிலும் களப்பிரர்கள்போல் சூழ்ந்துகொண்டு, துன்பம் விளைவிக்கும் அமலைச் செடிகளை நீக்கி, கால்வாய்களில் களையெடுக்க வேண்டுமென்று கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

செக்காரக்குடி அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தவேண்டும்.

திருவைகுண்டம் அரசு பொது மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்களையும், செவிலியர்களையும் நியமிப்பதுடன், முழு அளவிலான அறுவைச் சிகிச்சைக் கூடத்தையும் தொடங்குவது மிகவும் அவசியம் என்று உணரப்படுகிறது. மாரமங்கலம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனையை, ஆரம்பச் சுகாதார நிலையமாகத் தரமுயர்த்தி, சுகாதாரத் துறையின்கீழ் கொண்டுவரவும், புதிதாக மருத்துவர்களை நியமிக்கவும், உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். திருவைகுண்டத்தில் உள்ள நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டி, விரிவாக்கம் செய்யப்படவேண்டும்.

எனது தொகுதியில் வாழைப்பழ உற்பத்தி அதிகமாக உள்ளதால், தேவை குறைந்த காலங்களில், வாழைத் தார்களை ஆடு, மாடுகளுக்கு உணவாகப் போடும் அபாய நிலை உள்ளது. எனவே, வாழைப்பழத்திலிருந்து powder-களும், Jam, chips மற்றும் வாழை



ஊறுகாய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினைத் தொடங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கனவாகிய, தாமிரபரணி ஆற்றின் குறுக்கே திருவைகுண்டத்தில் இருவழிப் பாலம் அமைக்க அடிக்கல் நாட்டிய இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கும் இதேவேளையில், பாலத்தின் கட்டுமானப் பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படாமல் இருப்பதனை அரசின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். மேலும், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கருங்குளத்திற்கும், கொங்கராயன்குறிச்சிக்கும் இடையே ஓர் உயர்மட்ட இணைப்புப் பாலம் அமைக்கப்படவேண்டும். மேலும், ஏரலில் அமைந்துள்ள தாமிரபாணியின் தரைப்பாலம் வெள்ளக் காலங்களில் தண்ணீரில் மூழ்கி விடுவதால், பொது மக்கள் அவதிக்குள்ளாகின்றனர். எனவே, அதனை உயர்மட்டப் பாலமாகத் தரம் உயர்த்தக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–05

நெல்லையில் அண்ணா பல்கலைக்கழகம் அமைத்ததற்கு நன்றி கூறுவதுடன், எங்கள் தூத்துக்குடி மாவட்டத்திலும் அரசு பொறியியல் கல்லூரி ஒன்றினை, அதிலும் பின்தங்கிய மக்கள் நிறைந்த திருவைகுண்டம் தொகுதியில் அமைத்துத் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள், எதைக் கேட்டாலும் கொடுக்கும் தாயுள்ளம் கொண்டவர்கள். அதனால்தான் பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.7,057 கோடி ஒதுக்கி, புதிய சாதனை படைத்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுப் புகழ் மிக்கப் பேரவையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, சாமானியர்களைப் பற்றி சிந்திக்கும் கலைஞர் அரசு, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் கலைஞர் அரசு, இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் கலைஞர் அரசு, ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கும் கலைஞர் அரசு, 7,000 கோடி ரூபாய் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்த கலைஞர் அரசு, சிறுபான்மையினர் நலத் துறை அமைத்த கலைஞர் அரசு, மதமாற்றத் தடைச் சட்டத்தைக் குழி தோண்டிப் புதைத்த கலைஞர் அரசு, உயர் நீதிமன்றத்தில் தமிழை உலவவிட்ட கலைஞர் அரசு,

பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கிய கலைஞர் அரசு, சீரோடும், சிறப்போடும் தமிழகத்தை ஆண்டு தங்கத் தமிழ்மகன், திராவிடர்களின் ஒட்டுமொத்தத் தலைவன், முத்தமிழறிஞர், கவிஞர், கலைஞர், வாழும் வள்ளுவர், அடுத்து ஆறாவது முறையும் தமிழகத்தை ஆளப்போகும் அரிமா, (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு தமிழக முதல்வர், கலைஞர் அவர்களின் அரசை வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு, திரு. தமிழரசு, அவர்மாதிரி பேசுங்கள். (சிரிப்பு)

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த, சமூக நீதிக்காவலர், தமிழினப் போராளி, எங்களது மருத்துவர் அய்யா அவர்களுக்கும், மருத்துவர் சின்னய்யா அவர்களுக்கும், மாநிலத் தலைவர், அண்ணன் திரு. கோ.க. மணி அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சைப் புகினும் கற்கை நன்றே"**

என்ற ஔவையார் வாக்கிற்கிணங்க, இன்றைக்குக் கல்வி வளர்ச்சிக்காகத் தமிழக அரசு இலவசப் பாட நூல், இலவசச் சீருடை, இலவச மிதிவண்டி, சலுகை விலையில் பேருந்துப் பயணச் சீட்டுகள் ஆகியவை வழங்க கோடிக்கணக்கிலே நிதி வழங்கியதை, பா.ம.க. சார்பில் வரவேற்றுப் பாராட்டுகிறோம்.

தொழிற்சாலையே இல்லாத ஓமலூர் தொகுதிக்கு சுமார் 1½ கோடி ரூபாய் செலவில் கயிறுத் தொழிற்சாலை நிறுவப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த மாமன்றத்தில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முதல்வர் உரையின்போது இதற்கான நிதி ஒதுக்கி பணி துவங்கிட உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாயும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, முத்தான முதல்வர், தமிழக முதல்வர் அவர்கள், பல்வேறு நலத் திட்டங்களைத் தமிழகத்திலே, இந்தியாவிலே யாரும் சாதிக்காத சாதனையாக, இப்போது அறிவித்துச் செயல்படுத்திக்கொண்டு வந்துகொண்டிருக்கிறார்கள். நாங்கள்



மனுக்கள் குழுவில் ஆய்வுப் பயணமாக வட மாநிலங்களுக்குச் சென்றபோது, அந்தமானிலே, அந்தமானுடைய கவர்னர் அவர்கள், நமது சக உறுப்பினர்கள் முன்னிலையிலே, 'தமிழகத்திலே முதலமைச்சரால் எவ்வாறு இதைச் செய்ய முடிகிறது' என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள். 'வரி இல்லா பட்ஜெட்டாக அறிவித்தார்கள்' என்று அங்கே நாங்கள் எடுத்துச் சொன்னோம். அவர் சொன்னார், 'இங்கும் தமிழர்கள் இருக்கிறார்கள். முதலமைச்சரிடத்திலே சொல்லி இங்கும் இருக்கின்ற தமிழர்களுக்கு ஏதாவது உதவி செய்யுங்கள்' என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு இந்தியாவே பாராட்டக்கூடிய வகையிலே முதல்வர் அவர்களுடைய செயல்பாடு சிறப்பாக இருக்கிறது என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்றுப் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது இரண்டு ஏக்கர் இலவசமாக வழங்கக்கூடிய அந்த நிலங்கள், gas அடுப்பு வழங்கக்கூடிய அந்தத் திட்டங்கள், சுய உதவிக் குழுக்களுக்கு, பெண்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் 10,000 ரூபாய் மானியத்தோடு வழங்கக்கூடிய சுழல் நிதிகள் இவையெல்லாம் எனது தொகுதியிலே வழங்கப்பட்டு கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் யாருக்கு வழங்குகிறார்கள் என்ற பட்டியல் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை தெரியாமல் இருக்கிறது. இதையெல்லாம் நாங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே எடுத்துச் சொன்னபொழுது, நானும், தாரமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் எடப்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மூவரும் சேர்ந்து இதை எடுத்துச் சொன்னபொழுது, அவர் அதற்குச் சற்றும் செவிசாய்க்காமல் அதற்கு எந்தப் பதிலும் கூறாமல், 'என்னால் முடியாது; அப்படித்தான் நடக்கும்' என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எங்களிடத்திலே பதில் சொன்னார்கள். அதுமட்டுமல்லாது, 'சட்டமன்ற உறுப்பினருடைய செயல்பாடு கண்டிக்கத்தக்கது' என்று அறிக்கையாக விட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–10

நான் கேட்கிறேன், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை கண்டிக்கின்ற அதிகாரம் இருக்கிறதா என்பதை இந்த மாமன்றத்திலே தெளிவுபடுத்த வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வருத்தத்தோடு கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதிப் பிரச்சினையை முன்வைத்து, நீங்கள் நேரம் அதிகமாக அனுமதிக்கமாட்டீர்கள் என்பதனாலே இங்கு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சத்தியமாக பத்தே நிமிடங்கள் மட்டும்தான்.

**திரு. அ. தமிழரசு:** இங்கு நான் தொடர்ந்து வினாவாகவும் எழுப்பி மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் பல்வேறு கடிதங்களை நான் இது குறித்துக் கொடுத்திருக்கிறேன். நிதியில்லாமல் அனுமதிக்கக்கூடிய பணிகளாக அவை உள்ளன. தனி நீதிமன்ற வளாகம் அமைக்க ஓமலூரிலே நிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது, நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, அதைக் கட்டுவதற்கு அனுமதி மட்டும் வழங்கப்பட வேண்டும். அதைப்போல CJM-2 என்ற நீதிமன்றம் ஓமலூரிலே தொடங்குவதற்கு உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. அதைப்போல மேட்டூரிலே இருக்கின்ற RTO Unit office ஓமலூரைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுவதற்கு பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது. இவையெல்லாம் இதுவரை அனுமதிக்கப்படாத நிலையிலே இருக்கின்றன. இவற்றை அனுமதித்து பணி தொடங்க உத்தரவிட வேண்டுமென இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல, ஓமலூர் தாலுகா தலைமையிடமாக இருந்து வருகிறது. பெண்களுக்கு என்று தனியாக மேல்நிலைப் பள்ளி இல்லை. ஆயிரக்கணக்கிலே பெண்கள் தனியார் பள்ளிகளுக்கும் மற்ற பள்ளிகளுக்கும் சென்று கொண்டிருக்கிறார்கள். ஓமலூரிலே கட்டடங்கள் நிறைய இருக்கின்றன. அரசுப் பள்ளிக் கட்டடங்கள் காலியாகவே இருக்கின்றன. அதிலே பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி ஒன்று ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்காடு மலையிலிருந்து வருகின்ற தண்ணீர், சரபுங்கா ஆற்றின் வழியாக காவிரியிலே கலக்கிறது. இது விவசாயத்திற்குப் பயன்படாமல் இருக்கிறது. இந்தத் தண்ணீர் பயன்படுகின்ற வகையிலே ஏற்காடு மலை அடிவாரத்திலே ஒரு அணை கட்டிக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

காடையாம்பட்டி ஒன்றியத்திலே, காடையாம்பட்டி நகரத்திலே பத்திரப் பதிவு அலுவலகம் ஒன்று தொடங்க வேண்டும். அதைப்போல ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் இருக்கின்ற பண்ணப்பட்டி அரசினர் மேல்நிலைப் பள்ளியிலே பெண்களுக்கு என்று தனியாக மேல்நிலைப் பள்ளி ஒன்று தொடங்க வேண்டும்.

தாரமங்கலம், தருமபுரி, ஓமலூர் ஆகிய மூன்று தொகுதிகள் சந்திக்கக்கூடிய தொப்பூர் என்ற பகுதியிலே அரசு நிதியிலே, அரசுக்



கல்லூரி ஒன்று கட்டிக் கொடுக்க வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஓமலூருக்கு என்று அரசுப் பணிமனை, தனியார் இடத்திலே இருக்கிறது. கடந்த கலைஞர் ஆட்சியிலே அடிக்கல் நாட்டப்பட்டது. இன்னும் கட்டப்படாமல் இருக்கிறது. அதற்கான நிதியினை ஒதுக்கி கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் பெங்களூர்-சேலம் நான்கு வழிப் பாதை பணி நடந்து வருகிறது. இங்கு பூசாரிப்பட்டி போன்ற பகுதியிலே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அதற்கான நஷ்ட ஈட்டுத் தொகை இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, PWD மதிப்பீட்டிலே வழங்கப்பட்ட அந்த நிதியினை உடனடியாக அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நாடும், நாட்டு மக்களும் நலமுடன் வளமுடன் வாழ வேண்டுமானால் மக்களுக்குக் கல்வி அறிவு மிக மிக அவசியம். ஆகவே, கல்வியே ஒரு நாட்டின் முதுகெலும்பு என்றால் அது மிகையாகாது. கல்வியை அரசியல் சாசனத்தின் மூன்றாவது பகுதியில் சேர்க்க வேண்டும் என சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் கூறினார்கள். ஆனால், கல்வியை நான்காவது பகுதியில் வழிகாட்டு நெறிமுறையில்தான் சேர்த்துள்ளனர். இதுவே நமது கல்வி வளர்ச்சியின் பின்னடைவுக்குக் காரணம் எனக் கூறலாம்.

பல ஆண்டுகளாகப் பள்ளிக் கல்வியில் மாறுதல் கொண்டுவர பல்வேறு கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. அதிலே குறிப்பாக 1964 ஆண்டு கோத்தாரி கமிஷன், 1986 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கை, 1993 ஆம் ஆண்டு உன்னி கிருஷ்ணன் கமிஷன் ஆகியவற்றின் அறிக்கைகளில் தகவல்களைச் சமர்ப்பித்துள்ளார்கள். அதில் 14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கல்வி, கட்டாயக் கல்வி, பெண் கல்வி, தமிழ்வழிக் கல்வி, அதைப்போல சமச்சீர் கல்வி முறை, பொதுப் பள்ளி முறை, அண்மைப் பள்ளி முறை என்ற முறைகள் கல்வி முறைக்கு மிகவும் முக்கியமானவை என இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சமச்சீர் கல்வியால பள்ளிக் கல்வியில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படும். பொதுப் பள்ளி முறை, அண்மைப் பள்ளி முறைகளால் மாறுபட்ட கல்வி முறை, இரு மொழிக் கல்வி முறை ஒழிக்கப்படும். இதை எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். தேர்தல் அறிக்கையில் சமச்சீர் கல்வி கொண்டுவரப்படும் எனக் கூறியுள்ளீர்கள். இந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மொத்த ஆசிரியர் பணியிடங்கள் தமிழகத்தில் 1,86,000; மொத்தப் பள்ளிகள் 40,000; தற்போது பணியில் உள்ள ஆசிரியர்கள் எண்ணிக்கை 81,000 பேர்; மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 80 இலட்சம் பேர். 81,000 ஆசிரியர்கள் இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிறார்கள். அதிலே 10 சதவிகிதம் ஆசிரியர்கள் மற்ற பணிக்குச் சென்றுவிடுகிறார்கள். ஆக 71,000 ஆசிரியர்கள்தான் இன்றைக்குப் பள்ளியிலே மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். 1:30 என்ற விகிதத்திலே நாம் பார்த்தால் 1,16,000 ஆசிரியர்களை நாம் உடனடியாக நியமிக்க வேண்டும். இன்றைக்கு, 220 பள்ளி நாட்களிலே, 1,100 மணி நேரம், வகுப்புகளிலே கட்டாயமாக ஆசிரியர்கள் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை நமது அரசு உருவாக்க வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இரண்டாம் ஆண்டில் தவறியவர்கள் மறு தேர்வு எழுத ஓராண்டு காத்திருக்கின்ற நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க, உடனடித் தேர்வுக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். அனைவருக்கும் கல்வித் திட்டத்தில், இந்தியா முழுவதும் இரண்டு இலட்சம் ஆசிரியர்களை நியமனம் செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தில், பள்ளிகளுக்குக் கூடுதல் ஆசிரியர்களை நியமனம் செய்யலாம். S.S.A. எனப்படும் அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்காகத் தமிழகத்திற்கு வந்த நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன். S.S.A. திட்டத்தில் கட்டப்படும் பள்ளிக் கட்டடங்கள், P.W.D. வழியாகக் கட்டுவதற்கு அரசு உத்தரவிடவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். கல்விக்கு நிதியொதுக்கும் அதிகாரம் வேண்டுமானால், மத்திய அரசிடம் இருக்கலாம். ஆனால், மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசின் கையில் இருக்க வேண்டும். அதிலும், உள்ளாட்சி அமைப்பு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட கல்விக் குழுவை அமைத்து, அவர்களுக்கு அதிகாரம் பகிர்ந்தளித்தால், இவை கல்வி வளர்ச்சிக்குத் துணையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

முதலாம் வகுப்பு முதல் தமிழைக் கட்டாயமாக்க வேண்டும். அனைத்துப் பாடங்களையும் தமிழில் படிக்கும் மாணவர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையும், வேலைவாய்ப்பில் முன்னுரிமையும் வழங்கப்படும் என அரசு அறிவித்தால், தமிழ் வழிக் கல்வி தானாக வளரும். மேலை நாடுகளில் உள்ளதைப்போல, உயர்கலவியை வேண்டுமானால் தனியாருக்குக் கொடுககலாம். ஆரம்பக கல்வியை முழுமையாகத்



தமிழக அரசே ஏற்று, எதிர்காலத்தில் நடத்த வேண்டும். மாணவர்களுக்கு புத்தகச் சுமையைக் குறைத்து, அவர்களின் அறிவுத் திறனை வளர்க்க செயல்வழிக் கல்வி முறையை இந்த அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்திட வேண்டுகிறேன்.

உலகின் எந்த நாட்டிலும் மாணவர்கள் tuition படிப்பதில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம். ஆனால், தமிழகத்தில் tuition படிக்காத மாணவர்களே இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம், பாடச் சுமைதான். அமெரிக்காவில் பத்தாம் வகுப்பு மாணவன் படிக்கும் பாடத்தை, எட்டாம் வகுப்பு மாணவன் இன்றைக்குப் படிக்கின்ற பாடத் திட்டமாக தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. மத்திய, மாநில அரசுகள் கல்விக்காக ஒதுக்கும் நிதியில், ஐம்பது சதவிகிதத்தை அடிப்படைக் கல்வியான ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கி, அடிப்படைக் கல்விக்கு, தொடக்கப் பள்ளிக் கல்வியின் வசதியை மேம்படுத்தச் செலவழிக்க வேண்டுகிறேன்.

கடந்த 2003–2004 ஆம் ஆண்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியத்தில், ஆசிரியர் சேமிப்பு நிதியில் (T.P.F.) ரூபாய் 4 கோடி கையாடல் செய்யப்பட்டுள்ளது. திருச்சி, திருவெறும்பூர் ஒன்றியத்தில் ரூபாய் 1½ கோடி, பெரம்பலூர் ஒன்றியத்தில் ரூபாய் 2 கோடி கையாடல் நடந்துள்ளது, கடந்த காலத்திலே. மேலும், ஆசிரியர் சேமிப்பு நிதிக்கு 1981 முதல் கணக்கு இல்லை, வட்டியும் கொடுக்கப்படுவதில்லையெனத் தெரிய வருகிறது. அரசு உடனடியாக நடவடிக்கையை இதன்மீது எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பள்ளிகளில் துப்புரவு, குடிநீர் வசதிக்குப் போதிய பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். அனைத்துப் பள்ளிகளுக்கும் அரசு கட்டாயமாக மின்னிணைப்பு வசதியைச் செய்துகொடுத்து, மின் கட்டணத்தையும் அரசே ஏற்க வேண்டும். எதிர்வரும் காலங்களில் இரவு நேரப் பள்ளிகளையும் அரசே அங்கு நடத்த முன்வர வேண்டும். பெண்கள் பள்ளிகளில், குறிப்பாக பெண் ஆசிரியர்களை மட்டுமே நியமிக்க வேண்டுகிறேன்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்க மத்திய அரசு அனுமதி வழங்கினாலும், மாணவர்கள் சேர்க்கைக்கான அனுமதி வழங்கும் அதிகாரம் தமிழக அரசிடம் உள்ளது. எனவே, பயிற்சி பெற்ற மாணவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருந்து வருவதால், ஆசிரியர் பயிற்சி மாணவர் சேர்க்கைக்குத் தற்காலிகமாகத் தடை விதிக்க வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், 2003 ஆம் ஆண்டு அரசாணை எண் 100-ன்படி, இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் ஒழிக்கப்பட்டுவிட்டன. அதனால், நீண்டகாலமாகப் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள் பி.எட். ஆசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட வேண்டும். இதனால், அரசுக்கு எந்த வருவாய் இழப்பும் ஏற்படாது.

மேலும், கல்விக்கு எந்த அளவு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றதோ, அதே அளவு உடற்கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்து, நடுநிலை, மேல்நிலைப் பள்ளிகளில் கட்டாயமாக உடற்கல்வி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். கர்நாடகா, கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில், ஆரம்பக் கல்வியில் இருந்தே உடற்கல்வியைப் புகுத்தியுள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். அரசுப் பள்ளிகளில் தலா ஒரு ஓவிய ஆசிரியர், ஒரு கைத்தொழில் ஆசிரியர், ஒரு கணினி ஆசிரியர் என்ற அளவிலாவது நியமிக்கப்பட வேண்டும். கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், தட்டச்சர்கள் என பலருக்கு, 15 ஆண்டு காலமாகப் பணி வரன்முறை, ஊதிய உயர்வு ஆகியவை செய்யப்படவில்லை.

தமிழ்நாடு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் கல்வியாளர்களுக்குப் பணி விதிகள் வகுக்கப்பட வேண்டும். அதில் எம்.எட்., எம்.ஃபில்., பி.எச்.டி. பட்டம் பெற்ற விரிவுரையாளர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தமிழரசு, இது பள்ளிக் கல்வி மானியம். உயர் கல்வித் துறை மானியம் இன்னொரு நாளைக்கு இருக்கிறது.

**திரு. அ. தமிழரசு:** முடிந்துவிட்டது. முடித்துவிடுகிறேன், அவ்வளவுதான். இத்துறையில் உள்ளவர்களுக்கே இயக்குநர் பதவி வரை பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று கேட்டு, ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

சேலம் மாவட்டத்தில் 27 மேல்நிலைப் பள்ளிகள் கடந்த கல்வியாண்டில் அரசு நிர்ணயித்த 60 சதவிகிதத் தேர்ச்சிக்கும் குறைவாகப் பெற்றுள்ளன. இதுபோன்ற பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை எதிர்காலத்தில் அதிகரிக்க, அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.



*பிற்பகல் 12–20*

தமிழகத்திலுள்ள அரசுப் பள்ளிகளில், அரசு நிர்ணயிக்கும் அளவிற்கு தேர்ச்சி விகிதம் காட்டாத தலைமை ஆசிரியர்களின்மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கிருஷ்ணாபுரத்தில் இயங்கிவந்த நிதி உதவி பெறும் நடுநிலைப் பள்ளி கடந்த 4 ஆண்டுகளாக மூடிய நிலையில் உள்ளதால், புதிய அரசு நடுநிலைப் பள்ளி ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தமிழகத்தில் இந்து அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில் ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன்.

தொடக்கப் பள்ளி A.E.O. அதிகாரிகளாக அண்மைக் காலமாக தொடக்கப் பள்ளி ஆசிரியர்களையே அரசு நியமிக்கிறது. இதனால் நிர்வாகக் குறைபாடு ஏற்படுகிறது. அதனைத் தவிர்க்க, கடந்த காலம் போல B.T. Assistant-களை A.E.O.-க்களாக நியமிக்க வேண்டும்.

தொடக்கப் பள்ளிக் கல்விக்கு மாவட்ட அளவில் ஒரு D.E.O. உள்ளார்—மேல்நிலைப் பள்ளிக்கு இருவர், மெட்ரிக் பள்ளிக்கு ஒருவர்—இதில் கோட்டத்திற்கு ஒரு D.E.O. என நியமித்து, தொடக்கக் கல்வி, நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என அனைத்து நிர்வாகப் பொறுப்புகளையும் அவர்களிடத்திலே ஒப்படைத்துச் செய்தால் நலமாக இருக்கும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006; மாணவர்களுடைய உடல் ஒறுப்புத் தண்டனை விதி எண் 51

நீக்கம்; மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை; 10, 12 ஆம வகுப்பு மாணவாகளுக்கு ஜாதிச் சான்று, வருவாய்ச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் வழங்குவது போன்ற அத்தனை அம்சங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கின்றோம்.

'ஒரு கல்விச்சாலையின் கதவுகள் திறக்கப்படுவதனால், பல சிறைச்சாலைகளின் கதவுகள் மூடப்படுகின்றன' என்று சொன்னாராம் சுவாமி விவேகானந்தர். அந்தக் கோட்பாட்டின்படி தமிழகத்தில் 300 மக்கள் தொகை கொண்ட குடியிருப்புப் பகுதிகளுக்கு ஒரு பள்ளிச்சாலை தொடங்கப்படுவது வரவேற்கத்தக்க விஷயம் ஆகும்.

அதே நேரத்திலே, இலவசச் சீருடையை வழங்குவது, ஒன்றாம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கும் இலவச சீருடை வழங்கிட வேண்டுகிறோம்.

அதேபோல இலவசப் பேருந்து பயணச் சலுகைத் திட்டத்தைப் பொறுத்தவரை தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர் போன்ற மாவட்டங்களில் உள்ள புறநகர்ப் பேருந்துகளிலும் அந்த மாணவர்களுக்கு இலவசப் பயணச்சீட்டு வழங்கிட வேண்டுகிறோம்.

6 வயது முதல் 14 வயது வரை உள்ள மாணவர்களுக்கு இலவச கட்டாயக் கல்வி வழங்குவது குறித்த அரசியல் சாசனத் திருத்தம் 2002-ல் நிறைவேற்றப்பட்டு, Article 21 A-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மத்திய அரசாங்கம் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே மாநில அரசு ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் குறிப்பிட விரும்புகிறோம்.

கொள்கை விளக்கக் குறிப்பில், முன்னாள் துணை வேந்தர், மதிப்பிற்குரிய முனைவர் முத்துக்குமரன் தலைமையில் சமச்சீர் கல்வி தமிழகத்தில் அமைத்திட குழு அமைத்துள்ளதை, வரவேற்கினறோம். இவ்வறிக்கை 2007 ஏப்ரலில் எதிர்பார்க்கப்படுகிறது என்று உள்ளதை வரும் கல்வியாண்டிலே அமலாக்குவது மிகச் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், சமச்சீர் பள்ளிக் கல்வி முறை தமிழகத்தில் ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஒரே பாடத் திட்டமாக, ஒரே மாதிரியான கேள்வித்தாள், ஒரே மாதிரியான பொதுத் தேர்வு, மதிப்பெண்கள், அமையும்வகையில் இருந்திட வேண்டுகிறோம்.



அதேபோன்று மெட்ரிக் பள்ளிகளில், ஒரு வரையறையே இல்லாமல் கல்விக் கட்டணம், மாணவர்கள் சேர்க்கை என்பது தமிழகத்தில்தான் வியாபார பகல் கொள்ளையாக நடந்துகொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

உதாரணத்திற்கு பத்மா சேஷாத்திரிப் பள்ளி, பொன் வித்யாஸ்ரம் பள்ளிகளில் L.K.G. படிப்பதற்கு சுமார் ஒரு இலட்சம் வரை வசூல் செய்யப்படுகிறது. அதே மெட்ரிக் பள்ளிகளில் ஆசிரியர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகின்றனர். சமச்சீர் கல்வி முறையை அமலாக்குவதன்மூலமாக இவற்றைத் தடுத்து நிறுத்திட இயலும்.

அதேபோல், 1964-ல் அமைக்கப்பட்ட கோத்தாரி கமிஷன் பரிந்துரைகளையும், 1993-ல் அமைக்கப்பட்ட யஷ் பால் கமிட்டியினுடைய பரிந்துரைகளையும் முழுமையாக அமலாக்கிட வேண்டுகிறோம்.

1920 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு இருந்தபோது Elementary Education Act-இன்படி அருகமைப் பள்ளிகளை அமைத்து, அதிலே மாணவர்களைச் சேர்க்கின்ற உரிமையும், சேர்த்துக்கொள்ள வேண்டிய அரசினுடைய கடமைகளையும், மத்திய மாநில அரசுகள் நிறைவேற்ற வேண்டுகிறோம்.

தேசிய பாடத் திட்டம் 2005-ஐத் தமிழகத்தில் அமல்படுத்த வேண்டுகிறோம். கல்விக்காக மத்திய அரசு வெறும் 3.4 சதவீதம் மட்டுமே அமலாக்கியுள்ளது. அதே நேரத்தில் மாநில அரசு 30 சதவீதம் நிதி ஒதுக்கீடு செய்வது வரவேற்கத்தக்க விஷயம்.

பிற்பகல் 12-25

G.N.P. என்று சொல்லக்கூடிய Gross National Product வளர்ச்சி 3 சதவிகிதமாக இருந்தால், 6 சதவிகிதமாக கல்விக்கு ஒதுக்க வேண்டும் என்பது கோத்தாரி கமிஷனுடைய பரிந்துரை. இன்று மத்திய நிதியமைச்சர் அவர்கள், G.N.P. வளர்ச்சி, 9 சதவிகிதம் உள்ளது என்று சுட்டிக்காட்டியிருப்பதால், 18 சதவிகிதம் நிதி ஒதுக்கீட்டை தமிழக அரசு வலியுறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். மாறாக 3.4 சதவிகிதம் ஒதுக்கப்பட்டுள்ளது, கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதற்கு போதாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மனித உரிமை கல்வி, தமிழகத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு சுமார் 150 பள்ளிகளில் மட்டுமே

பட்டதாரி ஆசிரியர்களுக்கான கல்வித் தகுதியுடன்கூடிய இடைநிலை ஆசிரியர்களாகப் பணியமர்த்தப்பட்ட, ஆதி திராவிட பழங்குடியின ஆசிரியர்களைப் பட்டதாரி ஆசிரியர்களாக, முதுநிலை ஆசிரியர்களாக நிலை உயர்த்திட வேண்டுகிறோம்.

உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஏறக்குறைய சுமார் 21 ஆயிரம் இடைநிலை ஆசிரியர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கிட வேண்டும். முரண்பட்ட நிலையை சரிசெய்து உரிய உத்தரவுகள் வெளியிடுமாறு தெரிவித்த உயர் நீதிமன்றத்தின் 2007 ஜனவரி 31 நாளிட்ட உத்தரவை இவ்வரசு அமல்படுத்திட வேண்டுகிறோம். அவர்கள் பள்ளி உதவி ஆசிரியர்களாக உயர்த்தப்பட வேண்டுகிறோம்.

அதேநேரத்தில் மதுரை மாநகர் பள்ளிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதியும், அரசு கொடைத் தொகையும் வழங்கப்படவில்லை. அதை இந்தக் காலகட்டத்தில் வழங்கிட வேண்டுகிறோம்.

தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் முதுநிலை தமிழ் ஆசிரியர்கள் பணியிடங்களையும், இதர ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்ப வேண்டும்.

*பிற்பகல் 12–30*

Junior B.T. Teachers என்று சொல்லக்கூடிய ஆசிரியர்களைப் பணி நியமித்த 1–6–2006 ஆம் நாளிலிருந்து பணி வரன்முறை செய்து, அவர்களுக்கு பணி நியமித்த நாளிலிருந்து காலமுறை ஊதியம் வழங்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டுகிறோம்.

அதேபோல், 30 ஆண்டு காலம் பணிபுரிந்தால் முழு ஓய்வூதியம் என்ற திட்டத்தை கல்வித் துறையிலே உள்ளது. ஏறக்குறைய 40 அல்லது 35 வயதிலேதான் பணியில் சேருகின்ற நிலைமை என்பது இந்தக் காலகட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதைக் கணக்கிலே எடுத்து 25 ஆண்டுக் காலம், கால் நூற்றாண்டு பணியிலே இருந்தாலே அவர்களுக்கு முழு ஓய்வூதியம் வழங்கலாம் என்ற திட்டத்தை அமலாக்கிட வேண்டுகிறோம்.

அரசுப் பள்ளிகளிலும், இன்னும் பல்வேறுபட்ட தனியார் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் P.T.A. மூலமாக சுமார் 1,000/– ரூபாய், 1,500/– ரூபாய் ஊதியம் பெறுகின்ற M.Phil.,



இன்னும் சொல்லப்போனால் M.Sc., B.Ed., B.Sc., B.Ed. போன்ற பல்வேறு முழுத் தகுதிகள் படைத்த ஆசிரியர்களுக்கு, தனி ஒதுக்கீட்டின் மூலமாக பணி நிரந்தரம் செய்கின்ற நிலையை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவர வேண்டுகிறோம்.

அரசு ஆய்வுக் கூடங்களில் பணிபுரியும் Lab Assistant-களுக்கு மத்திய அரசாங்கத்தில் வழங்கப்பட்ட பல்வேறுபட்ட சலுகைகள் ஏறக்குறைய 1,050 பேர்களுக்கு Central Government Pay இன்னும் தமிழகத்தில் 10 ஆண்டுக் காலமாக வழங்கப்படவில்லை. இதை இவ்வரசு வழங்கிட வேண்டுகிறோம்.

அரசு கள்ளர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளிலிருந்து பள்ளிக் கல்வித் துறைக்கு, துறை இட மாற்றத்தை வழங்க வேண்டுகிறோம்.

மாநிலம் முழுவதும் உள்ள நூலகங்களில் காலியாக உள்ள முதல்நிலை நூலகர்கள், நூலக ஆய்வாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், பகுதி நேர நூலகர்கள், ஊர்ப்புற நூலகர்கள் ஆகிய பணியிடங்களை நிரப்பி இவர்களுக்கு கால முறை ஊதியம் வழங்கிட வேண்டும்.

1997 முதல் 2002 வரையிலான ஆண்டுகளில் ஆதி திராவிட, பழங்குடியின பட்டதாரி, இடைநிலை ஆசிரியர்கள் 10 ஆண்டுக் காலமாகப் பதவி உயர்வு, பணி உயர்வு இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பணியிலே வேதியியல் துறையிலும் பௌதீகத் துறையிலும் (மணியடிக்கப்பெற்றது) இடம்பெற்ற ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு என்பது அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ், வரலாறு போன்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு மறுக்கப்பட்டிருக்கிறது. இதை இவ்வரசு அமல்படுத்திட வேண்டுகிறோம்.

நாட்டுப்புறக் கலை வடிவங்களான சிலம்பாட்டம், கரகாட்டம், வாத்திய இசை, நாட்டியம், இசை, புராதன கலைப் பண்பாடுகள் மருவிவிடாமல் அவற்றை வரும் கல்வியாண்டுகளில் அனைத்துப் பள்ளிகளிலும், அரசுக் கல்லூரிகளிலும் புகுத்தி புத்துயிர் ஊட்டிட வேண்டுகிறோம்.

ப்ளஸ்–1, ப்ளஸ்–2 படிக்கக்கூடிய மாணவர்களுக்கு தமிழக அரசு சத்துணவு வழங்கிட வேண்டுகிறோம். 8 ஆம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை இருக்கக்கூடிய மாணவர்களுக்கும் இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அமல்படுத்திட வேண்டுகிறோம்.

பள்ளிகளில் நிலவும் தீண்டாமைக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டுகிறோம். புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, வலம்புரி வடுகதேவர் மேல்நிலைப் பள்ளியிலே கள்ளர், மறவர் என்ற ஜாதி அடிப்படையில் அவர்களுடைய பெயர்களை வருகைப் பதிவேட்டிலே பதிவு செய்திருப்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறோம். (மணியடிக்கப்பெற்றது)

இறுதியாக என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினை. தருமபுரி மாவட்டத்தில் சுமார் 300 கல்வி நிலையங்கள் இருக்கின்றன. ஒரே ஒரு கல்வி மாவட்டமாக அது இருக்கிறது. மொரப்பூர், அரூர், காரிமங்கலம் ஆகிய இந்த 3 ஒன்றியங்களில் இருக்கக்கூடிய 150–க்கும் மேற்பட்ட கல்வி நிலையங்களை உள்ளடக்கி அரூரை ஒரு கல்வி மாவட்டமாகக் கொண்டுவர வேண்டுகிறோம்.

அரூரிலே ஒரு அரசுக் கலைக் கல்லூரியைக் கேட்டு ஏற்கெனவே மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நான் மனு அளித்திருக்கிறேன். 50 இலட்சம் ரூபாய் பொது மக்களோடு சேர்ந்து நிதியைத் திரட்டி இந்தக் கல்லூரியைப் பெறுவதற்காக ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். அதற்கான உரிய கமிட்டியைக்கூட அமைத்திருக்கிறோம். ஒரு கோடி ரூபாய் பங்களிப்பு என்ற விதியைத் தளர்த்தி, இதை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி, 50 இலட்சம் ரூபாய் வழங்குகின்றபட்சத்தில் அதை அமலாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி. (குறுக்கீடு) No, no. நீங்கள் நிறைய time எடுத்துவிட்டீர்கள். திரு. இராமசாமி (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** இறுதியாக, நிறத்தாலும், இரத்தத்தாலும் இந்தியர்களாகவும், எண்ணத்தாலும், மொழியாலும் ஆங்கிலேயர்களாகவும் விளங்க வேண்டுமென்று ஆங்கிலேய மெக்காலே கல்வித் திட்டத்தை நாம் இந்தியாவில் இன்றைக்கும் பின்பற்றி மனப்பாடக் கல்வித் திட்டமாக அது இருந்து வருவதை தமிழக அரசும், மத்திய அரசும் மாற்ற வேண்டும். சமுதாயத்தில் மக்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே உள்ள உறவில் அளவுக்கதிகமான இடைவெளி ஏற்பட்டுள்ளதை தமிழக அரசு ஆழமாகப் பரிசீலித்திட வேண்டுகிறோம்.



இந்தச் சந்தர்ப்பத்திலே இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன்.

பிற்பகல் 12–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி மானியத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“கல்வி சிறந்த தமிழ்நாடு–புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு” என்றும்,
‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே–தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு’

என்றும் பாரதி பாடினான். அந்தப் பாரதியின் கூற்றுக்கிணங்க, கல்வியில் தமிழகத்தைச் சிறந்த மாநிலமாகக் கொண்டுவருவதற்கான முயற்சியில் நமது முதல்வர் கலைஞர் அவர்களும், நமது பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் சிறப்பான முயற்சியை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். கல்விக்குக் கண் கொடுத்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்த மாவட்டம் விருதுநகர். இன்று தமிழகத்தில் கல்வியில் சிறந்து விளங்குகின்ற மாவட்டங்களில் விருதுநகர் மாவட்டம் முன்னணியில் இருக்கிறது. அந்த விருதுநகர் மாவட்டத்தில் இருக்கும் ஒருவருக்கு, தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பொறுப்பு கொடுத்து, எங்கள் மாவட்டத்தைப் பெருமைப்படுத்திய நமது தமிழக முதல்வர் அவர்களுக்கு எங்கள் மாவட்ட மக்களின் சார்பில் இந்த நேரத்தில் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நுழைவுத் தேர்வு இரத்து; இலவசப் பாடப் புத்தகங்கள்; இலவச மிதிவண்டி; இலவச பேருந்துப் பயணம்; தொடக்கப் பள்ளிகளுக்கு 12,464 வகுப்பறைகள்; மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு நபார்டு வங்கியின்மூலம் 150 கோடி ரூபாய் நிதியில் புதிய கட்டடங்கள்; இப்படி வரவேற்கத் தகுந்த பல்வேறு அம்சங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றிருக்கின்றன. இருந்தாலும், தமிழகத்தில் இன்னும் கல்வி கற்க வேண்டியவர்கள் 30 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். கல்விக்காக ஒதுக்கப்படவேண்டிய நிதி

30 சதவிகிதம் என்று கோத்தாரி கமிஷன் அறிக்கையிலிருந்து தொடர்ச்சியாக வலியுறுத்திச் சொல்லிவருகிறார்கள். ஆனால், 15 சதவிகிதம்தான் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது; அந்த விகிதத்தை அதிகப்படுத்த வேண்டும்.

மத்திய அரசினுடைய S.S.A. திட்டத்தின்மூலம் ஒதுக்கப்படுகின்ற அந்த நிதியை மிச்சப்படுத்தாமல், அந்தக் கட்டமைப்பைச் சிறப்புறச் செய்து, அதைச் செலவு செய்து கல்வியை மேம்படுத்துவதற்கான முயற்சியைச் செய்ய வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, செந்தமிழ் நாட்டில் தமிழ் வழியில் கல்வி கற்பதை உறுதி செய்திட, மேல்நிலைப் பள்ளி வரையில் தமிழ் வழியில்தான் கல்வி கற்க வேண்டும் என்பதை இன்றைக்கு ஊக்கப்படுத்த வேண்டும். உயர் நீதிமன்றங்களில், தமிழில் தீர்ப்புகள் வரவேண்டும் என்று விரும்பி, நமது அரசே தீர்மானம் போட்டாலும்கூட, அதற்கான அனுமதி பெறுவதில்கூட இன்னும் காலதாமதம் இருந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில், இப்போது தமிழ் வழியில் கல்வி கற்பதை ஊக்கப்படுத்துவது மட்டுமல்ல, அதைக் கட்டாயமாக்க வேண்டும். இப்போது, உலகத்தில் சீனா போன்ற நாடுகளிலும் சரி, ஜப்பான் போன்ற நாடுகளிலும் சரி, அவரவர்கள் தாய் மொழியில் கல்வி கற்று, அனைத்துத் துறைகளிலும் உலகத்தில் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தாய் மொழியின்மூலம் கல்வி கற்பதால் எந்தவிதமான பாதிப்பும் வந்துவிடாது. அதற்குப் பதிலாக தமிழகத்தினுடைய பெருமையை உலகெல்லாம் உயர்த்துவதற்கு அது உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–40

2004–ல் கும்பகோணம் பள்ளியில் தீ விபத்து ஏற்பட்டு, 98 குழந்தைகள் இறந்துவிட்டார்கள். அதை விசாரிக்க சம்பத் கமிஷன் அமைக்கப்பட்டது. நீதியரசர் சம்பத் கமிஷனுடைய அறிக்கை அரசுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில் நமது அரசு நடவடிக்கையை வேகப்படுத்தவேண்டும்.

பள்ளிகள் இல்லாத கிராமமே இல்லை, ஆசிரியர்கள் இல்லாத வகுப்பறைகளே இல்லை என்ற நிலையை நமது அரசு உருவாக்கவேண்டும். பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி பள்ளிக் கட்டடங்களைக்



கட்டுவதற்கான முயற்சியின்போதே, புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கான ஒரு முயற்சியை நமது அரசு எடுக்கவேண்டும்.

தமிழகத்தில் Elementary School–ஐப் போல, ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. அளவே இல்லை. ஒரு காலத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்தால், உறுதியாக ஆசிரியர் ஆகலாம். அந்தப் பயிற்சி முடிந்தவுடன் ஓரிரு ஆண்டுகளில் அவர்கள் ஆசிரியராகச் செல்லலாம் என்ற நிலை இருந்தது. ஆனால், இன்றைக்கு எண்ணிக்கையை அளவிட முடியவில்லை; எங்கு அனுமதி பெறுகிறார்கள் என்றே தெரியவில்லை. பலபேர் அனுமதி பெறாமலே இன்றைக்கு நமது மாணவர்களை ஏமாற்றி, பல கோடி ரூபாய் வசூல் செய்து, கொள்ளையடித்து, அவர்களுக்குப் போலியாக Certificate–களையும் வழங்குவதால், கடைசியில் தமிழக அரசும் அங்கீகாரம் செய்ய முடியாமல், படித்த படிப்புக்கும் மரியாதை இல்லாமல், செலவு செய்த தொகையும் விரயமாகிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட கொள்ளையை தமிழகத்தில் இனியும் அனுமதிக்கக் கூடாது. குறிப்பாக செஞ்சியில், செல்லபிராட்டி என்ற கிராமத்தில் கே.எஸ். ராஜா ஆசிரியர் பயிற்சிப் பள்ளியானது அரசின் அனுமதியைப் பெறாமல் நடத்தியிருக்கிறார்கள். 500, 600 பேர் கோடிக்கணக்கில் ரூபாயைக் கொடுத்து படித்திருக்கிறார்கள். உத்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து போலியாக ஒரு சான்றிதழைப் பெற்று, அந்த மாணவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்தச் சான்றிதழ்களைத் தமிழகத்தில் பயன்படுத்த முடியவில்லை. க்டைசியில் 500 மாணவர்களும் நிர்க்கதியாக நிற்கிறார்கள். அப்படி கொள்ளையடித்த அந்த ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு சென்ற ஆட்சியில் கடைசி நேரத்தில் அனுமதியும் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். படித்த மாணவர்களுடைய படிப்பெல்லாம் பாழாய்ப் போய், அடித்த கொள்ளைக்கெல்லாம் கணக்கில்லாமல், இறுதியில் சென்ற ஆட்சியில் அங்கீகாரம் கொடுத்துவிட்டுச் சென்ற நிலையில், அந்தப் பள்ளிக்கூடம் நடக்கிறது. படித்த மாணவர்கள் தெருவிலே நிற்கும நிலை இருக்கிறது. எனவே, மோசடி செய்த அந்த நிறுவனத்தின்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். அதோடு அந்த மாணவர்களுக்கு ஒரு பாதுகாப்பையும் வழங்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை இனிமேல் தொடங்குவதற்கு அரசு அனுமதி கொடுப்பதைத் தடை செய்யவேண்டும். இதுவரை தொடங்கப்பட்ட அந்தத் தனியார்

ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை அரசு கையகப்படுத்தி, அரசே ஏற்று நடத்துவதற்கு முன்வர வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, அரசு அனுமதி கொடுத்து தொடங்கப்பட்ட, தனியார் நிருவாகத்தால் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் அவர்களுக்குப் பாடப் புத்தகம், சீருடை, சத்துணவு போன்றவையெல்லாம் அரசுமூலம் வழங்கப்படுகிறது. ஆனால், அங்கு ஆசிரியர் நியமனம் அரசால் செய்யப்படுவது இல்லை. அவர்களுக்கு அந்த உதவியைச் செய்யவேண்டும். தனியார் பள்ளிக்கூடங்களில், அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில் ஆசிரியர் நியமனம் செய்கின்ற உரிமையை அரசு கையில் எடுத்துக்கொள்ளவேண்டும். அவை தனியார் நிருவாகத்தில் இருக்கின்ற காரணத்தால் ஆசிரியர் பணியிடங்களை விலைபேசுகின்ற நிலை தொடர்கிறது. எனவே, ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பை அரசே கையில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12-45

அதேபோல, இன்றைக்கு மாவட்டத்திற்கு ஒரு விளையாட்டுப் பள்ளி உருவாக்கப்பட வேண்டும். விளையாட்டு என்பது பள்ளிகளில் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். விளையாட்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, சமச்சீர் கல்வி என்பது உடனடியாக அமல்படுத்தப்படவேண்டும். ஆங்கிலோ இந்தியன் பள்ளி, மெட்ரிகுலேஷன் பள்ளி, கீழ்த்திசைக் கல்வி என்று பல்வேறு முறைகள் இருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) கோத்தாரி கமிஷன் அறிக்கையின்படி அந்தச் சமச்சீர் கல்வியைக் கொண்டுவர வேண்டும்.

இந்திய நாட்டில் இடைநிலை ஆசிரியர் பற்றாக்குறை இருந்த காலத்தில் அப்பணியிடங்களில் பி.எட். தகுதியுடன் நியமிக்கப்பட்ட ஆதி திராவிட, பழங்குடி இன ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக நிலை உயர்த்தி அறிவிக்கவேண்டும். அதேபோல, பி.எட். தகுதியுடன் இளநிலை ஆசிரியர் பணியிடங்களில் நியமிக்கப்பட்ட, பிற இன ஆசிரியர்களையும் பட்டதாரி ஆசிரியர்களாக நிலை உயர்த்தி அறிவிக்கவேண்டும். பட்டதாரி ஆசிரியர்களுக்கான கல்வித் தகுதி பெற்றுள்ள அனைத்து இடைநிலை ஆசிரியர்களையும் பட்டதாரி ஆசிரியர்களாக நிலை உயர்த்தி அறிவிக்கவேண்டும்.



அதேபோல, தொழில் ஆசிரியர்கள், கிராப்ட் ஆசிரியர்கள் இவர்களையெல்லாம் பள்ளிகளில் நியமிக்கவேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கம், அதேபோல மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் இருக்கின்ற இளம் விரிவுரையாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவேண்டும்.

கடைசியாக, எங்கள் தொகுதி ஸ்ரீவில்லிபுத்தூரில், டி.மாரகச்சேரி நடுநிலைப் பள்ளி, அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவேண்டும். அதேபோல மல்லியில் இருக்கின்ற நடுநிலைப் பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படவேண்டும். தைலாபுரத்தில் இருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார். சுருக்கமாகப் பேசி முடியுங்கள் திரு. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பள்ளிக் கல்வித் துறை மானியத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட்டு ஏழை எளிய மாணவர்களுக்கு ஒரு ஒளிமயமான எதிர்காலம் கண்ணிலே தெரிகின்ற ஒரு நிலையிலே, பள்ளிக் கல்வியிலே பல்வேறு நல்ல சீர்திருத்தங்களை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள். அவருடைய கவனத்திற்காக இந்த மாமன்றத்திலே சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நம்முடைய பள்ளிக் கல்வி முறையானது, 1978 ஆம் ஆண்டிலே 10 பிளஸ்-2 என்கின்ற பாடத் திட்ட அடிப்படையில் மாற்றப்பட்டது. இன்றைக்கு இருக்கின்ற இந்த பிளஸ்-2 என்கிற அமைப்பிலே 12 ஆம் வகுப்பிலே பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது. பெரும்பாலான பள்ளிகளிலே இந்த இரண்டு ஆண்டுகளிலும், அந்த 12 ஆம் வகுப்பிற்கான பாடத்தையே நடத்துகின்ற ஒரு நிலை. குறிப்பாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே இருக்கின்ற காரணத்தினாலே, அரசுப் பள்ளிகளிலே பயில்கின்ற மாணவர்கள், மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இணையாக மதிப்பெண்கள்

பெற முடியாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. இது மாற்றப்பட வேண்டுமென்று சொன்னால் பிளஸ்–2 முறையிலே இருக்கின்ற அந்த 11 ஆம் வகுப்பிற்கும் நாம் பொதுத் தேர்வைக் கொண்டு வந்தால்தான் இதை மாற்ற முடியும். ஆகவே, இந்த 11 ஆம் வகுப்பிற்கும் பொதுத் தேர்வு முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை உங்கள்முன் நான் வைக்கின்றேன்.

*பிற்பகல் 12–50*

இந்தப் பிளஸ்–2 முறை அறிமுகப்படுத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டே, இதிலே இருக்கின்ற பாடப் பிரிவுகளில் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென்று அன்றைக்கு அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால், அந்த அரசாணை எந்தப் பள்ளியிலும் சரியாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையை உணர்ந்து 1994 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு அரசாணை கல்வித் துறை சார்பாக வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆனாலும்கூட, இப்போதும் அந்த ப்ளஸ்-2 பாடப் பிரிவுகளிலே பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டு முறை என்பது நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினாலே, அவர்கள் தொழிற்கல்விக்கான பாடப் பிரிவுகளை எடுத்துப் படிப்பதிலே மிகப் பெரிய இடையூறு நேர்கிறது. எனவே, அந்த அரசாணைகளைச் சரியாக நடைமுறைப்படுத்துவதற்கு கல்வித் துறையானது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, இன்றைக்கு கிராமப்புற மாணவர்களுக்கு தொழிற்கல்வியிலே இடம் கிடைக்க வேண்டும் என்ற காரணத்தினாலேதான் நாம் நுழைவுத் தேர்வை இரத்து செய்திருக்கின்றோம். ஆனால், இந்த இரத்து ஒன்றே, அவர்களுக்குப் போதுமான இடங்களைக் கொடுத்துவிடாது என்று கல்வியாளர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதற்காகத்தான் 1996 ஆம் ஆண்டிலே திமுகழக அரசு அன்றைக்கு கிராமப்புற மாணவர்களுக்காக 15 சதவிகித இட ஒதுக்கீட்டினை வழங்கியது. அது 2001–லே 25 விழுக்காடாக உயர்த்தப்பட்ட காரணத்தினாலே உயர் நீதிமன்றம் குறுக்கிட்டு அதை இரத்துச் செய்தது. இன்றைக்கு அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. கிராமப்புற மாணவர்களுக்கான அந்த இட ஒதுக்கீடு பெறப்பட்டால்தான் அவர்களுக்கு தொழிற்கல்வியிலே உரிய பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்கின்ற காரணத்தினாலே, உச்ச



நீதிமன்றத்திலே இருக்கின்ற அந்த வழக்கை விரைந்து முடித்து அந்த மாணவர்களுடைய எதிர்காலத்திலே ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த வேண்டுமாய் உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது பள்ளிகளிலே நன்கொடை என்கின்ற பெயராலே ஏராளமான தொகைகள் வசூலிக்கப்படுவதை நாம் எல்லோரும் அறிவோம். இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக 1992 ஆம் ஆண்டிலே நன்கொடை வசூல் தடுப்புச் சட்டம் என்று ஒரு சட்டத்தை இயற்றினார்கள். ஆனால், அந்தச் சட்டத்திற்கான விதிகள் உருவாக்கப்படாத காரணத்தினாலே அந்தச் சட்டத்தை இதுவரையிலும் நாம் சரியானபடி நடைமுறைப்படுத்த முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, 1992 ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்ட அந்த நன்கொடை வசூல் தடுப்புச் சட்டத்திற்கு உரிய விதிகளை உருவாக்கி, கல்வி நிறுவனங்களிலே இருக்கின்ற அந்த நன்கொடை மோசடியைத் தடுத்து நிறுத்திட இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோலவே, பள்ளிக் கல்வியிலே இருக்கின்ற மிக முக்கியமான ஒரு சீர்கேடு என்ன என்று சொன்னால், ஆசிரியர்கள் தனிப் பயிற்சி எடுப்பது; அதாவது Tution எடுப்பது. பள்ளி ஆசிரியர்கள் தனிப் பயிற்சி எடுப்பதுபற்றி 1976 ஆம் ஆண்டு கல்வித் துறை ஒரு சுற்றறிக்கையை அனுப்பியது. இரண்டு, மூன்று மாணவர்களுக்கு மட்டும்தான் ஓர் ஆசிரியர் தனிப் பயிற்சி எடுக்க வேண்டும். அதுவும்கூட தலைமை ஆசிரியருடைய அனுமதி பெற்றுதான் எடுக்க வேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது நாம் பார்க்கிறோம்; விடியற்காலை 5 மணிக்கே தனிப் பயிற்சி ஆரம்பித்துவிடுகிறது. ஆசிரியர்கள் அங்கே சொல்லிக் கொடுத்து சோர்வடைந்த பிறகுதான் பள்ளிக்கு வருகிறார்கள். பள்ளியிலே அவர்கள் சரியானபடி பாடம் நடத்த முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இந்தக் கொடுமையை, அவலத்தை, நீக்க வேண்டும் என்று சொன்னால் அந்தத் தனிப் பயிற்சி முறையை முற்றாகக் கட்டுப்படுத்தி, எம்.ஏ., எம்.எஸ்சி. போன்ற முதுகலைப் பட்டப் படிப்புகளைப் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்ற நம்முடைய இளைஞர்கள் தனிப் பயிற்சியை எடுப்பதற்கு ஏதுவாக அந்தச் சுற்றறிக்கையைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற பல்வேறு பள்ளிகள் அரசு உதவி பெறும் பள்ளிகள், அரசு உதவி பெறாத பள்ளிகள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. அரசு உதவி பெறும் பள்ளிகளிலேகூட சில பாட வகுப்புகள், பாடப் பிரிவுகள் உதவி பெறாத பிரிவுகளாக இருந்து கொண்டிருக்கின்றன. அதனால் அதிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பிற ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தைப் பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள். 1998–1999 ஆம் ஆண்டுக் காலத்தில் தி.மு.க. ஆட்சியின்போதுதான் பல பள்ளிகள், அரசு உதவி பெறுகிற பள்ளிகளாக மாற்றப்பட்டன. அந்த மரபைப் பின்பற்றி, இப்போதும் இங்கே எஞ்சியிருக்கின்ற அந்த உதவி பெறாத பள்ளிகளையெல்லாம், அரசு உதவி பெறும் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–55

நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின்கீழே இருக்கின்ற நூலகத் துறையைப் பற்றி சில கருத்துகளை நான் சொல்ல விரும்புகின்றேன். கடந்த ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட 682 ஊர்ப்புற நூலகர்கள், மாதம் 1,500 ரூபாய் மட்டும் தொகுப்பு ஊதியம் பெற்றுக்கொண்டு பணிபுரிகின்றார்கள். இன்றைக்குத் தொகுப்பு ஊதியத்திலே பணிபுரிகின்ற பல பேர் காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையிலே, இந்த நூலகர்களுக்கும் காலமுறை ஊதியம் நிர்ணயித்து, அவர்கள் வாழ்க்கையிலும் ஒளியேற்ற வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோலவே, கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்கள் சுமார் 1,500 பேர் கல்வித் துறையில் இருக்கின்றார்கள். கடந்த 15 ஆண்டுகளாக அவர்களது பணி வரன்முறை செய்யப்படாமல் இருக்கின்றது. அவர்களது நீண்ட கால கோரிக்கையையும் ஏற்று, அவர்களது பணிகளையும் வரன்முறைப்படுத்தி, அவர்களையும் காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமாய் உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அண்ணா கிராம மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படுகிற நிதியிலே இரண்டு இலட்சம் ரூபாய் நூலகங்கள் அமைப்பதற்காக ஒதுக்கப்படுகின்றது. இந்த நூலகங்களுக்கு நிரந்தரமாக நூலகர்கள் நியமிக்கப்பட்டாலொழிய, அந்த நூலகங்கள் சரிவர பராமரிக்கப்படாத ஒரு நிலை ஏற்பட்டுவிடும். (மணியடிக்கப்பெற்றது) எனவே, அவற்றுக்கு



நிரந்தரமாக நூலகர்கள் அமர்த்தப்பட வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நூலகத்திற்கு வாங்கும் படிகளை உயர்த்த வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையை ஏற்று, கடந்த ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள், ஆயிரம் படிகளாக உயர்த்தி உத்தரவிட்டார்கள். நூல்கள் வாங்குவதற்கான தொகையை உயர்த்தாமல், படிகளின் எண்ணிக்கை மட்டும் உயர்த்தப்பட்டால், வாங்கப்படுகிற நூல்களுடைய எண்ணிக்கை குறைந்துவிடும். எனவே, தற்போது ஒதுக்கப்பட்டிருக்கின்ற 8 கோடி ரூபாயை 15 கோடி ரூபாயாக உயர்த்தி, பதிப்பாளர்களுக்கு உதவிட வேண்டுமாய் உங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) No, no. இன்னும் இரண்டு பேர் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. து. ரவிக்குமார்:** கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நாம் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கின்றோம். அதுபோலவே, கல்விக்கென வசூலிக்கப்படுகின்ற அந்த Educational Cess–லே மத்திய அரசு வசூலித்துக்கொண்டிருக்கின்ற அந்தக் கல்விக்கான கூடுதல் வரியிலே, மாநிலத்தினுடைய பங்கினைக் கோரிப் பெற்றால், இப்போது கல்வி வளர்ச்சியிலே பின்தங்கியிருக்கின்ற கடலூர், விழுப்புரம், தருமபுரி போன்ற மாவட்டங்களிலே நாம் கல்வி வளர்ச்சிக்காக அந்தத் தொகையைச் செலவிட முடியும். எனவே, அந்த Educational Cess–ல் நம்முடைய மாநிலத்தின் பங்கைக் கேட்டுப் பெறவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

குமராட்சியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானமும், காட்டுமன்னார்கோவில் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய வகுப்பறைகளும் எற்படுத்தித்தர வேண்டுமென்றும், தொளாரிலும், மங்களூரிலும் இருக்கின்ற அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான துறையின் மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், வாய்ப்பளித்து பெருமைப்படுத்தியிருக்கின்ற எங்களுடைய கட்சித் தலைவர், மாண்புமிகு சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் செலுத்துகின்றேன்.

தெளிவான சிந்தனையும், புதிய முயற்சிகளையும் கொண்ட அமைச்சரைக் கொண்டுள்ள இந்தத் துறை, இப்போது மிகச் சிறந்த சாதனைகளைப் படைத்து வருகிறது என்பதனை நான் முதலிலே பதிவு செய்ய விரும்புகின்றேன். முதலிலே 10 ஆம் வகுப்பு வரை, தமிழைக் கட்டாயப் பாடமாக்குவது என்ற ஒரு புரட்சிகரமான, முக்கியத்துவம் வாய்ந்த முடிவினை, இந்தச் சட்டமன்றக் காலத்திலே எடுத்ததை நான் பாராட்டுகின்றேன்.

அதேபோல, தொடக்கக் கல்வி என்று எடுத்துக்கொண்டால், அதற்குத் தந்தையாக இருந்தவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பிறந்த நாளான, ஜூலை 15 ஆம் தேதியை, கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட வேண்டுமென்று சட்டத்தின்மூலமாக அதைச் செயல்படுத்திய மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு, என்னுடைய பாராட்டுகளைக் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னைப் பொறுத்தவரையிலே, நான் ஒரு நாளை எதிர்நோக்கி இருக்கின்றேன், பிறரைப் போலவே. மே 10 ஆம் தேதி, நம்முடைய சட்டப் பேரவையிலே, நம்முடைய வணக்கத்திற்குரிய இந்தியாவினுடைய தலைக் குடிமகன், நம்முடைய தமிழர், அப்துல் கலாம் அவர்கள் வந்து, நம்முடைய முதல்வர் அவர்களைப் பாராட்டுகின்ற நாளை நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-00

1957 முதல் இன்றுவரை தொடர்ந்து electoral politics என்று சொல்லப்படுகின்ற, மக்களைச் சந்திக்கின்ற பொதுத் தேர்தலிலே தொடர்ந்து வெற்றியைச் சந்தித்தவர்களிலே இந்தியாவிலே யாராவது இருக்கிறார்களா, இந்த அளவுக்கு மூத்தவர்கள் என்று கேட்டதற்கு



கலைஞர் ஒருவர்தான் இருக்கிறார் என்று பதில் கிடைத்தது. வங்காளத்தினுடைய முதல்வராக இருக்கின்ற ஜோதி பாசுக்கு இந்தப் பெருமை உண்டா என்று கேட்டபோது இல்லை, இல்லை அவருக்குக்கூட இந்தப் பெருமை இல்லை. கலைஞர் ஒருவருக்குத்தான் இந்தப் பெருமை இருக்கிறது என்று மாற்றாரும் ஏற்று, மூத்த பத்திரிகையாளர்கள் பேசுகின்றபோது அந்தக் கருத்தைச் சொன்னார்கள். நான் ஒரு கருத்தை இங்கே சொல்ல விரும்புகின்றேன். மன மாச்சரியங்கள் இல்லாமல், கட்சி வேறுபாடுகளைக் கடந்து, ஒரு தமிழர் என்ற வகையிலே ஒரு சாதாரண குடும்பத்திலே ஒரு சாமானியனாகப் பிறந்து, சாதனை படைத்து இருக்கிற கலைஞர் வாழ்கிற காலத்திலே பணியாற்றுவதே ஒரு பேறு என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். அதைப் பாராட்டுகின்றவிதமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு இந்தியாவினுடைய நாடாளுமன்ற இரு சபைகளும் பெருமை செய்ய வேண்டும். Lok Sabha, Rajya Sabha என்று சொல்லப்படுகின்ற மக்களவையும், மாநிலங்களவையும் ஒன்றாகக்கூடி, அந்த நாடாளுமன்ற மைய மண்டபத்திலே, இத்தகைய சாதனையை யாரும் புரியாத நிலையில் அவருக்குப் பாராட்டு விழா இந்திய அரசின் சார்பாக நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நான் விடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய நாடாளுமன்றத்தில் இந்த விழா நடைபெறுகின்றதா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால், கின்னஸ் புத்தகத்திலே நிச்சயம் இடம் பெறப்போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** உலகச் சாதனைகளை விளக்குகின்ற கின்னஸ் புத்தகத்திலே, கலைஞருடைய பெயர் வருவதில் எந்த ஒரு வியப்பும் கிடையாது. ஏனென்று சொன்னால், அத்தகைய சாதனைக்கு அவர் உரியவர் என்பதனை நான் சார்ந்திருக்கின்ற பேரியக்கத்தின் சார்பாக பதிவு செய்ய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், என்னுடைய அன்புத் தலைவர், மக்கள் தலைவர் ஐயா அவர்கள்கூடச் சொல்வார்கள். முயற்சிக்கும் அதேநேரத்திலே தளராத உழைப்புக்கும் பெயர் என்பதுதான் கலைஞர் என்று மனப்பூர்வமாகப் பாராட்டுவார்கள். ஆகவே, அத்தகைய பெருமகனைப் பாராட்டுவதிலே கட்சிப் பாகுபாடு இல்லாமல் எல்லோரும் பாராட்ட

வேண்டும் என்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நாம் இப்போது எடுத்து இருக்கிற முடிவுகளிலே மிக முக்கியமான முடிவாக நம்முடைய நுழைவுத் தேர்வு இரத்து இருக்கிறது. கிராமப்புற மாணவர்களை நான் விசாரித்தேன், நுழைவுத் தேர்வு இரத்து செய்திருப்பதால் உங்களுக்குப் பயன் உண்டா என்று கேட்டேன். அவர்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறார்கள். நுழைவுத் தேர்வு இரத்து என்பது ஒரு மிகச் சிறந்த முயற்சி, முயற்சியினுடைய வெற்றி என்று அவர்கள் கூறுகின்றார்கள். அதிலே சென்ற ஆட்சிக்கும் பங்கு இருப்பதால்,, அவர்களையும் சேர்த்துதான் நான் சொல்கிறேன். ஆக, நுழைவுத் தேர்வு இரத்து செய்ததை நான் முழுமையாக வரவேற்கின்றேன்.

அதேநேரத்திலே, சமச்சீர் கல்விக் கொள்கையை கொண்டு வருகிற நேரத்திலே, எந்த ஒரு தடையும், எந்த ஒரு நீதிமன்றத் தடையும், தலையீடும் இல்லாத ஒரு நிலையை நாம் உருவாக்க வேண்டும். ஏனென்று சொன்னால், எந்த ஒரு முடிவு எடுத்தாலும் நீதிமன்றத் தலையீடு இருக்கிறது என்பது இப்போதைய நிலைமையாக இருக்கிறது. நேற்றைக்குக்கூட நம்முடைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீதிமன்றம் அதிகமாகத் தலையிடுகிறது என்கின்ற கருத்தினை அவர்கள் மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நீதிமன்றத் தடைக்கு அல்லது நீதிமன்றத் தலையீட்டுக்கு இடம் கொடுக்காத ஒரு சமச் சீர் கல்விக் கொள்கையை நாம் அறிவிக்க வேண்டும். அப்படி அறிவிக்கப்படுகின்றபோது பொற்காலத்தினுடைய விடிவாக அது இருக்கும் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

அதேபோல், இப்போது பன்னாட்டு நிறுவனங்கள், நம்முடைய மண்ணிலே காலூன்றி இருக்கின்றன. நம்முடைய மாநிலத்திற்கு, குறிப்பாக இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, பன்னாட்டு நிறுவனங்கள் இந்த மாநிலத்தை நோக்கி, படையெடுத்து வருகின்றன. அந்த அளவுக்கு வாய்ப்புகள் இங்கே குவிந்து கிடக்கின்றன. ஆனால், அப்படி இருக்கின்ற நேரத்திலே, கிராமப்புற மாணவர்கள் நன்றாகத் தேர்ச்சி பெற்று வந்தாலும்கூட, அவர்களுக்கு வாய்ப்பு ஒருசில இடங்களிலே தவறிப்போய்விடுகிறது. ஏனென்று சொன்னால், spoken language என்று சொல்லப்படுகின்ற, பேசுகின்ற ஆங்கிலத்திலே அவர்கள் குறையைக் கண்டு, சிலருக்கு வாய்ப்பு பறிபோகிறது. ஆகவே, spoken language என்று சொல்லப்படுகின்ற, அந்த பேசுகின்ற ஆங்கிலத் திறனை வளர்க்கின்ற



விதமாக ஒரு சில திட்டங்கள் நம்முடைய அரசாங்கத்தால் உருவாக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், தனியார்கள் நடத்துகின்ற அத்தகைய நிறுவனங்களுக்கு இன்றைக்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது. பேசுகின்ற ஆங்கில மொழியைச் சிறப்பாகப் பேசுவதற்கு பயிற்சி அளிக்கின்ற நிறுவனங்கள் இன்றைக்குப் பல்வேறு இடங்களிலே சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, இந்த நடைமுறையைப் பயன்படுத்தி, பள்ளிகளிலே இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு நாம் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்த வரையிலே, ஏற்கெனவே ஒன்றாக இருந்த கல்வித் துறையை உயர் கல்வித் துறை என்றும், பள்ளிக் கல்வித் துறை என்றும் மிகச் சிறப்பாக இரண்டு துறைகளாகப் பிரித்து கலைஞர் அவர்கள் ஆணையிட்டு செயல்படுத்தி இருக்கின்றார்கள். ஆகவே, இருக்கின்ற நிலைமையே இருக்க வேண்டுமே தவிர மேற்கொண்டும் அதைப் பிரிப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதனை நான் இங்கே கருத்தாகக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், பள்ளிக் கல்வித் துறை என்பது தொடக்க முதல் பள்ளி இறுதி வரை வரவேண்டிய துறை. ஆகவே, அந்தத் துறையை முழுமையாக வைத்திருந்து மேற்கொண்டு நாம் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 1–05*

ஒரு முக்கியமான கருத்தை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். பாலுணர்வுப் பாடங்கள், Sex Education என்று சொல்லப்படுகின்ற திட்டங்களைப் பொறுத்தவரையிலே சில பேர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள். சில பேர் என்று சொன்னால் உங்களுக்கு நன்றாகப் புரியும் என்று நினைக்கின்றேன். கல்வி அறிவு அல்லது புத்தறிவு வருவதை எதிர்க்கின்ற மனப்பான்மை கொண்டவர்கள் இந்த Sex Education நம்முடைய பாடத் திட்டத்திலே வருவதை எதிர்க்கின்றார்கள். இது நிச்சயமாக நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்று என்பதை நான் கூற விரும்புகின்றேன். பாலுணர்வுக் கல்வி என்பது தேவை; பாலுணர்வும் ஒரு பாடம் என்ற வகையிலே Sex Education என்பது நம்முடைய கல்வித் திட்டத்திலே ஒரு அங்கமாக ஆக்கப்பட வேண்டும் என்பதனை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், உயிர்க் கொல்லி நோயாக இருக்கின்ற AIDS நோயைப் பற்றி நம்முடைய பாடங்களிலே குறிப்புகள் இடம் பெற்றிருக்கின்றன. அதையும் தாண்டி, பாலுணர்வுப் பாடங்கள்,

Sex Education எந்த அளவுக்குத் தேவையென்று ஒரு அளவீடு வைத்துக் கொண்டு, ஏன் அறிமுகப்படுத்தக்கூடாது என்பது தெரியவில்லை. இன்றைக்கு இருக்கிற விஞ்ஞான யுகத்திலே தெரியாதது ஒன்றும் இல்லை. யாரும் சொல்லித்தர வேண்டிய அவசியம் இல்லை. அத்தகைய நிலையிலே ஒரு சிறந்த method–ஐ இங்கே கடைப்பிடித்து இந்த முறையை இங்கே கொண்டுவர வேண்டுமென்று கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, ஆண்டு விழாக்களைப் பொறுத்தவரையிலே தனியார் பள்ளிகள் நிச்சயமாக ஒவ்வோராண்டும் தங்களுடைய சாதனைகளைச் சொல்லி சிறப்பாக ஆண்டு விழாக்களை நடத்துகின்றன. ஆனால், நம்முடைய அரசுத் துறையிலே செயல்படுகின்ற பள்ளிகள் இந்த anniversary என்று சொல்லப்படுகின்ற ஆண்டு விழாக்களை நடத்துவதே கிடையாது. கிராமப்புறங்களிலே, குறிப்பாக என் தொகுதியிலேகூட சொல்லுகின்றேன், ஆண்டு விழாக்களை யாரும் நடத்துவது கிடையாது. இந்த ஆண்டு விழாக்கள் எப்படி முக்கியத்துவம் பெறுகின்றன என்று சொன்னால், அந்த ஆண்டு விழாக்களிலே மாணவர்களுடைய திறமையை வெளிப்படுத்துகின்ற போட்டிகள், பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற நேரத்திலே அவர்களுடைய திறனும் வெளிப்படுகிற அதே நேரத்திலே, அந்த பள்ளிகளின் தரமும் உயருகிறது. ஆகவே, பள்ளிகளில் நடத்தப்பட வேண்டிய ஆண்டு விழாக்களை, தனியார் பள்ளிகளில் நடத்தப்படுவதைப்போல நம்முடைய அரசாங்கம் நடத்துகின்ற பள்ளிகளிலும் நிச்சயமாக நடத்த வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, in-service training என்று சொல்லப்படுகின்ற பணியிடைக்காலப் பயிற்சி ஆசிரியர்களுக்குக் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும். இன்றைய நவநாகரிகமான உலகத்திலே இருக்கின்ற முன்னேற்றங்களை நம்முடைய ஆசிரியப் பெருமக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மாணவர்களுக்குத் தெரிவதற்கு முன்பாக ஆசிரியர்களுக்குத் தெரிய வேண்டும். ஆகவே. குறிப்பிட்ட காலகட்டங்களிலே வருகின்ற இந்த முன்னேற்றங்களை, கம்ப்யூட்டர் போன்ற பல்வேறு வகையிலே வருகின்ற நவீன முன்னேற்றங்களை, அவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக in-service training என்று சொல்லப்படுகின்ற அந்தப் பயிற்சி கட்டாயமாக அளிக்கப்பட வேண்டும். அது குறிப்பிட்ட கால அளவில் அளிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், இட மாற்றங்களைப் பொறுத்தவரையிலே இப்போது ஆசிரியர்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். கவுன்சலிங் என்ற



முறையிலே முறையாக நடத்தப்படுகின்ற அந்த மாற்றங்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். எங்களுடைய கட்சிக் கொறடா மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் மிக அருமையான ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்றைக்கு உலகம் ஒரு வலையிலே அடங்கியிருப்பதாகச் சொன்னார்கள். Internet மூலமாக உலகம் ஒரு கிராமமாக உருவாகியிருக்கின்ற நிலையிலே E-Libraries என்பது நிச்சயமாக உருவாக்கப்பட வேண்டும். இந்த E-Libraries என்று சொல்லப்படுகின்ற அந்த Libraries, கணிப்பொறி வாயிலாக இயங்குகின்ற அந்த நூலகங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** E-Libraries கட்டாயமாக எல்லாப் பள்ளிகளிலும் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான செலவையும் அரசாங்கம் ஏற்பதிலே எந்தவொரு சுணக்கமும் காட்டக் கூடாது என்று கூற விரும்புகிறேன்.

அதேபோல், Science Exhibition–ஐப் பொறுத்தவரையிலே, சிங்கப்பூரிலே இருக்கின்ற Science Exhibition மிகச்சிறந்த ஒரு Exhibition ஆக இருக்கிறது. விஞ்ஞானத்தைக் கற்பிக்கின்ற, மிகப்பெரிய அளவிலே விஞ்ஞானத்தை சிறப்பிக்கின்ற அல்லது புரிய வைக்கக்கூடிய அருமையான கண்காட்சிகள், நம்முடைய சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களிலே உருவாக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, நிதியுதவி பெறாத பள்ளிகளிலே Noon meal Scheme, சத்துணவுத் திட்டம், நிச்சயமாக செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல ஊர்ப்புற நூலகங்களிலே தொகுப்பு ஊதியத்திலே பணியாற்றுகின்ற 820 பேர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் நிலுவையிலே இருக்கின்றார்கள். சென்ற ஆண்டு ஆக்கியதைப்போல இந்த ஆண்டு அவர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நூலகத் துறையைப் பொறுத்தவரையிலே கலைஞர் அவர்கள் மிகப்பெரிய ஒரு அறிவிப்பை அறிவித்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமன், இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டியிருக்கிறது. அமைச்சர் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. நேரம் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இதை மட்டும் சொல்லி முடிக்கிறேன். 100 கோடி ரூபாயிலே உருவாக்கப்படுகின்ற நூலகம் சென்னையிலே மத்திய இடத்தில் அமைய வேண்டும். மிகவும் தூரமாக இருந்தால் நிச்சயமாகப் பயன்படாது. மிகச் சிறந்த ஒரு திட்டத்தை அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். வாழ்நாளிலே நமக்கு முக்கியமான ஒரு பொக்கிஷமாக இருக்கக்கூடிய அந்த நூலகம் நம்முடைய சென்னையிலே மத்தியப் பகுதியிலே, மக்கள் புழங்குகின்ற பகுதியிலே அமைய வேண்டும். அத்தகைய நூலகத்தை அமைத்து இந்த அரசாங்கம் சிறப்புச் செய்ய வேண்டும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு கோடி ரூபாயை கலைஞர் அவர்கள் நன்கொடையாகக் கொடுத்து அந்த நூலகத் துறையைச் சிறப்பித்திருக்கிறார்கள். அத்தகைய நிகழ்விற்கு நன்றி கூறுகின்ற வகையிலே அந்த நூலகம் அமைய வேண்டும்.

அதேபோல, பள்ளிகளிலே வசூலிக்கப்படுகின்ற தேர்வுக்கான கட்டணத்தை அரசாங்கம் இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றிகூறி நிறைவு செய்கின்றேன். நன்றி வணக்கம்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரெ. நெடுஞ்செழியன்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில், கந்தர்வக்கோட்டை அருகில், தூசிப்பட்டி என்ற இடத்தில் பிறந்த சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த எனக்கு சான்றோரும், மாமேதைகளும் பணியாற்றுகின்ற இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த, வரையாது வழங்குவதையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெடுஞ்செழியன், உங்கள் இருக்கை எது? அங்கே போங்கள். (குறுக்கீடு) மைக் எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** ஏழை, எளிய மக்களுக்காக தன் வாழ்நாள் முழுவதும் வாரி வழங்கிய பாரி வள்ளல், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழிவந்த மலை குலைந்தாலும், நிலை குலையாத (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளின் விடிவெள்ளி, இந்தியத் திருநாட்டின் தியாகத் திருவிளக்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் பாத மலர் வணங்கி எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



வாக்களித்த புதுக்கோட்டை தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுடைய பாத மலர் தொட்டு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்குப் பேசுவதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது தொகுதியினுடைய முக்கிய கோரிக்கைகளை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் வறட்சியான மாவட்டம் என்பது அனைவரும் அறிந்ததே. புதுக்கோட்டை தொகுதியில் அடங்கிய குன்னாண்டார்கோயில், கந்தர்வக்கோட்டை மற்றும் பெருங்களூர் சுற்று வட்டார விவசாயிகள், அதிக அளவில் கரும்பு விவசாயம் செய்து வருகிறார்கள். ஆனால், அதற்கேற்ப அருகில் உள்ள குருங்குளம் அரசு சர்க்கரை ஆலையில் போதிய பிழிதிறன் வசதி இல்லாததால் 200 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மதுரை அரசு சர்க்கரை ஆலை மற்றும் அறந்தாங்கி தனியார் சர்க்கரை ஆலைக்கு விவசாயிகள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். ஆகையால், கந்தர்வக்கோட்டையில் அரசு சர்க்கரை ஆலையோ அல்லது தனியார் சர்க்கரை ஆலையோ அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டை மற்றும் ஆதனக்கோட்டை சுற்று வட்டாரத்தில் முந்திரி சாகுபடி அதிக அளவில் உள்ளது. விளைகின்ற முந்திரிக் கொட்டையினை நியாயமான விலைக்கு விற்க முடியாமல் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே, அரசு முந்திரித் தொழிற்சாலை ஒன்றை அமைத்தால் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதோடு, ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்க வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை நகராட்சிக்கு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக ரூபாய் 32 கோடியே, 14 இலட்சம் ஒதுக்கப்பட்டது. எப்போது இந்தத் திட்டம் தொடங்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

கந்தர்வக்கோட்டை பகுதியில் கோமாபுரம், வடுகப்பட்டி, வாராப்பூர், புதுநகர், வடவாளம் ஆகிய பகுதிகளில் மக்கள் விவசாயத்தை மட்டும் நம்பி வாழ்கிறார்கள். விவசாயத்திற்கு 24 மணி நேரமும் மின் சப்ளை வழங்கி விவசாயிகளுக்கு வாழ்வளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை நகராட்சியைச் சுற்றிலும் சென்று வருவதற்கு பொது மக்களுக்கு வசதியாக புதிய நகரப் பேருந்து வழித்தடம் ஏற்படுத்தித்தர கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை நீதிமன்றத்தில் 1967–லிருந்து இயங்கிக் கொண்டிருந்த கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், A.D.M. Court, எந்தக் காரணமும் இல்லாமல் திருச்சி மாவட்டம் லால்குடிக்கு மாற்றப்பட்டுள்ளது. அதை இரத்துச் செய்து மீண்டும் புதுக்கோட்டைக்கே மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை நகரில் வாழ்கின்ற மக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடி தண்ணீர் வழங்கப்படுகிறது. அதை மாற்றி தினந்தோறும் தண்ணீர் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டை ஒன்றியம், நம்பிரான்பட்டியில் காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். மாவட்டந்தோறும் ஒரு மருத்துவக் கல்லூரி என அறிவிக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான 1000 ஏக்கர் நிலம் உள்ளது. 526 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை உள்ளது. எனவே, இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரியைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் காது கேளாதோர், பார்வை இல்லாதோர், ஆதரவற்ற குழந்தைகள் பள்ளி மற்றும் விடுதிகள் உள்ளன. ஆனால், இவை அனைத்துக்கும் அரசு நிலம் இருந்தும் கட்டட வசதி இல்லாத காரணத்தால், நீண்ட காலமாக வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எனவே, அரசுக் கட்டடம் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூர், மாயாண்டி சாமி நகர் மற்றும் ஈஸ்வரன் கோயில் தெருவில் 145–க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் 50 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வருகின்றார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டை நகராட்சியில் போஸ் நகர் மற்றும் காமராஜபுரத்தில் 4000 குடும்பத்தினர் 25 ஆண்டுகளாக வசித்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.



110 கிராமங்களை உள்ளடக்கிய ஊராட்சி ஒன்றியமாகவும், தாலுகா தலைமையிடமாகவும் உள்ள கந்தர்வக்கோட்டையில் தாலுகா நீதிமன்றம், பேருந்து நிலையம் மற்றும் பணிமனை அமைத்துத்தர வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-15

பொருளாதார ரீதியாகவும், தொழில் துறையிலும் பின்தங்கிய கந்தர்வக்கோட்டையில் அரசினர் தொழில் பயிற்சிப் பள்ளி ஒன்று துவக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டைபகுதியில், கந்தர்வக்கோட்டை, தச்சன்குறிச்சி, ஆதனக்கோட்டை, வழுவன்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள தனியார் முந்திரித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் சுமார் 3,000 பெண் தொழிலாளர்களுக்குப் பணி நிரந்தரம், பணிப் பாதுகாப்பு, ஓய்வூதியம், போனஸ் மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழுள்ள சலுகைகளைப் பெற்றுத்தர அரசு கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கோமாபுரத்தில் புறக் காவல் நிலையம் அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பருவமழை தவறியதால் பெரிதும் பாதிப்படைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டையிலிருந்து புதுப்பட்டி, மோகனூர், பெரியகோட்டை, நம்பிரான்பட்டி, பகட்டுவான்பட்டி, பருக்கைவிடுதி, நடுப்பட்டி, குடிக்காடு, கோயில்பட்டி வழியாக குருங்குளம் வழித்தடத்தில் கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். கந்தர்வக்கோட்டையிலிருந்து கறம்பக்குடி வரையுள்ள வழித்தடத்தில் கூடுதல் பேருந்து இயக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டையில் செயல்பட்டுவந்த நிலவள வங்கியை மீண்டும் கந்தர்வக்கோட்டையிலேயே செயல்பட வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், நூலகத்திற்கு அரசுக் கட்டடம் அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

தஞ்சாவூர்–புதுக்கோட்டை சாலையோரத்தில் பழைய கந்தர்வக்கோட்டைக்கு அருகில் கயிறுத் தொழிற்சாலை ஒன்று உள்ளது. இந்தத் தொழிற்சாலையில் தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தினால்,

விபத்து ஏற்படுகின்றது. மேலும், அரசுப் புறம்போக்கு நிலத்தை, 17 ஏக்கர் அளவுக்கு ஆக்கிரமித்துள்ளார்கள். மேலும், வரத்து வாரியையும் ஆக்கிரமித்துள்ளார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆரம்ப சுகாதாரத் துறையின் நிர்வாகக் கோட்டமும், ஊராட்சி ஒன்றியப் பொறியாளர் கோட்டமும் அறந்தாங்கியில் உள்ளது. இவற்றைத் தலைமையிடமான புதுக்கோட்டைக்கு மாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கந்தர்வக்கோட்டை காவல் நிலையத்திற்கு கூடுதல் காவலர்களை நியமிப்பதுடன், புதிய காவலர் குடியிருப்புக் கட்டடத்தையும் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஷாஜஹானின் சிந்தனையில் ஒரு தாஜ்மஹால் எழும்பிற்று. அசோகச் சக்ரவர்த்தியின் சிந்தனை, ஆசியாவில் புத்த மதத்தைப் பரப்பிற்று. கம்பனின் சிந்தனை, இராமாயணம் என்ற மகா காவியத்தைத் தமிழுக்குத் தந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறப்பான செயல் திட்டம், தூய சிந்தனை, தொலைநோக்குப் பார்வை, நல்ல கொள்கை, விடாமுயற்சி, ஆகியவற்றால் தமிழகம் தலைநிமிர்ந்திருக்கிறது. உலகத்தில் எந்தவொரு அரசியல் கட்சித் தலைவரின் சிந்தனையிலும் உதிக்காத மாணவர் நலன் காக்கும் உன்னதமான திட்டங்கள் பலவற்றைத் தந்தவர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

சமுதாய மறுமலர்ச்சிக்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், மனிதவள மேம்பாட்டிற்கும், சமூக விழிப்புணர்விற்கும் அடித்தளமாக இருப்பது கல்வியே. அந்தக் கல்வியை மாணவர் சமுயதாயத்திற்கு வழங்குவதில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனது எழுச்சிமிகு தலைமையால், சீரிய வழிகாட்டுதல்களினால், கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியிலே பள்ளிக் கல்வித் துறை மூலமும் 100 விழுக்காடு சாதனை புரிந்தவர், மாணவர் சமுதாயத்தின் நலன் காத்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

உலக வங்கி பாராட்டுகின்ற வகையிலே, தமிழ்நாட்டில் அனைவருக்கும் கல்வி என்ற திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி, இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாகத் திகழச் செய்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இவர்களின் 85 ஆண்டுகால கனவை நனவாக்குகின்ற வகையிலே பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, ஆதி திராவிட மற்றும் பழங்குடி மக்களுக்குக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பயனுண்டாக்கும் வகையிலே 69 சதவிகித இட ஒதுக்கீட்டை தனிச் சட்டமாக அரசியல் சட்ட அமைப்பின் 9-வது அட்டவணையிலே இடம் பெறச் செய்து, இந்திய அரசியல் வரலாற்றில் இமாலய சாதனை புரிந்தவர், சமூக நீதி காத்த வீராங்கனை அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 5 ஆண்டுகளில் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நிறைவேற்ற 22,074 வகுப்பறைகளை ரூபாய் 342 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடித்து, மேலும் பள்ளிகளுக்குத் தேவையான கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்ற அத்தியாவசிய வசதிகளையும், 78 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் செய்து கொடுத்தவர் எங்கள் அம்மா அவர்கள்.

முதல் முறையாக நபார்டு வங்கியின் உதவியுடன் கிராமப்புறங்களிலுள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 9,260 வகுப்பறைகளும், 999 ஆய்வுக் கூடங்களும், 2,184 கழிப்பிட வசதிகள் மற்றும் 969 குடிநீர் வசதிகளும் என மொத்தம் 414 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் செய்து கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ஒன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்புவரை கல்வி கற்கும் மாணவ, மாணவிகளின் வருமானம் ஈட்டும் தந்தை அல்லது தாய் விபத்தில் இறந்துவிட்டாலோ அல்லது வருவாய் ஈட்ட முடியாத நிலையில் நிரந்தர முடக்கத்திற்கு உள்ளானாலோ அவர்களின் கல்விப் பாதுகாப்பிற்காக, படிப்பைத் தொடர அவர்களின் பெயரில் ரூபாய் 50,000 வங்கியில் டெபாசிட் செய்யப்பட்டு, அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு அவர்கள் பள்ளிப் படிப்பைத் தொடரவும், அதன் பிறகு அந்தப் பணத்தை மாணவ, மாணவிகள் தங்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்குப் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலே உலகிலேயே உன்னதமான கல்வித் திட்டத்தைத் தந்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

முதல் வகுப்பிலிருந்து 5 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களை இறுதித் தேர்வில் தோல்வி என்ற பயம் அணுகாதிருக்க அவர்கள் அனைவருக்கும் தேர்ச்சி அளிக்கும் திட்டத்தைத் தந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்.

*பிற்பகல் 1-20*

விளாத்திகுளம் தொகுதி, புதூர் ஊராட்சி ஒன்றியம், தவசலிங்கபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் S.S.A. திட்டத்தின்கீழ் ரூபாய் 5 இலட்சம் மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியை, திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சேர்ந்தவர்கள் அந்த இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு தொடங்கவிடாமல், இதுநாள் வரை அந்தப் பள்ளியினுடைய கட்டடம் தொடங்கப்படாமல் இருக்கிறது. அந்த ஊரைச் சேர்ந்த தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் எடுத்துக்கூறியும் இதுநாள் வரை அப்பணி நடைபெறவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்கள் அதிக அளவில் கல்வித் தகுதி பெறுவதற்காக தமிழ் மறையாம் திருக்குறள் தந்த திருவள்ளுவர் பெயரால் புதியதாகப் பல்கலைக்கழகம் துவங்கியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தியாவிலே முதல்முறையாக தமிழகத்திலே விளையாட்டுக்கென்றே ஒரு பல்கலைக்கழகத்தைத் துவக்கியவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆசியாவிலேயே, மிகப்பெரிய உலகத் தரம் வாய்ந்த ஜவஹர்லால் நேரு விளையாட்டுத் திடலைத் தமிழகத்திற்கு தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எங்கும் கணினி, எதிலும் கணினி என்று கணினிமயத்தை அனைத்துத் துறைகளிலும் முழுமையாக நடைமுறைப்படுத்தியவர் அம்மா அவர்கள் (மணியடிக்கப்பெற்றது) புதுடெல்லியில் அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் தமிழ் மொழியை கற்றல் மற்றும் ஆய்வு செய்தல் ஆகிய திட்டங்களுக்கு ஒரு இருக்கையினை அளிக்கக் கோரப்பட்ட 50 இலட்சம் ரூபாயை ஒரே தவணையில் கொடுத்து நேரு பல்கலைக்கழகத்தில் தனி இருக்கை ஏற்படுத்தி டெல்லியில் நற்றமிழ் ஒலிக்க நல்வழிகாட்டியவர் எங்கள் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.



இன்றைக்கு நடக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பட்ஜெட்டிலே மாணவ சமுதாயத்திற்குத் தந்திருக்கிற வஞ்சகப் பாடத்தினை புரிந்துகொள்ள...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்புக்கு நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ரெ. நெடுஞ்செழியன்:** பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஒரு தலைவர் இருக்கின்றார்,

"கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்புண் நீரினும் மீட்டற்கு அரிதென"

என்ற அந்தப் புறநானூற்று வரிக்கு இலக்கணமாக எப்படிக் கொல்லனுடைய உலைக்களத்திலே பழுக்கக் காய்ச்சிய இரும்பிலே ஒரு நீர்த்துளி பட்டால் அந்த நீர்த் துளி அந்த இரும்புக்கே சொந்தமாகி, மீட்டெடுக்க முடியாமல் அந்த இரும்புக்கே உரிமையாகிவிடுமோ அதைப்போல கடந்த 70 ஆண்டுகால பொது வாழ்க்கை, அதிலே 50 ஆண்டு காலத்திற்கு மேலான சட்டமன்றப் பணி, ஏற்றுக்கொண்ட எந்தப் பொறுப்பானாலும், சந்தித்த எந்தத் தேர்தலானாலும் எல்லாவற்றிலும் வெற்றி, வெற்றி என்றே முழக்கமிடக்கூடிய (மேசையை தட்டும் ஒலி) அந்த வெற்றிகளைத் தனக்கே உரிமைகொண்டு, தனக்கு உவமையில்லாத தனிப்பெரும் தலைவராக, ஒப்பற்ற எங்கள் உயிரனைய தலைவராக விளங்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையை தட்டும் ஒலி) இந்த மாமான்றத்திலே பள்ளிக் கல்வித் துறையினுடைய சார்பிலே இந்த மானியக் கோரிக்கையினைத் தாக்கல் செய்து உரையாற்ற வாய்ப்பு வழங்கியிருக்கக்கூடிய தங்களுக்கும், நான் முதற்கண் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டிருக்கக்கூடிய 11 மாத காலகட்டத்தில், எத்தனையோ சிறப்பான திட்டங்களைத்

தமிழ்நாட்டு மக்களுடைய நலனுக்காக அள்ளி வழங்கியிருப்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அதிலும் குறிப்பாக, பள்ளிக் கல்வித் துறைக்கு, மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், வரையாது வழங்கக்கூடிய வள்ளலாக வழங்கியிருக்கக்கூடிய திட்டங்களை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இந்த 11 மாத கால ஆட்சியில் முதன்முதலிலே பள்ளிகளிலே தமிழ் மொழியை ஒரு கட்டாய மொழிப் பாடமாக்கி சட்டம் கொண்டு வந்தது நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையை தட்டும் ஒலி) கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலை 15 ஆம் நாளைக் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடச் சட்டம் கொண்டு வந்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலே தொகுப்பூதியம் என்கின்ற அந்த அரக்கனிடத்திலே மாட்டித் தவித்த ஏறத்தாழ 46 ஆயிரம் ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கியவர் நம்முடைய முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒளிவுமறைவற்ற முறையிலே ஆசிரியர்களுக்கு கலந்தாய்வு நடத்தப்படவேண்டுமென்று 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு நல்வாழ்வு அமைத்துத் தந்தவர் நம்முடைய முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 24,642 காலிப் பணியிடங்களில், கடந்த 11 மாதங்களிலே அத்தனைக் காலிப் பணியிடங்களிலும் ஆசிரியர்களை நியமித்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர், கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-25

இதன்னியிலே, 7,979 புதிய ஆசிரியர் பணியிடங்களையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். அரசு நிதி உதவி பெறாத சுயநிதிப் பள்ளிகளில், தமிழ் வழியிலே பயிலக்கூடிய மாணவர்களுக்கு, இலவசப் பாட நூல் வழங்கக் கூடிய திட்டம்; 120 உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகவும், 120 நடுநிலைப் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தித் தந்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழே 2006-2007 ஆம் ஆண்டிலே தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலே ரூபாய் 332 கோடி செலவில் 12,464 வகுப்பறைகளைக் கட்டி தந்து சாதனையைச் செய்தது தலைவர்



கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய கழக ஆட்சி என்பதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நபார்டு வங்கி நிதி உதவியிலே மாத்திரம் 293 கோடி ரூபாய் செலவில், 423 பள்ளிகளிலே 6,669 வகுப்பறைகள் இந்த ஆண்டு கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 1,880 பள்ளிகளிலே கணினி வழிக் கல்வித் துவங்க ஆணை வெளியிட்டு, அதற்காக ரூபாய் 118 கோடியை மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

கல்வி வளர்ச்சியிலே பின்தங்கி இருக்கக்கூடிய வட மாவட்டங்களிலே, கல்வி வளர்ச்சிக்காக 78 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர்தான், நூலகங்களிலே வாங்கக்கூடிய நூல்களினுடைய படிகளின் எண்ணிக்கையை 750-லிருந்து 1,000 ஆக உயர்த்தித் தந்தவர். இந்த நிதிநிலை அறிக்கையிலேகூட, தமிழ்வழியிலே பயிலக் கூடிய 10 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் அத்தனை பேருக்கும், தேர்வுக் கட்டணத்தை முழுமையாக இரத்து செய்துக் கொடுத்தவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர், கலைஞர் அவர்கள்.

அதுபோல, பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லக்கூடிய பள்ளி வாகனங்களுக்குரிய அந்தக் காலாண்டு வரியிலும் மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்குக் கொடுத்திருக்கக் கூடிய சலுகைகளை நம்முடைய மாமன்றம் நன்றாக அறியும் என்று நான் கருதுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பள்ளிக் கல்வித் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் மதிப்பிற்குரிய திரு. மலரவன் அவர்கள், திரு. சபா. இராஜேந்திரன் அவர்கள், திரு. செல்வராஜ் அவர்கள், திரு. தமிழரசு அவர்கள், திரு. டில்லி பாபு அவர்கள், திரு. இராமசாமி அவர்கள், திரு. ரவிக்குமார் அவர்கள், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள், இறுதியாக திரு. நெடுஞ்செழியன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பான கருத்துகளை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள்.

வரவு-செலவுத் திட்ட பொது விவாதத்திலே பேசிய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டப் பேரவைத் தலைவர் மதிப்பிற்குரிய திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. நாமக்கல் ஜெயக்குமார் அவர்கள்,

செல்வி பாலபாரதி அவர்கள், திரு. கோவிந்தசாமி அவர்கள், திரு. மகேந்திரன் அவர்கள், திரு. ராஜசேகரன் அவர்கள், திரு. வீரகபிலன் போன்றவர்கள் நல்ல கருத்துகளை பள்ளிக் கல்வித் துறையினுடைய வளர்ச்சிக்காகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இங்கே பேசுகிறபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன் அவர்கள் கடந்த ஆட்சியிலே கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய அந்தத் திட்டத்திலே வழங்கக்கூடிய அந்த நிதியை எங்கே வைத்திருக்கிறீர்கள் என்ற ஒரு வினாவை எழுப்பினார்கள். நான் ஒரு விளக்கத்திற்காகச் சொல்கிறேன். பயனாளிகளுக்கான அந்த 100 பேர்களுக்கு தலா 50,000 ரூபாய் என்று வைப்புத் தொகையாக வைக்கக்கூடிய அந்த 50 இலட்சம் ரூபாயை, ஏற்கெனவே Power Finance Corporation–னிலே அவர்களுடைய account–லே வைத்திருக்கிறார்கள். கூடுதலாக இப்போது தலைவர் கலைஞர் அவர்கள் அனுமதித்திருக்கக்கூடிய அந்த 175 கோடி ரூபாய்க்கான அந்த ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. விரைவிலே அதுவும் அந்த Power Finance Corporation–லே வைக்கப்பட்டு, அந்த வைப்புத் தொகை வட்டியின் மூலமாகக் கிடைக்கக்கூடிய அந்தப் பணம், தேவைப்படக் கூடிய மாணவர்களுக்கு, அந்த பயனீட்டாளர்களுக்கு, நிச்சயமாக வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். இந்தத் தேர்விலே, குறிப்பாக 10 ஆம் வகுப்புத் தேர்விலும், 12 ஆம் வகுப்புத் தேர்விலும் குழப்பங்கள் இருந்தன என்று குறிப்பிட்டார்கள். 10 ஆம் வகுப்புத் தேர்வைப் பொறுத்தமட்டிலே, அறிவியல் தாளிலே கேட்கப்பட்ட கேள்விகளில் எந்தக் குழப்பமும் இல்லை. அந்தக் கேள்விகள் அந்தப் பாடத் திட்டத்திலிருந்துதான் வந்திருக்கிறதேயொழிய, அந்தப் பாடத் திட்டத்திற்குப் பிறகு கொடுத்திருக்கக்கூடிய வினாக்களிலிருந்து நேரடியாக அந்தக் கேள்விகளைக் கேட்காமல் உள்ளே இருக்கக்கூடிய பாடத்திலேயிருந்துதான் அந்தக் கேள்விகள் கேட்கப்பட்டிருக்கிறதே தவிர, பாடத் திட்டத்திற்கு வெளியேயிருந்து எந்தக் கேள்வியும் நிச்சயமாக வரவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிளஸ்–2–வைப் பொறுத்தமட்டில் இயற்பியல் பாடத்திலே மாத்திரம்—அதிலே அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய ஒரு விளக்கம் என்னவென்று சொன்னால், வினா எண் 60 "Two resistances are connected" என்கின்ற அந்த ஒரு குறிப்பிற்குப் பதிலாக "Two" என்று குறிப்பிடாமல் "They are" என்று பொதுவாகக் குறிப்பிட்டிருந்த



காரணத்தினாலே, அந்தக் குழப்பம் இருந்ததாகத் தெரிய வந்தது. எனவே, ஆங்கில வழியில் எழுதியவர்களுக்கு மாத்திரம் 5 மதிப்பெண்கள் அதற்குக் கொடுப்பதற்காக நம்முடைய துறை உத்தரவிட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, இதைத் தவிர எந்தவிதமான குழப்பமும் அந்தக் கேள்வித் தாளிலே நிச்சயமாக இடம்பெறவில்லை என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, இலவசப் பாடநூல் வழங்குவதைப்பற்றி சொல்கிறபோது, தலைவர் கலைஞர் அவர்கள் 1997–98 ஆம் ஆண்டிலே வழங்கியது ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புக் குழந்தைகளுக்கு இரண்டே இரண்டு பாடங்களுக்கு மாத்திரம் புத்தகம் வழங்கியதாக ஒரு குறிப்பினைச் சொன்னார்கள். அது தவறு. தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கிய திட்டத்தில் அனைத்துப் பாட நூல்களும், அனைத்து மாணவர்களுக்கும், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை வழங்கப்பட்டிருக்கின்றன என்பதுதான் உண்மை என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, இங்கே பேசிய பல்வேறு மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் குறிப்பிட்டுச் சொன்ன ஒரு மிக முக்கியமான விஷயம், இந்த ஆசிரியர்கள்–மாணவர்கள் விகிதாச்சாரம் என்பதை நீங்கள் 1:30 என்ற விகிதத்திலே வைக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** 1992 ஆம் ஆண்டு ஒரு அரசு ஆணையின் மூலமாக 1:50 என்ற ஒரு விகிதாச்சாரம் நிர்ணயிக்கப்பட்ட போது, பெரும்பான்மையான கல்வியாளர்கள் இதன்மூலமாக மாணவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவித்து, அவர்களுடைய கருத்தினுடைய அடிப்படையில் கழக ஆட்சிக் காலத்தில்தான் அரசு ஆணை எண் 525–ன்படி 1:40 என்ற விகிதத்திலே அது நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ச்சியாக பல்வேறு வழக்குகள் அதிலே வந்திருந்தாலும்கூட, நீதிமன்றத் தீர்ப்புகள் எல்லாம் அந்த 1:40 என்பதை நிலைநிறுத்திக் கொடுத்திருந்தாலும்கூட, இன்றைக்கு தொடக்கக் கல்வியிலே இருக்கக்கூடிய நிலைமையைப் பார்ப்போம் என்று சொன்னால், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை

இருக்கக்கூடிய தொடக்கக் கல்வியில் இந்த ஆசிரியர்–மாணவர் விகிதாச்சாரம் 1:33 என்ற அளவிலும், நடுநிலைப் பள்ளிகளிலே, 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை இருக்கக்கூடிய அந்தப் பள்ளிகளிலே 1:34 என்ற விகிதத்திலும் தற்போதைய நிலைமையிலே இருக்கிறது. இதை 1:30–க்குக் குறைப்பதற்கு அரசு எல்லாவிதத்திலும் முயற்சி எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. நிறைய பள்ளிகளிலே நிறைய ஆசிரியர்கள் நியமிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆசிரியர் நியமனம் மூலமாக மாணவர்களுக்குப் பெரும் பயன்களை அளிக்க வேண்டும் என்ற பெரும் முயற்சியினைத் தலைவர் கலைஞர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

நான் துவக்கத்திலே குறிப்பிட்டதைப்போல எந்த ஆண்டும் இல்லாதபடி 24,642 காலிப் பணியிடங்களிலும் ஆசிரியர்களை நியமித்து இருக்கக்கூடிய சாதனையைப் படைத்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் 7,979 புதிய ஆசிரியர்களை நியமித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இதை ஒரு சாதனையாகக்கூட நான் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். தொடர்ச்சியாக இந்த ஆசிரியர் பணி நியமனங்கள் செய்யப்படும். விகிதாச்சரம் 1:30 என்று வருகிறபோது ஏறத்தாழ 39 ஆயிரம் பணியிடங்கள் அதற்காக புதியதாக உருவாக்கப்பட வேண்டியிருக்கிறது. 408 கோடி ரூபாய் அதற்குச் செலவாகும் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது. எனவே, தொடர்ச்சியாக செய்ய வேண்டிய ஒரு காரியம் இது. உடனடியாக ஒரே ஆண்டிலே செய்யமுடியாவிட்டாலும்கூட அதை ஒரு கொள்கை அளவிலே நாங்கள் ஏற்றுக்கொண்டு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் தொடர்ச்சியாக அதுகுறித்துக் கலந்து பேசி, ஒவ்வொரு ஆண்டும் நியமிக்கப்படக்கூடிய ஆசிரியர்களுடைய எண்ணிக்கையைத் தொடர்ந்து கூட்டி வரக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே, நிச்சயமாக ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அனைவரும் மனமகிழத்தக்க அளவிலே அமையும் என்கின்ற ஒரு குறிப்பினை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

பள்ளிக் கல்வித் துறை பற்றி இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்கள் பல கருத்துகளைச் சொன்னார்கள். சமச்சீர் கல்வி முறையினைக் கொண்டு வரவேண்டும் என்கின்ற ஓர் அருமையான கருத்தினை இங்கே வலியுறுத்திப் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலேகூட நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் சமச்சீர் கல்வி முறையைக் கொண்டுவரக் கழக அரசு தயங்காது என்று



குறிப்பிட்டோம். ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தவுடன் முதல் பட்ஜெட்டை முடித்தவுடனே தலைவர் கலைஞர் அவர்கள், ஓய்வு பெற்ற துணை வேந்தர் திரு. முத்துக்குமரன் அவர்களுடைய தலைமையிலே ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பார்த்து பல இடங்களிலே கருத்தாய்வுக் கூட்டங்களையும் நடத்தி, அந்த ஆய்வுக் கூட்டங்களுடைய அடிப்படையிலே அவர்கள் ஒரு அறிக்கையினைத் தயார் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆறு மாத காலம் அவர்களுக்கு இப்போதுதான் முடிந்திருக்கிறது. அவர்களிடத்திலே தொடர்ந்து நான் கேட்டபோது மிக விரைவிலேயே, இந்த மாதத்திற்குள்ளாகவே அந்த அறிக்கையினை எங்களுக்குத் தருவதாக அவர்கள் வாக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கை அரசுக்குக் கிடைக்கப்பெற்ற பிறகு நிச்சயமாக அந்த அறிக்கையினுடைய அடிப்படையில், அரசு உரிய நடவடிக்கைகளை, மாண்புமிகு முதல்வரிடத்திலே கலந்து ஆலோசித்து, மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். சமச்சீர் கல்வி முறையைக் கொண்டுவரக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்று சொன்னால், இங்கே மாமான்ற உறுப்பினர்கள் பலர் எடுத்துக் காட்டியதைப்போல பொதுக் கல்வி முறையாக இருந்தாலும், அருகமைப் பள்ளி முறையாக இருந்தாலும் ஒரு சமச்சீரான கல்வி முறை வருகின்றபோது இன்றைக்கு இருக்கக்கூடிய State Board என்று சொல்லக்கூடிய அந்த முறை, Oriental Education என்று சொல்லக்கூடிய முறை, Matriculation, Anglo-Indian Board என்று சொல்லக்கூடிய அனைத்து முறைகளும் ஒரே சமச்சீரான வகையிலே, ஒரே தேர்வு முறையிலே வருகிறபோது, அருகமைப் பள்ளியைக் குறித்தும் பொதுப் பள்ளியைக் குறித்தும் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கூடிய பல்வேறு கருத்துகள் அனைத்தும் இயற்கையாகவே இந்த கல்வி முறையின்கீழே எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார் அவர்கள் நூலகங்களைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் அமைக்கப்படக்கூடிய நூலகங்கள் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும் என்று கூறி, அந்த நூலகங்களை எல்லாம் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்று இங்கே தெரிவித்தார்கள். இதுகுறித்து இந்த அவைக் கூட்டத் தொடர் தொடங்குவதற்கு முன்பாக நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், அவராக ஒரு பெரிய

முயற்சியினை எடுத்துக் கொண்டு, இந்தத் திட்டம் மிகச் சிறப்பாக தமிழகத்திலே வரவேண்டும்; கிராமப்புறங்களிலும் நூலகங்கள் சிறப்பான முறையிலே துவங்க வேண்டும்; அதற்குப் பள்ளிக் கல்வித் துறையும் இணைந்து இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாக செய்ய வேண்டும் என்று எங்களை எல்லாம் அழைத்து ஒரு அருமையான கூட்டத்தை நடத்தி அதிலே கருத்துகளை எல்லாம் கேட்டு, மிகச் சிறப்பாகத் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் மனம் மகிழக்கூடிய அளவிலே நம்முடைய அண்ணன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய மானியக் கோரிக்கையை உங்களைப் போலவே நானும் மிக ஆவலோடு எதிர்பார்த்து இருக்கிறேன் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நிச்சயமாக அதிலே அவர்கள் பல நல்ல திட்டங்களை அறிவிக்க இருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1-35*

அதைப்போல, பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டிலே, இந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை வரலாற்றிலே இல்லாத அளவிற்கு 7,057 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், எந்த அளவிற்கு பள்ளிக் கல்வித் துறையிலே அவர்கள் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் 5,438 கோடி ரூபாய் வழங்கினார். அதைக் கணக்கிடுகிறபோது, கடந்த ஆண்டு ஒதுக்கிய தொகையைவிட, 1,619 கோடி ரூபாய், இந்த ஆண்டு ஏறத்தாழ 30 விழுக்காடு கூடுதலாகப் பள்ளிக் கல்விக்கு மாத்திரம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இதிலே 814 கோடி ரூபாய் திட்டப் பணிகளுக்காக மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இடைநிலைக் கல்வி, Secondary School Education என்பதற்கு 3,193 கோடி ரூபாய் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

இதிலே குறிப்பாக ஒன்றை இங்கே பேசிய நம்முடைய் மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அரசு தொடக்கக் கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து, தொடக்கக் கல்வியைச் சீராகக் கவனிக்க வேண்டும்; தொடக்கக் கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. தமிழரசு அவர்கள் பேசுகிறபோது, இத்துறைக்கான



ஒதுக்கீட்டில், 50 சதவிகிதத்தை நிச்சயமாகத் தொடக்கக் கல்விக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். தொடக்கக் கல்வி ஒன்றுதான் கல்வி அறிவினுடைய ஆணிவேராக இருக்கிறது என்பதை உணர்ந்துள்ள நம்முடைய தலைவர் கலைஞருடைய அரசு பிற மாநிலங்களுக்கு வழிகாட்டக்கூடிய வகையிலே சிறப்பான திட்டங்களை இப்போது நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஏறத்தாழ 43,000 தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன; 62 இலட்சம் மாணவர்கள் அவற்றிலே படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய அடித்தளமான அந்தக் கல்வி சரியாக இருந்தால்தான் அதற்கு மேலாக எழுப்பக்கூடிய கட்டடமாக இருக்கக்கூடிய மேல்நிலைக் கல்வி சிறப்பாக இருக்கும் என்ற வகையில்தான், தலைவர் கலைஞர் பள்ளிக் கல்வித் துறைக்காக ஒதுக்கியிருக்கக்கூடிய இந்த 7,057 கோடியில் 3,598 கோடி ரூபாய், ஏறத்தாழ 51 சதவீத ஒதுக்கீட்டை தொடக்கக் கல்விக்கு மாத்திரம் (மேசையைத் தட்டும் ஒலி) கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஆண்டு 2,758 கோடி ரூபாய் கொடுத்தார். இந்த ஆண்டு அதைவிட 840 கோடி ரூபாய் தொடக்கக் கல்விக்கு மாத்திரம் தலைவர் கலைஞர் கூடுதலாகக் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால், தொடக்கக் கல்வியினுடைய வளர்ச்சியிலே தமிழக அரசுக்கும் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் இருக்கக்கூடிய அந்த ஆர்வத்தை நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் கருதுகிறேன்.

மற்றொரு முக்கியமான திட்டத்தைக் குறித்து அத்தனை பேரும் இங்கே சொன்னார்கள். தொடக்கக் கல்விக்கு நிதியொதுக்கம் சிறப்பாகச் செய்தால் மட்டும் போதாது; அந்தப் பள்ளிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களினுடைய கல்வித் தரத்திலே ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் வர வேண்டுமென்று இங்கே சிறப்பாகப் பேசிய அனைத்து உறுப்பினர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தொடக்கப் பள்ளியிலே பயிலக்கூடிய அத்தனை மாணவர்களுக்கும் மாணவர் சமுதாயம் என்று எடுத்துக்கொண்டால், அவர்களுக்கு அடிப்படையாகக் கிடைக்கக்கூடிய அந்தக் கல்வி எந்தக் காலத்திலும் மறுதலிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதிலே தலைவர் கலைஞர் அரசு மிகத் தெளிவாக இருக்கிறது. நோபல் பரிசு பெற்ற அறிஞர் Amartya Sen அவர்கள் Common wealth Educational Conference-இலே பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள் –"not to be able to read or write or count or communicate is a tremendous deprivation. The first and most

immediate contribution of successful school education is a direct reduction of this basic deprivation" என்று சொன்னார்கள். பள்ளிக்குச் செல்ல இயலாத ஒரு குழந்தை எண்ணவோ, எழுதவோ, படிக்கவோ, பேசவோ முடியாத ஒரு சூழ்நிலை இருக்கும் என்று சொன்னால், அந்த மறுதலிப்புதான் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய மிகக் கொடுமையான மறுதலிப்புகளிலே ஒன்றாக இருக்க முடியும். எனவே, தொடக்கக் கல்வியாக இருந்தாலும், இடைநிலைக் கல்வியாக இருந்தாலும் கல்வி மாற்றத்திற்கு, இந்தச் சமுதாய மறுமலர்ச்சிக்கு, இந்தப் பள்ளிக் கல்வித் துறை அளிக்கக்கூடிய ஒரு முக்கியமான பங்களிப்பு என்னவாக இருக்கும் என்று சொன்னால், இந்த மறுதலிப்பை, இந்த மறுக்கக்கூடிய தன்மையை, அடியோடு ஒழித்து, அனைவருக்கும் சரியாகப் படிக்கக்கூடிய, எழுதக்கூடிய, எண்ணக்கூடிய அந்த ஒரு வாய்ப்பினை உருவாக்கித் தருவதுதான் ஒரு சிறந்த முறையாக இருக்குமென்கிற கருத்தை அவர்கள் மிக அழகாக வெளியிட்டார்கள்.

இங்கேயிருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேர்களுடைய வீடுகளிலும் குழந்தைகள் இருக்கிறார்கள். இதிலே முக்கியமாக உங்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவருவது, ஒரு குழந்தை, பள்ளிக்குச் செல்வதற்கு முன்பு ஒன்றாம் வகுப்பிலே சேர்வதற்கு முன்புகூட, 5 வயதிற்குள்ளே, தானாக தன்னுடைய தாய் மொழியைக் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நிலையிருக்கிறது; பள்ளியில் சேர்ப்பதற்கு முன்னாலேயே அதற்கு தாய்மொழியிலே பேசக்கூடிய ஒரு வாய்ப்பு வந்துவிடுகிறது; குடும்பத்திலே இருக்கக்கூடிய உறவுகளை அறிந்துகொள்கிறது; தன்னைச் சுற்றி என்னென்ன நடக்கிறது என்பதை ஓரளவு தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு பெற்றிருக்கக்கூடிய அந்தக் குழந்தை, வகுப்புக்குப் போய் அங்கே இவ்வளவு பேர் ஆசிரியர்களை நியமித்து, அந்தக் குழந்தைக்குச் சொல்லிக்கொடுக்கிறபோது, அந்தக் குழந்தையினால் ஏன் சரியாகப் படிக்க முடியவில்லை? ஏன் அந்தக் குழந்தையினால் எழுத முடியவில்லை என்கின்ற அந்தக் கேள்வி, நமக்கு முன்னால் இப்போது விஸ்வரூபம் எடுத்திருக்கக்கூடிய கேள்வி. எனவே, அடிப்படையிலே அதற்குச் செய்ய வேண்டிய வேலை என்ன? அரசாங்கம் நிறையச் செய்திருக்கிறது. இலவசச் சீருடைகள் வழங்குகிறோம்; இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குகிறோம்; சத்துணவு வழங்குகிறோம்; ஆசிரியர்களை நியமிக்கிறோம்; எனவே, அத்தனையும் செய்தும் வகுப்பறைக்கு வெளியேயும், வகுப்புக்குள்ளேயும் இவ்வளவு செய்தும், குழந்தைகள் முழுமையாக அடைவுத் திறன் பெற்றிருக்கிறார்களா, 5 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய அந்தக் குழந்தைக்கு 5 ஆம் வகுப்புக்குத்



தேவையான அந்த achievement இருக்கின்றதா என்ற அந்தக் கேள்விக்கு விடை காண வேண்டுமென்று சொன்னால், வகுப்பறைச் சூழ்நிலையை கண்டிப்பாக நாம் மாற்ற வேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார்கள். இப்போது இருக்கின்ற வகுப்பறைச் சூழ்நிலை என்பது child centered, அந்தக் குழந்தையை மையமாக வைத்து உருவாக்க வேண்டுமென்ற முறையிலே கொண்டு வந்திருக்கின்ற மகத்தான திட்டம்தான் இந்த நிதிநிலை அறிக்கையிலே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய செயல் வழிக் கற்றல் என்கின்ற ஓர் அற்புதமான திட்டம். இந்த அற்புதமான திட்டம் சிறப்பான முறையிலே நம்முடைய பள்ளிகளிலே செயலாற்றுகின்றபோது நான் உறுதிபடச் சொல்லிக்கொள்வேன், இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக தமிழ்நாட்டிலே ஒன்று முதல் நான்காம் வகுப்பு படிக்கக்கூடிய அத்தனைக் குழந்தைகளும் அடிப்படையாக தாங்கள் தமிழ் மொழியிலே, தங்களுடைய தாய் மொழியைப் பிழையின்றிப் படிக்க, எழுத முடியக்கூடிய ஒரு முழு வாய்ப்பையும் அடிப்படைக் கணக்கு அத்தனையும் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாகச் செய்யக்கூடிய அந்த வாய்ப்பையும் நிச்சயமாக தலைவர் கலைஞர் அவர்கள் அரசு உருவாக்கித் தரும் என்று நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-40

ஒரே ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் நான் சுருக்கமாகச் சொல்லி விடைபெற விரும்புகிறேன். பொது விவாதத்திலே பேசிய சில உறுப்பினர்கள் இந்த முறை எவ்வாறு சரியாக இருக்கும் என்ற கேள்வியைக்கூட எழுப்பினார்கள். செயல் வழிக் கற்றலிலே சென்னை மாநகரத்திலே, இங்கே மாநகராட்சிப் பள்ளிகளிலே தமிழிலே எவ்வளவு அடைவுத் திறன் என்று பார்க்கும்போது அது 74 சதவிகிதம் இருந்தது. இந்த செயல்வழிக் கற்றல் இல்லாத ஒன்றியப் பள்ளிகளிலே, கிராமப்புறப் பள்ளிகளிலே பார்க்கும்போது, 29 சதவிகிதம்தான். கணிதப் பாடத்தை எடுத்துக்கொண்டால், அடிப்படைக் கணக்குகளைப் போடக்கூடிய இந்த முறை கிராமப்புற மாணவர்களுக்குப் பார்க்கும்போது 50 சதவிகிதம் இருந்தது. செயல் வழிக் கற்றல் இருக்கக்கூடிய பள்ளிகளிலே பார்க்கின்றபோது 87.5 சதவிகிதம் அது உயர்வு பெற்றிருந்தது. அறிவியல் பாடத்தை எடுத்துக்கொண்டால் கிராமப்புறங்களிலே அது 54.01 சதவிகிதமாக இருந்தது, அந்த செயல்வழிக் கற்றல் இல்லாத பள்ளிகளிலே. செயல் வழிக் கற்றல் இருக்கக்கூடிய பள்ளிகளிலே 82 சதவிகிதமாக அது இருக்கிறது. எனவே, அந்த ஆய்வின்

அடிப்படையிலேகூட இந்த செயல் வழிக் கற்றல் என்பது ஒரு முக்கியமான திட்டம் என்பதை உணர்த்துவதாக இருக்கிறது. அதைப்போல, படிப்பும் இனிக்கும் என்று 5 வட மாவட்டங்களிலே, கடந்த ஆண்டு சோதனை முறையிலே உருவாக்கப்பட்ட அந்தத் திட்டம் நல்ல பல முடிவுகளைத் தந்திருக்கிறது. அந்தத் திட்டத்தின் காரணமாக 3, 4, 5 ஆம் வகுப்புகளிலே படிக்கக்கூடிய அந்த மாணவர்களில் சரளமாகத் தமிழ் வாசிக்கக்கூடிய அந்தக் குழந்தைகளின் எண்ணிக்கை 25 சதவிகிதத்திலிருந்து 59 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. எழுத்துகளைக்கூட அடையாளம் தெரியாத அந்தக் குழந்தைகளுடைய எண்ணிக்கை 23 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது என்று ஆய்வு முடிவுகள் தெரிவித்திருக்கின்றன. எனவே, இந்த அற்புதமான திட்டம் தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பாட நூல்களைப் பொறுத்தமட்டிலே, இங்கே மனித உரிமைக் கல்வியை இணைக்க வேண்டும், மற்ற பாடங்களையெல்லாம் கொண்டுவர வேண்டுமென்ற பல கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். கடந்த பட்ஜெட்டிலே அறிவித்ததைப்போல, திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர், பேராசிரியர் நாகநாதன் அவர்கள் தலைமையிலே தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு குழுவினை அமைத்திருக்கிறார்கள். பாடப் புத்தகங்கள் எவ்வாறு அமைய வேண்டும், எத்தகைய பாடத் திட்டங்கள் அமைய வேண்டுமென்று அந்தக் குழு சிறப்பான கருத்துகளை வழங்கியிருக்கிறது. கடந்த முறையிலே கூட பிளஸ்–2 பாடத்திலே இருக்கக்கூடிய கடினமான பகுதிகளையெல்லாம் நீக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை முழுமையாக ஆராய்ந்து அந்தப் பகுதிகளை நீக்கியிருப்பது தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மாணவர்கள், பெற்றோர்கள் அத்தனை பேர்களுடைய ஒட்டுமொத்தமான வரவேற்பினையும் பெற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்தக் கோரிக்கைகள் எல்லாம் அந்தக் குழுவின்முன்னால் வைக்கப்பட்டு நிச்சயமாக நம்முடைய நாட்டுக்குத் தேவையான அத்தனைவிதமான கல்வி முறைகளையும் படிப்படியான முறையிலே கொண்டுவருவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த பட்ஜெட்டிலே பள்ளி சீரமைப்பு மாநாடுகள் 7 இடங்களிலே நடத்தப்படும் என்று நாங்கள் அறிவித்திருந்தோம். 2 இடங்களில்



நடைபெற்றிருக்கின்றன. அதில் தஞ்சை மாநாட்டின் மூலமாக மட்டும் 9 கோடி ரூபாய்க்கான பொருட்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. விழுப்புரம் மாநாட்டிலே, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்த அந்த மாநாட்டின்மூலமாக மட்டும் ஏறத்தாழ ரூபாய் ஐந்தரை கோடிக்கு மேலான பொருட்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. தொடர்ச்சியாக இத்தகைய பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படும் என்று நான் தெரிவித்துக்கொண்டு, வரக்கூடிய ஆண்டின் இறுதிக்குள் மேலும் 5 மாநாடுகள் நடத்தப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிற சர்வதேசத் தரத்திலான அந்த நூலகம் ஒரு மிகப் பெரிய வரப்பிரசாதம், நம்முடைய தமிழ்நாட்டு மக்களுக்கு. இந்தத் திட்டம் வர வேண்டுமென்று உளப்பூர்வமாக விரும்பிய பல்வேறு பேர்களுடைய கனவுகளை நனவாக்கக்கூடிய வகையிலே தலைவர் கலைஞர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். சிங்கப்பூரிலே இருக்கக்கூடிய National Library–ஐப் போன்று நூலகம் அமைக்கும் ஒரு அற்புதமான திட்டம். அதிலே பல ஆய்வு அரங்கங்கள், அங்கே இருக்கக்கூடிய குழந்தைகளுக்கான பூங்கா என்று சிறப்பான வகையிலே வரக்கூடியது இந்தத் திட்டம். இந்தத் திட்டத்திற்கான ஒரு நல்ல இடம்—இங்கே டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்கள் பேசுகின்றபோது, அனைவரும் வந்து போகக்கூடிய ஒரு இடமாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள்—அந்த இடம் விரைவிலே தேர்வு செய்யப்படும் என்று இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, கல்வியிலே பின்தங்கியிருக்கக்கூடிய வட மாவட்டங்களுக்கு கடந்த முறை வழங்கியிருக்கக்கூடிய ரூ.78 இலட்சம் என்கின்ற அந்தத் தொகையை இந்த முறை ரூ.123 இலட்சமாக உயர்த்தி, அதிலே நம்முடைய வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், அதைப்போல கடலூர் மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு இணைத்திருக்கிறார்கள். எனவே, அங்கேயும் சிறப்பான முறையிலே அது செய்யப்படும் என்று நான் தெரிவித்துக்கொண்டு, நேரத்தினுடைய அருமை கருதி, நான் அறிவிப்புகளுக்கு வர விரும்புகிறேன். (குறுக்கீடு) நீங்கள் சொல்லித்தான் சேர்த்தது. Part 2 Scheme, பகுதி 2 திட்டம் வருகிறபோது நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வேலூர் என்று சொன்னவுடனே அதற்கான சிரத்தை எடுத்துக்கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்கள்.

அடுத்து அறிவிப்புகளுக்கு வருகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தினுடைய அருமை கருதி, நான் இங்கே அச்சடித்து வழங்கியிருக்கக்கூடிய இந்த அறிவிப்புகளையெல்லாம்@ நான் இந்த அவையிலே படித்ததாக நீங்கள் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, சுருக்கமாக ஐந்து திட்டங்களை மட்டும் வேகமாக உங்களிடத்திலே சொல்லி நான் விடைபெற விரும்புகிறேன்.

பிற்பகல் 1-45

முதலில் தரமுயர்த்தக்கூடிய பள்ளிகள். 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, 335 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக இந்த ஆண்டே தரமுயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) புதியதாக 210 தொடக்கப் பள்ளிகள் உருவாகும்.

ஆசிரியர் நியமனங்களைப் பொறுத்தமட்டில், தொடக்கக் கல்வித் துறையில் காலியாகும் 5,553 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், 2,611 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 55 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும், அதைப்போல, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியேற்படும் 851 முதுகலை ஆசிரியர் பணியிடங்களும், 3,875 பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்களும், 738 சிறப்பாசிரியர் பணியிடங்களும், ஆகமொத்தம், இந்த ஆண்டு, வரக்கூடிய மே மாதம் காலியாகக்கூடிய அந்தக் காலிப் பணியிடங்கள் உள்பட, 13,683 காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, தொடக்கக் கல்வித் துறையில் நிர்வாகம் மற்றும் கல்வி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களில் 50 சதவிகிதம் அளவுக்கு நேரடி நியமனம்மூலம் நியமிக்கப்படுவார்கள்.

இங்கே பல உறுப்பினர்கள் பலமுறை சொல்லியிருக்கிறீர்கள். இந்தப் பள்ளிகளுக்கெல்லாம் furniture வேண்டும்; bench, desk வேண்டுமென்றெல்லாம் கேட்டிருக்கிறீர்கள். நபார்டு மூலமாக 1 முதல் 7 திட்டங்கள் வரை பயனடைந்திருக்கக்கூடிய 1,583 அரசு உயர்நிலை

@ 211 முதல் 215 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டிருக்கக்கூடிய 15,845 வகுப்பறைகளுக்கு, முழுமையாகப் போதிய தளவாடச் சாமான்கள் வாங்க ரூ.69.11 கோடி ஒதுக்கி நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ச்சியாக, நபார்டு எட்டாவது திட்டத்தின்கீழ், சுமார் 371 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம், குடிநீர், furniture மற்றும் ஆய்வகம், குறிப்பாக, அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்பதைப்போல, சுற்றுச்சுவர் கட்டுவதற்காக ரூ.243 கோடி நபார்டு வங்கியிலிருந்து கடனாகப் பெற்று, அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மேலாண்மைப் பயிற்சி. பள்ளிக் கல்வித் துறையிலே இருக்கக்கூடிய அலுவலர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி வழங்க மாநிலக் கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனத்தை (State Institute of Educational Management and Training) 3 கோடி ரூபாய் செலவிலே தலைவர் கலைஞர் அவர்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து வாழ்வியல் திறன் குறித்த கல்வி. வாழ்வியல் திறன்கள், குறிப்பாக, உடல்நலக் கல்வி, தூய்மை, சுற்றுச்சூழல், மக்கள் தொகை, எய்ட்ஸ் விழிப்புணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு சிறப்பானக் கல்வியினை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் கொடுப்பதற்கானத் திட்டம் முதற்கட்டமாக 50 இலட்சம் ரூபாய் இந்த அரசால் நிதி ஒதுக்கிச் செயல்படுத்தப்படும். தொடர்ச்சியாக அதற்கு மத்திய அரசினுடைய உதவி கிடைக்குமானால், அதையும் அரசு பயன்படுத்திக்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

9-2-2004 அன்று தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி என இரண்டு மாவட்டங்களாகப் பிரிந்த பின், கிருஷ்ணகிரியிலே ஏற்கெனவே மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (D.I.E.T.) செயல்படுவதால், இவ்வாண்டு தருமபுரி மாவட்டத்திற்குத் தனியாக மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திற்கான பணியமைப்பு விதிகள் (குறுக்கீடு) தருமபுரியிலே ஓர் உறுப்பினர்

இருக்கிறார்; அவருடைய மாவட்டத்திற்காக அவர் கேட்கிறார். (குறுக்கீடு) பயிற்சி இயக்கத்திற்கான பணியமைப்பு விதிகள் (adhoc rules) தனியாக ஏற்படுத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நூலகங்களைப் பொறுத்தமட்டிலே, கிராமப்புறங்களிலே நூலக வசதியினைப் பெருக்கும்பொருட்டு, 166 பகுதி நேர நூலகங்களைத் தரமுயர்த்தியும், புதிதாக 169 நூலகங்களைத் தோற்றுவித்தும், 335 ஊர்ப்புற நூலகங்கள் (Village Libraries) திறக்கப்படும். இதற்காக 1.34 கோடி ரூபாய் நூலக நிதியிலிருந்து செலவழிக்கப்படும்.

அடுத்து, புத்தகக் கண்காட்சி, சென்னையில் நடைபெறுவதைப்போன்று, புத்தகக் கண்காட்சி எல்லா மாவட்டங்களிலும் நடைபெற நடவடிக்கை எடுக்கப்படும். முதலாவதாக, இது மற்ற ஐந்து மாநகராட்சிப் பகுதிகளிலே உடனடியாக நடத்தப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அன்றைக்குக் கேள்வி நேரத்திலே எழுப்பி, இன்றைக்குக்கூட சுட்டிக்காட்டியதைப்போல, 30 மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்களின் பயன்பாட்டிற்காக, கணினிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, தனி இணைய வலைப்பிரிவு (Internet Browsing Section) நிச்சயமாக ஏற்படுத்தப்படும் என்பதையும் நான் இங்கே அறிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் 92 பேர், 457 வெட்டுத் தீர்மானங்களை இந்த மானியக் கோரிக்கைமீது இங்கே வழங்கியிருக்கிறார்கள். நேரத்தின் அருமை கருதி, நான் அத்தனை வெட்டுத் தீர்மானங்கள் குறித்தும் இங்கே விளக்கிட இயலவில்லை என்றாலும்கூட, நீங்கள் வழங்கியிருக்கக்கூடிய அந்த வெட்டுத் தீர்மானங்கள்மூலமாக நீங்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய கோரிக்கைகளை, எழுப்பியிருக்கக்கூடிய பிரச்சினைகளை எல்லாம், நான் என்னுடைய நெஞ்சத்திலே பதித்து வைத்துக்கொண்டிருக்கிறேன். வரக்கூடிய காலங்களிலே, இந்த அரசு, தலைவர் கலைஞர் அரசு, அவற்றுக்கும் உரிய முக்கியத்துவம் கொடுத்து, அவற்றையும் நிறைவேற்றுவதற்கு நிச்சயமாக முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்து, நீங்கள் தந்திருக்கக்கூடிய அந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் விலக்கிக்கொண்டு, நான்



அளித்திருக்கக்கூடிய விளக்கங்களை ஏற்றுக்கொண்டு, அரசு கோரியிருக்கக்கூடிய மானியக் கோரிக்கையினை நீங்கள் வழங்கி, நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை நிறைவு செய்வதற்கு முன்பாக ஒன்றே ஒன்றைமாத்திரம் சொல்லி நான் நிறைவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-50

ஏழாம் நூற்றாண்டிலே (குறுக்கீடு) இல்லை, முடித்துவிடுகிறேன். ஏழாம் நூற்றாண்டிலே இந்தத் தமிழ்த் திருநாட்டிலே வாழ்ந்து பதிகம் பாடி மறைந்த அப்பர் பெருமான் அவர்கள் தாம் பாடிய ஒரு தேவாரப் பாடலிலே குறிப்பிட்டுச் சொல்வார்.

'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்'

என்று, 'நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன், உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்' என்ற அப்பர் பெருமானின் வாக்கை மாத்திரம் தலைவர் கலைஞருடைய காலடியில் வைத்து, தலைவர் கலைஞர் அவர்களே, என்றைக்கும் நாங்கள் உங்களை மறந்தறியோம் என்று சொல்லி, இந்த அளவோடு நான் எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டு 120 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், 120 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்த்தியிருக்கின்றீர்கள். ஆனால், இந்த ஆண்டு 80 உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமே மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுகிறது. அதேபோன்று 100 நடுநிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துகிறார்கள். சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 1,300 கோடி ரூபாய் அதிகமாக நிதி ஒதுக்கிக் கொடுத்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். 150 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 120 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்

பள்ளிகளாகவும் உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞரிடத்திலே அதைப்பற்றிக் கலந்து பேசி நிதி நிலைக்கேற்ப அரசு உரிய முடிவுகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் கல்வியினுடைய தேர்ச்சி விகிதம் என்று சொல்லும்பொழுது, தென் மாவட்டங்களில் அதிகமான தேர்ச்சி விகிதமும், வட மாவட்டங்களில் தேர்ச்சி விகிதம் குறைந்தும் வருகின்றது என்கின்ற தகவலை பத்திரிகைகளெல்லாம் வெளிப்படுத்தியிருக்கின்றன. எனவே, தென் மாவட்டங்களுக்கு இணையாகப் பள்ளிக் கல்வியினுடைய தேர்ச்சி விகிதத்தை அதிகப்படுத்த வேண்டும். 7,000 கோடி ரூபாய்க்கு மேல் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தாலும்கூட, எதிர்பார்த்த அளவிற்கு நம்முடைய குழந்தைகள் மேலைநாடுகளைப்போல, அந்த வளர்கின்ற பருவத்திலே அறிவு பெறுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படாததற்கு ஒரு காரணம், நம்முடைய உறுப்பினர் திரு. டில்லி பாபு சொன்னதைப்போல, கல்விமுறையிலே ஒரு மாற்றம் கொண்டுவருவதற்கு வழியாக, மனப்பாடக் கல்வியை ஒழித்து, practical ஆன, pragmatic ஆன education-ஐக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை இந்த அரசு முழுமையாக ஏற்றுக்கொண்டு அதைச் செயல்படுத்துகிறது.



இரண்டு கருத்துகளைச் சொன்னீர்கள். ஒன்று, வட மாவட்டங்களிலே இருக்கக்கூடிய அந்தக் கல்வி நிலை குறித்தது. தென் மாவட்டங்களில் இருப்பதைப்போல இங்கே வட மாவட்டங்களில் அந்தக் கல்வியினுடைய வளர்ச்சி இல்லை, குறைந்திருக்கிறது என்றீர்கள். அதற்கு என்ன செய்திருக்கின்றீர்கள் என்று கேட்டீர்கள். நான் பேசுகிறபோதுகூடக் குறிப்பிட்டேன். வட மாவட்டங்களிலே, குறிப்பாக கல்வியிலே பின்தங்கியிருக்கக்கூடிய கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி போன்ற பல்வேறு மாவட்டங்களிலே இந்தச் சூழ்நிலை இருக்கிறதை உணர்ந்துதான் தலைவர் கலைஞர் 78 இலட்சம் ரூபாய் கடந்த ஆண்டு கொடுத்தார். இந்த ஆண்டு அதை உயர்த்தி ரூ.123 இலட்சத்தை தலைவர் கலைஞர் அவர்கள் இந்த வட மாவட்டங்களுக்காக மட்டும் என்று கொடுத்திருக்கிறார்கள். அஃதன்னியிலே, இப்போது கட்டப்படக்கூடிய கட்டடங்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர் நியமனங்களாக இருந்தாலும் சரி, வட மாவட்டங்களிலே இத்தகைய பள்ளிகளுக்கு உரிய முக்கியத்துவம் கொடுத்து அங்கே அந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கு இந்த அரசு முழு ஏற்பாடுகளை ஏற்கெனவே செய்திருக்கிறது.

இரண்டாவதாக, மனப்பாடம் செய்யக்கூடிய அந்த முறையை மாற்றி அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலே அந்தக் கல்வி முறை வருமா என்று கேட்டார்கள். செயல்வழிக் கற்றலுடைய கல்வி முறையில் basic fabric அதுதான். அடிப்படையாக இருக்கக்கூடியது மனனம் பண்ணிப் படிக்கக்கூடிய அந்தச் சூழல் மாறி, குழந்தைகள், தாங்கள் என்ன கற்றுக்கொள்கிறோம் என்ற concept-ஐ புரிந்து படித்துக்கொள்ளக்கூடிய அந்த முறைதான் செயல்வழிக் கற்றலிலே இருக்கக்கூடிய அந்த அடிப்படைத் தத்துவம். எனவே, அதை இந்த அரசு இந்த ஆண்டிலிருந்து செயல்படுத்துவதாக அறிவித்திருக்கிறது. அந்த நிலை வருகிறபோது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தக் கல்வி மாற்றம் நிச்சயமாக வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத் தலைமுறையில் முதலீடு செய்கின்ற ஒரு முக்கியமான துறையைக் கையிலே வைத்திருக்கக்கூடிய நமது அமைச்சர் அந்தத் துறையினுடைய அவசியங்களை, ஆழ அகலத்தை நன்கு

உணர்ந்தவராக மிக அற்புதமாக இந்த மானியக் கோரிக்கையை அவர் பதிலளித்து நிறைவு செய்திருக்கிறார். அவருக்கு நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டு அடிப்படையான பிரச்சினைகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை இங்கே கோர விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–55*

நாடு முழுவதும் தேர்வுகளை எப்படி நடத்துவது என்பதை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட மத்திய அரசினுடைய குழு பத்தாவது வகுப்பு, S.S.L.C. தேர்வு அவசியமா என்கிற கேள்வியினை எழுப்பி அந்தத் தேர்வு தேவையில்லை, ஏனெனில் பிளஸ்–2 தேர்வுகள் இருப்பதால் S.S.L.C. தேர்வை அரசுத் தேர்வாக வைக்க வேண்டிய அவசியமில்லை என்பதைச் சொல்லி, ஒரு ஏழெட்டு மாநிலங்களிலே அதைப் பின்பற்றி அந்த S.S.L.C. தேர்வுகளையே இல்லாமல் செய்திருக்கிறார்களே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை தமிழக அரசு பரிசீலிக்க முன்வருமா? பிளஸ்–2 தேர்வு அரசுத் தேர்வாக இருக்கின்ற காரணத்தினால் அந்த பத்தாவது வகுப்புத் தேர்வினை அந்தந்தப் பள்ளிகளே எட்டாவது வகுப்பு, ஒன்பதாவது வகுப்புத் தேர்வுகள் நடத்துவதைப்போல அந்தப் பத்தாவது வகுப்புத் தேர்வையும் நடத்துவதால் அரசுக்கும், அரசினுடைய இந்தப் பள்ளிக் கல்வித் துறைக்கும் ஒரு பெரிய சுமை குறையுமே, அதைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறதா?

இரண்டாவதாக, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லா ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகளிலும் ஒரு பிரிவு கண்டிப்பாக தமிழ்வழிக் கல்விப் பிரிவாக இருக்க வேண்டும் என்கிற உத்தரவினைப் பிறப்பித்தார்கள். ஆனால், அந்தப் பள்ளிகளிலே அவ்வாறு தமிழ்வழி சொல்லிக்கொடுக்கின்ற பிரிவுகளிலே எந்தப் புத்தகங்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி அரசாணை இதுவரை பிறப்பிக்கப்படவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு வேறு தமிழ்ப் புத்தகங்கள் இல்லை. எல்லாப் பள்ளிகளிலும் சொல்லிக் கொடுக்கப்படுகின்ற அந்தப் புத்தகங்களை வைத்துதான் அவர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டும். அத்தகைய உத்தரவினை அரசு ஏன் தாமதப்படுத்துகிறது? இப்பொழுதாவது அந்த உத்தரவினை வழங்க அரசு முன்வருமா என்று இந்த இரண்டு பிரச்சினைகள் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை நான் கோரி, பதில் பெற ஆசைப்படுகிறேன்.



**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்தாவது வகுப்பு தேர்வினைப் பொறுத்தமட்டிலே, இடைநிலைக் கல்வியிலே அது ஒரு மைல் கல். அதற்குப்பிறகு மேல்நிலைக் கல்வி என்பது, அடுத்த கட்ட மைல் கல். எனவே, இந்தத் தேர்வு முறையை இரத்துச் செய்வதைப் பொறுத்தவரை, பட்டயப் படிப்புகளுக்குச் செல்லக்கூடியவர்களுக்கு இது ஒரு entrance point. இவர்கள் 10 ஆம் வகுப்புவரை இதற்கு ஒரு தேர்வு எழுதி முடித்தால்தான் அடுத்து இருக்கக்கூடிய பட்டயப் படிப்புகளுக்கு வேறுபல தொழிற்கல்வியைச் சார்ந்த படிப்புகளுக்குச் செல்வதற்கு, I.T.I போன்ற தொழிற்கல்விகளுக்குப் போவதற்கு ஏதுவாக இருக்கும். இந்தத் தேர்வு முறை இருக்க வேண்டும். இந்தத் தேர்வு முறையில் இடைநிலைக் கல்வி வரை அவர்கள் இதிலே தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்றால் அடுத்த கல்விக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு வரும். எனவே, இப்போதைக்கு அந்த பத்தாம் வகுப்பிலே இருக்கக்கூடிய அந்தத் தேர்வு முறையை எடுத்துவிட வேண்டும் என்று இந்த அரசு கருதவில்லை. அத்தகைய செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மெட்ரிகுலேஷன் பாடத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே அதிலே இருக்கக்கூடிய மாணவர்களுக்குத் தமிழ் வழியிலே பயிலலாம் என்கின்ற ஒரு சிறப்பான அறிவிப்பை தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதனுடைய நோக்கமே, மெட்ரிகுலேஷன் முறையிலே இருக்கக்கூடிய அந்தப் பாடத் திட்டத்திற்கு நீங்கள் தமிழ்வழியிலே பாடப் புத்தகங்களை உருவாக்குங்கள் என்று சொன்னோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், ஏற்கெனவே தமிழ்வழியிலே இருக்கக்கூடிய, தமிழ்வழிக் கல்வியிலே State Board–லே இருக்கக்கூடிய அந்தப் பாடங்களை அப்படியே நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அப்படியானால், இப்போது இருக்கக்கூடிய அந்த முறைக்கும் மெட்ரிக் பள்ளியிலே இருக்கக்கூடிய அந்த முறைக்கும், எந்தவிதமான ஒரு பெரிய மாறுபாட்டையும் அது ஏற்படுத்திவிட முடியாது. மேலும், இதில் பார்த்தீர்களானால் திரும்பவும் ஒரு அரசு உதவி பெறக்கூடிய பள்ளியாகத்தான் அந்த மெட்ரிகுலேஷன் பள்ளி கருதப்பட வேண்டும் என்று சொல்லி, இன்னொரு வகையிலே அவர்கள் வந்துவிடக்கூடாது. அரசாங்கம் என்ன சொல்கிறது என்று சொன்னால், மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே, நீங்கள் சொல்லக்கூடிய தரத்திலே, நீங்கள் தமிழ்வழியிலே அந்தப் புத்தகங்களை உருவாக்குங்கள் என்று சொல்கிறது. அப்படி ஏற்கெனவே ஒரு பள்ளி அத்தகைய

அளவிலே எங்களிடத்திலே அதற்கு அனுமதியும் பெற்றிருக்கிறார்கள். எனவே, மற்றப் பள்ளிகளும் அதன் தொடர்ச்சியாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கக்கூடிய அந்தப் பிரச்சினை குறித்து மீண்டும் ஒரு முறை கல்வித் துறையிலே இருக்கக்கூடிய அனைவரிடத்திலும் விவாதித்து இந்தப் பிரச்சினையை எந்த வகையிலே நாம் தீர்க்க முடியும் என்பதைப் பார்க்கலாம். சமச்சீர் கல்வி முறையை நாம் ஒரு கட்டத்திலே கொண்டு வருகிறபோது இத்தகைய, அடிப்படையிலே இருக்கக்கூடிய சிக்கல்கள் முழுமையாக விடுபடக்கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விரிவான விளக்கம் சொல்லிவிட்டார். இன்னும் என்ன clarification கேட்டு, கேள்வி வந்து கொண்டே இருக்கிறது? திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் கல்விக் கொள்கையாக தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்திலே வலியுறுத்தி வந்த ஆங்கில வழிப் பள்ளிக் கூடங்களில் தமிழ்மொழி கட்டாயப் பாடம்; சமச்சீர் கல்வி; பொதுப் பள்ளி முறை; அருகமைப் பள்ளி முறை ஆகியவற்றை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அந்தக் கொள்கைக்குச் செயல் வடிவம் கொடுக்கக்கூடிய வகையில் இந்த ஆண்டும், கடந்த ஆண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களும் முக்கியத்துவம் கொடுத்து கூடுதலாக 30 விழுக்காடு கடந்த ஆண்டைவிட நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆகவே, இதை ஏற்றுக்கொண்டமைக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடந்த ஆண்டு மெட்ரிகுலேஷன் பள்ளியிலே 1 ஆம் வகுப்பு, 2 ஆம் வகுப்பு என்று படிப்படியாக தமிழ்ப் பாடம் அறிமுகப்படுத்துவதாகச் சொன்னீர்கள். இந்த ஆண்டு அது நடைமுறைக்கு வந்திருக்கிறதா? அது ஒவ்வொரு வகுப்பாக வருவதைவிட, ஒரே வழியாக 12 ஆம் வகுப்பு வரையிலே கொண்டுவந்தால் சாலப் பொருத்தமாக இருக்கும் என்பதைச் சொல்லி, இன்னொரு முக்கியமான பிரச்சினை; 1980 ஆம்



ஆண்டிலேயிருந்து இந்த ஆசிரியர் சேமிப்பு நிதி T.P.F என்று சொல்லுகிறார்களே, அதில் கணக்கே இல்லை என்று சொல்லுகிறார்கள். அது உண்மைதானா? அவர்களுக்கு வட்டியும் கொடுக்கப்படுவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டும் குறையும் இருக்கிறது. அதுவும் நிவர்த்தி செய்யப்படுமா? அதேநேரத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியத்திலே இந்த நிதியிலிருந்து 4 கோடி ரூபாய் ஊழல் நடந்திருக்கிறது, பெரம்பலூர் ஒன்றியத்திலே ஒன்றரை கோடி ரூபாய் என்று பல்வேறு ஒன்றியங்களிலே இப்படிக் கையாடல் நடந்திருப்பதாக சொல்லுகிறார்களே அவையெல்லாம் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா, நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2–00

அதோடு, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பைச் சொன்னார்கள். வட மாவட்டங்களில் தேர்ச்சி விகிதம் குறைவு என்று சொன்னார்கள். நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தோம். இடைநிற்றல் விழுக்காடு அதிகமாக இருக்கிறது என்று சொன்னோம். அதற்கு மூன்று மாவட்டங்களைச் சேர்த்து அறிவித்தீர்கள். இன்னும் பல மாவட்டங்கள் அந்த நிலையிலே இருக்கின்றன. அவற்றுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, T.P.F.—குறித்துச் சொல்லக்கூடிய அந்த பல்வேறு பிரச்சினைகளை அரசு முழுமையாகக் கருத்திலே கொண்டிருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய அந்த முறையிலே பல்வேறு குறைபாடுகள், இருக்கின்றன என்பதை அரசு ஒத்துக்கொள்கிறது. இதிலே என்ன ஒரு பிரச்சினை என்று சொன்னால், அரசு ஊழியர்களுக்கு இருப்பதைப்போல, Accountant General-இடத்திலே இருக்கக்கூடிய அந்த ஒரு முறை — G.P.F. வைத்திருக்கிறார்களே, அந்த முறை ஆசிரியர்களுக்கு இல்லை. இவர்களுக்கு Teachers Provident Fund என்ற முறையில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. G.P.F.-லே அவர்கள் இல்லை. எனவே, நாங்கள் இந்த முறை, நம்முடைய கணக்காயர் அவர்களிடத்திலே, தனிப்பட்ட முறையிலே இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆசிரியர்களுடைய கணக்குகளையும் நீங்களே பராமரிப்பீர்களென்று சொன்னால், இதிலே எந்தவிதமான குழப்பமும் இராது என்கின்ற வகையிலே, அவர்களிடத்திலே நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்தக்

கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால், அரசாங்கத்திற்கும் மிகுந்த மகிழ்ச்சி. இல்லையென்று சொன்னால், எந்த அளவிற்கு நம்முடைய தொடக்கக் கல்வி அலுவலகங்களிலே முறைப்படுத்தி, சீர்படுத்தி, அங்கே புதிய Accountant-களை வைத்து, இந்த முறையை முழுமையாகச் செய்வதற்கு அரசு முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நடவடிக்கையைப்பற்றிச் சொன்னீர்கள். எங்கெங்கே முறைகேடுகள் நடைபெற்றிருக்கிறதோ—அரசினுடைய கவனத்திற்கு சில இடங்களிலேயிருந்து வருகின்றன—வந்திருக்கக்கூடிய இடங்களிலே நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறோம். தொடர்ச்சியாக அத்தகைய சம்பவங்கள் வருமென்று சொன்னால், இந்த அரசு, தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு, அத்தகைய குற்றங்களை ஒருபோதும் அனுமதிக்காது. உரியமுறையிலே கடுமையான நடவடிக்கைகளை நிச்சயமாக நாங்கள் மேற்கொள்வோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு point சொன்னீர்கள். கல்வியில் பின்தங்கிய வட மாவட்டங்களிலே சிலவற்றைக் கூடுதலாக இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். உங்கள் கோரிக்கையை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். தமிழ்வழிக் கல்வியைப்பற்றி ஒன்று சொன்னீர்கள். அதைப் பாட மொழியாகக் கொண்டுவந்திருக்க வேண்டுமென்று சொன்னீர்கள். இந்த ஆண்டும், இரண்டாம் வகுப்பில் கண்டிப்பாக வரும். கல்வியாண்டு இன்னும் முடிவுபெறவில்லை. அடுத்த கல்வியாண்டு, ஜூன் மாதத்திலே ஆரம்பிக்கின்றபோது, இரண்டாம் வகுப்பு படிக்கின்ற அந்த மாணவர்களுக்கு நிச்சயமாக அந்த தமிழ்ப் பாட மொழி, நிச்சயமாக ஒரு கட்டாயப் பாடமொழியாக ஆகும். முழுமையாக, உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று நீங்கள் இங்கே கேட்டீர்கள். இந்த மன்றத்திலே அந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வருகிறபோதே அதற்கு நான் பதில் சொன்னேன். தலைவர் கலைஞர் அவர்கள், 'சிந்தனையும் செயலும்' என்கின்ற புத்தகத்திலே, இரண்டாவது அத்தியாயத்தை முடிக்கின்றபோது ஒன்றைச் சொன்னார்கள். 'எனக்குப் பிடித்த பொன்மொழி இதுதான்' என்று தலைவர் கலைஞர் அவர்கள் அதிலே எழுதியிருக்கிறார்கள். அதிலே 'ஒன்றைச் சொல்வார்கள். 'நீண்ட தூரம் ஓடினால்தான், அதிக உயரம் தாண்ட முடியும்' என்று. அதனால், இப்போது நீண்ட தூரம் ஓடிக் கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அதிக உயரம் தாண்டுவோம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## கோரிக்கை எண் 43 — பள்ளிக் கல்வித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 43— பள்ளிக் கல்வித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பள்ளிக் கல்வித் துறை பற்றிய 43 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,894,60,28,000/–, மூலதனக் கணக்கில் ரூ.161,90,84,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.5,50,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 10–4–2007 (செவ்வாய்க்கிழமை) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–03 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை–

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

47. மானியக் கோரிக்கை எண் 9– பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை – சிறுபான்மையினர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

48. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

49. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய "மக்கள் சாசனம்", 2007. (தமிழ், ஆங்கிலம்)

50. "மதிப்புக் கூட்டு வரி 2007" என்கிற சிறுநூல். (தமிழ்)

---



## இணைப்பு-I

(81 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 43 – பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007—2008

*அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்*
*உள்ளழிக்க லாகா அரண்.*

—அய்யன் திருவள்ளுவர்

அறிவு, அழிவு வராமல் காக்கும் கருவியாகும். அன்றியும் பகை கொண்டு எதிர்ப்பவர்க்கும் அழிக்க முடியாத உள்ளரணும் ஆகும்.

நம்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் தமிழகம் பள்ளிக் கல்வி வளர்ச்சியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. பள்ளிக் கல்வி துறை கீழ்க்காணும் கொள்கைகளை வகுத்துச் செயலாற்றி வருகிறது:—

- அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்குவதில் கவனம் செலுத்துதல்.
- பள்ளி வயது வந்த அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதி செய்தல்.
- தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இணக்கமான கற்பித்தல் முறைகளை மேம்படுத்துதல்.
- தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளி மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணர்தல்.
- 2010 ஆம் ஆண்டிற்குள் பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளையும் இடைநிற்றல் இன்றித் தக்கவைத்தல்.
- ஆரம்பக் கல்வி பெற்ற அனைவரும் இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி பெற வழிவகை செய்தல்.

[2007 ஏப்ரல் 9

- சமூக, பொருளாதார, பால்பாகுபாடு மற்றும் இயலாமைத் தடைகளை நீக்குதல்.
- ஆசிரியர்களின் கற்பிக்கும் திறமைகளை மேம்படுத்துதல்.
- மாணவர்களை, சுய வேலைவாய்ப்பு தேடும் திறமையுடையவர்களாக உருவாக்குதல்.
- அனைத்து மாணவர்களுக்கும் கணினிக் கல்வி அளித்தல்.
- பள்ளிகளில் உடல் நலக் கல்வியை ஊக்கப்படுத்துதல்.
- பள்ளிகளில் அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.
- தகுதியும், திறமையும் மிக்க ஆசிரியர்களை அரசுப் பள்ளிகளுக்குத் தேர்வு செய்தல்.
- முழு எழுத்தறிவு இலக்கினை அடைதல்.
- எழுத்தறிவில் உள்ள பாலியல் வேற்றுமையைக் குறைக்கும் நோக்கத்தோடு மகளிர் சிறப்பு எழுத்தறிவுத் திட்டத்தினை செயல்படுத்துதல்.
- தரமான பாடநூல்களையும், குறிப்பேடுகளையும் அச்சிட்டு மாணவர்களுக்கு வழங்குதல்.
- பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே வாழ்நாள் முழுவதும் சுய கல்விக்கு வகை செய்தல்.

**அரசின் சாதனைகள்**

➤ இந்த அரசு 2006-2007 நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி பள்ளிகளில் தமிழை ஒரு கட்டாய மொழிப் பாடமாக்கிட வகைசெய்யும் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளான ஜூலை 15-ஐ "கல்வி வளர்ச்சி நாள்" ஆகக் கொண்டாடுவதற்கான சட்டமும் இயற்றப்பட்டுள்ளது.

➤ அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்றுப் பணியாற்றும்



2007 ஏப்ரல் 9]

ஆசிரியர்களுக்கு 1-6-2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் 46,605 ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர். இதற்கான கூடுதல் செலவு ஆண்டொன்றுக்கு ரூ.345 கோடியாகும்.

➤ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 6, 7, 8 வகுப்புகளுக்கு 7,979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், நடுநிலைப் பள்ளிகளில் 1,926 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும், 150 மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டு அப்பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

➤ மாணவர்களுக்கு இலவச சைக்கிள் மற்றும் இலவச பாடப் புத்தகம் வழங்கும் திட்டங்களும், பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பயணத் திட்டமும், 10, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்று, வருவாய்ச் சான்று ஆகியன பள்ளியிலேயே வழங்கும் திட்டமும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

➤ 2006-2007 ஆம் ஆண்டில், 120 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 120 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், முறையே நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

➤ அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 14,354 வகுப்பறைக் கட்டடங்களும் 1,075 பள்ளித் தொகுப்பு வள மையக் கட்டடங்களும் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதற்கான செலவுத் தொகை ரூ.332 கோடி.

➤ அனைத்து அரசு, நகராட்சி, மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வியை செயல்படுத்துவதற்காக 1,880 கணினிப் பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும், இப்பள்ளிகளுக்கு ரூ.118 கோடி செலவில் கணினிகள் வழங்கப்பட உள்ளன.

➤ கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி, விழுப்புரம், பெரம்பலூர், சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களில், மாணவர்கள் சராசரிக்கும் குறைவான சதவிகிதத்தில் தேர்ச்சி பெற்ற 200 பள்ளிகள் கண்டறியப்பட்டு அந்த மாணவர்களுக்கு

[2007 ஏப்ரல் 9

பள்ளியிலேயே சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஆண்டுக்கு ரூ.78 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

- மாணவர்களுக்கு ஏற்படும் விபத்துகளை எவ்வாறு தடுப்பது என்பது பற்றியும் சாலைப் பாதுகாப்பு விதிகளை எவ்வாறு கடைப்பிடிப்பது என்பது குறித்தும் ஆராய ஒரு பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- அனைத்து மாணவர்களுக்கும் எவ்வாறு சமச்சீர் கல்வி அளிப்பது என்பது குறித்து ஆராய உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண் 43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.7,056.57 கோடியாகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் ரூ.847.84 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2007-2008 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

| | கணக்குத் தலைப்பு | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | பொதுப் பணிகள்-அரசுப் பள்ளிகள் கட்டடங்கள் பராமரித்தலும் செப்பனிடுதலும் | -- | 2966.97 | 2966.97 |
| 2202 | பொதுக் கல்வி | | | |
| | 01 தொடக்கக் கல்வி | 45234.77 | 314545.71 | 359780.48 |
| | 02 இடைநிலைக் கல்வி | 20082.27 | 299190.42 | 319272.69 |
| | 04 முதியோர் கல்வி | 0.02 | 84.26 | 84.28 |
| | 05 மொழி வளர்ச்சி | 2.53 | 508.16 | 510.69 |
| | மொத்தம்-பொதுக் கல்வி | 65319.59 | 614328.55 | 679648.14 |
| 2204 | போட்டி விளையாட்டுகளும் இளைஞர் நலப் பணிகளும் | 268.12 | 161.12 | 429.24 |



2007 ஏப்ரல் 9]

| | | | | |
|---|---|---|---|---|
| 2205 | கலையும், பண்பாடும்-பொது நூலகங்கள் | -- | 2626.50 | 2626.50 |
| 2225 | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | 3005.36 | 21.71 | 3027.07 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | -- | 427.21 | 427.21 |
| 2251 | தலைமைச் செயலகம்-சமூகப் பணிகள் | -- | 335.39 | 335.39 |
| 4202 | கல்வி போட்டி, விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | 16190.84 | -- | 16190.84 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | -- | 5.00 | 5.00 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | -- | 0.50 | 0.50 |
| | பெரு மொத்தம் | 84783.91 | 620872.95 | 705656.86 |

### 2007-2008 ஆம் ஆண்டிற்கான பகுதி-2 திட்டங்கள்

| வரிசை எண் | திட்டப் பணிகளின் விவரம் | ஒதுக்கப்பட்ட தொகை | |
|---|---|---|---|
| | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| | தலைமைச் செயலகம் | | |
| 1 | தலைமைச் செயலக பள்ளிக் கல்வித் துறையை கணினிமயமாக்குதல் | | 4.50 |
| | தொடக்கக் கல்வி | | |
| 2 | மதுரை மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகத்திற்கு அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 11.12 | |
| 3 | 5 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 20.00 | |

[2007 ஏப்ரல் 9

| | | | |
|---|---|---|---|
| 4 | 100 உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு துணை பாகங்களுடன் கணினிகள் வழங்குதல் | | 45.00 |
| 5 | அறைகலன்கள் வழங்குதல் | | 2.10 |
| 6 | பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சி அளித்தல் | | 1.24 |
| 7 | தொடக்கக் கல்வி இயக்குநரகத்திற்கான அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 30.00 | |
| | பள்ளிக் கல்வி | | |
| 8 | 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அறிவியல் உபகரணங்கள் வழங்குதல் | 140.00 | |
| 9 | 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பயிற்றுவிப்பு துணைக் கருவிகள் வழங்குதல் | 40.00 | |
| 10 | 130 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு மொழி ஆய்வுக் கூடங்கள் அமைத்தல் | 130.00 | |
| 11 | வாழ்வியல் திறன்களை (உடல்நலக் கல்வி, மக்கள் தொகைக் கல்வி மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு) அறிமுகப்படுத்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டம் | 50.00 | |
| 12 | 120 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலக வாய்ப்புகளை ஏற்படுத்துதல். | 38.00 | |
| 13 | கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் கல்வித் தரத்தை மேம்படுத்துதல் | 122.80 | |
| | அரசுத் தேர்வுகள் | | |
| 14 | கோயம்புத்தூர் அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு அலுவலகக் கட்டடம் மற்றும் கிடங்கு கட்டுதல் | 12.00 | |



2007 ஏப்ரல் 9]

| | | | |
|---|---|---|---|
| | பொது நூலகங்கள் | | |
| 15 | கன்னிமாரா பொது நூலகத்திற்கு மையப்படுத்தப்பட்ட சீர்வளி வசதி அளித்தல் | | 20.00 |
| | ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | | |
| 16 | புதிதாகப் பணியமர்த்தப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கு அறிமுகப் பயிற்சி அளித்தல் | | 30.00 |
| 17 | கல்வித் தொலைக்காட்சி அரங்கத்தை தரமுயர்த்துதல் | | 23.45 |
| 18 | ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் மற்றும் மாவட்டக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மொழி பயிற்றாய்வுக் கூடம் அமைத்தல் | | 12.50 |
| | மெட்ரிகுலேஷன் பள்ளிகள் | | |
| 19 | மெட்ரிகுலேஷன் பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கல்வி ஆய்வாளர் அலுவலகங்களுக்கு புதிதாக 7 வண்டிகள் (ஜீப்புகள்) வழங்குதல் | | 30.00 |
| | மொத்தம் | 593.92 | 168.79 |
| | | 762.71 | |

## சட்டங்களும் விதிமுறைகளும்

### தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம்

தமிழ்நாடு தமிழ் கற்கும் சட்டம் 2006 என்ற சட்டத்தின்படி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வகைப் பள்ளிகளிலும் 1 முதல் 10 வரை பயிலும் மாணாக்கர்கள் 2006-2007 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக கட்டாயமாகத் தமிழை ஒரு பாடமாகக் கற்கவேண்டும்.

இச்சட்டத்தை கல்வி வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல் என தமிழகக் கல்வியாளர்களும், அறிஞர்களும், பொதுமக்களும் பாராட்டி வரவேற்கின்றனர்.

### கல்வி வளர்ச்சி நாள்

தமிழக முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தின் கல்வித் தந்தை எனப் போற்றப்படுபவர். அன்னாரின் பிறந்த

நாளான ஜூலை 15 ஆம் நாளை "கல்வி வளர்ச்சி நாள்" எனக் கொண்டாடுமாறு தமிழக அரசு அறிவித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களே முதல் நிகழ்ச்சியினைத் துவக்கி வைத்தார். கல்வி வளர்ச்சி நாள் தமிழகம் முழுவதும் உள்ள பள்ளிகளில் எழுச்சியோடு கொண்டாடப்பட்டது.

**மாணவர்களுக்கு உடல் ஒறுப்புத் தண்டனைகள் விதித் திருத்தம்**

தமிழ்நாடு கல்வி விதிகளில் மாணவர்களுக்கு உடல் ஒறுப்புத் தண்டனை வழங்கிட வகை செய்யும் விதி எண் 51 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக சுய கட்டுப்பாட்டுக்கான நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 1. தொடக்கக் கல்வி

### 1.1. தொலைநோக்கும் செயற்பாடுகளும்—தரமான கல்வி

1. பள்ளி வயது வந்த அனைத்துக் குழந்தைகளையும் கட்டாய இலவசக் கல்விச் சட்டத்தின்கீழ் தொடக்கக் கல்வி பெற்றுச் சிறக்கச் செய்தல்
2. 2010 ஆம் ஆண்டுக்குள், பள்ளியில் பயிலும் அனைத்துக் குழந்தைகளையும் இடைநிற்றல் இன்றித் தக்க வைத்தல்.
3. சமூகப் பொறுப்புணர்வினைப் பெறவும், சமுதாய ஏற்றத்தாழ்வு மற்றும் ஆண், பெண் பாகுபாடுகளைச் சமன் செய்து சகிப்புத் தன்மையை வளர்த்துக்கொள்ளவும், உலகியலைப் புரிந்து தெளியும் விழிப்புணர்வையும் பெறத்தக்க ஆற்றலாளர்களாகக் குழந்தைகளை உருவாக்குதல்.
4. குழந்தைகளின் உள்ளம் மற்றும் உடல் வளம் சார்ந்த திறமைகளை அடையாளம் கண்டு, அவற்றை வளர்த்து அவர்களின் முழுமையான ஆளுமையை வெளிப்படுத்தும் தரமும் திறமும் செறிந்த கல்வியை அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்குதல்.

### 1.2. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளைத் தோற்றுவித்தல்

தமிழ்நாட்டில் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் மக்கள் தொகை 300-ஐக் கொண்டுள்ள அனைத்து குடியிருப்புகளிலும் தொடக்கப் பள்ளிகள் துவக்கப்பட்டுள்ளன. 3 கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் மக்கள் தொகை 500-ஐக் கொண்டுள்ள பகுதிகளில் துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக நிலையுயர்த்தப்பட்டுள்ளன.



### 1.3. ஆசிரியர்களைப் பணியமர்த்தல்

பள்ளிகளின் மேம்பாட்டிற்கு அடிப்படையானது, தேவையான ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதலே என்பதை உணர்ந்துள்ள அரசு ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப முதன்மை இடம் தந்துள்ளது. 2006-2007-ல் காலியாக இருந்த இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன. தொடக்கக் கல்வித் துறை வரலாற்றில் முதன் முறையாக அறிவியல், கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களுக்கான பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் 50% பதவி உயர்வுமூலம் நிரப்ப ஆணையிடப்பட்டுள்ளது. ஆசிரியர் நியமனங்களும் மாறுதல்களும் வெளிப்படையான கலந்தாய்வின்மூலம் நடைபெற்றன.

### 1.4. தொடக்கக் கல்வியின் தரத்தைச் செம்மைப்படுத்துதல்

தரமான கல்வியை அனைவருக்கும் அளிப்பதே அரசின் தலையாய நோக்கமாகும். இவ்வாறு அளிக்கப்படும் கல்விச் செயல்பாடுகள், மாணவர்களை ஈர்த்து, அவர்களைப் பள்ளியில் தக்கவைத்து, சுயமரியாதை மற்றும் சுயகட்டுப்பாடு மிக்கவர்களாக மகிழ்ச்சியான சூழலில் உருவாக்க வேண்டும் என்பதில் அரசு அக்கறை கொண்டுள்ளது. தொடக்கக் கல்வியின் தரம் உயர்த்தும் வழிகளாக பள்ளிகளில் அடிப்படை வசதிகளைப் பெருக்குதல், ஆசிரியர்களை ஆயத்தப்படுத்துதல், ஆசிரியர்களைச் செயல் திறமிக்கவர்களாகப் பரிமளிக்கச் செய்தல், அவ்வப்போது மாணாக்கரின் கற்றல் திறனை அளவிட்டறிதல் முதலான சிறந்த செயல்பாடுகளுக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. பன்னோக்குக் கற்பித்தலை மேன்மைப்படுத்த வகுப்பறைக் கற்பித்தலைச் செம்மையும், செழுமையும் கொண்டதாக மலரச் செய்ய புதிய கற்பித்தல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

### 1.5. செயல்வழிக் கற்பித்தல் முறை

அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால், 5 ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு அடைவுச் சோதனைத் தேர்வு நடத்தப்பட்டது. ஆசிரியர்களை மையமாகக் கொண்ட வகுப்பறைக் கற்பித்தல் முறையால், மாணவர்களின் கற்றல் அடைவுகள் திருப்தியளிப்பதாக இல்லை எனக் கண்டறியப்பட்டது. புதுமையானதும், புதியதானதுமான செயல்வழிக்கற்றல் என்ற கற்பித்தல் முறை தொடக்கப் பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 9

**செயல்வழிக் கற்றல் என்னும் புதிய கற்பித்தல் முறையின் சிறப்பு இயல்புகள்**

- குழந்தைகளை மையமாகக் கொண்டது
- திறன்களை அடிப்படையாகக் கொண்டது
- கற்போரிடையே தன்முனைப்பு, படைப்பாற்றல், ஒருமைப்படுதல் ஆகியவற்றை வளர்க்கிறது
- மகிழ்வுடன் கற்கச் செய்கிறது
- குழந்தைகளை ஊக்குவிக்கும் மையங்களாக பள்ளிகளை மாற்றுகிறது

**1.6. ஆசிரியர்களின் கற்பித்தல் தரத்தை மேம்படுத்துதல்**

குழந்தைகளை மையமாகக் கொண்ட கல்வி முறை செயல்படும் இக்காலச் சூழலில், ஆசிரியர்களின் கற்பித்தல் உத்திகளை வளப்படுத்திக் கொள்ளவும், பெருக்கிக்கொள்ளவும் அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) திட்டத்தின்கீழ் பல்வேறு பணியிடைப் பயிற்சிகள் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் ஒத்துழைப்போடு நிகழ்த்தப்படுகின்றன. இப்பயிற்சிகள் ஆசிரியர்களின் பல்வேறு திறன்களை வளர்ப்பவையாகவும், அறிவியல், தொழில்நுட்பம், ஆங்கில மொழித் தொடர்பு, நல வாழ்வு, ஊட்டச் சத்து, உடற்கல்வி மற்றும் சமுதாயப் பங்கேற்பு, பள்ளி ஆட்சிமுறை பற்றிய பன்முக நோக்கங்களுக்கு ஆக்கம் சேர்ப்பனவாகவும் வழங்கப்படுகின்றன.

**1.7. நலத் திட்டங்கள்**

குழந்தைகளின் வளர்ச்சி என்பது சமுதாய வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதை மனதிற்கொண்ட அரசு, பள்ளிக் குழந்தைகளுக்கான பல்வேறு நலத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

**இலவசப் பாட நூல் வழங்கும் திட்டம்**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசின் அங்கீகாரம் பெற்று மாநிலப் பாடத் திட்டத்தைப் பின்பற்றும் சுயநிதிப் பள்ளிகளில் பயின்று வரும் அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசப் பாட நூல்கள் வழங்கும் திட்டம் 2007-2008 ஆம் ஆண்டிலும் தொய்வின்றித் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



2007 ஏப்ரல் 9]

**இலவச சீருடை வழங்கும் திட்டம்**

இலவச மதிய உணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

**இலவசப் பேருந்து பயணச் சலுகைத் திட்டம்**

மாநிலப் பாடத் திட்டத்தைப் பின்பற்றி 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்துவரும் மாணவ, மாணவிகள் தத்தம் கல்வி நிலையங்களுக்கு வசதியாகச் சென்றுவர இலவசப் பேருந்து பயணச் சலுகைத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**1.8. நடமாடும் நூலகம் மற்றும் அறிவியல் ஊர்தி**

படிக்கும் பழக்கத்தை மாணவர்களிடையே ஊக்குவிக்கவும், வளர்க்கவும் பொது நூலக இயக்ககத்தின் ஒத்துழைப்புடன் ஊர்திகளின்மூலம் நூல்கள் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. அறிவியல் ஊர்தித் திட்டத்தால் தொடக்க மற்றும் உயர் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வியில் மேம்பாடு அடையும் வாய்ப்பு ஏற்படுகிறது.

**1.9. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள்**

5,534 மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் கல்வி நலன் கருதியும், பாதுகாப்புக் கருதியும் வரையறுக்கப்பட்ட விதிகளின்படி இப்பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அப்பள்ளிகளின் செயல்பாடுகளையும் அங்கு பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பினையும் அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

**1.10. சிறந்த பள்ளிகளுக்கான விருது வழங்கும் திட்டம்**

ஆண்டுதோறும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மூன்று பள்ளிகளைத் தெரிவு செய்து சிறந்த பள்ளிகளுக்கான விருது வழங்கப்படுகிறது. சிறந்த பள்ளிகள் கூடுதல் சேர்க்கை விகிதம், கூடுதல் தக்க வைத்தோர் விகிதம், குறைந்த இடைநிற்றல் விகிதம், கூடுதல் கற்றல் நிறைவு செய்தோர் விகிதம் ஆகிய தகுதிகளின் அடிப்படையில் இத்தேர்வுகள் செய்யப்படுகின்றன.

[2007 ஏப்ரல் 9

## அனைவருக்கும் கல்வி இயக்கம்

### 1.11. தொலைநோக்கு

- அனைத்துக் குழந்தைகளையும் பள்ளிகள், கல்விக் காப்புறுதி மையங்கள், மாற்றுப் பள்ளிகள் மற்றும் "மீண்டும் பள்ளியில் சேர்த்தல் முகாம்" ஆகியவற்றில் சேர்த்தல்
- அனைத்து சமுதாய, பாலின வேறுபாடுகளை ஆரம்பக் கல்வி நிலையில் 2010 ஆம் ஆண்டிற்குள் முற்றிலுமாகக் களைதல்
- 2010-ல் பள்ளியில் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளையும் தக்க வைத்தல்
- வாழ்க்கைக்கு உகந்த தரமான ஆரம்பக் கல்வியை உறுதி செய்தல்.

### 1.12. கல்வித்தர மேம்பாட்டின்மீதான சிறப்புக் கவன செயல்பாடுகள்

தொடக்கக் கல்வியில் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டிருந்தாலும் நாம் இன்னும் கவனத்தில் கொள்ள வேண்டியது கல்வியின் தரம் மட்டுமே. தரமான கல்வியினை வழங்குவது செயல்வழிக் கற்றல் பள்ளிகளின் செயல்பாடுகளைக் காணும்போது சாத்தியமான ஒன்றாகவே உள்ளது. செயல்வழிக் கற்றல் பள்ளிகளில் கல்வி அடைவு நிலையின் விகிதம் உயர்ந்தே உள்ளது. எனவே, தமிழக அரசு மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தொடக்க நிலை வகுப்புகளில் இச்செயல்வழிக் கற்றல் முறையினை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. கணிதத்தைக் கற்பதில் "தானே கற்றல் கணித உபகரணங்கள்" சிறந்த துணைக் கருவிகளாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

### 1.13. பள்ளியில் சேர்த்தல்-நிலை நிறுத்தல்

அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல் என்பது சவாலான பணியாக இருப்பினும் நமது மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகளினால் இது ஒரு சாதனையாக்கப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கை விகிதம் தொடக்கப் பள்ளி நிலையில் 99.29 சதவிகிதமாகவும், நடுநிலைப் பள்ளி அளவில் 98.25 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

அனைவருக்கும் கல்வி இயக்கச் செயல்பாடுகளின்மூலம் தொடக்கப் பள்ளி நிலையில் இடைநிற்றல் விகிதம் 2005-06-ல் 3.81 சதவிகிதத்திலிருந்து தற்போது 1.91 சதவிகிதமாகவும், நடுநிலைப் பள்ளி நிலையில்



2007 ஏப்ரல் 9]

7.58 சதவிகிதத்திலிருந்து 4.08 சதவிகிதமாகவும் குறைந்துள்ளது. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி அளவில் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளுக்கான இடைநிற்றல் விகிதம் குறைந்து காணப்படுதல் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

2001 ஆம் ஆண்டிற்கான குடியிருப்பு கணக்கெடுப்பின்படி நமது மாநிலத்தில் பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 5.74 இலட்சமாகும். இதில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கை 1.03 இலட்சமாக பெருமளவில் குறைந்துள்ளது.

### 1.14. இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி

- 95,913 இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம், 35 தன்னார்வத் தொண்டு நிறுவன சேவையுடன் 18,000 குழந்தைகளுக்கு இல்லம் சார்ந்த பயிற்சி.
- வட்டாரம்தோறும் மருத்துவ முகாம்கள்; கடந்த ஆண்டில் 488 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 18,474 இயலாக் குழந்தைகளுக்கு உதவிச் சாதனங்கள்; ஆண்டுதோறும் குழந்தைகளுக்குப் பொருத்தமான அறுவை சிகிச்சை; 2006-2007 ஆம் ஆண்டில் மட்டும் 1,379 அறுவை சிகிச்சைகள்.
- 412 வட்டார வள மையங்களிலும் சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான வள மையங்கள்.
- 2,605 இயலாக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் 236 பகல் நேரப் பராமரிப்பு மையங்கள்.

### 1.15. தேசிய பெண் கல்வித் திட்டம் மற்றும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம்

- 11 மாவட்டங்களில் 37 வட்டாரங்களில் தேசிய தொடக்க நிலை பெண்களுக்கான கல்வித் திட்டம்; 937 மாதிரி தொகுப்புப் பள்ளிகள்.
- 665 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள்; 675 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்கு ரூ.30,000 வீதம் கற்றல், கற்பித்தல் கருவிகள்.
- 37 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உறைவிட விடுதிகள்; 10 முதல் 14 வயதுள்ள 1,879 பள்ளி செல்லாக் குழந்தைகள் பயனடைகின்றனர்.

[2007 ஏப்ரல் 9

***2007—2008ஆம் ஆண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள முக்கியமான செயல்பாடுகளின் விவரம் வருமாறு:***

**1.16. மழலையர் முன்பருவ நலக் கல்வி மற்றும் கணினிவழிக் கல்வி**

- *5,040 தரம் உயர்த்தப்படாத அங்கன்வாடி மையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்; 6,797 மையங்களுக்கு மழலையர்க்கு உகந்த கற்றல் உபகரணங்கள்; 35,494 அங்கன்வாடி பணியாளர்களுக்குப் பயிற்சி; கணினிவழிக் கற்றல் மையங்களுக்கு கணினி வழங்குதல்.*
- *20,000 தரம் உயர்த்தப்பட்ட அங்கன்வாடி மையங்களுக்குக் கற்றல் உபகரணங்கள்*
- *80 புதிய குறு அங்கன்வாடி மையங்கள்*

**1.17. பள்ளி செல்லாக் குழந்தைகள்**

- *1,03,261 பள்ளி செல்லாக் குழந்தைகளை இணைப்பு மையங்கள் மற்றும் உறைவிட முகாம்களில் சேர்த்தல்.*

**1.18. மானியங்கள்**

- *2,13,659 தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ.500 வீதம் கற்றல், கற்பித்தல் பொருட்களுக்கான மானியத் தொகை.*
- *37,504 தொடக்க மற்றும் 14,015 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.2,000 வீதம் பள்ளி மானியத் தொகை.*
- *30,787 தொடக்க மற்றும் 10,587 நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.5,000 வீதம் பராமரிப்பு மானியத் தொகை.*
- *210 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு கற்றல், கற்பித்தல் கருவிகளுக்கான மானியத் தொகை ரூ.10,000; நிலை உயர்த்தப்பட்ட 338 நடுநிலைப் பள்ளிகளுக்கு கற்றல்,.கற்பித்தல் கருவிகளுக்கான மானியத் தொகை ரூ.50,000.*

**1.19. இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி**

- *92,354 இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டம்.*



2007 ஏப்ரல் 9]

- *சிறப்புக் கவனம் தேவைப்படும் 26,202 இயலாக் குழந்தைகளுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி.*
- *30,516 இயலாக் குழந்தைகளுக்கு கல்விச் சுற்றுலா.*
- *ஒவ்வொரு ஒன்றியத்திலும் மருத்துவ முகாம்; தேவைப்படும் குழந்தைகளுக்கு உதவி சாதனங்கள் மற்றும் அறுவை சிகிச்சை.*
- *32,384 இயலாக் குழந்தைகளுக்கு தொழில் திறன் பயிற்சி.*

**1.20. பயிற்சி**

- *கல்வித் தர மேம்பாட்டிற்காக 2,13,659 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி.*
- *திட்டச் செயல்பாடுகளை மேற்கொள்வதற்காக 1,30,647 கிராம கல்விக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி.*
- *இயலாக் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி வழங்குவதற்கு 16,889 ஆசிரியர்கள் மற்றும் கிராம கல்விக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி.*
- *5,102 திட்டப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி.*
- *நடுநிலை வகுப்புகளில் பயிலும் 1,18,300 மாணவிகளுக்கு தொழில் திறன் பயிற்சி; 34,340 மாணவிகளுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி.*
- *37,700 மாணவர்களுக்கு வாழ்வியல் திறன் பயிற்சி; 43,500 மாணவர்களுக்கு ஆங்கிலம்மூலம் தொடர்புகொள்ளும் திறன் வளர்த்தல் பயிற்சி.*

**1.21. கட்டடப் பணிகள்**

- *30 வட்டார வள மையக் கட்டடங்கள்.*
- *1,136 பள்ளித் தொகுப்பு வள மையக் கட்டடங்கள்.*
- *4,105 வகுப்பறைக் கட்டடங்கள்.*
- *1,220 பள்ளிகளுக்குக் கழிப்பறை மற்றும் குடிநீர் வசதி.*
- *10,945 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு மின் இணைப்பு வசதி.*
- *220 பள்ளிகளுக்கு குழந்தைகளுக்கு உகந்த அமைப்புகள்.*

[2007 ஏப்ரல் 9

**1.22. தேசிய பெண் கல்வித் திட்டம் மற்றும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டம்**

- 339 மாதிரி தொகுப்புப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள்
- தொழில் திறன் பயிற்சி மற்றும் குறைதீர் கற்பித்தல்
- 16 புதிய கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிட பள்ளிகள் ஆரம்பித்தல், இதன்மூலம் 1,100 பள்ளி செல்லாத 10 முதல் 14 வயதுள்ள பெண் குழந்தைகள் பயனடைவர்.

**2. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி**

**2.1. தொலைநோக்கு**

1. குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலும், மாவட்டங்களிலும் உள்ள மாணவர்களைச் சென்றடையும் வகையில் இடைநிலைக் கல்வியைப் பரவலாக்குதல்.
2. அனைவருக்கும் தரமான கல்வியை அளித்தல்.
3. பொதுவாக மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்கவும், குறிப்பாக கிராமப்புறக் குழந்தைகளைப் பள்ளிகளில் தக்க வைக்கவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது.
4. சமூக, பொருளாதார, பால்-பாகுபாடு மற்றும் ஊனத்தின் அடிப்படையிலான தடைகளை நீக்குதல்.
5. பல்வேறு பாடங்களைக் கையாளும் ஆசிரியர்களின் கற்பிக்கும் திறமைகளை மேம்படுத்துதல்.
6. மாணவர்களை சுய வேலைவாய்ப்பு தேடும் திறமை உடையவர்களாக உருவாக்குதல்.
7. மாணவர்களுக்கு நுண் திறமைகள் மற்றும் வாழ்வியல் கல்விக்குத் தங்களை வேலைவாய்ப்புச் சந்தையின் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் தயார்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.
8. மதிப்புடைய கல்வியை அளித்தல்.



2007 ஏப்ரல் 9]

மேற்காணும் இலக்குகளை அடைவதற்காக கீழ்க்காணும் திட்டங்களும் முன்முயற்சிகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன:—

**2.2. பாடத் திட்டம் மேம்படுத்துதல்—ஆசிரியர்களின் திறமைகளை வளர்த்தல்**

பள்ளிப் படிப்பின் இறுதிக் கட்டத்தில் திறமையான தரம்வாய்ந்த மாணவர்களை உருவாக்குவதில் பாடத் திட்டம் முக்கியமான பங்கேற்கின்றது. பாடத் திட்டத்திற்கான உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், தேசிய கல்வி ஆணையத் தரத்திற்கு இணையாக தமிழ்நாடு அரசு பாடத் திட்டத்தினை மேம்படுத்தி உள்ளது.

2006-2007 ஆம் ஆண்டில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பயிற்சித் திட்டத்திற்காக அரசு ரூ.50 இலட்சங்களை ஒப்பளித்துள்ளது. அனைத்து ஆசிரியர்களும் இந்தப் பணியிடைப் பயிற்சியினைப் பெற்றுள்ளனர். இப்பயிற்சியினால், மாணவர் மற்றும் ஆசிரியர் சமுதாயம் பயனடைந்துள்ளது.

**2.3. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளைத் துவக்குதல்**

2006-2007 ஆம் ஆண்டில் 120 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. 120 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. 2007-2008 ஆம் ஆண்டில் 80 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த கருதப்பட்டுள்ளது. 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த கருதப்பட்டுள்ளது.

**2.4. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்**

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அடிப்படைத் தேவைகளான வகுப்பறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, மின் வசதி, கற்பித்தல் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டுத் திடல்கள் முதலியவை கிடைக்க வழிவகுக்கின்றன. இத்தேவைகளைப் பூர்த்தி செய்திட விருப்ப நன்கொடைகள் பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் ஏழு மாவட்டங்களில் இம்மாதிரியான 'பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்' நடத்தத் திட்டமிடப்பட்டு இரண்டு மாவட்டங்களில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. எஞ்சிய மாவட்டங்களில் விரைவில் நடத்தப்படும்.

[2007 ஏப்ரல் 9

**2.5. உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி**

**அ. உயர்நிலைப் பள்ளிகள்**

2006-2007 ஆம் ஆண்டில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் 125 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளுக்கு ரூ.418.74 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**ஆ. மேல்நிலைப் பள்ளிகள்**

கணினி வல்லுநர்களை உருவாக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட கணினிக் கல்வித் திட்டம் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. 1999-2000 ஆம் ஆண்டில் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கணினி வழங்கப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் மேலும் 515 பள்ளிகளில் கணினி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் கணினிக் கல்வியைப் பயிற்றுவிக்க 1,880 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கணினிகள் வழங்கப்படும். முறையான ஊதிய விகிதத்தில் 1,880 கணினி ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

**2.6. நூலக வசதிகளை மேம்படுத்துதல்**

2006-2007 ஆம் ஆண்டில் 220 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வாங்க ரூ.38 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2007-2006 ஆம் ஆண்டில் மேலும் 220 அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வாங்க ரூ.38 இலட்சம் அனுமதிக்க அரசு கருதியுள்ளது.

**2.7. ஆங்கில மொழி ஆய்வகங்கள்**

பொதுத் தேர்வு முடிவுகளை ஆய்வு செய்ததில் பெரும்பாலான மாணவர்கள் ஆங்கிலத்தில் மட்டும் தேர்ச்சி பெறத் தவறியதால் படிப்பைத் தொடரா நிலை இருப்பது தெரிய வந்துள்ளது. ஒருங்கிணைந்த உலகில் ஆங்கில மொழித் திறமை என்பது இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. அதனால் அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகம் அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் 40 அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகம் அமைக்க ரூ.150 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டிற்கும் அதே அளவு நிதி அனுமதிக்க கருதப்பட்டுள்ளது.

**2.8. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி**

பொதுக் கல்விக்கும், தொழிற்கல்விக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்கும் நோக்கில் 1978-79 ஆம் ஆண்டில் தொழிற்கல்வி



2007 ஏப்ரல் 9]

ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 1,605 மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வியினை நெறிப்படுத்திட ஓர் உயர்மட்டக் குழு அமைக்கக் கருதப்பட்டுள்ளது.

**2.9 நாட்டு நலப் பணித் திட்டம்**

மத்திய மற்றும் மாநில அரசுகள் நாட்டு நலப் பணித் திட்டத்திற்கு 7:5 என்ற விகிதத்தில் நிதி உதவி செய்கின்றன. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.251.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைத் தொடர்வதற்கு அரசு தீவிர நடவடிக்கையினை எடுத்து வருகிறது.

இத்திட்டம் மாநிலத்தில் தொடர்ந்து செயல்படவும், இத்திட்டம் செயல்படாத இதர மேல்நிலைப் பள்ளிகளுக்கும் இப்பயன் கிடைப்பதற்கும் இவ்வரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. மாநிலத்தில் தற்சமயம் 1,620 அமைப்புகள் மூலம் 81,000 மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர். 2007-2008 ஆம் ஆண்டில் கூடுதலாக 250 அமைப்புகள் ஏற்படுத்த கருத்தப்பட்டுள்ளது.

**2.10. சாரண சாரணியர் இயக்கம்**

தமிழ்நாட்டில் 5,845 பள்ளிகளில் சாரண, சாரணியர் இயக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் 1,18,425 மாணவர்களும், 59,287 மாணவிகளும் உள்ளனர். கோயில்களைச் சுத்தப்படுத்துதல், மரம் நடுதல், போக்குவரத்தைச் சீர்படுத்துதல், முதலுதவி செய்தல் போன்ற சமூக நலச் செயல்பாடுகளை இவ்வமைப்பு செய்து வருகின்றது. ஒவ்வோராண்டும் சிறந்த நூற்றுக்கணக்கான சாரணர்களுக்கு ஒப்பற்ற 'ராஜ்ய புரஸ்கார்' என்ற விருது வழங்குவது 1998-1999 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. மாணவர்களிடையே நல்லெண்ணத்தை உண்டாக்கும் பொருட்டு இவ்வமைப்பு அரசு உதவிபெறும், உதவி பெறாத மற்றும் மெட்ரிகுலேஷன் போன்ற அனைத்து வகைப் பள்ளிகளிலும் தொடங்கப்பட்டிருக்கிறது. 2006-2007 ஆம் ஆண்டில் 'ராஜ்ய புரஸ்கார்' விருதுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.11. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்**

தமிழ்நாட்டில் பெரும்பான்மையான பள்ளிகளில் இந்திய இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாவட்டத்தின் ஆட்சித் தலைவர், மாவட்டத்தின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின்

[2007 ஏப்ரல் 9

புரவலர் ஆவார். தமிழ்நாட்டில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் 5,462 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2,30,900 மாணவர்களுடன் 2,82,200 மாணவிகளுடன் தேவையான எண்ணிக்கையிலான ஆலோசகர்களுடன் செயல்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் துவக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

## 2.12. தடகள விளையாட்டு மற்றும் யோகா பயிற்சிகள்

அனைத்துப் பள்ளிகளிலும் 6, 7, 8. ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கரின் சிறப்புத் தன்மைகளைக் கண்டறிய ஐந்து தொடர் தேர்வுகள் நடத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது குழந்தைகளின் வேகம், சகிப்புத் தன்மை, வலிமை, திறமை வெளிப்படுத்தும் ஆற்றல், உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றை அறியவும் மற்றும் ஒரு குறிப்பிட்ட விளையாட்டில் குழந்தைகளின் ஆற்றலைச் சுட்டிக்காட்டவும் உதவுகிறது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை உதவியுடன் இத்திட்டத்தின்மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களைக் கண்டறியமுடிகிறது.

2006-2007 ஆம் கல்வியாண்டுக்கான மாநில அளவிலான பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் கிருஷ்ணகிரியில் 6-12-2006 முதல் 9-12-2006 வரை நடைபெற்றன. இதில் 1,756 மாணவிகளும் 1,956 மாணவர்களும் கலந்து கொண்டனர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. 2006-2007 ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான குடியரசு நாள் போட்டிகள் திருச்சியில் நடைபெற்றன. மாநில அளவிலான குடியரசு தின விளையாட்டுப் போட்டிகள் தஞ்சையில் நடைபெற்றன. பதற்றம் காரணமாக ஆசிரியர்கள் மனம் மற்றும் உடல் அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களின் கற்பிப்புத் திறன் குறைந்துள்ளது. மாணவர்களும் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது மனத் திடம், நினைவாற்றல், புத்திக் கூர்மை ஆகியவற்றை மேம்படுத்தவும், பொதுவான மற்றும் பண்பாட்டு ஒழுக்கங்களைச் செம்மைப்படுத்தவும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு யோகா மிகவும் உதவுகிறது. எனவே மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக உடற்கல்வி ஆசிரியர்களுக்கு யோகா பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 9]

## 2.13. ஆசிரியர்களுக்கான மாநில விருது

தமிழக அரசு 1960-லிருந்து ஆண்டுதோறும் நல்லாசிரியர் விருது வழங்கி வருகின்றது. 1997 ஆம் ஆண்டிலிருந்து இவ்விருது "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி அன்று வழங்கப்பட்டு வருகிறது.

மிகச் சிறப்பான வகையில் பணியாற்றும் ஆசிரியர்களைக் கண்டறிந்து அவர்களைப் பெருமைப்படுத்த சிறப்புமிக்க இவ்விருது வழங்கப்படுகிறது.

பல்வேறு மேலாண்மையின்கீழ் இயங்கும் அனைத்து வகைப் பள்ளிகளிலிருந்தும் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். கடந்த ஆண்டு ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள், ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள், சமூகப் பாதுகாப்புத் துறைப் பள்ளிகள் ஆகிய அனைத்துப் பள்ளிகளிலிருந்தும் 344 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

## 2.14. ஆசிரியர்களுக்கான தேசிய விருது

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை இந்தியா முழுவதும் உள்ள ஆசிரியர்களில் சிறந்த ஆசிரியர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தேசிய விருது வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் துவக்க, இடைநிலை, உயர்நிலை, மேல்நிலை ஆசிரியர்களில் 22 பேருக்கும் மூன்று சிறப்பு வகைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விருது வழங்கப்பட்டு வருகிறது.

## 2.15. தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

தேசிய ஆசிரியர் நல நிறுவனம் 1962-ல் நிறுவப்பட்டது. மாண்புமிகு கல்வி அமைச்சர் இதன் அலுவல்சாரா தலைவர் ஆவார். பள்ளிக் கல்வி இயக்குநர் இதன் அலுவல்சாரா செயலர் ஆவார். இந்நிறுவனம் பள்ளிக் கல்வி இயக்குநரின் மேற்பார்வையின்கீழ் இயங்குகிறது.

ஆசிரியர் நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதி, ஆசிரியர் தின கொடி விற்பனை வருவாயிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

[2007 ஏப்ரல் 9

**2.16. ஆசிரியர்களுக்கான மருத்துவ உதவி**

i. இந்தத் திட்டத்தின்கீழ் நோயால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கு செலவு செய்யப்பட்ட மொத்த செலவினத்தில் ரூ. 50,000 அல்லது 75% இதில் எது குறைவாக உள்ளதோ, அத்தொகை நிதி உதவியாக அளிக்கப்படுகிறது.

ii. தேசிய அல்லது மாநில விருது பெற்ற சிறந்த ஆசிரியர்களுக்கு இந்தியாவில் உள்ள ஏதேனுமொரு இடத்திற்கு துணைவருடன் செல்ல 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிகபட்சம் 14 நாட்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

iii. ஆசிரியர்களின் பிள்ளைகள் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பட்டயப் படிப்பு பயில முறையே ரூ. 5000/- மற்றும் ரூ. 2500/- பயிற்சி கால உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

**2.17. ஆசிரியர்கள் இல்லம்**

ஆசிரியர்களின் நலனுக்காக சென்னையில் ஓர் இல்லம் செயல்படுகிறது. இவ்வில்லத்தில் ஆசிரியர்களுக்கு குறைந்த செலவில் தங்க இட வசதி அளிக்கப்படுகிறது.

**2.18. மாணவர்களுக்கு இனம், வருவாய் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் வழங்குதல்**

இனம், வருவாய் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பங்களை பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களிடமிருந்து சார்ந்த தலைமையாசிரியரே பெற்று உரிய வட்டாட்சியருக்கு அனுப்பி மேற்படிச் சான்றிதழ்களைப் பெற்று அம்மாணவர்கள் பள்ளியை விட்டுச் செல்லும்போது வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1999-2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் கடந்த ஆண்டில் புத்தாக்கம் செய்யப்பட்டு வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**2.19. மாணவர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை**

திறமைமிக்க மாணவர்கள் தங்கள் மேற்படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இத்திட்டத்தைக் கொணர்ந்தது. இத்திட்டத்தின்படி மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாகப்



2007 ஏப்ரல் 9]

படித்து 12 ஆம் வகுப்புத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அரசு, மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ இந்தியன் பள்ளி மாணாக்கர்களுக்கு பரிசுத் தொகை கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது:

1. முதலிடம் ரூ. 15,000/-
2. இரண்டாமிடம் ரூ. 12,000/-
3. மூன்றாமிடம் ரூ. 10,000/-

இது தவிர மேல்நிலைத் தேர்வில் மாநில அளவில் முதல் 3 இடங்களைப் பெறும் மாணாக்கர்களின் மேற்கல்விக்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கிறது.

மேலும் மேல்நிலைத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப் பள்ளி-1, நிதியுதவி பெறும் பள்ளி-1 ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேஷன், சுயநிதிப் பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து-1) பள்ளி மாணாக்கர்களுக்கு மேற்கல்விக்கான முழுச் செலவையும் அரசே ஏற்கிறது.

அதேபோன்று மாநில அளவில் தமிழை முதல் மொழிப் பாடமாக படித்து முதல் மூன்று இடங்களைப் பெறும் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:

1. முதலிடம் ரூ. 7,500/-
2. இரண்டாமிடம் ரூ. 6,000/-
3. மூன்றாமிடம் ரூ. 5,000/-

இதுதவிர, மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று வகை (அரசுப் பள்ளி-1, நிதியுதவி பெறும் பள்ளி-1, ஆங்கிலோ இந்தியன், மெட்ரிகுலேஷன், சுயநிதிப் பள்ளி ஆகிய மூன்றும் சேர்ந்து-1) பள்ளியில் 10 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மேற்கல்விக்கான செலவினமாக ரூ. 1500/- வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் ரூ. 485.57 இலட்சம் செலவினத்தில் மொத்தம் 1,880 மாணாக்கர்கள் பயன் பெறுகின்றனர்.

**2.20. ஊரகத் திறனாய்வுத் தேர்வுத் திட்டம்**

பள்ளிகளில் பயிலும் சிறந்த திறமைமிக்க மாணாக்கர்களைத் தெரிவு செய்ய இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும்

[2007 ஏப்ரல் 9

ஆகஸ்டு மாதத்தில் அரசுத் தேர்வு இயக்குநரால் இத்தேர்வு நடத்தப்படுகிறது. இத்தேர்வுமூலம் மாவட்டந்தொறும் 50 மாணவர்களும் 50 மாணவிகளும் தெரிவு செய்யப்படுகின்றனர். தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி தொடர ஆண்டொன்றுக்கு ரூ. 1000 வீதம் 4 ஆண்டுகளுக்குப் பயிற்சிக் கால உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அரசால் செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

## 2.21. இளைஞர் திறன் வளர்த்தல் திட்டம்

இத்திட்டத்தின்மூலம் மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணர பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியம் வரைதல், வினாடி வினா, இசை, கவிதை எழுதுதல், பரத நாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகள் இசைத்தல், நடித்தல், ஓரங்க நாடகம் மற்றும் நாடகங்கள் போன்ற பல போட்டிகள் நடத்தப்படுகின்றன.

ஒவ்வோராண்டும் பள்ளி அளவிலும் கல்வி மாவட்ட அளவிலும், வருவாய் மாவட்ட அளவிலும் போட்டிகள் நடத்தப்பட்டு பின் இறுதியாக மாநில அளவிலும் நடத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு அளவிலும் வெற்றி பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

## 2.22. அறிவியல் கண்காட்சி

ஒவ்வொரு வருடமும் ஆந்திரப் பிரதேசம், கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் சார்பில் ஒரு மாநில தலைநகரத்தில் திரு. விஸ்வேஸ்வரையா அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அருங்காட்சியகத்தின் ஒத்துழைப்புடனும் நிதி உதவியுடனும் மண்டல நிலையிலான அறிவியல் கண்காட்சி நடைபெற்று வருகிறது.

2007-2008 ஆம் ஆண்டிற்கான கண்காட்சி தமிழ்நாட்டில் நடைபெற உள்ளது.

## 2.23. மாணவர்களுக்கான நிதியுதவி

அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் வருமானம் ஈட்டும் தாய் அல்லது தந்தை விபத்தில்



2007 ஏப்ரல் 9]

இறந்தாலோ அல்லது நிரந்தரமாக முடமாக்கப்பட்டாலோ அந்த மாணவர் அல்லது மாணவிக்கு ரூ.50,000 வழங்கும் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.2.25 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். 2007-2008 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்காக ரூ.2.25 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2.24. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள்—விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம், 2006

10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்த வேளாண்மை தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்படுகிறது:—

| | மாணவி | மாணவர் |
|---|---|---|
| 10 ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்தவர் | ரூ.1,500 | ரூ.1,250 |
| 12 ஆம் வகுப்பு தேர்ச்சி அடைந்தவர் | ரூ.2,000 | ரூ.1,750 |

2006-07 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.2 கோடி தகுதிபெற்ற மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.25. பள்ளிக் கல்வித் துறையில் மின் ஆளுமை

1. தேசிய அளவில் பொது நிர்வாகம் வெளிப்படையாகவும், திறமையாகவும், திறம்படவும் செயல்பட இந்திய அரசு மின் ஆளுமைத் திட்டம் வகுத்துள்ளது. மாநில அரசின் கொள்கை, குறிக்கோள் மற்றும் நோக்கங்களைத் திட்ட செயலாக்கக் குழு மற்றும் மாநில தலைமைக் குழு மாநில அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2. பள்ளிக் கல்வித் துறை சார்ந்த மின் ஆளுமை தொலைநோக்கு மற்றும் மின் ஆளுமை நடவடிக்கை வரைவுகளை விப்ரோ நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்க ஓர் இணைப்பு அலுவலரை அரசு நியமித்துள்ளது.

3. விப்ரோ நிறுவனம் இது தொடர்பான அறிக்கையினை இறுதி செய்து மாநில அரசுக்கு அளித்துள்ளது. அந்த அறிக்கை மத்திய அரசுக்கு மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்படவுள்ளது.

[2007 ஏப்ரல் 9

## 2.26. வலைத் தளம் உருவாக்குதல்

பள்ளிக் கல்வித் துறையில் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் அரசு பல நலத் திட்டங்களை அறிவித்துள்ளது. பள்ளிக் கல்வித் துறையில் கீழ்க்காணும் காரணங்களுக்காக வலைத்தளம் தோற்றுவித்தல் தேவையானதாகவும், இன்றியமையாததாகவும் உள்ளது:-

(1) பள்ளிக் கல்வித் துறையின் செயல்பாடுகளை அறிந்துகொள்ள

(2) 6 முதல் 12 வகுப்பு வரையான பாடத் திட்டங்கள் மற்றும் திட்ட வரைவு மற்றும் பாடத் திட்டங்களில் ஏதேனும் மாற்றம் இருப்பின் அவற்றை அறிந்துகொள்ள

(3) மாணவ, மாணவியருக்கான நலத் திட்டங்கள், புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட நலத் திட்டங்கள் குறித்த அறிவிப்புகளை அறிந்துகொள்ள

தேசிய தகவல் மையத்தின் ஒருங்கிணைப்புடன் வலைத் தளம் தோற்றுவித்தல் நடைமுறைப்படுத்தப்படும்.

## 2.27. நபார்டு

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள், ஆய்வகங்கள், கழிப்பறைகள் கட்டுதல், குடிநீருக்கு ஏற்பாடு செய்து கொடுத்தல் மற்றும் மின் வசதி அளிப்பது போன்ற உள்கட்டமைப்புத் தேவைகள் நபார்டு திட்டத்தின்கீழ் செய்து கொடுக்கப்படுகின்றன. 605 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 3 கட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்துதர ரூ.182.74 கோடி ஒப்பளிக்கப்பட்டு அவை வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. 978 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு, IV முதல் VII கட்டங்களின்கீழ் ரூ.525.25 கோடி ஒப்பளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

## 2.28. தமிழ்நாடு பெற்றோர், ஆசிரியர் கழகம்

பள்ளி செல்லும் வயதில் உள்ள குழந்தைகளை அருகில் உள்ள பள்ளியில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து கல்வி பயிலச் செய்வது மட்டுமல்லாது, கல்வியின் தரத்தை மேம்படுத்துவதும் பெற்றோர், ஆசிரியர் கழகத்தின் குறிக்கோள் ஆகும்.



2007 ஏப்ரல் 9]

பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் நன்கொடையாகப் பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்றன. பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் இக்கழகம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

## 2.29. வாழ்க்கை செயல்திறன் கல்வி அறிமுகம்

மாணவ, மாணவியரின் பல்வேறு அறிவுசார்ந்த செயல்திறன்களை வளர்க்கவும், பள்ளி மாணவர்களின் மேம்பாட்டுக்காகவும், அவர்களுக்கிடையே உள்ள தனித்தன்மையை மேம்படுத்தவும் மென் செயல் திறன்களை அறிமுகப்படுத்த மென் செயல்திறன் வகுப்பு வடிவமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.30. சமச்சீர் கல்வி

தமிழ்நாட்டில் பத்தாம் வகுப்பு வரை சமச்சீர் கல்வியை அறிமுகம் செய்வதற்காக பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் முத்துக்குமரன் தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கை ஏப்ரல் 2007-ல் எதிர்பார்க்கப்படுகிறது.

# 3. மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

## 3.1. முன்னுரை

மெட்ரிகுலேஷன் பள்ளிகள், சுயநிதி அடிப்படையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட கலைத் திட்டம் மற்றும் பாடத் திட்டத்தின்படி, ஆங்கில வழியில் கல்வி கற்பித்து வருகின்றன. முதலில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சென்னை மற்றும் மதுரை பல்கலைக்கழகங்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வந்தன. 1976-ல் இப்பள்ளிகள் பள்ளிக் கல்வித் துறையின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தற்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககத்தின்கீழ், 3,538 மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

## 3.2. மெட்ரிகுலேஷன் பள்ளிகளை நெறிப்படுத்தல்

1978 ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட "மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித்தொகுப்பு" இன்றளவும் செயல்பாட்டில் இருந்து வருகிறது. தமிழ்நாடு அரசு, மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் கல்வி நலனைக் கருத்திற்கொண்டு, பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான பள்ளி உட்கட்டமைப்பிற்கான விதிகளை உள்ளடக்கிய விதிமுறைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

[2007 ஏப்ரல் 9

### 3.3. திருத்திய மெட்ரிகுலேஷன் பாடத் திட்டம்

மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் திருத்திய பாடத் திட்டம், கீழ்க்கண்ட அட்டவணைப்படி வடிவமைக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது:—

| வ.எண். | ஆண்டு | வகுப்புகள் |
|---|---|---|
| 1. | 2005-2006 | LKG, UKG, I, II, VI மற்றும் IX |
| 2. | 2006-2007 | III, IV, VII மற்றும் X |
| 3. | 2007-2008 | V மற்றும் VIII |

மேலும், தமிழ்நாடு பாடநூல் கழகத்தால் 10 ஆம் வகுப்புக்குப் புதிய பாட நூல்கள் அச்சடிக்கப்பட்டு மெட்ரிகுலேஷன்/மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 3.4. மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் மொழி கற்பிப்பதை கட்டாயமாக்குதல்

மெட்ரிக்/மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் ஒரு கட்டாய மொழிப் பாடமாக பயிற்றுவிப்பதைப் படிப்படியாக நடைமுறைப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. அதன் அடிப்படையில் 2006-2007 ஆம் கல்வியாண்டிலிருந்து அனைத்து மெட்ரிக்/மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளிலும் முதல் வகுப்பு பகுதி I-ல் தமிழ் கட்டாய மொழிப் பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

## 4. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 4.1. தொலைநோக்கு

இந்த இயக்ககம் கீழ்க்காணும் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தக் கருதுகிறது:—

- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் தமது கருத்துகளைத் தெளிவாக வெளிப்படுத்தும் திறனைப் பெறுவதற்கான வகுப்பறைக் கற்பித்தலை மேம்படுத்தல்.
- தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இணக்கமான, கற்பித்தல் முறைகளை மேம்படுத்தல்.



2007 ஏப்ரல் 9]

- தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளி மாணவர்களின் பாட இணைச் செயல்பாடுகளான உள் மற்றும் வெளி அரங்க விளையாட்டுகள், மன்றச் செயல்பாடுகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் முழுமையான திறன்களை மேம்படுத்தல்.

### 4.2. தர மேம்பாடு

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் பணியிடைப் பயிற்சிகள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், கல்வியாளர்களுக்கான களப் பயண அனுபவம், மாவட்ட மற்றும் மாநில அளவிலான கருத்தரங்குகள், செயலாராய்ச்சிகள் மற்றும் கல்வியியல் ஆய்வுகள் போன்றவற்றைத் திட்டமிட்டு நடத்தி வருகிறது.

### 4.3. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்

தற்போது 477 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இந்நிறுவனங்களில் பயிலும் ஆசிரியர் பயிற்சி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 32,740 ஆகும். இவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் வெளிப்படையான, ஒற்றைச் சாளர முறைக் கலந்தாய்வுமூலம் சேர்க்கை செய்யப்படுகின்றது.

ஆசிரியர் கல்வியின் ஒழுங்கமைப்பு நிறுவனமான தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் பெங்களூர் தென் மண்டலக் குழு, புதிய ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களுக்கு அங்கீகாரம் வழங்குகிறது. அங்கீகாரம் பெற்ற தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் பெயர்ப் பட்டியல், அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை எண்ணிக்கை ஆகிய தகவல்கள் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களிலும், முதன்மைக் கல்வி அலுவலகங்களிலும், அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகங்களிலும் பொதுமக்கள் மற்றும் மாணவர்களின் நலன் கருதி வெளியிடப்பட்டுள்ளன.

### 4.4. 2006-2007 ஆம் ஆண்டு பயிற்சித் திட்டங்கள்

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் பணித் திறன் மேமபாட்டிற்காகவும் வகுப்பறைக் கற்பித்தலை வலுப்படுத்தவும், புதிய கற்பித்தல் அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தவும், பாடப் பொருள் அறிவை அதிகரிக்கவும், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் பணியிடைப் பயிற்சிகளை நடத்துகிறது. பணியிடைப் பயிற்சிகள் கீழ்க்கண்டவாறு வகுப்பறை கற்பித்தல் நாட்கள் பாதிக்கப்படா வண்ணம் 18 நாட்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது:—

[2007 ஏப்ரல் 9

1. செயல்வழிக் கற்றல் பயிற்சி முறையில் ஆறு நாட்கள் ஆண்டுப் புத்துணர்வுப் பயிற்சி
2. தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குக் குறுவள தொகுப்பாய்வு மையப் பயிற்சி
3. தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்குப் பள்ளி நிர்வாகத் திறன் மற்றும் வகுப்பறை மேலாண்மை குறித்த பயிற்சி

**4.5. நுழைநிலைப் பயிற்சி**

புதிதாக நியமிக்கப்பட்ட முதுகலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் இடைநிலை ஆசிரியர்களுக்கு நுழைநிலைப் பயிற்சி (Induction Training) அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் வாயிலாக இவ்வாசிரியர்கள் பாடக் கருத்துகள் குறித்த தெளிவும், புதிய கற்றல், கற்பித்தல் அணுகுமுறைகள் மற்றும் கற்பித்தலில் புதிய தகவல் தொழில்நுட்ப அறிவினைப் பயன்படுத்துதல் போன்ற செய்திகளை அறிந்துகொள்ள முடியும்.

**4.6. 2007-2008 ஆம் கல்வி ஆண்டுக்குத் திட்டமிடப்பட்டுள்ள பயிற்சிகள்**

தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சிகள் கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளன:—

1. செயல்வழிக் கற்றல் பயிற்சி (தொடக்க நிலை)
2. பாடப் பொருள் மற்றும் கற்பித்தல் பயிற்சி (உயர் தொடக்க நிலை)
3. புதிதாகப் பணியேற்றுள்ள தொடக்க மற்றும் உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான நுழைநிலைப் பயிற்சி
4. பேரிடர் மேலாண்மையில் புத்துணர்வுப் பயிற்சி
5. சாலைப் பாதுகாப்பில் புத்துணர்வுப் பயிற்சி
6. இயலாக் குழந்தைகளுக்கான புத்துணர்வுப் பயிற்சி
7. புதிய பாட நூல்களில் புத்தறிவுப் பயிற்சி

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், மாவட்ட அளவில் கீழ்க்காணும் பயிற்சிகளை நடத்தியுள்ளது:—



2007 ஏப்ரல் 9]

1. குறிப்பிட்ட பாடப் பொருளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி
2. செயலாராய்ச்சி
3. பணியிடைப் பயிற்சித் திட்டங்களின் மதிப்பீடு
4. கற்பித்தல் பொருள்கள் ஒலி நாடா மற்றும் நிழற்படம் தயாரித்தலில் பயிற்சி
5. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கல்வியாளர்களுக்குச் சிறப்புக் கல்வியில் பயிற்சி
6. மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்களுக்குத் துறைவாரியான பயிற்சி
7. உலகளவிலான, தேசிய அளவிலான மற்றும் மண்டல அளவிலான கருத்தரங்குகளில் பங்குகொள்ளல்

பதினோராம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் 2007-2008 ஆம் கல்வியாண்டிற்குக் கீழ்க்கண்ட பயிற்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது:—

அ. கல்வித் தொழில்நுட்பங்களையும், மின்னணுக் கருவிகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கற்பித்தல் வளமூலங்களைப் பெருக்கப் பயிற்சி அளித்தல்.

ஆ. ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் நல்ல ஆளுமையுடன் கூடிய பேச்சுத் திறனை தொடக்கப் பள்ளி மாணவர்களிடையே வளர்க்க பயிற்சி அளித்தல்.

இ. கண்காணிப்பு மற்றும் வகுப்பறை செயல்பாடுகளில் மேற்பார்வை குறித்த தற்போதைய நிலையை மதிப்பிட்டு மேம்படுத்தப் பரிந்துரைத்தல்.

ஈ. முன்பருவக் கல்விக்குக் கலைத் திட்டம் வரையறுத்தல், கற்றல் பொருள்களை மேம்படுத்துதல் மற்றும் பயிற்சித் திட்டங்களை வடிவமைத்தல்.

உ. தமிழ்நாட்டின் அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்று முதல் நான்கு வகுப்பு வரை செயல்வழிக் கற்றலை நடைமுறைப்படுத்துதல்.

### 4.7. பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டம்

தமிழ்நாட்டில் அனைத்து வகையான பள்ளிகளிலும் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச் சங்கம் மற்றும் யூனிசெப் உதவியுடன் எய்ட்ஸ் கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. தமிழகத்திலுள்ள 9,423 பள்ளிகளிலுள்ள ஒன்பது மற்றும் பதினோராம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இத்திட்டத்தில் அடங்குவர்.

***பள்ளிகளில் எய்ட்ஸ் கல்வித் திட்டத்தின்மூலம் 2007-2008 ஆம் ஆண்டில் செயல்படுத்த உள்ள செயல்பாடுகள்***

2007-2008-ல் மாவட்ட மற்றும் மாநில அளவிலான குமரப் பருவக் கல்வித் திட்டக் (AEP) குழு அமைத்தல், பள்ளிகளில் 'சிவப்பு நாடா குழு' அமைத்தல், கிராமக்கல்வி குழுவினரின்மூலமாக பெற்றோரிடையே எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

### 4.8. கல்விச் செயற்கைக் கோளும் கல்வித் தொலைக்காட்சி படப் பதிவு நிலையமும்

கல்வித் தொலைக்காட்சிப் படப் பதிவு நிலையம், சென்னை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின்மூலம் சிறப்பான செயல்களைச் செய்து வருகின்றது. 2006-2007 ஆம் ஆண்டு முதல் இது தொழில்நுட்பம் சார்ந்த ஒலி-ஒளிக் காட்சி மற்றும் கல்விச் செயற்கைக் கோள் நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. கல்வித் தொழில்நுட்பவியலின் மாநில மையமாக கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிலையம் செயல்பட்டு வருகின்றது. 33 சிறந்த நிகழ்பட வரைவுகள் படப்பதிவு செய்யப்பட்டு சென்னைத் தொலைக்காட்சிக்குக் 'காண்போம் கற்போம்' நிகழ்ச்சிக்கென வழங்கப்பட்டுள்ளன.

### 4.9. 2007-2008-க்கான திட்டங்கள்

ஆறு வரைவுகள் எழுதும் பணிமனைகள் நடத்தப்பட்டு, ஒலி நாடா பதிவிற்கான நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட இருக்கின்றன. சிறந்த குரல் வளமும், எடுத்துரைக்கும் திறனும் கொண்ட தற்போது நிகழ்ச்சிகளை வழங்கும் ஆசிரியர்களுக்கு நிகழ்ச்சியினைச் செம்மையாக வழங்கும் பொருட்டு, ஒரு சிறப்பு பணிமனை நடத்தத் திட்டமிட்டுள்ளது. நிகழ்பட மற்றும் நகர்ப்பட தயாரிப்பிற்கான பாட வரைவுகளை வடிவமைப்பதற்கான புதிய அணுகுமுறைகளுடன்கூடிய பணிமனையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பாடப்



பொருள் வடிவமைக்கும் திறன் பெற்ற அனைத்து விரிவுரையாளர் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்களுக்கும் மின்வழிக் கல்வியைப் பயிற்றுவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வித் தொலைக்காட்சி படப் பதிவு அரங்கினுள் கல்விக் கோளினைப் பயன்படுத்த ஏதுவாக ஒரு தொலையரங்கமும் நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைவருக்கும் கல்வி இயக்ககம், பள்ளிக் கல்வி இயக்ககம், தொடக்கக் கல்வி இயக்ககம், அரசுத் தேர்வுகள் இயக்ககம் மற்றும் மெட்ரிகுலேஷன்பள்ளி இயக்ககம் போன்ற பல்வேறு இயக்ககங்கள் இவ்வசதியினைப் பயன்படுத்திக்கொள்ள இயலும்.

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக 'இன்டெல்' நிறுவனம், பணியில் உள்ள அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களுக்கும், பணி முன் பயிற்சி ஆசிரியர்களுக்கும் கல்வியில் உலகளாவிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பயிற்சியளிக்க உதவுகிறது. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் உதவியுடன் 61 முதன்மைக் கருத்தாளர்களைத் தேர்வு செய்து பயிற்சி அளித்துள்ளது. இன்டெல் நிறுவனத்தின் செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கலைத் திட்டம் ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களின் கலைத் திட்டத்துடன் ஒப்புநோக்கப்பட்டு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்புதிய கலைத் திட்டத்தின் பயனாக, 2,760 ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்கள் பயிற்சி பெறுவர்.

## 5. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி

### 5.1. முன்னுரை

'வளர் கல்வித் திட்டம்' சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட எழுத்தறிவுக் குழுமத்தால் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

வளர் கல்வித் திட்டத்தின் வழியே பொதுவாக அந்தந்த கிராம மக்களும், குறிப்பாக, புதிதாக எழுத்தறிவு பெற்றோரும் சமநிலைக் கல்வி, தனி நபர் விருப்ப முன்னேற்றம், வருவாய் பெருக்கத்திற்கான வாய்ப்பு, வாழ்க்கைத்தர மேம்பாடு போன்றவற்றுக்கான பயிற்சிகள் அளிக்கப்பெறுகின்றனர்.

இதுவரை வளர் கல்வித் திட்ட செயல்பாட்டிற்காக தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் 12,628 வளர் கல்வி மையங்கள் மற்றும் 1,475 தலைமை வளர் கல்வி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

[2007 ஏப்ரல் 9

### 5.2. விடுபட்டோருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்டங்களில், மாநில சராசரி எழுத்தறிவைவிடக் குறைவான பெண்கள் எழுத்தறிவு விகிதம் உள்ள 17 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு, அம்மாவட்டங்களில் எஞ்சிய எழுத்தறிவற்ற மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதத்தில் பங்கிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 5.3. தேசிய திறந்த வெளிப் பள்ளி

புதிதாக எழுத படிக்கக் கற்றுக் கொண்டவர்களில் தாம் கற்ற கல்வியைத் தொடர்வதில் ஆர்வம் உள்ளவர்களுக்கு வசதியாக தேசிய திறந்த நிலைக் கல்வியுடன் இணைந்து பள்ளிக் கல்விக்கு இணையாக 3 ஆம் வகுப்பு (நிலை-1) 5 ஆம் வகுப்பு (நிலை-2) மற்றும் 8 ஆம் வகுப்பு (நிலை-3) ஆகிய திட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக நிலை 1-ல் 5,875 பேர் பயனடைந்து வருகிறார்கள். மேலும் பலர் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைய உள்ளனர்.

### 5.4. 2007-08-ல் கொள்கை வழிகாட்டுதல்கள் விவரம்

(1) 2007-08 ஆம் ஆண்டில் வளர் கல்வித் திட்டத்தினை தமிழ்நாட்டில் உள்ள 30 மாவட்டங்களிலும் செயல்படுத்தல்.

(2) கிராமங்களில் வளர் கல்வி மையங்களில் நூலகங்கள் அமைத்தல்.

(3) வெவ்வேறு பயிற்சிகள் வழங்குவதின்மூலம் வெவ்வேறு திறன்களை வளர்த்துக்கொள்ள வகை செய்தல்.

(4) மகளிர் எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய வட்டாரங்களில் மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவு மையங்கள் துவங்கி எழுத்தறிவில் நிலவும் பாலியில் ஏற்றத்தாழ்வினைப் போகுதல்.

(5) திறந்தவெளிக் கல்வித் திட்டத்தை செயல்படுத்துதல்.

### 5.5. 2007-08 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டம்

மகளிருக்கான சிறப்பு எழுத்தறிவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் தமிழக அரசின் ரூ. 4 கோடி நிதியுதவியுடன் செயல்பட்டு வருகிறது.



2007 ஏப்ரல் 9]

தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்டங்களில் மாநில சராசரி எழுத்தறிவு விகிதத்தைவிடக் குறைவாக உள்ள 17 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டம் மைய, மாநில அரசுகளால் 2:1 என்ற விகிதாச்சார அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து இத்திட்டத்திற்கு ரூ. 12.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 11.48 இலட்சம் எழுத்தறிவற்ற மகளிர் பயனடையும் வகையில் தமிழகத்தில் இத்திட்டத்தை செயல்படுத்தி வருகின்றன.

## 6. அரசுத் தேர்வுகள்

### 6.1. முன்னுரை

அரசுத் தேர்வு இயக்ககத்தின் முக்கியமான பொறுப்பு, பள்ளி இறுதிப் பொதுத் தேர்வுகளை நடத்துவதும், தேர்வு முடிவுகளைக் குறித்த காலத்தில் வெளியிடுவதும் ஆகும். இவ்வியக்ககம் ஆண்டுதோறும் 33 வகையான தேர்வுகளை நடத்துகிறது. இவற்றில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளும், மேல்நிலைத் தேர்வுகளும் முக்கியமான பள்ளிக் கல்வித் தேர்வுகளாகும்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகள் மற்றும் மேல்நிலைத் தேர்வுகள் மாநிலக் கழகப் பாடத் திட்டத்தின்படியும், மெட்ரிகுலேஷன் பள்ளி, ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளின் பள்ளி இறுதித் தேர்வுகள் முறையே மெட்ரிகுலேஷன் பாடத் திட்டம் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பாடத் திட்டத்தின்படியும் நடத்தப்படுகின்றன. மேற்சொன்ன தேர்வுகள் தவிர ஆசிரியர் கல்விப் பட்டயத் தேர்வுகளும், அரசு தொழில்நுட்பத் தேர்வுகளும் (வணிகப் பாடங்கள் தவிர) நடத்தப்படுகின்றன.

### 6.2. மார்ச் 2006-ல் நடைபெற்ற தேர்வுகளின் தேர்ச்சி மதிப்பீடு

| தேர்வு | தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை | தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | தேர்ச்சி விகிதம் |
|---|---|---|---|
| மேல்நிலைத் தேர்வு | 522435 | 389244 | 74.5 |
| எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு | 726934 | 563849 | 77.6 |
| மெட்ரிகுலேஷன் தேர்வு | 98250 | 88428 | 90.0 |
| ஆங்கிலோ இந்தியத் தேர்வு | 4689 | 4425 | 94.4 |

மார்ச் மாதத்தில் நடைபெறும் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் மேல்நிலைத் தேர்வில் ஒன்று அல்லது இரண்டு அல்லது மூன்று பாடங்களில் தோல்வியுறும் மாணவர்கள் ஒரு முழுக் கல்வி ஆண்டை வீணாக்காமல் உயர்கல்விப் படிப்புகளில் உடனடியாகச் சேர்வதற்கு வழிசெய்யும் வகையில் ஜூன் மாதத்தில் சிறப்புத் துணைப் பொதுத் தேர்வு நடத்தப்படுகிறது.

### 6.3. வலைத் தளம்

கால அட்டவணை, விண்ணப்பப் படிவத்தின் மாதிரி வடிவம், இத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகள் தொடர்பான சான்றிதழ் நகல் மற்றும் C.C.M.-க்கான கட்டணம் போன்ற விவரங்களை வெளியிடுவதற்காக இத்துறைக்கென தனிப்பட்ட வலைத் தளம் உள்ளது. வலைத்தள முகவரி: www.tn.gov.in/dge மாணவ சமுதாயத்தின் நலனுக்காக முந்தைய ஆண்டுகளின் மேல்நிலைக் கல்வி, எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுகளின் வினாத் தாள்கள் இத்துறையின் வலைத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

### 6.4. தேசியத் திறனறி தேர்வுகள்

உயர் கல்விக்கென வழங்கப்படும் கல்வி உதவித் தொகைக்காக பத்தாம் வகுப்பு மாணவர்களைத் தேர்வு செய்திட தேசியத் திறனறி தேர்வினை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் குழுமத்தின் சார்பில் இத்துறை நடத்துகிறது. இத்துடன் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்களைத் தேர்வு செய்வதற்கான தேசியத் திறனறித் தேர்வினையும் முதன்முறையாக 2006-ல் இத்துறை நடத்தியது. இத்தேர்வில் தமிழகத்திலிருந்து 24,855 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

### 6-5. 2006-2007 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டவை:

(i) மேல்நிலைப் படிப்பில் பாடத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, எழுத்துத் தேர்வும் செய்முறைத் தேர்வும் இணைந்த பாடங்களில் தேர்ச்சி பெறத் தேவையான குறைந்த அளவு மதிப்பெண், எழுத்துத் தேர்வில் 150-க்கு 30 என்றும், செய்முறைத் தேர்வில் 50-க்கு 40 என்றும் மார்ச் 2007 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னர் தேர்ச்சி பெறத் தேவையான குறைந்த அளவு மதிப்பெண், எழுத்துத் தேர்வில் 150-க்கு 40 என்றும், செய்முறைத் தேர்வில் 50-க்கு 30 என்றும் இருந்தன.





(2) தேர்வு நடத்தவும், விடைத் தாள் மதிப்பீடு செய்யவும், அட்டவணைப்படுத்தவும் ஆசிரியர்களுக்கும், பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த மதிப்பூதியம் மார்ச் 2006-லிருந்து உயர்த்தப்பட்டுள்ளது.

## 7. ஆசிரியர் தேர்வு வாரியம்

### 7.1. முன்னுரை

தகுதியும் திறமையும் மிக்க ஆசிரியர்களை அரசுப் பள்ளிகளுக்குத் தேர்வு செய்யும் பணிகளுக்காக ஆசிரியர் தேர்வு வாரியம் ஒரு பகுதி தன்னாட்சி நிறுவனமாக 1987-ல் உருவாக்கப்பட்டது.

### 7.2. 2007-08 ஆம் ஆண்டிற்கான திட்டம்

***(i) பட்டதாரி ஆசிரியர் நியமனம்***

பள்ளிக் கல்வித் துறைக்கு 7,979 பட்டதாரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு நிறுவன முதுநிலைப்படி நியமிக்க உதவுமாறு ஆசிரியர் தேர்வாணையத்தை அரசு பணித்துள்ளது.

***(ii) அரசு கலை/அறிவியல் கல்லூரிகளில் விரிவுரையாளர் நியமனம்***

அரசு கலைக் கல்லூரிகளில் 1,020 விரிவுரையாளர்களைத் தெரிவு செய்யுமாறு ஆசிரியர் தேர்வாணையத்தை அரசு பணித்துள்ளது.

## 8. தமிழ்நாட்டுப் பாட நூல் கழகம்

### 8.1. முன்னுரை

தமிழ்நாட்டுப் பாட நூல் கழகம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாணவர்களுக்குத் தரமான பாட நூல்களை அச்சடித்து விநியோகம் செய்வது இக்கழகத்தின் நோக்கம்.

### 8.2. பாட நூல்கள் அச்சடிப்பு

(i) மாநிலப் பாடத் திட்டத்தில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான பாட நூல்கள்.

(2) மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கான 10 ஆம் வகுப்பு பாட நூல்கள்.

(3) சிறுபான்மை மொழிகளில் பயிலும் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை மொழி மற்றும் வழிப் பாட நூல்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு சிறுபான்மை மொழிப் பாட நூல்கள்.

(4) பிளஸ்-1 மற்றும் பிளஸ்-2 மாணவர்களுக்கான தொழிற்கல்வி பாட நூல்கள்.

(5) ஆசிரியர் பட்டயப் பயிற்சி வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கான வள நூல்கள்.

(6) ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்விக்கான பாட நூல்கள்.

(7) ஆதி திராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகளின்கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள் மற்றும் குறிப்பேடுகள்.

(8) வினா வங்கி, மாதிரி வினா வங்கி

### 8.3 பாட நூல்கள் இலவச விநியோகம்

தமிழ்நாட்டுப் பாட நூல் கழகம் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு உட்பட இலவசமாக பாட நூல்களை வழங்கி வருகிறது. மேலும் சுயநிதிப் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை மாநிலப் பாடத் திட்டத்தின்கீழ் தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கும் இலவசப் பாட நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் பிற மாநிலங்களில் உள்ள தமிழ் மாணவர்களின் நலனுக்காக பாட நூல்களை இலவசமாக கீழ்க்கண்டவாறு வழங்கி வருகிறது.



| வரிசை எண். | வெளி மாநிலங்கள் | பாட நூல்களின் எண்ணிக்கை | மதிப்பு ரூ. பை. |
|---|---|---|---|
| 1 | மும்பை மாநகராட்சி, மும்பை. | 19,575 | 2,84,525.00 |
| 2 | டெல்லி தமிழ் சங்கம், டெல்லி. | 10,100 | 1,45,325.00 |
| 3 | அகமதாபாத் மாநகராட்சி, அகமதாபாத், குஜராத். | 1,025 | 14,897.00 |
| 4 | தமிழ் ஐக்கிய சங்கம், எர்ணாகுளம், கேரளா. | 815 | 11,605.00 |
| 5 | அந்தமான் நிக்கோபார், போர்ட் பிளேர். | 5,075 | 81,046.00 |
| | மொத்தம் | 36,590 | 5,37,398.00 |

மேலும் தமிழ்நாடு பாட நூல் கழகம் குறிப்பேடுகளை பொதுச் சந்தையில் விற்பனை செய்துவருகிறது.

## 9. பொது நூலகங்கள்

### 9.1. முன்னுரை

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே வாழ்நாள் முழுவதும் படிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல் இத்துறையின் நோக்கமாகும்.

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம்; 1948-ன்படி மாநிலத்தில் பொது நூலகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. தற்போது பல்வேறு நிலைகளில் தமிழகமெங்கும் 3,755 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில மைய நூலகம் (கன்னிமாரா பொது நூலகம்) | 1 |
| 2. | மாவட்ட மைய நூலகங்கள் | 30 |
| 3. | கிளை நூலகங்கள் | 1,567 |
| 4. | நடமாடும் நூலகங்கள் | 12 |
| 5. | ஊர்ப்புற நூலகங்கள் | 1,492 |
| 6. | பகுதி நேர நூலகங்கள் | 653 |
| | மொத்தம் | 3,755 |

### 9.2. 2006-2007 ஆம் ஆண்டில் துறையின் சாதனைகள்

(i) நூலக ஆணைக் குழுக்களில் ரூ. 1,500/- தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 739 ஊர்ப்புற நூலகர்கள் முறையான காலமுறை ஊதியத்தில் மூன்றாம் நிலை நூலகர்களாக பணியமர்த்தப்பட்டனர்.

(ii) 739 ஊர்ப்புற நூலகர்கள் முறையான ஊதியத்தில் நியமனம் செய்யப்படும்பொழுது, பொது நூலகத் துறையில் முதன் முறையாக ஒளிவு மறைவற்ற கலந்தாய்வு முறையில் பதவி உயர்வு அளிக்கப்பட்டு, அவர்கள் கோரிய இடங்களில் பணி அமர்த்தப்பட்டனர்.

(iii) கன்னிமாரா பொது நூலகப் பழைய கட்டடம் அதன் பழமைத்தன்மை மாறாதவண்ணம் ரூ. 1,28,00,000/- மதிப்பில் புனரமைப்பு செய்யப்பட்டு 22-11-2006 அன்று நூலகப் பணிக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

(iv) நூலகங்களுக்கு வாங்கப்படும் நூல்களின் எண்ணிக்கை 750 படிகளில் இருந்து 1,000 படிகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 9.3. கன்னிமாரா பொது நூலகம், சென்னை

கன்னிமாரா பொது நூலகம், மாநில மைய நூலகமாகச் செயல்பட்டு வருகிறது. நூல்கள் விநியோக (செய்தித் தாள்கள் மற்றும் பருவ இதழ்கள்) சட்டம் 1954-ன்படி தேசிய வைப்பு நூலகமாகவும் செயல்பட்டு வருகிறது. நூல்கள் விநியோகச் சட்டத்தின்படி இந்தியாவில் அச்சிடப்பெறும் அனைத்து நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களை இலவசமாகப் பெறக்கூடிய தகுதியினையும் இந்நூலகம் பெற்றுள்ளது. மேலும் யுனெஸ்கோ, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் தகவல் மையமாகவும் இந்நூலகம் செயல்பட்டு வருகிறது.

கன்னிமாரா பொது நூலகப் பணிகள் முழுமையும் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளது.

### 9.4. நூலகங்களை டிஜிட்டல் மயமாக்குதல்

பழம் பெருமை வாய்ந்த அரிய நூல்களை சி.டி. (குறுந்தகட்டில்) பாதுகாக்க கன்னிமாரா பொது நூலகத்தில் 2 ஸ்கேனர்கள் நிறுவப்பட்டுள்ளன. அதில், நாளிதழ்கள் மற்றும் அரிய சேகரிப்புகள் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் பழம் பெருமை





வாய்ந்த அரிய நூல்களை சி.டி.-யில் பதிவு செய்து பாதுகாக்கும் முறையானது திருமலை திருப்பதி தேவஸ்தான நிறுவனத்துடன் இணைந்து 6 ஸ்கேனர் வசதியுடன் நடைபெற்று வருகின்றது.

### 9.5. செய்தி மடல்

பொது நூலகத் துறை சார்பாக "பொது நூலகச் செய்தி மடல்" என்ற காலாண்டு இதழ் 1996 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்விதழில் பொது நூலகத் துறையின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் நூலக இயக்கம் தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

### 9.6. வாசகர் வட்டம்

பொது நூலக இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திற்கும் கல்வியாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் கொண்ட "வாசகர் வட்டம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது. இவ்வாசகர் வட்டம்மூலம் நூல்கள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு உள்ளிட்ட பல பயனுள்ள நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 9.7. இராசாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை நிதியுதவி செய்தல்

கொல்கத்தாவில் உள்ள இராசாராம் மோகன் ராய் நூலக அறக்கட்டளை மத்திய அரசின் கலை மற்றும் பண்பாட்டுத் துறையின்கீழ் செயல்படும் நிறுவனம் ஆகும். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பொது நூலக வளர்ச்சிக்கு இந்நிறுவனம் நிதியுதவி அளித்து வருகிறது. தமிழ்நாடு அரசு, இந்த அறக்கட்டளையில் இருந்து ஆண்டுதோறும் அதிகபட்சமாக ரூ. 200 இலட்சம் இணை மானியம் பெற்று சிறப்பான நூலகச் சேவை ஆற்றி வருகிறது. கடந்த ஆண்டும் ரூ. 200 இலட்சம் இணை மானியம் பெறப்பட்டது.

### 9.8. குடிமைப் பணி கல்வி மையங்கள்

வங்கித் தேர்வாணையம், இரயில்வே தேர்வாணையம், மத்திய பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்றவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் பயன்பெறும் வகையில் "குடிமைப் பணி கல்வி மையங்கள்" என்ற

பிரிவு மாவட்ட மைய நூலகங்களிலும் தாலுகா தலைநகர் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 150 நூலகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### 9.9. புத்தகக் கண்காட்சி

பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, சென்னை கன்னிமாரா பொது நூலகத்தில் பிப்ரவரி 2004 முதல் நிரந்தர புத்தகக் கண்காட்சி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதர மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்ட மைய நூலகத்திலும் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் நடைபெறும் தேசிய நூலக வார விழாவின் போது புத்தக விற்பனையாளர்/ பதிப்பாளர்கள் உதவியுடன் இது நடத்தப்படுகிறது.

### 9.10. நவீன மாநில நூலகம்

தற்கால அறிவியல் நூல்கள், நவீன வெளியீடுகள், வரலாற்றுப் பின்னணி கொண்ட புனைவுகள் மற்றும் மேற்கோள் தொகுப்புகள் போன்றன சாதாரண மக்களுக்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எட்டாக் கனியாக இருக்கும் நிலையை மாற்றிட, இவை அனைத்தும் அவர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில், சென்னையில் சர்வதேச தரத்திலான நவீன மாநில நூலகம் ஒன்றை இந்த அரசு அமைக்கும்.

### 9.11. புத்தகப் பூங்காவிற்கு நிலம் வழங்குதல்

புத்தக ஆசிரியர்கள் மற்றும் அனைத்து நூல் வெளியீட்டாளர்களின் வேண்டுகோளை ஏற்று, அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் நோக்கத்துடன், சென்னையில் மாபெரும் 'புத்தகப் பூங்கா' ஒன்றை நூல் வெளியீட்டுக் குழுவினர் அமைத்திட, அரசு நிலம் வழங்கி ஆதரவு தருமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.



## இணைப்பு-II

(156 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## அறிவிப்புகள்

### தொடக்கக் கல்வி

★ தொடக்கக் கல்வித் துறையில் நிர்வாகம் மற்றும் கல்வி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் பணியிடங்களில் 50 விழுக்காடு நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்.

★ தொடக்கக் கல்வித் துறையில் காலியேற்பட்டுள்ள 5,553 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும், 2,611 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் 55 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களும் உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளில் காலியேற்படும் 851 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் 3,875 பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்களும் 738 சிறப்பாசிரியர் பணியிடங்களும் ஆக 13,683 பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும்.

★ முன்னுரிமை இருந்தும் இதுவரை நியமனத்திற்குத் தகுதிபெறாத பொருளாதாரம், வணிகவியல் போன்ற பாடங்களில் 1-1-2007 அன்றைய நிலவரப்படி பட்டம் பெற்றவர்களை நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களாகவும், பட்டதாரி ஆசிரியர்களாகவும் ஆக்க பதவி உயர்வு அளிக்கப்படும்.

★ ஆசிரியர்களின் வைப்பு நிதிக் கணக்கினை மாநிலக் கணக்காயரே ஏற்று பொது வைப்பு நிதி போன்ற கணக்கினைப் பராமரிக்கவும், கணக்குச் சீட்டு அளிக்கவும் வேண்டும் என்று மாநிலக் கணக்காயரைக் கேட்டுக் கொள்ளப்படும்.

★ தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு தனியாக அனைத்து வசதிகளுடன் கட்டடம் ஒன்று ரூ. 75 இலட்சத்தில் கட்டப்படும்.

## பள்ளிக் கல்வி

- ★ பள்ளிக் கல்வித் துறை அலுவலர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி வழங்க மாநில கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனம் (State Institute of Educational Management and Training) தொடங்கப்படும். அதற்கு ரூ. 3 கோடி அளவில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்மூலம் செலவிடப்படும்.
- ★ தமிழ்நாட்டிலுள்ள 371 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம், குடிநீர் வசதி, ஆய்வகம், கழிவறை வசதி, சுற்றுச் சுவர் மற்றும் தளவாடச் சாமான்களுக்காக ரூ. 243 கோடி நபார்டு வங்கியிலிருந்து பெறப்பட்டு பயன்படுத்தப்படும்.
- ★ நபார்டு மூலம் இதுவரை பயனடைந்துள்ள 1,583 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 15,845 வகுப்பறைகளுக்குத் தளவாடச் சாமான்கள் வாங்க ரூ. 69.11 கோடி நிதி வழங்க நபார்டு ஒப்புதல் பெறப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.
- ★ நபார்டு மூலம் பயனடைந்த 581 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் 632 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ரூ. 8.66 கோடி நபார்டு வங்கியிலிருந்து பெறப்பட்டு அறிவியல் கருவிகள் வாங்கி விநியோகிக்கப்படும்.
- ★ 500 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கணினி ஆய்வகம் நபார்டு வங்கி உதவியுடன் ரூ. 35.75 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.
- ★ நூறு விழுக்காடு தேர்ச்சி விகிதம் காட்டிய அரசு உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாநில பெற்றோர்-ஆசிரியர் கழகம் மூலம் ரூ. 2,000/- வழங்கி பெருமைப்படுத்தப்படும்.
- ★ யோகா பயிற்சியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்கள் மாணவர்களுக்குக் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- ★ வாழ்வியல் திறன்கள் (உடல்நலக் கல்வி, தூய்மை, சுற்றுச்சூழல், மக்கள்தொகை மற்றும் எய்ட்ஸ் விழிப்புணர்வு) கல்வியினை மாணவர்கள மற்றும் ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தும் திட்டம் ரூ. 50 இலட்சம் செலவில் இவ்வாண்டு துவங்கி நடைமுறைப்படுத்தப்படும்.



- ★ மாநில அளவில் வழங்கப்படும் டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது பெறும் நல்லாசிரியர்களுக்கு வழங்கப்படும் தொகை ரூ. 2,000/-லிருந்து ரூ. 5,000/- ஆக உயர்த்தப்படும். இதற்கான செலவு ஆசிரியர் நல நிதியிலிருந்து செலவிடப்படும்.
- ★ பொது மக்களின் ஒத்துழைப்பையும், ஈடுபாட்டையும் காட்டும்வண்ணம் பள்ளிக் கல்வித் துறைச் சார்பாக மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்படும். மே மாதத்திற்குள் 5 மாவட்டங்களிலும், ஆண்டு இறுதிக்குள் 6 மாவட்டங்களிலும் இம்மாநாடுகள் நடத்தப்படும்.
- ★ தொழிற்கல்வியை மேம்பாடு செய்யும்வண்ணம் தற்போதுள்ள நடைமுறைகளை ஆராய்ந்து மாற்றங்கள் ஏற்படுத்த ஆய்வுக் குழு ஒன்று அமைத்து அதன்மூலம் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.
- ★ பள்ளிக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டில் உள்ள அமைச்சுப் பணியாளர்களில் தகுதி பெற்றவர்களுக்கு 2 விழுக்காடு அளவு தகுதிக்கேற்ப ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படும்.

## மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

- ★ தமிழ்நாடு முழுவதும் சுமார் 3,538 மெட்ரிக் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றை ஆய்வு செய்வதற்காக, கூடுதலாக 5 மெட்ரிக் பள்ளிகள் ஆய்வர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். தற்போது 10 ஆய்வர் பணியிடங்கள் உள்ளன.

## ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

- ★ மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்கு கட்டடப் பணி, பணியிடைப் பயிற்சி, ஆராய்ச்சி மேற்கொள்வதற்கும் கணினி மற்றும் நூல்கள் பெற்றிடவும் ரூ. 30 கோடி வழங்கப்படும்.
- ★ தருமபுரி மாவட்டம் 9-2-2004-ல் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ஏற்கெனவே, கிருஷ்ணகிரியில் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (District Institute of Education and Training) செயல்பட்டு வருகின்றமையால், தருமபுரி மாவட்டத்திற்குத் தனியாக ஒரு மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனம் நிறுவப்படும்.

[2007 ஏப்ரல் 9

★ ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 39 இளநிலை விரிவுரையாளர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

★ ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கான பணி அமைப்பு விதிகள் தனியாக ஏற்படுத்தப்படும்.

★ ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககக் கட்டுப்பாட்டில் பணியாற்றும் விரிவுரையாளர் மற்றும் முதுநிலை விரிவுரையாளர்களுக்கு உயர்கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு பள்ளிக் கல்வித் துறையில் வழங்குவது போன்று வழங்கப்படும்.

**பொது நூலகம்**

★ தற்போது செயல்படும் 166 பகுதி நேர நூலகங்களின் தகுதியினை உயர்த்தியும், 169 புதிதாகவும் அமைத்து மொத்தம் 335 ஊர்ப்புற நூலகங்கள் திறக்கப்படும். இதற்காக ரூ. 1.34 கோடி நூலக நிதியிலிருந்து செலவிடப்படும்.

★ சென்னையில் நடைபெறும் புத்தகக் கண்காட்சி போன்று எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முதலாவதாக, மாநிலத்தில் ஐந்து மாநகராட்சிப் பகுதிகளில் உடனடியாக ஏற்படுத்தப்படும்.

★ 5 ஆண்டுகள் பணி முடித்த தொகுப்பூதியத்தில் பணியாற்றும் ஊர்ப்புற நூலகர்கள் முறையான ஊதிய விகிதத்தில் மூன்றாம் நிலை நூலகர்களாக நியமிக்கப்படுவர்.

★ நூலகச் சீரமைப்பு மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு பொதுமக்களுடைய ஒத்துழைப்பும் உதவிகளும் நூலகத் துறையால் பெறப்படும்.

★ வகுப்பறை நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு நூலகத் துறையின் உதவியுடன் மாணவர்கள் பயனடையும்வண்ணம் செய்யப்படும்.

★ தமிழகத்தில் உள்ள 30 மாவட்ட மைய நூலகங்களில் வாசகர்களின் பயன்பாட்டிற்கென கணினிகளின் எண்ணிக்கையை அதிகரித்து, தனி இணைய வலைப் பிரிவு (Internet Browsing Section) ஏற்படுத்தப்படும்.



2007 ஏப்ரல் 9]

**அனைவருக்கும் கல்வி இயக்கம்**

★ மாணவர்களுக்குத் தரமான கல்வியைக் கொடுக்க "படிப்பும் இனிக்கும்" என்ற திட்டம் இந்த ஆண்டு அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

★ இவ்வாண்டு தொடங்கப்படும் 210 தொடக்கப் பள்ளிகளுக்கும் 338 நடுநிலைப் பள்ளிகளுக்கும் 758 புதிய ஆசிரியர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

★ பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் அல்லது தாமாக முன்வரும் ஆசிரியர்கள் மற்றும் படித்த இளைஞர்களைக்கொண்டு "கோடைக்கால பயிற்சி முகாம்" சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும்வண்ணம் நடத்தப்படும்.

★ பள்ளிச் செல்லாக் குழந்தைகளுக்காக ஏற்படுத்தப்பட்டு, சிறந்த முறையில் செயல்பட்டுவரும் 37 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயங்கள் மேலும் 10 இடங்களில் தொடங்கப்படும்.

★ மாணவர்கள் பயன்பெறும்வண்ணம் அந்தந்த மாவட்டங்களில் நடந்த வரலாற்று நிகழ்வுகள் மற்றும் அமைவிடங்கள் சார்ந்த சிறு கதைப் புத்தகங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்படும்.

227565
சென்னை-600 008